
# TNPSC தேர்வுப் பெட்டகம்
# நடப்பு நிகழ்வுகள் - ஜுன் 2019

www.tnpscthervupettagam.com











SHANKAR IAS ACADEMY™

The Best IAS Academy In South India SINCE 2004

Plot No. 1742, I Floor, 18th Main Road,
Anna Nagar, Chenai - 600 040.
Phone: 04-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ........ 10
தமிழ்நாடு செய்திகள் ........ 34
ராபர்ட் பூட்டி ........ 34
மூன்றாம் பாலினத்தவர் - பல்நோக்கு மருத்துவமனை ........ 35
24 மணி நேரமும் கடைகள் ........ 36
வ.உ. சிதம்பரனார் துறைமுக அறக்கட்டளை ........ 36
ஆவடி மாநகராட்சி ........ 36
சென்னை வானிலையியல் துறை - தனித்துவம் ........ 37
கொத்தடிமை தொழிலாளர்கள் முறையினைத் தடுக்கும் முறை ........ 37
பசுமை விருதுகள் 2018 ........ 38
ஜோலார்பேட்டையிலிருந்து நீர் கொண்டு வரப்படல் ........ 39
5-வது நீர்த் தேக்கம் ........ 39
வறட்சி மதிப்பீடு ........ 39
கடல்நீரைக் குடிநீராக்கும் 3-வது ஆலை ........ 40
தமிழ் மறவன் ........ 40
தேசியச் செய்திகள் ........ 41
இரண்டாவது முறை ........ 41
ஜல் சக்தி அமைச்சகம் ........ 43
விமானச் சேவை - இந்தியா மற்றும் பாகிஸ்தான் ........ 43
வேலைவாய்ப்பின்மை விகிதம் ........ 43
10-வது தேசிய அறிவியல் திரைப்படத் திருவிழா ........ 44
பஞ்சாப் மெயில் இரயிலின் 107 வது வருடம் ........ 44
SDG பாலினக் குறியீடு ........ 45
விமானப் போக்குவரத்து மேலாண்மை ........ 45
வணிகர்களுக்கான ஓய்வூதிய திட்டம் ........ 45
PM-KISAN திட்டத்தின் விரிவாக்கம் ........ 46
கால்நடை நோய்களை கட்டுப்படுத்துவதற்கான புதிய முயற்சி ........ 46
பிரதமரின் உதவித் தொகைத் திட்டம் ........ 47
ஸ்விப்ட் இந்தியா மற்றும் தெற்காசியா மாநாடு ........ 47
உட்சாலோ முன்முயற்சி ........ 48
அமைச்சரவைக் குழுக்கள் ........ 48
கல்விக் கொள்கையின் வரைவு ........ 49
நிலையான அளவு சேர்க்கை மருந்துகள் ........ 50
தேசியக் கட்சி ........ 50
சாந்த குமார் குழு ........ 51
ஸ்பைஸ் குண்டுகள் ........ 52

நிதி ஆயோக் மீள் உருவாக்கம் ........ 52
வெளிநாட்டவருக்கான  தீர்ப்பாயங்கள் ........ 52
நீண்ட காலமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் அமைச்சரவைச் செயலாளர் ........ 53
மாநில உணவுப் பாதுகாப்புக் குறியீடு ........ 53
காணாமல் போன ஏஎன்–32 விமானம் ........ 54
மாலத் தீவுகள் மற்றும் இலங்கைப் பயணம் ........ 54
தேசியத் தகவல் கிடங்கு ........ 55
சவுக்கண்டி ஸ்தூபி ........ 55
சுவச் சர்வேக்சான் குழு ........ 56
தேசியக் கடல்சார் பாரம்பரிய அருங்காட்சியகம் ........ 56
NASAMS – II ........ 57
விண்வெளிப் பாதுகாப்பு ஆராய்ச்சி அமைப்பு ........ 57
கீர் பவானி மேளா ........ 57
சர்வதேச அமைதிக் குறியீடு ........ 58
HSTDV ........ 58
கைலாஷ் மானசரோவர் யாத்திரை ........ 59
நிதி ஆயோக் நிர்வாகக் குழுக் கூட்டம் ........ 60
பாரத் திறன்கள் ........ 61
கிராமப்புற ஏழைகள் மற்றும் காலநிலை மாற்றம் ........ 61
ஜன் அவுஷாத் மருந்துகள் ........ 62
சன்ரைஸ் – 2 நடவடிக்கை ........ 62
நமஸ்தே தாய்லாந்து ........ 63
IMD-இன் தலைவர் ........ 63
17-வது மக்களவை கூடியது ........ 63
சீனாவை முந்திச் செல்லுதல் ........ 63
சர்வதேச உணவு இந்தியா ........ 64
ஒரு தேசம் ஒரு தேர்தல் ........ 64
உணவுப் பொருள் பங்கீட்டு முறை ........ 65
நியமனக் குழு ........ 65
ஓட்டுநர் தகுதிநிலை ........ 65
நிதியுதவி – நைஜீரியா ........ 65
கைபேசித் திருட்டு ........ 66
மக்களவை சபாநாயகர் ........ 66
யானைகளுக்கான சிகிச்சை ........ 67
புதிய கடற்படை நீர்மூழ்கி கப்பல்கள் ........ 67
சங்கல்ப் நடவடிக்கை ........ 67
கோல்ஹாபுரி செருப்பிற்குப் புவிசார் குறியீடு ........ 68
பாலகோட் தாக்குதலின் சங்கேதப் பெயர்கள் ........ 69
விமானப் போக்குவரத்து மேலாண்மை ........ 69

லிட்சி மற்றும் AES ............ 69
கிரிஷி விக்யான் கேந்திரா ............ 70
குடியரசுத் தலைவரின் மூன்றாவது பணியிட முன்மொழிவு ............ 70
வைஷ்ணவ தேவி ஆலயம் ............ 70
சிக்குன்குனியா தடுப்பு மருந்து ............ 71
மின் உற்பத்தி ............ 71
DRDOவின் மருந்து ............ 72
ஸ்மார்ட் அட்டை ஓட்டுநர் உரிமம் ............ 72
ReCAAP ............ 72
பழங்குடியினர் மீதான தாக்கங்கள் ............ 73
இந்தியப் பாலின விகிதம் ............ 73
சுகாதாரக் குறியீடு ............ 74
புதிய நியமனங்கள் ............ 75
ஊட்டச்சத்து அறிக்கை ............ 75
5 நீதிபதிகள் – பொது நல வழக்குகள் ............ 75
இந்திய பிரமரின் ஜப்பான் பயணம் ............ 76
உள்ளூர்மொழிக்கான மொழிபெயர்ப்பு மீதான தேசியத் திட்டம் ............ 76
ஜல் சக்தி அபியான் ............ 77
காவல் நிலையங்களின் தரவரிசை - 2018 ............ 78
பெண் குழந்தைகளுக்கான தற்காப்புப் பயிற்சி ............ 79
20-வது ஆண்டு கார்கில் நினைவு தினம் ............ 79
அரிசி செறிவூட்டப்படல் ............ 79
ஒரு தேசம் ஒரு அட்டை ............ 80
டிஜிட்டல் கிராமங்கள் ............ 80
காச நோய் ஒழிப்பு ............ 80
“பழங்குடியினரிடம் செல்க” பிரச்சாரம் ............ 81
சர்வதேசச் செய்திகள் ............ 81
நாணய (கரன்சி) கண்காணிப்புப் பட்டியல் ............ 81
SCO-ன் இரண்டாவது வெகுஜன ஊடகக் கூட்டம் ............ 82
“மாற்றத்திற்கான வணிக நிலை” குறித்த அறிக்கை ............ 83
வரியில்லா இறக்குமதித் திட்டத்திற்கான தகுதி நீக்கம் ............ 83
சிறப்புக் காஷ்மீர் தூதர் ............ 83
G-20 அமைச்சரவை மட்டத்திலான சந்திப்பு ............ 84
கடலிலிருந்து ஏவு வாகனம் (ராக்கெட்) ............ 84
உலக மாற்றுத் திறனாளிகள் சந்திப்பு ............ 85
தேசிய நலன் ............ 85
மெக்சிகோ சர்வதேச புத்தகக் கண்காட்சி ............ 85
CICA ............ 86
SCO சந்திப்பு ............ 86

கிம்பர்லி செயல்முறை ........ 87
முகநூல் மெய்நிகர் நாணயம் ........ 87
அனைவருக்குமான துப்புரவு ........ 88
சிப்ரி ஆண்டறிக்கை 2019 ........ 88
பல்கலைக்கழக தரவரிசை ........ 89
ஹாங்காங் போராட்டம் ........ 89
குத்தி மசோதா ........ 90
சுற்றுலாப் பயணிகளுக்கான இலவச நுழைவு இசைவு ........ 91
கான் குவெஸ்ட் 2019 – வருடாந்திர இராணுவப் பயிற்சி ........ 91
அமெரிக்க பசுமைக் கட்டிட குழுவின் பட்டியல் ........ 91
நேரு மையம் ........ 92
மவுரித்தானியா தேர்தல் ........ 92
வங்கதேச இரும்புத் தாது ........ 92
ரஷ்யாவிற்கான வாக்களிக்கும் உரிமை ........ 93
பண மோசடி ........ 93
ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் தற்காலிக உறுப்பினர் ........ 93
நீர்மூழ்கிக் கப்பலிலிருந்துச் செலுத்தப்படும் ஏவுகணை JL-3 ........ 94
பொருளாதாரச் செய்திகள் ........ 94
இரண்டாம் நிலை சந்தை ........ 94
சர்வதேச தொழில்முனைவு மாநாடு ........ 94
முக்கியப் பொருளாதார குறியீடுகள் ........ 95
PMI குறியீடு ........ 95
பணக் கொள்கை மறுசீராய்வு ........ 95
வாராக் கடன்கள் மீதான தீர்மானம் ........ 95
நிதியியல் செயல்திறன் குறியீடு ........ 96
வரித் தகவல் பரிமாற்றம் ........ 96
உலக முதலீட்டு அறிக்கை ........ 96
அரசுத் தொழிலாளர் காப்பீடு ........ 97
IBBI ........ 97
வர்த்தகப் போர் ........ 98
பெப்ஸ் (BEPS) திட்டம் ........ 98
பெண் தொழிலாளர் சக்தி ........ 98
சிறு வணிகர்கள் அந்நியச் செலாவணி ........ 99
இந்திய சர்வதேச பிரம்மாண்ட வணிகக் கண்காட்சி ........ 99
இந்தியாவில் மொத்த உள்நாட்டு உற்பத்திக் கணக்கீடு ........ 99
FSDC ........ 100
IGST திரும்பப் பெறுதல் ........ 100
வங்கிகளின் வாராக் கடன் ........ 100
UK சின்ஹா குழு ........ 101

இந்திய ரிசர்வ் வங்கியின் அமைப்பு ........ 101
பணவழங்கீட்டுத் தகவல் பாதுகாப்பு ........ 102
ரமேஷ் சந்த் பணிக் குழு ........ 102
அருணா சுந்தரராஜன் குழு ........ 102
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ........ 103
ககன்யான் ........ 103
ஒதுக்கப்பட்ட கோள் - NGTS 4b ........ 103
நிலவில் நூலகம் – பேர்ஷீட் ........ 103
மரபணு மாற்றம் ........ 104
சைபீரிய ஓநாய் ........ 105
நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்பு ........ 105
ராவணா I செயற்கைக்கோள் ........ 106
நிலவுத் திட்டம் ........ 106
அதிக எடை கொண்ட பால்கன் விண்கலம் ........ 107
மிகப்பெரிய மீத்தேன் இருப்பு ........ 107
அவிஸ்கர் ஹைபர்லூப் ........ 107
75 by 75 ........ 108
பஞ்ச் திட்டம் ........ 108
விரைவான ரேடியோ அலைச் சிதறல்கள் ........ 109
சுற்றுச்சூழல் செய்திகள் ........ 109
காற்று மாசுபாடு ........ 109
புதிய குளவி இனங்கள் ........ 109
எனோப்ளோடிரூப்பீஸ் தவான்ஜென்சிஸ் – புதிய வண்டு ........ 110
அழியும் நிலையிலுள்ள இனங்கள் ........ 110
பவளப் பாறைகள் - அச்சுறுத்தல் ........ 111
எட்னா எரிமலை ........ 111
புது டெல்லிக்கு சிவப்பு நிற எச்சரிக்கை ........ 112
இந்திய இராணுவத்தின் “Go Green” முன்முயற்சி ........ 112
கிரேட்டா துன்பெர்க் ........ 113
புதிய தாவரங்கள் மற்றும் விலங்குகள் ........ 113
இந்திய சுற்றுச்சூழல் அறிக்கை 2019 ........ 114
நுண்துகள் காற்று மாசுபாட்டைக் குறைப்பதற்கான இந்தியாவின் முதல் உமிழ்வு வர்த்தகத் திட்டம் 115
இந்தியக் கடற்படையின் சுற்றுச்சுழல் பாதுகாப்பு வரைவுத் திட்டம் ........ 115
2018 ஆம் ஆண்டில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்திக்கான செலவுகள் ........ 116
PET – மறுசுழற்சி ........ 116
கடலில் நெகிழிப் பொருட்கள் ........ 117
மிக்ரிலெட்டா அய்சானி ........ 117
ஆசியத் தங்கப் பூனைகள் ........ 118
பசுமைத் தரமிடல் ........ 118

மெக்சிகோ வளைகுடாவில் உள்ள உயிரில்லாப் பகுதி ........ 118
கெல்ப் காடுகள் ........ 119
உலகின் மிக உயர்ந்த வானிலை மையங்கள் ........ 120
UNEPயின் புதிய  தலைவர் ........ 120
பான் சவால் ........ 121
மலைகள் உருகுதல் ........ 122
நகரமயமாக்கலின் விளைவு ........ 122
ராஜாஜி புலிகள் காப்பகம் ........ 122
பேங்காக் தீர்மானம் ........ 122
கடுமையான வானிலை ........ 123
பீகார் மாதிரி ........ 123
ஈர்க்கப்பட்ட ஆமை ........ 124
பாலைவன டைனோசர் - வெர்பெர்சவ்ரூஸ் ........ 124
மாநிலச் செய்திகள் ........ 125
மின்னணு சிகரெட்டுகள் ........ 125
அருணாச்சலப் பிரதேசம் – புதிய முதலமைச்சர் ........ 125
இ – சிகரெட்டுகள் மீதான தடை – மகாராஷ்டிரா மற்றும் இராஜஸ்தான் ........ 125
உலக சுகாதார அமைப்பு விருது - இராஜஸ்தான் ........ 125
கங்கை மாசுபாட்டிற்கு அபராதம் - NGT ........ 126
குறைந்தபட்ச ஆதரவு விலையில் மாற்றுப் பயிர்கள் ........ 126
நிபா வைரஸ் ........ 127
எலிபெண்டா திருவிழா ........ 127
உதவித்தொகை பெறுவதற்கான வருடாந்திர வருமான வரம்பு உயர்வு ........ 127
“ஆப்கி பேட்டி” திட்டம் - ராஜஸ்தான் ........ 127
ஆந்திரப் பிரதேச அமைச்சரவை ........ 128
கழிவுப் பொருட்களிலிருந்து ஆற்றல் பெறும் இந்தியாவின் முதல் திட்டம் ........ 128
EBPG இடஒதுக்கீடு திரும்பப் பெறப்படுதல் ........ 129
தங்க நிறமுடைய வால் குரங்குகள் ........ 129
வெளிநாட்டவர் தீர்ப்பாயம் ........ 129
மூளைக் காய்ச்சல் இறப்புகள் ........ 130
மெல்லிய கறுப்பு ஓடு கொண்ட ஆமை ........ 130
இமாச்சல மலையேற்றம் ........ 131
பாரம்பரிய நிலைக்கான பரிந்துரைகள் ........ 131
சாதிக்பூர் சினௌலி ........ 131
ஒடிசா வெள்ள வரைபடம் ........ 132
நிப்பான் அறக்கட்டளை ........ 132
புகையில்லாத சமையலறை ........ 133
பூரி ஜெகன்நாத் ........ 133
போலாவரம் திட்டம் நீட்டிப்பு ........ 134

காலேஸ்வரம் ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் ........ 134
அம்மா வோடித் திட்டம் நீட்டிப்பு – ஆந்திரப் பிரதேசம் ........ 135
சிந்து தர்ஷன் திருவிழா ........ 135
மராத்தா இட ஒதுக்கீடு ........ 136
ஜெய்ப்பூர் காலணி கொரியா ........ 136
நாகாலாந்தின் தேசியக் குடிமக்கள் பதிவேடு ........ 137
முதலாவது வலிமையான கேரளா ........ 137
பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள் ........ 137
கரம்பீர் சிங் – 24வது கடற்படை தலைமைத் தளபதி ........ 137
கண்காப்பு விமானம் – அதிகாரி மோகனா சிங் ........ 138
ஜோன் மிரோ விருது 2019 ........ 139
மெக்ஸிகோ நாட்டின் வெளிநாட்டவர்களுக்கான உயரிய குடிமகன் விருது ........ 139
தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ........ 139
உலகளாவியத் தலைமையாளர் விருது ........ 140
யோகா விருதுகள் ........ 140
ஐ.நா. நிலநடுக்கோட்டு விருது ........ 141
புனைவுக் கதைக்கான பெண்கள் பரிசு ........ 141
அமிதவ் கோஷ் ........ 142
சாகித்ய அகாதமி விருதுகள் ........ 143
அக்சயப் பாத்திரம் – BBC விருதுகள் ........ 143
நிஷான் இசுசுதீன் தனித்தன்மை வாய்ந்த ஆட்சிக்கான விருது ........ 144
மாத்ரி ஸ்ரீ விருதுகள் ........ 145
யோகா மேம்பாட்டு விருது ........ 145
ICAO-க்கான இந்திய பிரதிநிதி ........ 146
இரஞ்சித் சிங் சிலை - லாகூர் ........ 146
சைரஸ் பூனாவாலா – ஆக்ஸ்போர்டு கௌரவப் பட்டம் ........ 147
குடியரசுத் தலைவர் விருது - நால்கோ ........ 147
வாழ்நாள் சாதனையாளர் விருது - மார்க் துலி ........ 148
விளையாட்டுச் செய்திகள் ........ 148
மனு பாக்கர் - ஒலிம்பிக் ........ 148
இந்திய ஓபன் சர்வதேசப் போட்டித் தொடர் ........ 148
400-வது கிராண்ட் ஸ்லாம் போட்டி ........ 149
நிஹால் சரின் - 2800 எலோ புள்ளிகள் மதிப்பீடு ........ 149
20 வயதிற்கு உட்பட்ட யூரேசியன் தடகள சாம்பியன்ஷிப் ........ 150
UEFA சாம்பியன்ஷிப் - லிவர்பூல் ........ 150
ISSF உலகக் கோப்பை ........ 151
பலிதான் முத்திரை ........ 151
பிரெஞ்சு ஓபன் ........ 152
யுவராஜ் சிங் ........ 153

ITTF ஹாங்காங் ஓபன் ........ 154
உலகத் தடகளம் ........ 154
கோபா அமெரிக்கா ........ 154
விரைவான 11000 ஓட்டங்கள் ........ 155
பசிபிக் சர்வதேச பில்லியர்ட்ஸ் – பீட்டர் கில்கிரிஸ்ட் ........ 155
உலக டென்னிஸ் தரவரிசை ........ 156
கூடைப் பந்து சாம்பியன்ஷிப் ........ 156
IOC - தடை நீக்கம் ........ 156
கேலோ இந்தியா ........ 157
தேசிய பதக்கம் வென்ற முதல் செவித்திறன் குறைபாடுள்ள துப்பாக்கிச் சுடும் வீரர் ........ 157
ஒலிம்பிக் தலைமையகம் ........ 158
ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப் ........ 158
பெண்கள் ரக்பி ........ 159
மிக விரைவான 20,000 ரன்கள் ........ 159
AIBA-வின் ஒலிம்பிக் அங்கீகாரம் மீதான தற்காலிகத் தடை ........ 160
முக்கிய தினங்கள் ........ 160
உலக பால் தினம் – ஜூன் 1 ........ 160
சர்வதேச பெற்றோர்கள் தினம் – ஜூன் 1 ........ 161
சர்வதேச பாலியல் தொழிலாளர்கள் தினம் - ஜூன் 02 ........ 161
உலக மிதிவண்டி தினம் - ஜூன் 03 ........ 161
நிதியியல் கல்வி வாரம்: ஜூன் 3-7 ........ 162
ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்ட அப்பாவி குழந்தைகளுக்கான சர்வதேச தினம் – ஜுன் 4 ........ 162
உலக சுற்றுச்சூழல் தினம் - ஜூன் 5 ........ 163
உலக உணவுப் பாதுகாப்புத் தினம் – ஜுன் 07 ........ 163
உலகப் பெருங்கடல் தினம் – ஜுன் 08 ........ 164
ஐக்கிய நாடுகள் ரஷ்ய மொழி தினம் – ஜுன் 06 ........ 164
உலக மூளைக் கட்டி தினம் – ஜுன் 08 ........ 165
பவள முக்கோண தினம் – ஜுன் 09 ........ 165
உலக குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினம் – ஜுன் 12 ........ 166
சர்வதேச வெளிறல் விழிப்புணர்வு தினம் – ஜூன் 13 ........ 166
உலகக் குருதிக் கொடையாளர் தினம் - ஜுன் 14 ........ 167
உலகக் காற்று தினம் – ஜுன் 15 ........ 168
உலக மூத்தோர் கொடுமை விழிப்புணர்வுத் தினம் – ஜுன் 15 ........ 168
வெளிநாட்டிலிருந்து குடும்பத்திற்குப் பணத்தை அனுப்புதலுக்கான சர்வதேச தினம் - ஜுன் 16 ........ 169
பாலைவனமாக்கல் மற்றும் வறட்சிக்கு எதிரான உலக தினம் - ஜுன் 17 ........ 169
நீடித்த அறுசுவை உணவியல் தினம் – ஜுன் 18 ........ 170
சர்வதேசச் சுற்றுலா தினம் – ஜுன் 18 ........ 171
கோவா புரட்சி தினம் – ஜுன் 18 ........ 171
மன இறுக்க உரிமைகள் தினம் - ஜுன் 18 ........ 171

உலக அரிவாள் உயிரணு (செல்) தினம் – ஜுன் 19 ..... 172
சச்சரவுகளின் போதான பாலியல் வன்கொடுமைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் – ஜுன் 19173
உலக அகதிகள் தினம் - ஜுன் 20 ..... 173
உலக இசை தினம் - ஜுன் 21 ..... 173
கோடைக்காலத்தின் நீண்ட பகல் நாள் - ஜூன் 21 ..... 174
சர்வதேச ஒலிம்பிக் தினம் - ஜூன் 23 ..... 174
சர்வதேச கைம்பெண்கள் தினம் - ஜூன் 23 ..... 175
UNPSC தினம் – ஜுன் 23 ..... 175
சர்வதேச யோகா தினம் – ஜுன் 21 ..... 176
போதைப் பொருள் மருந்து முறைகேடு மற்றும் சட்ட விரோதக் கடத்தலுக்கான சர்வதேச எதிர்ப்பு தினம் – ஜுன் 26 ..... 176
சித்திரவதைக்கு உள்ளானவர்களுக்கு ஆதரவளிப்பதற்கான சர்வதேச தினம் – ஜுன் 26 ..... 177
ஐக்கிய நாடுகள் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தினம் – ஜுன் 27 ..... 177
உலக நீர்நிலையியல் தினம் – ஜூன் 21 ..... 178
தேசியப் புள்ளியியல் தினம் - ஜூன் 29 ..... 178
சர்வதேச வெப்ப மண்டலங்களின் தினம் - ஜூன் 29 ..... 179
சர்வதேச குறுங்கோள் தினம் - ஜூன் 30 ..... 179
சர்வதேசப் பாராளுமன்றங்கள் தினம் - ஜூன் 30 ..... 180
இதரச் செய்திகள் ..... 180
பெருநிறுவன வரி விலக்கு (வரி விதிக்காத) குறியீடு ..... 180
தேசிய ஸ்பெல்லிங் பீ (எழுத்துத் தேனி) போட்டி ..... 181
தெலுங்கானா உருவான நாள் – ஜுன் 02 ..... 182
கிரீஷ் கர்னாட் ..... 182
மிருதங்கக் கலைஞர் ..... 183
பச்சியோன் திரைப்படத் திருவிழா ..... 183
பழவிழா இரமேசன் ..... 184

# TNPSC துளிகள்

- பஞ்சாப் மாநில அரசு, இணைய தள உணவு விநியோகிக்கும் நிறுவனங்களிடம் பதிவு செய்யப்பட்டுள்ள மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து உணவு விடுதிகளிலிருந்துப் பெறப்படும் உணவுகளில் இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரங்கள் ஆணையத்தின் (Food Safety and Standards Authority of India - FSSAI) "தூய்மைத் தரம்" என்ற இலச்சினையைக் காட்சிப்படுத்த வேண்டும் என்று நிகழ்நேர (ஆன்லைன்) முறையில் உணவு வழங்கும் அனைத்து நிறுவனங்களுக்கும் உத்தரவிட்டுள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கி தற்பொழுதுள்ள "இந்திய அடமானப் பத்திரங்களின்" நிலையை ஆய்வு செய்வதற்காகவும் அதை விரிவுபடுத்துவதற்குமான நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதற்காகவும் பெயின் அண்ட் கோ நிறுவனத்தின் மூத்த ஆலோசகரான ஹர்ஷ் வர்தன் தலைமையில் 6 நபர்கள் கொண்ட ஒரு குழுவை அமைத்துள்ளது.
  - இது "வீட்டு நிதி பத்திரச் சந்தை வளர்ச்சிக் குழு" என்று பெயரிடப்பட்டு இருக்கின்றது.
- தேசிய மாதிரி ஆய்வு அமைப்பை அடிப்படையாகக் கொண்ட ஒரு ஆய்வின்படி, 10,000 மக்களுக்கு 20.6 சுகாதாரப் பணியாளர்களை இந்தியா கொண்டுள்ளது. உலக சுகாதார அமைப்பின் படி 10,000 மக்களுக்கு 22.8 சுகாதாரப் பணியாளர்கள் இருக்க வேண்டும்.
  - 80 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட மருத்துவர்கள், 70 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட செவிலியர்கள் மற்றும் பேறுகால உதவியாளர்கள் தனியார் துறையில் பணியாற்றுகின்றனர்.
- தேசியப் பசுமைத் தீர்ப்பாயம் (National Green Tribunal - NGT) ஒரு லிட்டர் நீரில் கரைந்துள்ள மொத்தத் துகள்கள் (TDS - total dissolved solids) 500 மில்லி கிராமிற்கு குறைவாக இருப்பின் எதிர் சவ்வூடு பரவல் முறையிலான நீர் சுத்திகரிப்பான்களைப் பயன்படுத்துவதற்கு தடை விதிக்குமாறு மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனங்கள் அமைச்சகத்தை அறிவுறுத்தியுள்ளது.
  - TDS ஆனது ஒரு லிட்டர் நீரில் 500 மில்லி கிராமிற்கு குறைவாக இருப்பின் எதிர் சவ்வூடு பரவல் முறை பயன்படாது. மாறாக இது நீரில் உள்ள முக்கியமான கனிமங்களை நீக்கிவிடும். மேலும் இது நீரில் தேவையற்ற கழிவுகளை ஏற்படுத்தும். 80 சதவிகித நீர் எதிர் சவ்வூடு முறையிலான சுத்திகரிப்பான்களில் வீணாகின்றது.
- விமானப் படைப் பணியாளர்களின் தலைவர் மற்றும் இந்திய விமானப் படைத் தளபதி பைரேந்தர்சிங் தனோவா இராணுவப் பணியாளர் குழுத் தலைமையின் (COSC - Chairman of the Chief of Staff Committee) புதிய தலைவராக ஆகியுள்ளார்.
  - பாதுகாப்புத் துறை அமைச்சருக்கு ஆலோசனைகளை வழங்குவதும் அமைச்சரவையின் கவனத்திற்குத் தேவைப்படும் அனைத்து இராணுவ விவகாரங்களையும் பாதுகாப்புத் துறை அமைச்சரின் மூலம் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவிற்கு அளிப்பதும் இதன் பணியாகும்.
- சமீபத்தில் வெளியிடப்பட்ட சர்வதேச குழந்தைப் பருவ அறிக்கையின்படி, தற்பொழுது பிறக்கும் குழந்தைகள், முன் எப்போதும் இல்லாத அளவில் கடந்த காலங்களைவிட ஆரோக்கியமாக வளர, கல்வியறிவு கொண்டதாக, பாதுகாப்பானதாக இருப்பதற்கு அதிக வாய்ப்புகளைக் கொண்டிருக்கும்.
  - இது குழந்தைகள் உரிமைகளின் கல்வி மற்றும் பாதுகாப்பிற்காகப் பணியாற்றும் ஒரு அரசு சாரா நிறுவனமான "குழந்தைகளைக் காப்பாற்றுதல்" (Save the Children)

என்ற நிறுவனத்தினால் வெளியிடப்பட்டது. இந்தப் பட்டியலில் சிங்கப்பூர் முதலிடத்தில் உள்ளது. இதில் இந்தியா 113-வது இடத்தில் உள்ளது.

- ஆப்பிரிக்க நாடுகள், இரஷ்யா மற்றும் சீனா ஆகியவை எதிர்த்த போதிலும் தெற்கு சூடான் மீதான ஆயுதத் தடையை ஐ.நா. பாதுகாப்பு ஆணையம் மேலும் 1 ஆண்டு காலத்திற்கு நீட்டித்துள்ளது.
  - 15 உறுப்பினர்கள் கொண்ட பாதுகாப்பு ஆணையத்தில் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு குறைந்த பட்சம் 9 உறுப்பினர்களின் ஆதரவு தேவை.
- சிலியின் நவரினோ தீவில் உள்ள துறைமுகம் மற்றும் கப்பற்படைத் தளமான பியூர்டோ வில்லியம்ஸ், தற்பொழுது உலகின் மிகவும் தென்கோடியில் அமைந்துள்ள ஒரு நகரமாக உருவெடுத்துள்ளது.
  - இதற்கு முன் அர்ஜென்டினாவின் யுசியா என்ற நகரம் இந்த சிறப்புத்துவத்தைப் பெற்றிருந்தது.
- வருடாந்திரமாக 1.2 கோடி பயணிகளைக் கையாளும் திறன் கொண்ட உத்தரப் பிரதேசத்தில் முன்மொழியப் பட்டுள்ள ஜெவார் விமான நிலையம் 2023 ஆம் ஆண்டிலிருந்துச் செயல்பாட்டிற்கு வரும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
  - இது தேசியத் தலைநகரப் பகுதிக்கான இரண்டாவது விமான நிலையமாக செயல்படவிருக்கின்றது.
- கடந்த ஒன்றரை ஆண்டுக் காலத்தில் முதன்முறையாக உலகின் வேகமாக வளரும் முக்கியமானப் பொருளாதார நாடு என்ற நிலையை சீனாவிடம் இந்தியா இழந்துள்ளது.
- 50 ஆண்டு கால போராட்டத்திற்குப் பின்பு இங்கிலாந்தின் சட்டத்தில் ஒரு அடிப்படை மாற்றம் ஏற்பட்டுள்ளது. அந்நாட்டில் பணியின் போது தலைப்பாகை அணிந்து கொள்வதற்கும் தாடி வைத்துக் கொள்வதற்கும் இருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.
- டெல்லி அரசானது தேசிய தலைநகரப் பகுதியில் மெட்ரோ ரயில் மற்றும் பேருந்துகளில் பெண்களுக்கு இலவசப் பயணங்களை அளிப்பதற்கான முன்மொழிதலுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ONGC நிறுவனமானது இந்தியன் ஆயில் நிறுவனத்தைப் பின்னுக்குத் தள்ளி நாட்டின் மிகவும் இலாபகரமான பொதுத்துறை நிறுவனமாக உருவெடுத்துள்ளது.
- ஐக்கிய அரபு அமீரகத்தின் அடையாளம் மற்றும் குடியுரிமைக்கான பெடரல் ஆணையம் அபுதாபியில் உள்ள கேரளாவைச் சேர்ந்த முதலீட்டாளரான யூசப் அலிக்கு முதலாவது தங்க வசிப்பிட அனுமதியை வழங்கியுள்ளது.
  - இந்தத் திட்டம் நீண்ட கால முதலீட்டு இலக்குகளை உருவாக்குவதற்கும் சொத்துக்களைச் சொந்தமாக வைத்திருப்பதற்கும் வெளிநாட்டவர்களை ஊக்குவிக்கும். ஐக்கிய அரபு அமீரகத்தின் மொத்த மக்கள் தொகையில் 30 சதவிகிதத்தினர் இந்தியப் புலம் பெயர்ந்தவர்கள் ஆவார்.
- மதராஸ் உயர் நீதிமன்றம், 1000 திரைப்படங்களுக்கு மேல் இளையராஜாவால் இசையமைக்கப்பட்ட 4500 பாடல்களுக்கு "சிறப்புத் தார்மீக உரிமையாளர்" இளையராஜா ஆவார் என்று உத்தரவு பிறப்பித்துள்ளது. பதிப்புரிமைச் சட்டம், 1957-ன் பிரிவு 57-ன் கீழ் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
  - இந்தப் பிரிவு மற்றவர்களிடம் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ இசையைக் கொடுத்த பின்னரும் அதற்கான உரிமையைக் கோரும் ஒரு இசையமைப்பாளரின் உரிமையைப் பாதுகாக்கின்றது.

- 2019 ஆம் ஆண்டு உலக சுற்றுச்சூழல் தினத்தன்று (ஜூன் 05), மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பிரகாஷ் ஜவ்டேகர் "மரக்கன்று நடுதலுடன் ஒரு சுய புகைப்படம்" என்ற ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கினார். இவர் மரக்கன்று நட்டு அதை சுயபடம் எடுத்துப் பதிவிட வேண்டும் என்று மக்களைக் கேட்டுக் கொண்டார்.
- டிஜிட்டல் பண வழங்கீடுகள் மீதான நந்தன் நீல்கேனி குழுவானது இந்தியாவில் டிஜிட்டல் பண வழங்கீடுகளை அதிகரிப்பதற்காக பணப் பரிமாற்றத்தின் போது விதிக்கப்படும் கட்டணங்களை ஒழித்தல், ஆர்டிஜிஎஸ் (RTGS) மற்றும் நெப்ட்-யை (NEFT) முழு நேரமும் செயல்படுத்துதல், விற்பனையின் போது பணம் செலுத்தும் இயந்திரங்களின் வரியில்லா இறக்குமதி ஆகியவற்றைப் பரிந்துரைத்துள்ளது.
    - மேலும் இது இந்தியாவிற்குப் பணம் அனுப்புதலை எளிமைப்படுத்துவதற்காகவும் வெளி நாட்டில் பணம் வழங்கீடுகளுக்கு உதவுவதற்காகவும் ரூபே மற்றும் பிம் யுபிஐ போன்ற இந்திய பண வழங்கீடுகள் அமைப்புகளை உலகமயமாக்குவதையும் பரிந்துரைத்துள்ளது.
- 2018-19 ஆம் விவசாய ஆண்டிற்கான உணவு தானியங்கள் உற்பத்தி 283 மில்லியன் டன்கள் என்று கணிக்கப்பட்டுள்ளது.
    - நெல் - 115 மில்லியன் டன்கள் (இது வரை இல்லாத அளவுக்கு அதிக உற்பத்தி); கோதுமை - 101 மில்லி டன்கள்; பருப்பு வகைகள் – 23 மில்லியன் டன்கள்.
- இந்தியக் கடற்படையானது இந்தியக் கடற் பகுதியில் (IOR - Indian Ocean Region) தனது யுத்தி அடிப்படையிலான படைகளை நிறுத்துதலை விரிவுபடுத்தியுள்ளது. இந்திய விமானப்படை ஓமனின் சலலாஹில் இருந்து ஏடன் வளைகுடா வரை கடற் கொள்ளையிலிருந்துப் பாதுகாத்திட P-8I என்ற நீண்ட வரம்பு கொண்ட கடல்சார் கண்காணிப்பு விமானத்தையும் நிறுத்தியுள்ளது.
    - IOR பகுதியின் முக்கியத்துவம் காரணமாக, இந்தியக் கடற்படை IOR-ல் உள்ள கடல் பாதைகள் அல்லது சிக்கலான பகுதிகள் ஆகியவற்றில் கண்காணிப்பு மற்றும் தனது படைகளின் இருப்பைத் தொடர்ந்து மேற் கொண்டு வருகின்றது.
- ஒடிசாவில் உள்ள ஐசிஏஆர் - தேசிய நெல் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் "நெல் வெடிப்பு" நோய்க்கு எதிரான நோய் எதிர்ப்புத் திறனுக்கு உதவக் கூடிய நெல்லின் பல்வேறு வகையான மரபணுக்களை கண்டறிந்துள்ளனர்.
    - "மேக்னபோர்த்தே ஓரைசே" என்ற ஒரு பூஞ்சையானது நெல் பயிரின் முக்கியமான நோய்களில் ஒன்றான நெல் வெடிப்பை ஏற்படுத்துகின்றது.
- இந்தியக் குடியரசுத் தலைநகர் இராம்நாத் கோவிந்த் இதுல் பிடிரின் - கொண்டாட்டங்களின் போது இந்தியக் குடிமக்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்.
    - இது விரதத்தின் புனித மாதமான ரமடான் / ரம்சானின் நிறைவு பெறுவதைக் குறிக்கும் ஒரு கொண்டாட்டமாகும். சவால் மாதத்தின் முதலாவது தினத்தில் இது கொண்டாடப்படுகின்றது.
- 2019 ஆம் ஆண்டு ஜூன் 5-ஆம் தேதியிலிருந்து அமெரிக்கா இந்தியாவிற்கான GSP (பொது முன்னுரிமை அமைப்பு) வர்த்தகப் பலன்களைத் திரும்பப் பெற்றுள்ளது.
    - 2017 ஆம் ஆண்டில் GSP திட்டம் அமெரிக்காவிற்கு 5.7 மில்லியன் டாலர் மதிப்பிலான இந்திய ஏற்றுமதிப் பொருள்களின் வரியில்லா அணுகலுக்கு அனுமதியளித்தது.
- பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு அருகில் புகையிலைப் பொருட்களின் விற்பனையைத்

தடுப்பதற்காக "மஞ்சள் கோடு பிரச்சாரம்" என்ற ஒரு பிரச்சாரத்தை மணிப்பூர் அரசு தொடங்கியுள்ளது.

- ❖ 2019 ஆம் ஆண்டின் எப்ஐஎப்ஏ (FIFA) பெண்கள் உலகக் கோப்பைக்கான அதிகாரப் பூர்வ சின்னம் "எட்டி" என்று பெயரிடப்பட்டுள்ளது.
- ❖ புதுச்சேரி சட்ட சபையின் துணை சபாநாயகர் வி.பி. சிவக்கொழுந்து புதுச்சேரி சட்ட சபையின் புதிய சபாநாயகராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- ❖ ஜுன் 21 ஆம் தேதியன்று நடைபெறவுள்ள சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, யோகா நிகழ்ச்சிகள் மற்றும் பயிற்சி மையங்களை மக்கள் கண்டறிவதற்கு உதவியாக ஆயுஷ் அமைச்சகமானது "யோகா இருப்பிடம்" ('Yoga Locator') எனும் பெயருடைய கைப்பேசி செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய Quad என்றறியப்படும் அலுவல்சாரா மூலோபாய குழுவின் நாற்கரப் பாதுகாப்பு பேச்சு வார்த்தையானது சமீபத்தில் தாய்லாந்தின் பாங்காங்கில் நடைப்பெற்றது.
- ❖ யுனிசெப் நிறுவனத்தின் ஆய்வின்படி இந்திய அரசின் தூய்மை இந்தியா (கிராமம்) திட்டமானது நிலத்தடி நீருடன் மாசு கலப்பதைக் குறைக்க உதவியுள்ளது எனக் கண்டறிந்துள்ளது.
- ❖ கர்ப்பிணிப் பெண்களுக்கு கர்ப்பகால நீரிழிவு நோய்க்கானப் பரிசோதனை செய்ய வேண்டியது அவசியம் என இந்திய மருத்துவர்கள் சங்கத்தின் பத்திரிக்கையில் வெளியான அறிக்கையொன்று தெரிவித்துள்ளது.
- ❖ 8-வது பிஃபா மகளிர் உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியானது பிரான்சில் தொடங்கியது. இதன் முதல் உலகக் கோப்பைப் போட்டியானது 1991 ஆம் ஆண்டு சீனாவில் நடத்தப் பட்டது.
  - ○ அமெரிக்காவின் பெண்கள் கால்பந்து அணியானது இந்தப் போட்டிகளில் நான்கு முறை வெற்றிப் பெற்று மிகவும் வெற்றிகரமான அணியாக உள்ளது.
- ❖ டிஜிட்டல் முறையிலான பரிவர்த்தனைகளை அதிகரிப்பதற்கான முயற்சியில் RBI ஆனது RTGS மற்றும் NEFT பரிவர்த்தனைகளுக்கு எவ்வித கட்டணத்தையும் விதிக்க வேண்டாம் என முடிவு செய்துள்ளது. வங்கிகளும் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு இந்த வசதியை வழங்க வேண்டியது அவசியமாகும்.
- ❖ மத்திய உள்துறை அமைச்சகம் வெளிநாட்டு நன்கொடை ஒழுங்குமுறைச் சட்டம், 2010 என்ற சட்டத்தின் கீழ் (Foreign Contribution Regulation Act - FCRA) அனைத்து அரசு சாராக் குழுக்களையும் ஒரு மாதத்திற்குள்ளாக, அவர்களது அலுவலர்கள் மற்றும் முக்கியப் பணியாளர்களின் சேர்க்கை, நீக்கம் மற்றும் மாற்றங்கள் பற்றியத் தகவல்களைச் சமர்ப்பிக்கும்படி அறிவுறுத்தியிருக்கின்றது.
  - ○ இச்சட்டம் இந்தியாவில் அரசு சாரா அமைப்புகளால் பெறப்படும் வெளிநாட்டு நன்கொடையின் வரவு மற்றும் பயன்பாடு ஆகியவற்றை ஒழுங்குமுறைப் படுத்துகின்றது.
- ❖ மத்தியப் பிரதேசத்தில் உள்ள இரசாயனம் மற்றும் மருந்துத் துறை தொடர்பான 4 நிறுவனங்கள் மீது ரூ.74 கோடி அபராதத் தொகையை இந்தியப் போட்டி ஆணையம் (Competition Commission of India – CCI) விதித்துள்ளது. போட்டிச் சட்டம், 2002 ன் விதிமுறைகளை இந்த 4 நிறுவனங்களும் மீறியுள்ளதால் இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

- CCI என்பது இந்தியா முழுவதும் போட்டிச் சட்டம், 2002 ஐ செயல்படுத்துவதற்காகப் பணியாற்றும் இந்திய அரசின் ஒரு சட்டப் பூர்வ அமைப்பாகும். இது போட்டியின் மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளைத் தடுக்கின்றது.

❖ டெல்லி அரசால் முன்மொழியப்பட்ட திட்டத்தின்படி பெண்கள் டெல்லி மெட்ரோவிலும் பேருந்துகளிலும் அவர்கள் மேற்கொள்ளும் பயணத்திற்கு கட்டணம் ஏதும் செலுத்தத் தேவையில்லை.

- இந்த நடவடிக்கை பெண்களின் பாதுகாப்பு மற்றும் நலனைக் கருத்தில் கொண்டு எடுக்கப் பட்டிருக்கின்றது.

❖ அமெரிக்க அரசாங்கம் அனைத்து விசா விண்ணப்பதாரர்களையும் கடந்த ஐந்து ஆண்டுகளாக அவர்கள் பயன்படுத்திய அவர்களது சமூக ஊடகப் பயனர் பெயர்களையும், மின்னஞ்சல் முகவரிகளையும், தொலைபேசி எண்களையும் அவர்களது விசா விண்ணப்பப் படிவத்தில் அளிக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கின்றது.

- டொனால்ட் டிரம்ப் நிர்வாகம் அமெரிக்காவிற்கு வரும் பயணிகள் மற்றும் தகுதியான குடியேற்றவாசிகளுக்கான மிகக் கடுமையான சரிபார்ப்புகளை உறுதி செய்திட எண்ணுகின்றது.

❖ ஏறத்தாழ 1,26,000 ஆண்டுகள் முதல் 1,17,000 வரையிலான முந்தைய காலத்தில் நீடித்த கடைசியான பனிக் காலத்தின் போது வடகிழக்கு சைபீரியாவில் வாழ்ந்த ஒரு பெயர் தெரியாத பழமையான மக்கள் கூட்டத்தைப் பரிமாண மரபணுவியலாளர்கள் குழு ஒன்று கண்டறிந்திருக்கின்றது.

- இக்குழு அந்த மக்கள் கூட்டத்தைப் பண்டைய வடக்கு சைபீரியர்கள் என்றுப் பெயரிட்டு அவர்களது இருப்பினை உள்நாட்டு அமெரிக்க வம்சாவளியில் "காணாமல் போன தொடர்பு" என்று வரையறுத்திருக்கின்றது.

❖ சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் சமீபத்தில் டெல்லியில் மக்கள் தொகை ஆராய்ச்சி மையங்களுக்கான இரண்டு நாள் கருத்தரங்கு ஒன்றை நடத்தியிருந்தது.

- இந்நிகழ்ச்சி சுகாதார அமைச்சகத்தின் முக்கியத் திட்டங்களையும் அவற்றின் தொடர்ச்சியாக கண்காணிப்பினையும் பற்றிய பல்வேறு அம்சங்களை எடுத்துக் காட்டிட நடத்தப்பட்டதாகும்.

❖ மத்திய அமைச்சரவையானது சிறு சில்லறை வர்த்தகர்களுக்கும் கடை உரிமையாளர்களுக்கும் ஒரு மாதாந்திர ஓய்வூதியத் திட்டத்தை ஏற்படுத்திட ஒப்புதல் அளித்திருக்கின்றது. இத்திட்டத்தின் பயன் 3 கோடிப் பயனாளிகளைச் சென்றடைந்திடும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

- இத்திட்டத்தின் கீழ் சிறு கடை உரிமையாளர், சில்லறை வர்த்தகர் மற்றும் சுயவேலைவாய்ப்பு நபர்கள் என அனைவரும் அவர்கள் தங்களின் 60 வயதிற்குப் பிறகு மாதம் 3000 ரூபாய் என்ற அளவில் ஓய்வூதியத்திற்கு உத்தரவாதம் அளிக்கப் படுகின்றனர்.

❖ இந்திய மருத்துவ ஆராய்ச்சி சங்கமானது மின்னணு புகையிலை உட்பட மின்னணு நிக்கோடின் அளிப்பு சாதனங்கள் (Electronic Nicotine Delivery Systems - ENDS) மீது முழுமையான தடை விதிக்கப் பரிந்துரை அளித்திருக்கின்றது.

- மின்னணு சிகரெட்டுகள் புகையிலையைக் கொண்டிராமல் நிக்கோடினை மட்டுமே கொண்டிருப்பதால் அவை சிகரெட்டுகள் மற்றும் இதர புகையிலைப் பொருட்கள் சட்டம் 2003 (விளம்பரப்படுத்தல் மீதான தடை மற்றும் வர்த்தகம்,

வியாபாரம், உற்பத்தி, வழங்கல் மற்றும் விநியோகம் ஆகியவற்றின் மீதான கட்டுப்பாடு) என்ற சட்டத்தின் கீழ் வராது.

- நிர்மலா சீத்தாராமன் இந்தியாவின் முதல் முழுநேர பெண் நிதி அமைச்சராகப் பதவியேற்றார்.
    - இதற்குமுன் இந்திரா காந்தி, தனது பிரதமர் பதவிக் காலத்தில் 1970 முதல் 1971 வரையிலான காலக் கட்டத்தில் நிதியமைச்சராக இருந்தார். 17வது மக்களவையில் உள்ள இதர பெண் கேபினட் அமைச்சர்கள் ஸ்மிருதி இராணி மற்றும் ஹர்சிம்ரத் கவுர் பாதல் ஆகியோராவர்.
- ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் சமீபத்தில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அனிதா பாட்டியாவை வள மேலாண்மை, நீடித்த தன்மை மற்றும் பங்காண்மை ஆகியவற்றுக்காக பாலின சமத்துவம் மற்றும் பெண்கள் மேம்பாட்டிற்கான ஐக்கிய நாடுகள் அமைப்பின் (UN-Women) இணை நிர்வாக இயக்குநராக நியமித்துள்ளார்.
- 2019 ஆம் ஆண்டு ஜுன் 07 அன்று இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் S. ஜெய்சங்கர், தனது முதலாவது வெளிநாட்டுப் பயணமாக பூடான் நாட்டிற்குச் சென்றடைந்தார்.
- ரஜபுத் இனத்தைச் சேர்ந்த மாவீரரான மகாராணா பிரதாப்பின் 479-வது பிறந்த தினம் ஜுன் 06 அன்று அனுசரிக்கப்பட்டது.
    - இவர் 1576 ஆம் ஆண்டு ஜுன் 18 அன்று அக்பர் பேரரசின் தளபதியான மான் சிங் தலைமைக்கு எதிரான ஹால்டிஹாட்டி போரில் வல்லமையுடன் போரிட்டார். ஆனால் இவர் தோற்கடிக்கப்பட்டார்.
- புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியர் மற்றும் எழுத்தாளரான ரோமிலா தாப்பர் அமெரிக்க தத்துவவியல் சமூகத்தின் (APS - American Philosophical Society) சர்வதேச உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். APS-ன் வருடாந்திர வசந்த காலச் சந்திப்பின் போது இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
    - APS என்பது பெஞ்சமின் பிராங்கிளின் என்பவரால் 1743 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட அமெரிக்காவின் ஒரு பழமையான கல்விச் சமூகமாகும். இவர் முதலாவது அமெரிக்கர் என்று அறியப்படுகின்றார். மேலும் இவர் அமெரிக்காவின் நிறுவனத் தலைவர்களில் ஒருவராகவும் அறியப்படுகின்றார். அறிவுசார் தேடல் மற்றும் ஆழ்ந்த சிந்தனை ஆகியவை பொது மக்கள் நலனில் இன்றியமையாதவை என்று APS நம்புகின்றது.
- ஒழுங்குமுறை மேற்பார்வைத் தவறுகளைக் குறைப்பதற்காக பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகம் மற்றும் இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI - Securities and Exchange Board of India) ஆகிய இரண்டு ஒழுங்குமுறை அமைப்புகளுக்கிடையே "தகவல் பரிமாற்றத்திற்கான" அதிகாரப்பூர்வ புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்திடப்பட்டுள்ளது.
    - பெருநிறுவனத்தின் மோசடிகள் பொருளாதாரத்தின் முக்கியமானத் துறைகளைப் பாதிப்பதன் காரணமாக கண்காணிப்பிற்கான தேவை அதிகரித்துள்ள நிலையில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.
- புது தில்லியில் உள்ள கடலோரக் காவற்படைத் தலைமையகத்தில் கடலோரக் காவற்படையின் கீழ்நிலை அதிகாரிகளுக்கான 4-வது மாநாட்டை இந்திய கடலோரக் காவற்படைப் பொது இயக்குநர் இராஜேந்திர சிங் தொடங்கி வைத்தார்.
    - இவர் 2018 ஆம் ஆண்டில் மும்பையில் ஏற்பட்ட மழையின் போது ஒரு மூழ்கிக்

கொண்டிருக்கும் பெண்மணியைக் காப்பாற்றுவதற்காக உயிர்காக்கும் கருவிகளை சிறந்த முறையில் பயன்படுத்தியதற்காகவும் தனித்துவ மன உறுதியை அங்கீகரிப்பதற்காகவும் "நவீக் வினோத்" என்பவருக்கு "உத்தம் ஜீவன் ரக்சா பதக்" என்ற விருதினை வழங்கினார்.

- சூடானின் தலைநகரான கார்டோமில் வன்முறை அதிகரித்து வருவதன் காரணமாக ஆப்பிரிக்க யூனியன் சூடானின் உறுப்பினர் தகுதியைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது. இது உடனடியாக அமலுக்கு வரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. சூடானில் இராணுவ ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராடிய ஏராளமான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.
- இலங்கையின் கொடியைத் தாங்கிச் செல்லும் பிரபல விமானமான இலங்கை ஏர்லைன்ஸ் தொடர்ந்து 2-வது முறையாக "உலகின் சிறந்த காலம் தவறாத ஏர்லைன்ஸாக" பெயரிடப்பட்டுள்ளது. இது மே மாதத்தில் 90 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட தனது விமானங்களை குறித்த காலத்திற்குள் இயக்கியுள்ளது.
    - சர்வதேச விமான மேற்பார்வையாளர் நிறுவனமான "Flightstats" என்ற அமைப்பு இந்த அங்கீகாரத்தை அதற்கு வழங்கியுள்ளது.
- தாய்லாந்தின் மேல்சபை மற்றும் கீழ்சபை இணைந்து நடத்திய பாராளுமன்ற வாக்கெடுப்பில் தாய்லாந்தின் 29-வது பிரதமராக ஜெனரல் பிரயூத் சன்-ஓ-சா என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
    - இவர் இராணுவ எதிர்ப்புக் கட்சிகளுடைய கூட்டணியின் பிரதிநிதியாக விளங்கும் தாய்லாந்தின் எதிர்கால சீர்திருத்த முற்போக்குக் கட்சியின் தலைவரான தனதோர்ன் ஜூவன்ரோன்குரான்கிட் என்பவரைத் தோற்கடித்தார்.
- செயின்ட் பீட்டஸ்பெர்க் இரயில் நிலையத்திலிருந்து இரஷ்யாவின் ஆர்க்டிக் பகுதி வழியாக நார்வே வரை செல்லும் முதலாவது சுற்றுலா இரயில், பயணிகளுடன் தனது பயணத்தைத் தொடங்கியது.
    - "சாரின்கோல்டு" என்று பெயரிடப்பட்ட இந்த இரயில் இரஷ்யாவினால் இயக்கப்படுகின்றது.
- ஜப்பானின் புதிதாகப் பட்டம் சூட்டப்பட்ட பேரரசரான நருஹீட்டோவை சந்திக்கும் முதலாவது வெளிநாட்டுத் தலைவராக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் உருவெடுத்துள்ளார்.
- அமெரிக்க நாவலாசிரியரான தயாரி ஜோன்ஸ், தனது நான்காவது புதினமான "அமெரிக்கத் திருமணம்" என்பதற்காக இந்த ஆண்டின் புனைவுப் பிரிவில் பெண்கள் விருதை வென்றுள்ளார்.
    - உலகெங்கிலும் உள்ள எழுதும் பெண்களைப் பெருமைப்படுத்துவதற்கான ஐக்கிய இராஜ்ஜியத்தின் ஒரே வருடாந்திர புத்தக விருது இதுவாகும். இது 1996 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு மாநிலத்தில் அதிக மரங்களை வளர்க்கும் நோக்கத்துடன் மேகாலயா மாநில அரசானது "ஒரு குடிமகனுக்கு ஒரு மரம்" எனும் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- மிகப்பெரிய யோகா தின நிகழ்வின் நடைபெறும் இடம், பங்கேற்பாளர்கள், நடத்துபவர்கள், பயிற்றுனர்கள், தன்னார்வலர்கள் இணைதல் ஆகியவை குறித்த விரிவான தகவல்களைப் பெற புவன் எனும் கைபேசி செயலியை ISRO ஆனது

உருவாக்கியுள்ளது.

- சினிமா உலகில் வழங்கிய தமது சிறந்தப் பங்களிப்பிற்காக புகழ்வாய்ந்த JC டேனியல் எனும் விருதிற்கு மலையாள நடிகையும் திரைப்பட இயக்குநருமான ஷீலா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
  - 2005 ஆம் ஆண்டில் இவ்விருதினைப் பெற்ற அரண்முலா பொன்னம்மாவிற்குப் பிறகு இவ்விருதினைப் பெறும் இரண்டாவது பெண்மணி இவரேயாவார்.
- ஆந்திரப் பிரதேச மாநிலமானது மாநிலத்திற்குள் தேசியப் புலனாய்வு அமைப்பு நுழைவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை விலக்கிப் "பொது ஒப்புதலை" அளித்துள்ளது.
  - இந்த புதிய அரசாணையானது சந்திரபாபு நாயுடுவின் தலைமையிலான அரசின் முந்தைய ஆணையை ரத்து செய்துள்ளது.
- முகநூல் நிறுவனமானது முதல் ஊடாடும் விளையாட்டு நிகழ்ச்சியான "கான்ஃபெட்டி" என்ற நிகழ்ச்சியை இந்தியாவில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஆஸ்திரியா நாட்டில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள தேர்தல் வரை ஆட்சி செய்யும் இடைக்கால அரசிற்கு அந்நாட்டின் அரசியலமைப்பு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியான பிரிகிட்டி பியர்லெய்ன் என்பவரை அந்நாட்டின் முதல் பெண் தலைவராக ஆஸ்திரியாவின் அதிபர் நியமித்துள்ளார்.
- இரு சக்கர வாகனங்களுக்கான பாரத் நிலை – VI என்ற தகுதி நிலைக்கான விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.
  - சர்வதேச வாகனத் தொழில்நுட்ப மையத்தின் இயக்குநரான தினேஷ் தியாகி என்பவர் பாரத் நிலை – VI விதிமுறைகளுக்கான இந்தியாவின் முதலாவது வகை ஒப்புதல் சான்றிதழை வெளியிட்டார். அவர் இதனை ஹீரோ மோட்டார்கார்ப் நிறுவனத்திடம் சமர்ப்பித்தார்.
- 2019 ஆம் ஆண்டிற்கான சர்வதேச யோகா தினக் கொண்டாட்டங்களின் முக்கிய நிகழ்ச்சி இந்த மாதத்தின் 21 ஆம் தேதியன்று ராஞ்சியில் உள்ள பிரபாத் தாராவில் நடத்தப்படவிருக்கின்றது.
  - இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்த முக்கியமான நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கவிருக்கின்றார்.
- பாய்ச்சுங் பூட்டியாவைப் பின்னுக்குத் தள்ளி மிகவும் தலைசிறந்த கால்பந்து வீரராக சுனில் சேத்திரி உருவெடுத்துள்ளார். பாய்ச்சுங் பூட்டியா 107 சர்வதேசப் போட்டிகளில் விளையாடியுள்ளார்.
- செயின்ட் பீட்டர்ஸ்பெர்க் சர்வதேசப் பொருளாதார மன்றம் என்பது சர்வதேசப் பொருளாதாரத் துறைக்கான ஒரு வருடாந்திர ரஷ்ய வணிக மற்றும் முதலீட்டு நிகழ்வாகும்.
  - இது 1997 ஆம் ஆண்டு முதல் செயின்ட் பீட்டர்ஸ்பெர்க்கில் நடத்தப்பட்டு வருகின்றது.
- 2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலான 4 ஆண்டுகளுக்கு உலகச் சுகாதார நிறுவனத்தின் (World Health Organization - WHO) வெளித் தணிக்கையாளராக இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கையாளரான இராஜீவ் மெஹரிஷி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
  - ஜெனீவாவில் நடைபெற்ற 72வது உலக சுகாதாரச் சந்திப்பின் போது பெரும்பான்மையான வாக்குகளுடன் இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

- கலிபோர்னியாவைச் சேர்ந்த ஒரு சீக்கியரான ஜீவன்தீப் கோலி என்பவர் எல்ஜிபிடி சமூகத்திற்கு ஆதரவு தெரிவிப்பதற்காக வானவில் வண்ணத்திலான தலைப் பாகையை அணிந்து, அவற்றைப் படம் எடுத்துப் பதிவேற்றியதற்காக சர்வதேச அளவில் கவனத்தைப் பெற்றார்.
- அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கிடையேயான உறவுகளுக்கு தனது பங்களிப்புகளை அங்கீகரிக்கும் விதமாக அரசியல் மேதைமைக்கான ஜார்ஜ் எச். டபிள்யூ புஷ் விருதை அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஜிம்மி கார்ட்டர் பெற்றுள்ளார்.
- புகழ்பெற்ற கிரிக்கெட் போட்டி ஒளிப்பரப்பாளரான ஆஷிஷ் ரே என்பவர் "கிரிக்கெட் உலகக் கோப்பை: இந்தியாவிற்கான சவால்" என்ற ஒரு புதிய புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.
    - 1975 ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் உலகக் கோப்பையின் தொடக்கப் பதிப்பிலிருந்து இந்தியக் கிரிக்கெட்டின் பயணம் குறித்து இவர் எழுதியுள்ளார்.
- இந்திய இராணுவம் மற்றும் இந்திய விமானப் படை ஆகியவை கூட்டாக இணைந்து பஞ்சாப் சமவெளிகளில் "கர்கா பிரகார்" என்ற பெயர் கொண்ட ஒரு பயிற்சியை நடத்தின.
    - இந்தப் பயிற்சி பல முக்கியமான செயல்பாட்டு அம்சங்களை உறுதிபடுத்தியது. இது கர்கா என்ற படைப் பிரிவின் உயர் செயல்பாட்டுத் தயார் நிலையை எடுத்துக் காட்டியது.
- 2019 ஆம் ஆண்டின் சர்வதேச யோகா தினக் கொண்டாட்டங்களுக்கு வலு சேர்க்கும் விதமாக இரண்டு நாட்கள் நடைபெறக் கூடிய ஒரு "யோகா மகாஉத்சவத்தை" ஆயுஷ் அமைச்சகம் புது தில்லியில் நடத்தியது.
- சஹாரா குழுமம் சமீபத்தில் "சஹாரா எவோல்ஸ்" என்ற புதிய குறியீட்டுப் பெயரின் கீழ் மின்சார வாகனத் தயாரிப்பில் ஈடுபடத் திட்டமிட்டுள்ளது.
    - இந்த நிறுவனம் மின்சார இரு சக்கர வாகனங்கள், மின்சார உந்து வண்டிகள், மின்சார மூன்று சக்கர வாகனங்கள் மற்றும் மின்சார சரக்கு வாகனங்கள் ஆகியவற்றை வழங்கவிருக்கின்றன.
- இந்தியாவின் மிகப்பெரிய கொடையாளர் மற்றும் வியாபாரப் புள்ளிகளில் ஒருவரான அசிம் பிரேம்ஜி ஜூலை 30 ஆம் தேதியன்று விப்ரோவின் நிர்வாகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஆகிய பதவிகளிலிருந்து ஓய்வு பெறவிருக்கின்றார்.
- 2018 ஆம் ஆண்டின் போக்குவரத்து நெரிசல் குறியீடானது ஆம்ஸ்டர்டேமைச் சேர்ந்த டோம்டோம் என்ற நிறுவனத்தினால் வெளியிடப்பட்டது. இது தொடர்ந்து இரண்டாவது முறையாக உலகின் மிகவும் போக்குவரத்து நெரிசல் மிக்க நகரமாக மும்பையைத் தரவரிசைப் படுத்தியுள்ளது. இந்தப் பட்டியலில் தில்லி நகரம் நான்காவது இடத்தில் உள்ளது.
- புகழ்பெற்ற நாடக ஆசிரியர், திரைப்பட வசன எழுத்தாளர் மற்றும் "கிரேஸி கிரியேஷன்ஸின்" நிறுவனரான கிரேஸி மோகன் காலமானார். இவரது இயற்பெயர் மோகன் இரங்காச்சாரி என்பதாகும்.
    - சாக்லெட் கிருஷ்ணா என்பது இவருடைய புகழ்பெற்ற மற்றும் மிகவும் அறியப்படுகின்ற ஒரு நாடகமாகும்.
- 5 முறை சட்டசபை உறுப்பினராகப் பணியாற்றிய மற்றும் புதுச்சேரியின் முன்னாள் முதலமைச்சரான RV ஜானகிராமன் சமீபத்தில் காலமானார்.
- இராஜஸ்தானில் உள்ள சுரு நகரில் 50.8 டிகிரி செல்ஷியஸ் வெப்ப நிலை பதிவாகியுள்ளது.

இது நாட்டிலும் அம்மாநிலத்தின் ஜெய்ப்பூர் வானிலை மையத்தாலும் பதிவு செய்யப்பட்ட அதிகபட்ச வெப்பநிலையாகும்.

- இலங்கையின் இரண்டு முஸ்லீம் ஆளுநர்கள், அமைச்சரவையில் கேபினெட் நிலையில் உள்ள 4 அமைச்சர்கள் உள்ளிட்ட அனைத்து 9 முஸ்லீம் அமைச்சர்கள் அனைவரும் கூட்டாக இணைந்து பதவி விலகியுள்ளனர்.
    - ஈஸ்டர் ஞாயிறு தீவிரவாதத் தாக்குதல் நடைபெற்றதிலிருந்து முஸ்லீம் சமூகத்தைத் தவறாகச் சித்தரிக்கப்படுவதற்கு எதிராக இவர்கள் அனைவரும் கூட்டாக இணைந்து இந்த முடிவை எடுத்துள்ளனர்.
- ஐசிசி உலகக் கோப்பை கிரிக்கெட் வரலாற்றில் அதிக சிக்சர்களை அடித்த வீரராக மேற்கு இந்தியத் தீவுகள் அணியின் தொடக்க வீரர் கிறிஸ் கெயில் உருவெடுத்துள்ளார். இவர் தென் ஆப்பிரிக்காவின் முன்னாள் அணித் தலைவரான ஏபி டி வில்லியர்ஸை முந்தியுள்ளார். கெயில் தற்போது வரை 39 சிக்சர்களை அடித்துள்ளார்.
- ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்த 8 வயது நிரம்பிய குழந்தையைக் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்து (கத்துவா கூட்டுப் பாலியல் வழக்கு), அந்தக் குழந்தையைக் கொன்ற மூன்று முக்கியக் குற்றவாளிகளுக்கு ரன்பீர் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மூன்று காவல் துறை அதிகாரிகளுக்கு ஐந்து ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளன.
    - ரன்பீர் குற்றவியல் நடைமுறைச் சட்டம் மட்டுமே காஷ்மீர் மாநிலத்தில் செல்லுபடியாகும். இது 1932 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. டோக்ரா அரச வம்சத்தின் ஆட்சியாளரான, ரன்பீர் சிங்கின் நினைவாக இதற்கு இப்பெயர் வைக்கப்பட்டுள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கி எந்தவொரு குறைந்தபட்ச அளவிலான பணத்தையும் வங்கிக் கணக்கில் தொடர்ந்து வைத்திருக்க வேண்டும் என்ற நிபந்தனை இல்லாமல் அடிப்படை வங்கிச் சேவைகளை அளிக்கும் "கட்டணமில்லாத வங்கிக் கணக்கு" வைத்துள்ளவர்களுக்கு காசோலை வசதி மற்றும் இதரச் சேவைகளை அளிக்க வங்கிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது.
    - அடிப்படைச் சேமிப்பு வங்கி வைப்புக் கணக்கு (BSBD - Basic Savings Bank Deposit) என்பது மேற்குறிப்பிட்டுள்ளது போன்ற வங்கிக் கணக்கு வைத்துள்ளவர்களுக்கு குறிப்பிட்ட சில வசதிகளை இலவசமாக வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- இந்தியாவின் அடுத்த இடைக்கால சபாநாயகராக பாஜகவைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரான வீரேந்திர குமார் பொறுப்பேற்கவிருக்கின்றார். இவர் மத்தியப் பிரதேசத்தின் திகம்கார்க் தொகுதியிலிருந்துத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- 2015 ஆம் ஆண்டில் நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் போது அங்குள்ள நவகாட் மற்றும் கோர்கா மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட வீடுகளை மறுகட்டமைப்பதற்காக அங்கு வாழும் 50,000 மக்களுக்கு உதவுவதற்காக 1.6 பில்லியன் நேபாள ரூபாய் மதிப்பிலான நிதியுதவியை நேபாள நாட்டிற்கு இந்தியா நீட்டித்துள்ளது.
- மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்புத் துறை அமைச்சரான தாவர்சந்த் கெலாட் பிஜேபியின் நாடாளுமன்றக் கட்சிக்கான மாநிலங்களவையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். மாநிலங்களவையில் பிஜேபியின் நாடாளுமன்றக் கட்சிக்கான துணைத் தலைவராக மத்திய இரயில்வே மற்றும் வணிகத் துறை அமைச்சரான பியுஷ் கோயல் செயல்படவிருக்கின்றார்.
    - மக்களவையில் பிஜேபி கட்சியின் தலைவராக நரேந்திர மோடி

பணியாற்றுகின்றார். இக்கட்சியின் துணைத் தலைவராக ராஜ்நாத் சிங் செயல்படவிருக்கின்றார்.

- மக்களவையின் தலைமைக் கொறடாவாக சஞ்சய் ஜெய்ஸ்வாலும் மாநிலங்களவையின் தலைமைக் கொறடாவாக நாராயண் லால் பஞ்சார்யாவும் செயல்படவிருக்கின்றனர்.

❖ மிகக் கடுமையான சூறாவளிப் புயலான "வாயுப் புயல்" குஜராத் கடற்கரையோரத்தில் கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

- இந்தப் புயலின் பெயரான "வாயு" என்பது இந்தியாவினால் பெயரிடப்பட்டது. கஜா புயல் இலங்கையினால் பெயரிடப்பட்டுள்ளது. ஒக்கி மற்றும் பானி புயல்கள் வங்க தேசத்தினால் பெயரிடப்பட்டுள்ளன.

❖ 2024 ஆம் ஆண்டில் அனைவருக்கும் தூய்மையான குடிநீர் வழங்க இந்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளதாக ஜல் சக்தித் துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் அறிவித்துள்ளார்.

- தற்பொழுது கிராமப்புறக் குடும்பங்களில் 18 சதவிகிதத்தினர் மட்டுமே குழாய் மூலமான குடிநீரைப் பெறுகின்றனர்.

❖ மூத்த இந்தியக் காவல் துறை அதிகாரியான VS கமுதி என்பவர் காவல்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (BPR&D - Bureau of Police Research and Development) பொது இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

- இந்த அமைப்பு 1970 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பானது நாட்டில் காவல்துறையினர் சந்திக்கும் பிரச்சனைகளிலிருந்து அவர்கள் மீண்டு வருவதற்குப் பரிந்துரைகளை உருவாக்கும் ஆராய்ச்சிப் பணியை மேற்கொள்கின்றது.

❖ நிர்பேந்திர மிஸ்ரா மற்றும் பிகே மிஸ்ரா ஆகியோர் முறையே முதன்மைச் செயலாளர் மற்றும் கூடுதல் முதன்மைச் செயலாளராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

- பிரதமர் நரேந்திர மோடியின் பதவிக் காலத்தோடுப் பொருந்திப் போகும் வகையில் இவர்களது நியமனங்கள் மேற்கொள்ளப் படவிருக்கின்றன. இவர்களுக்கு கேபினெட் அமைச்சர்களுக்கான தகுதிநிலை வழங்கப்பட விருக்கின்றது.

❖ உலக வங்கி வரையறையின்படி தனி நபர் தலா வருமானம் 2,000 டாலர்கள் என்ற மதிப்புடன் கீழ்நிலையில் உள்ள நடுத்தர வருமானம் ஈட்டும் நாடு இந்தியா வரையறை செய்யப்பட்டிருக்கின்றது.

❖ தானியங்கி பணமளிப்பு இயந்திரம் மூலம் வங்கிகளுக்கு இடையேயான பரிமாற்றக் கட்டண அமைப்பு குறித்து ஆய்வு செய்வதற்காக இந்திய வங்கிகள் மன்றத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான விஜி கண்ணன் தலைமையில் 6 நபர்கள் கொண்ட ஒரு குழுவை இந்திய ரிசர்வ் வங்கி அமைத்துள்ளது.

- இது வங்கிச் சேவை இல்லாத பகுதிகளில் ஏடிஎம் இயந்திரங்களை அமைப்பதற்கு ஊக்கம் அளித்தலை நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ வாராக் கடன் சொத்துக்களை ஒருங்கிணைப்பதற்கு உதவுவதற்காக பிஎன்பி வங்கித் தலைவரான சுனில் மேத்தா தலைமையிலான குழுவினால் பரிந்துரை அளிக்கப்பட்டும் இந்திய ரிசர்வ் வங்கியினால் ஆதரிக்கப்பட்டும் வழங்கப்பட்ட பரிந்துரைகளுக்கு "சசாக்த் திட்டம்" என்று பெயரிடப்பட்டு இருக்கின்றது.

- நீண்ட காலமாக பதவியிலிருந்த கஜகஸ்தானின் முன்னாள் அதிபர் நுர்சுல்தான் நசர்பயேவ் என்பவரையடுத்து அந்நாட்டின் புதிய அதிபராக ஜோமார்த் டோக்காயேவ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
  - 1991 ஆம் ஆண்டில் சோவியத் ஒன்றியத்திலிருந்து கஜகஸ்தான் பிரிந்ததிலிருந்து 2019 ஆம் ஆண்டு தனது பதவியிலிருந்து விலகும் வரை அவர் அந்நாட்டினை ஆட்சி செய்து வந்தார்.
- மத்திய அமைச்சரவை "ஆதார் மற்றும் இதர சட்டங்கள் (திருத்தம்) மசோதா 2019" என்பதனை நாடாளுமன்றத்தில் அறிமுகப் படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
  - "இந்த மசோதா ஆதார் சட்டத்தை வலுப்படுத்துவதையும் நீதியரசர் B.N. கிருஷ்ணா குழுவின் பரிந்துரைகள் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களை நடைமுறைப்படுத்துவதையும் நோக்கங்களாகக் கொண்டுள்ளது.
- மத்திய அமைச்சரவை இந்திய மருத்துவ கவுன்சில் (திருத்தம்) மசோதா, 2019 என்பதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
  - இது நாட்டில் மருத்துவக் கல்வி நிர்வாகத்தின் வெளிப்படைத் தன்மை, பொறுப்புடைமை மற்றும் தரம் ஆகியவற்றை உறுதி செய்வதை நோக்கங்களாகக் கொண்டுள்ளது.
- மத்திய பழங்குடியினர் விவகாரத் துறை அமைச்சர் அர்ஜீன் முண்டா பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் நலத் திட்டங்களுக்காக மின்னணு முறையிலான நிர்வாக (e-governance) முன்னெடுப்புகளைத் தொடங்கியுள்ளார்.
  - பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதலில் சிறப்பான மின்னணு முறையிலான நிர்வாகத்தைக் கொண்டு வருவதற்காக "நேரடிப் பயன் பரிமாற்றப் பழங்குடியினர்" மற்றும் "அரசு சாரா அமைப்பு வழங்கும் நிகழ்நேர செயலி மற்றும் பின்தொடர் அமைப்பு " என்ற நிகழ்நேரத் தளங்கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன.
- "ப்ளைக்ஸ்கேம்" (Flygskam) என்ற சொல்லானது ஸ்காண்டிநேவியன் நாடுகள் மற்றும் உலக நாடுகளில் இளம்பருவ சுற்றுச்சுழல் ஆர்வலரான கிரேட்டா துன்பெர்க் என்பவரின் முயற்சியால் புகழ்பெற்று விளங்குகின்றது.
  - இது விமானத் தொழிற்துறையினால் ஏற்படும் அதிகப்படியான மாசுபாடு காரணமாக மக்கள் விமானப் போக்குவரத்தைத் தவிர்த்து இரயில் போக்குவரத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கின்றது.
- இந்திய வாகனக் கூட்டமைப்புச் சமூகம் (Society of Indian Automobile Association - SIAM) 2023 ஆம் ஆண்டில் மின்சாரம் அல்லாத மூன்று சக்கர வாகனங்களின் விற்பனையையும் 2025 ஆம் ஆண்டில் 150சிசிகும் குறைவாக உள்ள இரு சக்கர வானங்களின் விற்பனையையும் தடை செய்யும் மத்திய அரசின் பரிந்துரையை எதிர்த்துள்ளது. இது குறிப்பிட்ட காலத்தில் செயல்படுத்த முடியாதவை என்றும் நடைமுறைக்கு உகந்தவை அல்ல என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது.
- மத்திய நீர் ஆணையம் (CWC - Central Water Commission) மற்றும் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் துறை அமைச்சகம் ஆகியவற்றிலிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் காரணமாக ஆந்திரப் பிரதேச அரசின் கோதாவரி-பெண்ணாறு நதிநீர் இணைப்புத் திட்டங்களுக்கு தேசிய பசுமைத் தீர்ப்பாயம் (National Green Tribunal - NGT) இடைக்காலத் தடை விதித்துள்ளது.

- நீதியரசர் ஆதர்ஷ் குமார் தலைமையிலான தேசிய பசுமைத் தீர்ப்பாயம் (NGT) உணவுப் பொருட்களை நெகிழிப் பொருட்களால் கட்டுவதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு மேலும் விதிமுறைகள் தேவையா என்பது குறித்து விசாரிப்பதற்காக வல்லுநர் குழு ஒன்றை அமைத்துள்ளது.
    - இந்தக் குழுவானது இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரங்கள் ஆணையம் (FSSAI - Food Safety and Standards Authority of India), இந்தியத் தரங்கள் அமைப்பு, மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் சுகாதார சேவைகளின் பொது இயக்குநரகம் ஆகியவற்றிலிருந்து உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
- மத்திய அமெரிக்க நாடான எல் சால்வேடார் காடுகளை “வாழும் அமைப்புகளாக” அங்கீகரித்துள்ளது. இந்த நாட்டைச் சேர்ந்த குடிமக்கள் தற்பொழுது காடுகளை சட்டப்பூர்வமாகப் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளனர்.
- அதிக ஊதியம் பெறும் விளையாட்டு வீரர்களுக்கான போர்ப்ஸ் – 2019 அறிக்கையின்படி, கால்பந்து வீரரான லியோனல் மெஸ்ஸி ஊதியம் மற்றும் இதர ஒப்பந்தங்கள் ஆகியவற்றைச் சேர்த்து மொத்தம் 127 மில்லியன் டாலருடன் இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.
    - இந்தப் பட்டியலில் இடம்பெற்ற ஒரே இந்திய விளையாட்டு வீரர் மற்றும் கிரிக்கெட் வீரர் விராட் கோலி ஆவார். இவர் இந்தப் பட்டியலில் 100-வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளார். 2019 ஆம் ஆண்டில் இவருடைய மொத்த ஊதியம் 25 மில்லியன் டாலர்கள் ஆகும்.
- பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவையானது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சரத்து 356(4)-ன் கீழ் ஜம்மு காஷ்மீரில் அடுத்த 6 மாத காலத்திற்குக் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இது 2019 ஆம் ஆண்டு ஜூலை 03 ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரவிருக்கின்றது.
    - ஜம்மு காஷ்மீரில் குடியரசுத் தலைவர் ஆட்சியை நீட்டிப்பதற்கான தீர்மானம் வருகின்ற நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் இரு அவைகளிலும் அறிமுகப்படுத்தப் படவிருக்கின்றது.
- இந்திய ரிசர்வ் வங்கியிடம் உபரியாக உள்ள நிதியை மத்திய அரசிற்கு வழங்குவதற்கு வழிகாட்டுதல்களைப் பரிந்துரைக்க அமைக்கப்பட்ட பீமல் ஜலன் தலைமையிலான இந்திய ரிசர்வ் வங்கிக் குழு (இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர்) தமது உறுப்பினர்களிடையே கருத்தொற்றுமை ஏற்படாததால், அந்த அறிக்கையை சமர்ப்பிப்பதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது.
    - முதலில் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இக்குழு தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கவிருந்தது.
- இந்தியாவில் இரயில் நிலைய வளர்ச்சித் திட்டத்திற்கு ஆதரவளிப்பதற்காக இந்திய இரயில் நிலைய வளர்ச்சிக் கழகம் (IRSDC - Indian Railway Station Development Corporation) பிரெஞ்சு தேசிய இரயில்வே (SNCF - French National Railways) மற்றும் AFD என்ற நிறுவனம் ஆகிவற்றுடன் முத்தரப்பு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
    - 245 கிலோ மீட்டர் தொலைவு கொண்ட தில்லி – சண்டிகர் பெருவழிப் பாதையில் மணிக்கு 200 கிலோ மீட்டர் வேகத்தில் இரயிலை இயக்குவதற்கான வேக மேம்பாட்டு ஆய்வு, லூதியானா மற்றும் அம்பாலா இரயில் நிலைய வளர்ச்சிப் பணிகள் ஆகியவை இதற்கு முன்பு பிரெஞ்சு உதவியுடன் மேற்கொள்ளப்பட்டன.

- வியாபாரக் குறியீட்டுப் பாகுபாட்டு நிறுவனமான டீஅர்ஏ ஆராய்ச்சி அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின்படி, 2019 ஆம் ஆண்டில் இந்தியாவில் மிகவும் நம்பிக்கை பெற்ற குறியீட்டு நிறுவனமாக “டெல்” நிறுவனம் உருவெடுத்துள்ளது.
  - வாகன நிறுவனமான ஜீப், எல்ஜசி, அமேசான், ஆப்பிள் ஆகியவை முறையே 2, 3, 4, மற்றும் 5-வது இடங்களில் மிகவும் நம்பிக்கை பெற்ற நிறுவனங்களாக தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.
- நிலத்தடி நீர் மேலாண்மை தொடர்பாக ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து மாகாணத்திலிருந்து இறுதி ஒழுங்குமுறை அனுமதியை குஜராத்தைச் சேர்ந்த அதானி குழுமம் பெற்றுள்ளது. இதன் மூலம் அந்நிறுவனம் விமர்சனத்திற்குள்ளான தனது கார்மிச்சல் நிலக்கரி சுரங்கத் திட்டம் மீதான பணியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
  - பெருந் தடுப்புப் பவளத் திட்டிற்குப் பாதிப்பை ஏற்படுத்துதல் மற்றும் அதிகப்படியான கார்பன் உமிழ்வுகள் ஆகியவை இத்திட்டத்திற்கு எதிராக எழுப்பப்பட்ட விமர்சனங்களாகும்.
- புதிதாகப் பதவியேற்றுள்ள மோடி அரசு, தொலைத் தொடர்பு அலைவரிசையின் மிகப் பெரிய அளவிலான ஏலத்திற்குத் திட்டமிட்டுள்ளது. இந்த ஏலத்தின் மூலம் ஏறத்தாழ ரூ. 6 லட்சம் கோடி நிதியைத் திரட்ட அரசு திட்டமிட்டுள்ளது. இது கிராமப்புறப் பகுதிகளில் இழையிலிருந்து வீட்டிற்கு இணைய வசதியை அளித்தல் உள்ளிட்ட ஐந்தாம் தலைமுறை சேவைகளை மலிவு விலையில் அறிமுகப்படுத்தவிருக்கின்றது.
- மத்தியக் கலாச்சாரத் துறை அமைச்சரான பிரகலாத் சிங் படேல், “அஸ்தித்வா : பிரபாகர் பார்வேயின் சாராம்சம்” என்ற ஒரு கண்காட்சியை புது தில்லியில் உள்ள தேசிய நவீனக் கலைக் கூடத்தில் தொடங்கி வைத்தார்.
  - 1976 ஆம் ஆண்டு லலித் கலா விருது பெற்றவரான பிரபாகர் பார்வே என்பவர் நவீன இந்திய ஓவியத்தின் முன்னோடியாக விளங்கினார்.
- அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கான செயல்திட்டம் குறித்து விவாதிப்பதற்காக அரியானாவின் குருகிராமில் ஸ்வீப் (Systematic Voters’ Education and Electoral Participation program) என்ற திட்டத்திற்கான பிரத்தியேக அதிகாரிகளுக்கான இரண்டு நாட்கள் கருத்தரங்கானது இந்தியத் தேர்தல் ஆணையத்தால் நடத்தப்பட்டது.
  - வாக்காளர்களுக்கான முறைசார்ந்த கல்வி மற்றும் தேர்தல் பங்கெடுப்புத் திட்டம் (Systematic Voters’ Education and Electoral Participation program - SVEEP) என்பது இந்தியத் தேர்தல் ஆணையத்தின் தலைமைத் திட்டமாகும்.
- கம்போடியாவின் தகவல் துறை அமைச்சகம் மற்றும் ஒளிபரப்பு வளர்ச்சிக்கான ஆசிய-பசிபிக் நிறுவனம் (AIBD - Asia-Pacific Institute for Broadcasting Development) ஆகியவை இணைந்து 2019 ஆம் ஆண்டின் 16-வது ஆசிய ஊடக மாநாட்டை கம்போடியாவின் சியேம் ரீப் மாகாணத்தில் நடத்தின.
  - போலிச் செய்திகளைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை கண்டறிவதற்காக ஓராண்டு கால அளவுடைய ஒரு ஆராய்ச்சித் திட்டமான “அங்கோர் போலிச் செய்திகள் முன்னெடுப்பு’ என்ற ஒரு திட்டமும் அப்போது தொடங்கப்படவிருக்கின்றது.
- கிர்கிஸ்தானின் தலைநகரான பிஷ்கெக்கில், அந்நாட்டின் உயரிய விருதான “முதலாவது பிரிவின் மானஸ் ஆணை” என்ற பட்டம் சீன அதிபர் சி ஜின்பிங்கிற்கு வழங்கப்பட்டது.

  - 2019 ஆம் ஆண்டின் ஜுன் 14 ஆம் தேதியில் தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கும் "ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின்" மாநாட்டை கிர்கிஸ்தான் நடத்திக் கொண்டிருக்கின்றது.

- ஹரியானாவின் குருகிராமில் இந்தியக் கடற் பிராந்தியத்தின் தகவல் பிணைப்பு மையத்தின் கீழ் "2019 ஆம் ஆண்டின் கடல்சார் தகவல் பகிர்வுப் பயிலரங்கத்தை" இந்தியக் கடற்படை நடத்தியது.
  - இரண்டு நாட்கள் நடைபெறக்கூடிய இந்தப் பயிலரங்கம் கடற்படை அதிகாரிகளுக்கான துணைத் தலைவர் மற்றும் கடற்படை துணைத் தளபதியான எம்எஸ் பவார் என்பவரால் தொடங்கி வைக்கப்பட்டது.

- 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகளின் சர்வதேச குழந்தைகள் நிதியத்தின் (UNICEF - United Nations International Children's Fund) அமெரிக்கப் பிரிவினால் அதன் பனித் திவலைப் பந்து நிகழ்வின் போது (Snowflake Ball) அந்த அமைப்பின் டேனி காயே மனித நேய விருதானது நடிகை பிரியங்கா சோப்ராவிற்கு வழங்கப்படவிருக்கின்றது.
  - UNICEF அமைப்பானது இரண்டாம் உலகப் போரின் போது பாதிக்கப்பட்ட நாடுகளில் உள்ள குழந்தைகளுக்கு நிவாரண உதவிகளை அளிப்பதற்காக 1946 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இதன் தலைமையகம் நியூயார்க்கில் அமைந்துள்ளது.

- பயனாளியின் அந்தரங்கததை மீறக்கூடிய ஒரு கட்செவிப் பிழையைக் கண்டறிந்ததற்காக, 2019 ஆம் ஆண்டின் முகநூல் வாழ்த்தரங்கில் (ஹால் ஆப் பேம்) மணிப்பூரைச் சேர்ந்த ஒரு கட்டிடப் பொறியாளரான சோனெல் சவ்காய்ஜாம் என்பவர் இணைந்துள்ளார்.
  - கட்செவி வழியாக பேச்சுத் தொடர்பின் போது இந்தப் பிழையானது அடுத்த முனையில் உள்ளவரின் அனுமதி மற்றும் தகவல் எதுவும் பெறாமலே அந்தப் பேச்சுத் தொடர்பை காணொளித் தொடர்பாக மாற்றுகின்றது.

- ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாயில் நடைபெற்ற அமீரக மறுசுழற்சி விருதுகளின் 22-வது பதிப்பின் போது "மறுசுழற்சி விருதுகளின் சுற்றுச்சூழல் வெற்றியாளர்கள்" என்ற விருது 8 வயது நிரம்பிய இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நியா டோனி என்பவருக்கு வழங்கப்பட்டது.
  - மொத்தம் 14,914 கிலோ கிராம் அளவுள்ள காகிதக் கழிவுகளைச் சேகரித்ததற்காகத் தனிநபர் பிரிவின் காகிதப் பிரிவில் இவர் இந்த விருதை வென்றுள்ளார்.

- இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI - Reserve Bank of India) கானா மற்றும் மொசாம்பிக் ஆகிய நாடுகளுக்கு விவசாயம் மற்றும் இரயில்வேத் திட்டங்களுக்கு 245 மில்லியன் டாலர்கள் மதிப்பிலான கடனை இந்திய ஏற்றுமதி இறக்குமதி வங்கி வழங்கும் என்ற அறிவிக்கையை வெளியிட்டுள்ளது.

- போர்ப்ஸ் பத்திரிக்கையினால் தொகுக்கப்பட்ட "உலகின் மிகப்பெரிய 2000 பொது நிறுவனங்களின்" பட்டியலில் முகேஷ் அம்பானி தலைமையிலான ரிலையன்ஸ் தொழிற் நிறுவனமானது இந்திய அளவில் முதலாவது இடத்திலும் சர்வதேச அளவில் 71-வது இடத்திலும் உள்ளது.
  - இந்த சர்வதேசப் பட்டியலில் தொடர்ந்து 7-வது முறையாக சீன தொழிற்துறை மற்றும் வணிக வங்கி முதலிடத்தில் உள்ளது.

- அமெரிக்காவிற்குப் பதிலடி தரும் விதமாக வாதுமைக் கொட்டை, கொண்டைக் கடலை,

வங்கப் பயிறு, மசூர் பருப்பு, போரிக் அமிலம், ஆப்பிள்கள் போன்ற 29 அமெரிக்கப் பொருட்களின் மீது சுங்க வரியை விதிக்க இந்தியா முடிவு செய்துள்ளது.

- இந்த சுங்க வரி அமெரிக்காவின் மீது 220 – 290 மில்லியன் டாலர்கள் மதிப்பிற்குத் தாக்கத்தை ஏற்படுத்தும்.

❖ திரிபுரா மாநில முதலமைச்சர் பிப்லப் குமார் தெப், மிகவும் புகழ்பெற்ற இசையமைப்பாளரான R.D. பர்மன் என்பவரின் பணியை அடையாளப் படுத்திக் காட்டுவதற்காக தன்னுடைய மாநிலத்தில் ஒரு அருங்காட்சியகம் கட்டமைக்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

❖ டானிஷ் (டென்மார்க்) ஆர்க்டிக் ஆராய்ச்சி நிறுவனங்களின் ஆர்க்டிக் கண்காணிப்பு இணையதளமான துருவ இணையதள வாயில் (POLAR) கிரீன்லாந்தில் வருடாந்திரப் பனி உருகும் காலநிலையானது 2019 ஆம் ஆண்டில் மிக முன்னதாகவே தொடங்கி விடும் என்று கூறியிருக்கின்றது.

- ஆர்க்டிக் மற்றும் வட அட்லாண்டிக் பகுதியில் ஏற்பட்ட வளிமண்டல சுழற்சியின் காரணமாக ஒரே நாளில் 2 பில்லியன் டன்கள் அளவிலான பனியை கிரீன்லாந்து இழந்துள்ளது.

❖ இந்தியத் தாவரவியல் ஆய்வு நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட ஒரு ஆய்வின்படி, 2010 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் தாவரவியலாளர்கள் மற்றும் வகைப்பாட்டியல் வல்லுநர்கள் கிழக்கு இமயமலையில் உள்ள சில வகை மரங்களிலிலுருந்து கசியும் நறுமணப் பொருட்களின் 23 புதிய இனங்களைக் கண்டுபிடித்துள்ளனர்.

- அதன் பொலிவான அழகு வாய்ந்த பூக்களின் காரணமாக இந்தத் தாவரக் குழுக்கள் தோட்டக்கலை முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது.

❖ மத்திய அமைச்சரவை புதுதில்லி சர்வதேச நடுவர் தீர்ப்பு மையம், 2019 (New Delhi International Arbitration Centre - NDIAC) என்ற ஒரு மசோதாவிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

- இது நிறுவன விவகாரங்களைத் தீர்ப்பதற்காக ஒரு தனிச் சுதந்திர மற்றும் தன்னாட்சி கொண்ட அமைப்பினை ஏற்படுத்துவதற்கு அனுமதிக்கின்றது.

❖ இராஜஸ்தானைச் சேர்ந்த சுமன் ராவ் என்பவர் 2019 ஆம் ஆண்டில் மிஸ் இந்தியா பட்டம் சுமத்தப் பட்டு இருக்கின்றார்.

❖ 633க்கும் அதிகமான ஸ்கூபா எனப்படும் நீர்மூழ்கி வீரர்கள் அமெரிக்காவின் ப்ளோரிடா கடற்கரையில் நீருக்கடியில் மிகப்பெரிய அளவிலான தூய்மைப் பணியை மேற்கொண்டு உலக சாதனைப் படைத்துள்ளனர்.

❖ இந்திய ரிசர்வ் வங்கி பணம் விநியோகம் செய்யும் இயந்திரங்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக செப்டம்பர் மாதத்தின் இறுதிக்குள் வங்கிகள் தங்களுடைய ஏடிஎம்களை சரியான சுவர், தூண் அல்லது அறையைக் கொண்டதாக (அதிகப் பாதுகாப்பு கொண்ட விமான நிலையங்கள் போன்ற இடங்களைத் தவிர) மாற்றியமைக்க வேண்டும் என்று வங்கிகளைக் கேட்டுக் கொண்டுள்ளது.

❖ உலக விலங்குகள் சுகாதார அமைப்பு “ஒரே சுகாதாரம்” என்ற ஒரு கருத்துருவை எடுத்துரைத்துள்ளது. இது மனிதர்களின் சுகாதாரமும் விலங்குகளின் சுகாதாரமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்றும் தற்பொழுது அவைகள் வாழும் சூழல் அமைப்புகள் ஒன்றோடொன்றுப் பிணைக்கப்பட்டுள்ளன என்றும் கூறியுள்ளது.

- தற்பொழுதுள்ள மனிதத் தொற்று நோய்களில் 60 சதவிகித நோய்கள் விலங்குவழி

மூலம் பரவுபவைகள் ஆகும். வளர்ந்து வரும் மனிதத் தொற்று நோய்களில் 75 சதவிகித நோய்கள் விலங்குகளிடமிருந்துப் பரவுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் பரவும் 5 புதிய மனித நோய்களில் 3 நோய்கள் விலங்குகளிடமிருந்துப் பரவுகின்றன.

❖ ஜெர்மனி மற்றும் இரஷ்யாவைச் சேர்ந்த ஒரு விஞ்ஞானிகள் குழு பிரபஞ்சத்தின் முப்பரிமாண X-கதிர் வரைபடத்தை உருவாக்கக் கூடியதும் இதுவரை கண்டறியப்படாத அதிக நிறை கொண்ட கருந்துளைகள், இருண்ட ஆற்றல் மற்றும் நட்சத்திரங்கள் ஆகியவற்றை கண்டுபிடிக்கக் கூடியதுமான ஒரு விண்வெளித் தொலைநோக்கியைச் செலுத்தத் தயாராகி வருகின்றனர்.

  ○ இது அலைவரிசை - ராண்ட்ஜன் – காமா தொலைநோக்கி என்று பெயரிடப்பட்டுள்ளது.

❖ இந்தியாவின் திரவ பெட்ரோலிய வாயுவின் (LPG - Liquefied Petroleum Gas) தற்பொழுதைய சந்தை அமைப்பு குறித்து ஆய்வு செய்வதற்காகப் பொருளாதார நிபுணர் கிரித் பரீக் என்பவரின் தலைமையின் கீழ் 5 நபர்கள் கொண்ட ஒரு குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.

  ○ இந்தத் துறையில் அதிக அளவிலான தனியார் நிறுவனங்களைக் கொண்டு வரும் முயற்சியாக இந்த நடவடிக்கை பார்க்கப்படுகின்றது. மேலும் இவர்கள் சரிசமமான LPG சந்தையாளர்களாக செயல்படுவதற்கும் தகுதி உடையவர்களாவர்.

❖ அஸ்ஸாமின் அய்சுவலில் உள்ள அஸ்ஸாம் ரைபில்ஸ் படையின் தலைமை வளாகத்தில் மிசோரம் மாநில முதல்வர் சொரம்தங்கா மரக்கன்றுகளை நட்டு பசுமை மிசோரம் தினத்தை அனுசரித்தார்.

  ○ 1999 ஆம் ஆண்டு ஜுன் 11 முதல் இத்தினம் மிசோரமில் அனுசரிக்கப்படுகின்றது.

❖ துணிகர முதலீட்டாளரான மேரி மீக்கர் என்பவரினால் வெளியிடப்பட்டுள்ள இணையதளப் போக்குகள் மீதான அறிக்கையின்படி, உலக இணையதளப் பயன்பாட்டாளர்களில் 12 சதவிகிதப் பயன்பாட்டாளர்களுடன் இந்தியா இரண்டாவது இடத்தில் தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளது.

  ○ இந்தப் பட்டியலில் 21 சதவிகித இணையதளப் பயன்பாட்டாளர்களுடன் சீனா முதலிடத்தையும் 8 சதவிகித இணையதளப் பயன்பாட்டாளர்களுடன் அமெரிக்கா மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளன.

❖ போர்ப்ஸ் பத்திரிக்கையின்படி உலகின் பணக்காரப் பெண்ணாக பாடகியான ரிகான்னா உருவெடுத்துள்ளார். இவருடைய சொத்து மதிப்பு 600 மில்லியன் டாலர்கள் என்று கணிக்கப்பட்டுள்ளது.

❖ வெனிசூலா அரசு, பணத்தின் மதிப்பை மிக அதிக அளவில் குறைத்த பணவீக்கம் (மிகுவீக்கம்) காரணமாக 3 புதிய பணத் தாள்களை வெளியிடவிருப்பதாக அறிவித்துள்ளது.

  ○ இது 1.3 மில்லியன் மடங்கிற்கும் மேலே சென்ற மிகு பணவீக்க நிலையைக் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ எஸ்தோனியா, நைஜீரியா, செயின்ட் வின்சென்ட், கிரனேடெய்ன்ஸ், துனிசியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகள் 2020 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியிலிருந்து 2 ஆண்டு காலத்திற்கு ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தரம் அல்லாத உறுப்பு நாடுகளாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

❖ பாரத் டைனமிக்ஸ் நிறுவனத்தின் விசாகப்பட்டினப் பிரிவு வர்ணாஸ்திரம் என்ற அதிக எடை கொண்ட நீர்மூழ்கிக் குண்டுகளைத் தயாரிப்பதற்காக இந்தியக் கடற் படையுடன்

ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.

- வர்ணாஸ்திரம் என்பது கப்பலிலிருந்து ஏவப்படும் நீர்மூழ்கி எதிர்ப்புக் குண்டாகும். இது மிகவும் மேம்படுத்தப்பட்ட தானியங்கி மற்றும் தொலைக் கட்டுப்பாட்டு வழிகாட்டு அமைப்புகளுடன் பொருத்தப்பட்ட மின்சாரத்தால் இயக்கப்படக்கூடிய ஒரு நீர்மூழ்கி ஆயுதமாகும்.

❖ தொலைத் தொடர்பு துறையின் உயரிய முடிவு எடுக்கும் அமைப்பான, டிஜிட்டல் தகவல் ஆணையம் (DCC - Digital Communications Commission) பாரதி ஏர்டெல் மற்றும் வோடாபோன் ஆகிய இரு நிறுவனங்களின் மீது அபராதம் விதிக்க ஒப்புதல் வழங்கியுள்ளது.

- 2016 ஆம் ஆண்டில் ரிலையன்ஸ் ஜியோ இன்போகாம் நிறுவனம் சந்தையில் நுழைந்த போது அவற்றுடன் தொடர்பு கொள்ள மறுத்ததற்காக இந்நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

❖ மகாராஷ்டிராவின் நாசிக் நகர காவல்துறையானது பெண்களைத் துன்புறுத்துதல் மற்றும் கேலி செய்தல் போன்ற சம்பவங்களைக் கண்காணிப்பதற்காக "நிர்பயா படையை" அமைத்துள்ளது.

❖ சர்வதேச கிரிக்கெட்டில் இந்திய அணிக்காக அதிக சிக்ஸர்களை (358) அடித்த வீரராக ரோஹித் ஷர்மா உருவெடுத்துள்ளார்

- இவர் இந்தச் சாதனையைப் பாகிஸ்தானுக்கு எதிரான உலகக் கோப்பைப் போட்டியில் புரிந்தார்.

❖ இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது முதல்முறையாக 2 பெண் ஆராய்ச்சியாளர்களை சந்திரனுக்கான இந்தியாவின் இரண்டாவது திட்டமான சந்திரயான் -2 திட்டத்திற்குத் தலைமை தாங்க நியமித்துள்ளது.

- ரிது கரிதால் இத்திட்டத்தின் பணி இயக்குநராகவும் முத்தையா வனிதாஇதன் திட்ட இயக்குநராகவும் பணியாற்றுவார்.

❖ உலகக் கோப்பைப் போட்டி வரலாற்றில் முதல் ஓவரை வீசிய சுழற்பந்து வீச்சாளராக தென்னாப்பிரிக்காவின் இடதுகை சுழற்பந்து வீச்சாளரான இம்ரான் தாஹிர் உருவெடுத்துள்ளார்.

- இவர் இச்சாதனையை 2019 ஆம் ஆண்டு உலகக் கோப்பையில் இங்கிலாந்துக்கு எதிரான தொடக்க ஆட்டத்தில் புரிந்தார்.

❖ நகரப் பேருந்துகளில் பயணிக்கும் பெண் பயணிகளின் குறைகளை நிவர்த்தி செய்வதற்காக "பிங்க் சாரதி" எனும் வாகனங்களை கர்நாடகா அரசானது அறிமுகப்படுத்தியுள்ளது.

❖ மத்தியப் பிரதேசத்தின் பெட்டுல் மாவட்டதில் உள்ள பாஞ்சா எனும் கிராமமானது இந்தியாவின் விறகு அடுப்புகளற்ற மற்றும் ஏறக்குறைய LPG எரிவாயு உருளைகற்ற கிராமமாக உருவெடுத்துள்ளது. இங்குள்ள 75 வீடுகளும் தங்கள் சமையல் தேவைகளுக்குச் சூரிய சக்தி அடுப்புகளையேச் சார்ந்துள்ளனர்.

❖ நாகாலாந்தின் புகழ்பெற்ற சுற்றுலாத் தளமான "சுகோயு பள்ளதாக்கு" ஆனது உலக சுற்றுச்சுழல் தினத்தினை முன்னிட்டு "நெகிழிகளற்ற மண்டலமாக" அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

❖ அமெரிக்க மக்களவைக்குத் தலைமை தாங்கிய முதல் தெற்காசிய அமெரிக்கப் பெண்மணி எனும் பெருமையை இந்திய-அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினரான பிரமிளா ஜெயபால் பெற்றுள்ளார்.

- பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றமானது ஹரியானாவில் உள்ள அனைத்து விலங்குகளும் மனிதர்களைப் போன்று சட்ட உரிமைகளுக்கு தகுதியான சட்டப்பூர்வமான நபர்கள் என தீர்ப்பளித்துள்ளது.
    - இந்த உத்தரவானது ஹரியானா மாநிலத்திற்கு எதிரான கர்னைல் கிங் மற்றும் பலரின் வழக்கில் வழங்கப்பட்டது.
- ஒருங்கிணைக்கப்பட்ட எல்லை மேலாண்மைத் திட்டத்தைச் (Coordinated Border Management Programme - CBMP) செயல்படுத்துவதற்காக இந்திய எல்லைப் பாதுகாப்புப் படை (Border Security Force - BSF) மற்றும் வங்க தேச எல்லைப் பாதுகாப்புப் படை ஆகியவை ஒரு இணைப்பு விவாத ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. இது வங்கதேசத்தின் டாக்காவில் நடைபெற்ற 48-வது பொது இயக்குநர் நிலையிலான சந்திப்பின் போது கையெழுத்திடப்பட்டது.
    - இவர்கள் கால்நடை மற்றும் போதைப் பொருள் கடத்தலைத் தடுப்பதற்காகவும் சர்வதேச எல்லைப் பகுதியின் முக்கியத்துவம் குறித்து எல்லைப் பகுதியில் உள்ளவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் சர்வதேச எல்லைகளைக் கடக்கும் குற்றவாளிகளைத் தடுப்பதற்காகவும் ஒருங்கிணைக்கப்பட்ட கண்காணிப்பை அதிகரிக்கவிருக்கிறார்கள்.
- உத்தரப் பிரதேச அரசாங்கமானது அம்மாநிலத்தின் அரசாணையை இந்தி மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளுடன் சேர்த்து சமஸ்கிருத மொழியிலும் வெளியிடத் திட்டமிட்டுள்ளது.
- சுற்றுச் சூழலுக்கு உகந்த ஒரு முன்னெடுப்பாக லக்னோ வளர்ச்சி ஆணையம், தனது முதலாவது நெகிழிக் கழிவுச் சாலையைக் கட்டமைத்துள்ளது. மத்திய சாலை ஆராய்ச்சி நிறுவனத்தினால் (CRRI - Central Road Research Institute) அமைக்கப்பட்ட வழிகாட்டுதல்களின் படி இச்சாலை கட்டமைக்கப்பட்டுள்ளது.
- ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தின் நிர்வாகக் குழுவானது நிதித் துறை அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் S. ஜெய்சங்கர் ஆகியோருக்கு "புகழ்பெற்ற முன்னாள் மாணவர்கள்" என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கத் திட்டமிட்டுள்ளது.
    - இந்த விருதைப் பெறும் முதலாவது நபர்கள் இவர்களாவர்.
- வங்க தேசத்திற்கான இந்திய உயர் ஆணையர் திரிபுராவுடன் வங்க தேசத்தின் சிட்டகாங் துறைமுகத்தை இணைக்கின்ற தற்பொழுது கட்டமைக்கப்பட்டு வரும் வங்க தேசத்தில் உள்ள பெனி (Feni) பாலத்தை ஆய்வு செய்தார்.
    - இது இந்தியாவின் வடகிழக்கு மற்றும் வங்க தேசம் ஆகியவற்றிற்கிடையே வர்த்தகம் மற்றும் வணிகத்திற்கான ஒரு பெருவழிப் பாதையாக கட்டமைக்கப்படுகின்றது.
- இந்தியாவின் முன்னனி இரு சக்கர வாகன நிறுவனமான ஹீரோ மோட்டோகார்ப் நிறுவனம், தனது நிறுவனத்தின் விளம்பரத் தூதுவராக கொலம்பியாவைச் சேர்ந்த தொழில்சார் கால்பந்து வீரரான எர்ரி பெர்னாண்டோ மினா கொன்சாலேஸ் என்பவரை நியமித்துள்ளது.
    - இவர் பிரான்சில் 2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற பிபா உலகக் கோப்பை போட்டியில், ஒரே உலகக் கோப்பையில் அதிகக் கோல்களை அடித்து சாதனைப் படைத்துள்ளார்.

- சீனாவின் ஜிங்டாய் நகரில் நடைபெற்ற ஆசியக் கண்ட சதுரங்க சாம்பியன்ஷிப் போட்டியில் 14 வயது நிரம்பிய இந்திய சதுரங்கப் போட்டி கிராண்ட் மாஸ்டரான நிஹல் சரீன் வெற்றி பெற்றுள்ளார்.
- ஒடிசாவின் புவனேஸ்வரில் உள்ள கலிங்கா அரங்கில் நடைபெற்ற 2019 ஆம் ஆண்டின் சர்வதேச ஹாக்கிக் கூட்டமைப்பின் (FIH - (Federation Internationale de Hockey) ஆண்கள் பிரிவு ஹாக்கியின் இறுதிப் போட்டித் தொடரில், இந்தியா 5-1 என்ற கணக்கில் தென் ஆப்பிரிக்காவை வீழ்த்தியது.
    - இந்த வெற்றியின் மூலம் FIH உலகத் தரவரிசையில் முதல் 5 இடங்களில் இந்தியா இடம் பிடித்துள்ளது.
- மகாராஷ்டிராவின் புனேவில் நடத்தப்பட்ட 2019 ஆம் ஆண்டின் 76வது மூத்தோர் தேசிய ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியத் தொழில்சார் ஸ்குவாஷ் வீரரான ஜோஸ்னா சின்னப்பா தேசிய ஸ்குவாஷ் பட்டத்தை வென்றுள்ளார். இவர் 17வது முறையாக இப்பட்டத்தை வென்று சாதனை படைத்துள்ளார்.
- உலக வில்வித்தை சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் மூன்று முறை ஒலிம்பிக் பட்டத்தை வென்றவரான பிராடி எலிசன் என்பவர் மலேசியாவின் கைரூல் அனார் முகமது என்பவரை வீழ்த்தினார்.
    - பெண்களின் கலப்பு அணி மற்றும் தனிநபர்கள் பிரிவுகளில் 1 வெள்ளி மற்றும் 2 வெண்கலப் பதக்கங்கள் ஆகியவற்றைப் பெற்று இந்தியா போட்டியை நிறைவு செய்துள்ளது.
- ராண்ட்ஸ்டாட் பணியளிப்பவர் நிறுவன ஆராய்ச்சி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வின்படி, மின்னணு முறையிலான நிறுவனமான அமேசான் இந்தியாவானது இந்தியாவின் மிகவும் "விரும்பத்தகுப் பணியளிப்பவர் நிறுவனமாக" வகைப்படுத்தப் பட்டுள்ளது. இந்தப் பட்டியலின் இரண்டாவது இடத்தில் மைக்ரோசாப்ட் நிறுவனம் உள்ளது.
- "ஒரே பதவி, ஒரே ஓய்வூதியம்" என்ற திட்டத்தின் கீழ் ஓய்வூதியத்தின் அடுத்த திருத்தத்தை செயல்படுத்துதலுக்கான நடைமுறை மற்றும் செயல்முறைகள் குறித்து ஆராய்வதற்காக குழு ஒன்றைப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அமைத்துள்ளார்.
- அசாம் மாநிலப் போக்குவரத்துக் கழகமானது பயணிகளுக்கான பலதொகுதி மாதிரிப் பயணத் திட்டம் மற்றும் பேருந்துகளின் இருப்பிடம் குறித்த நிகழ்நேரத் தகவல் ஆகியவற்றை வழங்கவிருக்கும் "சலோ செயலி" என்ற ஒரு செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஹிரோசிமா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஜப்பானிய ஆராய்ச்சியாளர்கள் விளையாட்டு வீரர்களுக்காக ஒரு புதிய வகை குளிரூட்டும் உடையை உருவாக்கியுள்ளனர். இது அதிகமான வியர்வையை உண்டாக்கும் கோடைக் காலங்களில் வீரர்கள் பாதுகாப்பாக இருப்பதற்கு உதவும்.
    - உடலின் வெப்ப நிலை மிக அதிக அளவுக்கு உயரும் போது நீர்ச்சத்துக் குறைவு, உடல் செயல்பாட்டுக் குறைவு மற்றும் மூளை செயல்பாட்டுக் குறைவு ஆகியன ஏற்படும் அபாயம் உள்ளது.
- ஐக்கிய இராஜ்ஜியத்தின் இலண்டனில் 2019 ஆம் ஆண்டின் நீடித்த வளர்ச்சிக்கான காமன்வெல்த் பொதுச் செயலாளரின் புத்தாக்க விருதினை இந்தியப் பொறியாளரான நிதீஷ் குமார் ஜாங்கீர் பெற்றுள்ளார்.
    - இவர் குறைமாதக் குழந்தைகளுக்காக "சான்ஸ்" என்ற குறைந்த செலவு கொண்ட

சுவாசத்திற்கு உதவும் கருவியைக் கண்டுபிடித்ததற்காக "மக்கள் பிரிவில்" இந்த விருதைப் பெற்றுள்ளார்.

- ❖ இணைய தளத்தைப் பயன்படுத்தி இணையதளப் பொருட்களுக்கான சாதனங்கள் மற்றும் கட்டமைப்பு மேலாண்மைக்கு தரங்கள் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காக சர்வதேச இணையதள அமைப்பான நியமிக்கப்பட்ட பெயர்கள் மற்றும் எண்களுக்கான இணையதளக் குழுமமும் (Internet Corporation for Assigned Names and Numbers - ICANN) இந்தியத் தகவல் தொழில்நுட்ப துறைக்கான தலைமை அமைப்பான நாஸ்காம் அமைப்பும் இணைந்துள்ளதாக அந்த அமைப்புகள் அறிவித்துள்ளன.
- ❖ மின்சாரம் மற்றும் புதிய & புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறைக்கான மத்திய இணையமைச்சர் சூரிய / காற்றாலைத் துறைக்கான பிரச்சனைக்குத் தீர்வு காணும் குழுவினை (Dispute Resolution Committee - DRC) அமைப்பதற்கான பரிந்துரைக்கு ஒப்புதல் வழங்கியுள்ளார்.
  - ○ இது காற்றாலை / மின் ஆற்றல் உற்பத்தியாளர்கள் மற்றும் இந்திய சூரிய ஒளி ஆற்றல் கழகம் (Solar Energy Corporation of India - SECI) அல்லது தேசிய அனல் மின் நிறுவனம் ஆகியோர்களுக்கிடையே ஒப்பந்த உடன்படிக்கைகளுக்கு அப்பால் ஏற்படும் எந்தவொரு எதிர்பாராத பிரச்சனைகளுக்கும் தீர்வு காணும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
- ❖ அடித்தட்டுப் பயனாளர்களுக்கு தரமான மற்றும் மலிவு விலையில் மருந்துகளை வழங்குவதற்காக ஜம்மு மற்றும் காஷ்மீர் அரசானது அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாநிலத்தின் முக்கியத் தொடர்புடைய மருத்துவமனைகளில் 18 அம்ரித் கடைகளைத் திறக்க திட்டமிட்டுள்ளது.
  - ○ மலிவு விலை மருந்துகள் மற்றும் நம்பகமான உள்வைப்புகள் (Affordable Medicines and Reliable Implants for Treatment-AMRIT) மருந்தகங்களானது சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றன.
- ❖ அசாமில் உள்ள CSIR-NEIST பல்கலைக்கழகத்தின் அறிவியலாளர்கள் குழுவானது புற்றுநோய் செல்களைக் கண்டறிய உதவும் வகையில் "தூய்மையற்ற" நிலக்கரியை உயிரி மருத்துவப் புள்ளியாக மாற்றும் ஒரு வேதியியல் செயல்முறையை உருவாக்கியுள்ளது.
- ❖ தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுவானது பள்ளிக் குழந்தைகளுக்கான தேசிய யோகாப் போட்டிகளின் நான்காவது பதிப்பை ஏற்பாடு செய்திருந்தது.
  - ○ 2016 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்பட்டு வரும் இந்த போட்டியானது அறிவியல் பூர்வமான மற்றும் முழுமையான வாழ்க்கை முறை குறித்த விழிப்புணர்வை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது.
- ❖ முன்பு SKS சிறு கடன் நிறுவனமென்று அறியப்பட்ட இந்தியாவின் முன்னணி சிறு கடன் நிறுவனமான BFIL நிறுவனத்தை இண்டஸ்இந்த் வங்கியானது வாங்கியுள்ளது.
  - ○ தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயமானது இந்த இணைப்புக்கு ஆதரவாக தீர்ப்பளித்து ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இந்தியாவின் சூரிய ஒளியினால் செயல்படக்கூடிய முதலாவது கடல் படகு கேரள மாநில நீர்ப் போக்குவரத்துத் துறையினால் (State Water Transport Department - SWTD) ஆழப்புலாவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.
  - ○ இதற்கு முன்பு 2016 ஆம் ஆண்டில் SWTD துறையானது "ஆதித்யா" என்ற

இந்தியாவின் சூரிய ஒளியினால் செயல்படக்கூடிய முதலாவது படகினை அறிமுகப்படுத்தியது.

- உலக சுகாதார அமைப்பினால் (World Health Organization - WHO) வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, 2018 ஆம் ஆண்டில் ஆசியாவைச் சேர்ந்த 4 நாடுகள் (சீனா, ஈரான், மலேசியா மற்றும் தைமூர் லெஸ்டி) மற்றும் மத்திய அமெரிக்காவைச் சேர்ந்த எல் சல்வேடார் ஆகிய நாடுகளில் மலேரியா நோய் பதிவு செய்யப்படவில்லை.
- உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் ஹாட்ரிக் விக்கெட்டுகளை (தொடர்ந்து 3 விக்கெட்டுகளை) வீழ்த்திய இரண்டாவது இந்தியப் பந்து வீச்சாளர் என்ற சாதனையினை முகமது சமி நிகழ்த்தியுள்ளார். இவர் 2019 ஆம் ஆண்டு உலகக் கோப்பையில் ஆப்கானிஸ்தானிற்கு எதிரான ஆட்டத்தில் இச்சாதனையை நிகழ்த்தினார்.
    - 1987 ஆம் ஆண்டில் நடைபெற்ற நியூசிலாந்திற்கு எதிரான கிரிக்கெட் போட்டியில் இச்சாதனையை நிகழ்த்திய முதலாவது இந்திய வீரர் சேத்தன் சர்மா ஆவார்.
- தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியின் பார் கவுன்சிலானது தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்தவர்கள் தங்களை வழக்கறிஞர்களாக ஆன்லைன் முறையில் பதிவு செய்யும் வசதியினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியாவின் பெங்களூர் நகரானது ரியல் எஸ்டேட் துறையில் எல்லை தாண்டிய முதலீடுகளுக்குச் சிறந்த ஆசிய பசிபிக் நகரங்களின் பட்டியலில் முதன்முறையாக முதல் 10 இடங்களுக்குள் இடம் பிடித்துள்ளது.
    - இந்த தரவரிசையானது CBRE தெற்காசியா லிமிடெட் ஆலோசனை நிறுவனத்தின் 2019 ஆம் ஆண்டிற்கான ஆசியா பசிபிக் முதலீட்டாளர் நோக்கக் கணக்கெடுப்பில் வெளியாகியுள்ளது.
- இந்தியாவில் முதல் ஸ்மார்ட் மோட்டார் சைக்கிளானது ரிவோல்ட் இன்டெலிகார்ப் நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளளது. 4G மின்னணு சிம்கார்டு பொருத்தப்பட்ட இந்த மோட்டார் சைக்கிளானது இந்தியாவில் முதல் செயற்கை நுண்ணறிவு செயல்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளாகும்.
- மத்திய அரசானது தேசிய நதிகள் பாதுகாப்பு இயக்குநரகத்தை (National River Conservation Directorate - NRCD) சுற்றுச்சூழல் அமைச்சகத்திடமிருந்துப் பிரித்து ஜல் சக்தி அமைச்சகத்துடன் இணைத்துள்ளது.
    - நாடு முழுவதும் உள்ள அனைத்து நதிகளையும் புத்துயிராக்கம் செய்யும் பொறுப்பை ஜல் சக்தி அமைச்சகம் கொண்டுள்ளது.
- கத்தார் ஏர்வேஸ் நிறுவனமானது 2019 ஆம் ஆண்டிற்கான ஸ்கைட்ராக்ஸ் உலக விமான விருதுகள் மற்றும் மிக உயர்ந்த விருதான "உலகின் சிறந்த விமான நிறுவனம்" உள்ளிட்ட 4 விருதுகளைப் பெற்றுள்ளது.
    - இதனுடன் வரலாற்றில் 5 முறை (2011, 2012, 2015, 2017 & 2019) இவ்விருதினைப் பெற்ற ஒரே விமான நிறுவனமாகவும் இது திகழ்கிறது.
- எத்தியோப்பியாவின் தலைநகரமான அடிஸ் அபாபா நகரத்தில் குற்றங்களைக் குறைக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக நகரின் தெருக்களில் மோட்டார் சைக்கிள்கள் தடை செய்யப்பட்டுள்ளன.
- பொதுமக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக சீனாவானது இலங்கை நாடாளுமன்றத்திற்குச் சில பாதுகாப்பு உபகரணங்களை வழங்கியுள்ளது.

- ஆஸ்திரேலியாவின் மாநிலமான விக்டோரியாவானது கடுமையாக நோய் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு மருந்து செலுத்தி கருணைக் கொலைச் செய்வதற்கு அனுமதிக்கும் சட்டத்தினை இயற்றியுள்ளது.
- ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் மிக விரைவாக 1000 ரன்களை குவித்த வீரர் என்ற சாதனையினை நியூசிலாந்து அணியின் தலைவரான கேன் வில்லியம்சன் நிகழ்த்தியுள்ளார்.
    - இவர் 17 இன்னிங்ஸ்களில் இந்தச் சாதனையினை எட்டியுள்ளார்.
    - இதற்குமுன் இந்தச் சாதனையை நிகழ்த்தியவர் இந்திய வீரர் ரோஹித் சர்மா (18 இன்னிங்ஸ்கள்) ஆவார்.
- இந்தியா தனது அண்டை நாடுகளுடன் உறவை வலுப்படுத்தும் விதமாக, வங்க தேசம் மற்றும் தென் கொரியா ஆகிய இரண்டு நாடுகளில் தூர்தர்ஷன் (டிடி) இந்திய அலை வரிசையை ஒளிபரப்ப அவ்விரு நாடுகளுடன் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
    - வங்க தேச அரசின் “BTV World” என்ற அலைவரிசையும் தென் கொரிய அரசின் “KBS World” என்ற அலைவரிசையும் இந்தியாவின் இலவச தூர்தர்ஷன் சேனலினை ஒளிபரப்ப உள்ளன.
- நவீனத் தொழில்நுட்பங்கள் கொண்டு செயல்படும் ஸ்டார்ட் அப் நிறுவனமான ரிவிகோ தேசிய சரக்குக் குறியீட்டைத் (NFI - National Freight Index) தொடங்கியுள்ளது. இந்தக் குறியீடு நாடு முழுவதும் வெவ்வேறு பாதைகள் மற்றும் வாகனங்களுக்கான சரக்குக் கட்டணங்களை நிகழ் நேரத்தில் அளிக்கும்.
    - இந்தக் குறியீடுகள் சரக்குகள் தளவாடத் துறை சார்ந்த பிரச்சினைகளை எளிமைப்படுத்துவது மற்றும் துறையை சீர்படுத்துவது ஆகியவற்றிற்கான ஒரு முயற்சியாகும்.
- கடந்த 1 ஆண்டு காலத்தில் இந்தியாவில் உள்ள காடுகளின் பரப்பு 1 சதவிகிதம் அதிகரித்துள்ளது என்றும் தற்பொழுது இந்திய நிலப் பரப்பில் காடுகளின் பரப்பு 24.39 சதவிகிதத்திற்கு மேல் உள்ளது என்றும் மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பிரகாஷ் ஜவ்டேகர் மக்களவையில் அறிவித்தார்.
- இந்திய ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநரான விரல் ஆச்சார்யா என்பவர், தனது பதவியிலிருந்து விலகியுள்ளார். இவருடைய பதவிக் காலம் முடிவடைய 6 மாத காலம் இருக்கும் பட்சத்தில் தவிர்க்க முடியாத தனிப்பட்ட காரணங்களுக்காக இவர் பதவி விலகியுள்ளார்.
    - 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இந்திய ரிசர்வ் வங்கியில் இணைந்த போது இவருக்கு வயது 45 ஆண்டுகளாகும். இந்திய ரிசர்வ் வங்கியில் பணியாற்றிய இளம் துணை ஆளுநர் இவராவார்.
- ஜப்பானின் ஹிரோசிமா ஹாக்கி அரங்கில் நடைபெற்ற மகளிர் FIH பிரிவு இறுதி ஹாக்கிப் போட்டித் தொடரில் போட்டியை நடத்திய ஜப்பானை 3-1 என்ற கணக்கில் வீழ்த்தி இந்தியா வெற்றி பெற்றது.
- மத்தியத் தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சர் பிரகாஷ் ஜவ்டேகர் ஜம்மு காஷ்மீர் ஆளுநர் சத்யபால் மாலிக்குடன் இணைந்து ஜம்மு காஷ்மீரின் ஸ்ரீநகரில் உள்ள எல்லைப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு இலவச டிஷ் செட் டாப் (தொலைக்காட்சி ஒளிபரப்பு உபகரணங்கள்) பெட்டிகளை வழங்கினார்.
- மங்கோலியாவின் உலன்பட்டரில் நடைபெற்ற 2019 ஆம் ஆண்டின் மூத்தோர் ஆசிய

கலைத் திறன் வாய்ந்த ஜிம்னாஸ்டிக்ஸ் சாம்பியன்ஷிப் போட்டியின் வால்ட் பிரிவில் இந்தியாவைச் சேர்ந்த பிரநதி நாயக் என்பவர் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.

- தீபா கரம்கர் மற்றும் அருணா ரெட்டி ஆகியோரைத் தொடர்ந்து வால்ட் பதக்கப் பட்டியலில் இந்தியாவின் 3-வது வீரர் இவராவார்.

❖ “சாலைப் பாதுகாப்பு ஆலோசனைக் குழுவை” நிர்வகிப்பதற்கு வேண்டி அரசு சாரா நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கான ஒரு திட்டம் குறித்து மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி மாநிலங்களவையில் தெரிவித்தார்.

- தர்பன் தளத்தில் பதிவு செய்யப்பட்ட அரசு சாரா நிறுவனங்கள் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வுத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றி முடித்தப் பின்னர், அவர்களால் ரூ. 5 லட்ச நிதியைக் கோர முடியும்.

❖ ஸ்ரீ தத்தா பிரசாத் ஜோக் என்பவரால் எழுதப்பட்ட “கீத இராமாயணத்தின்” இந்திப் பதிப்பை அரசின் பதிப்பகப் பிரிவு வெளியிடும் என்று மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சர் பிரகாஷ் ஜவ்டேகர் அறிவித்துள்ளார்.

❖ தமிழ்நாடு குடிநீர் விநியோக மற்றும் வடிகால் வாரியமானது (TWAD - Tamil Nadu Water Supply and Drainage Board) தமிழ்நாட்டில் உள்ள நகரங்களின் விரிவான வட்டார அளவிலான வரைபடத்தைத் தயாரித்துள்ளது.

- இது மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பதற்காக நீர் உள்ள இடங்கள் ஆகியவற்றிற்கான தகுந்த பகுதிகளைக் காட்டுகின்றது.

❖ மலையாளத் திரைப்படமான “வெயில் மரங்கள்” பிஜூகுமார் தாமோதரன் என்பவரால் இயக்கப்பட்டது. 22வது ஷாங்காய் சர்வதேசத் திரைப்படத் திருவிழாவின் போது “தலைசிறந்த கலைத்திறன் வாய்ந்த சாதனைக்கான” விருதை வென்ற முதலாவது இந்தியத் திரைப்படம் இதுவாகும்.

❖ 2019 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 ஆம் தேதியிலிருந்து நீலகிரி மாவட்ட நிர்வாகமானது நெகிழித் தண்ணீர் புட்டிகள், PET பாட்டில்களில் அடைக்கப்பட்ட பானங்கள் மற்றும் நெகிழி அட்டைகளில் அடைத்து வைக்கப்பட்ட உணவுப் பொருட்கள் ஆகியவற்றின் விற்பனையைத் தடை செய்துள்ளது.

❖ 2022 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள பிர்மிங்ஹாம் காமன்வெல்த் விளையாட்டுகளில் மகளிர் 20 ஓவர் கிரிக்கெட் போட்டி, கடற்கரை கைப்பந்தாட்டம் மற்றும் பாரா - டேபிள் டென்னிஸ் ஆகிய மூன்று புதிய விளையாட்டுகள் இணைக்கப்பட்டுள்ளன.

❖ ஹங்கேரியில் நடைபெற்ற 37-வது பாலடோன் சர்வதேச செஸ் திருவிழாவில் இந்தியாவின் 63-வது கிராண்ட் மாஸ்டர் பட்டத்தை கர்நாடகாவின் மைசூரைச் சேர்ந்த கிரிஷ் கௌசிக் பெற்றுள்ளார்.

❖ வெளிக் கோள்களை ஆய்வு செய்வதற்காக அனுப்பப்பட்ட நாசாவின் செயற்கைக் கோளானது (TESS - Transiting Exoplanet Survey Satellite) L 98–59b என்ற பெயர் கொண்ட ஒரு புதிய கோளைக் கண்டுபிடித்துள்ளது.


- TESS ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தினால் 2018 ஆம் ஆண்டில் விண்ணில் செலுத்தப்பட்டது. TESS என்பது பிரகாசமிக்க நட்சத்திரங்களுக்கு அருகிலுள்ள வெளிக் கோள்களைக் கண்டுபிடிப்பதற்காக அனுப்பப்பட்ட ஒரு வான்வெளித் திட்டமாகும்.

- உள்நாடு மற்றும் கடற்கரையோரக் கடல்சார் தொழில்நுட்பத்திற்கான மையத்தை அமைப்பதற்காக கரக்பூரில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் மத்தியக் கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சகம் ஆகியவற்றிற்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்திடப்பட்டுள்ளது.
    - இது கப்பலின் வடிவமைப்பு, கட்டமைப்பு மற்றும் பரிசோதனை ஆகியவற்றின் உள்நாட்டுத் தொழில்நுட்பத்தின் மீது கவனத்தைச் செலுத்தவிருக்கின்றது.
- தெலுங்கானா மாநில அரசு, மத்திய வேளாண் துறை அமைச்சகத்துடன் இணைந்து மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் சர்வதேச விதைப் பரிசோதனை கூட்டமைப்பு மாநாட்டை (ISTA - International Seed Testing Association) ஹைதராபாத்தில் நடத்திக் கொண்டிருக்கின்றது.
    - ISTA மாநாடு முதன் முறையாக தற்பொழுது ஆசியாவில் நடத்தப்படுகின்றது.
- லண்டனில் உள்ள நாடாளுமன்ற அவையில் 3-வது இந்திய தினத்தைக் குறிப்பதற்காக ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கிடையேயான “உறவில் புகழ்பெற்ற 100 நபர்கள்: பெண்களைக் கொண்டாடுகின்றது” என்ற ஒரு பரப்புரை ஐக்கிய இராஜ்ஜியத்தின் உள்துறைச் செயலாளரினால் தொடங்கப்பட்டது.
    - இந்தப் பட்டியலில் ஐக்கிய இராஜ்ஜியத்திற்கான இந்திய உயர் ஆணையர் ருச்சி கானாஷியாம், மத்திய நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்களுக்கான அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.
- இந்திய கடலோரக் காவற்படையின் புதிய பொது இயக்குநராக K. நடராஜன் நியமிக்கப்பட்டுள்ளார். 2019 ஆம் ஆண்டு ஜுன் 30 அன்று அப்பதவியில் இருந்து ஓய்வு பெறவிருக்கும் இராஜேந்திர சிங் என்பவருக்குப் பின்பு இவர் அப்பொறுப்பை ஏற்கவிருக்கின்றார்.
- இந்தியப் பத்திரிக்கைத் துறையில் சிறப்பு வாய்ந்த விருதானது “2019-ஆம் ஆண்டின் பத்திரிக்கையாளர்” என்ற பிரிவில் ரச்னா கைரா (தி டிரிபியூன் செய்திகள் சேவைகள்) என்பவருக்கு வழங்கப்பட்டது.
    - சிவப்பு மை விருதுகள் – இந்த வருடாந்திர விருதானது மும்பை பத்திரிக்கைச் சங்கத்தினால் ஏற்படுத்தப்பட்டதாகும்.

# தமிழ்நாடு செய்திகள்

## ராபர்ட் பூட்டி

- 1863 ஆம் ஆண்டு மே 30 அன்று ஆங்கிலேயப் புவியியல் வல்லுநர் ஜார்ஜ் பூட்டி என்பவர் சென்னையில் உள்ள பல்லாவரத்தில் பழங் கற்காலக் கருவிகளைக் கண்டுபிடித்தார்.
- இவர் இந்தப் பகுதியில் பழங்கால மனிதர்கள் வாழ்ந்தனர் என்பதைக் கண்டறிந்தார்.
- இது இந்தியாவின் முதலாவது தொல்லியல் துறை ஆய்வாகக் கருதப்படுகின்றது.




- இவர் அதிரம்பாக்கத்தில் 1.5 மில்லியன் ஆண்டுகள் பழமையான கற்கருவிகளைக் கண்டறிந்தார்.
- இவர் சென்னையில் உள்ள அரசாங்க அருங்காட்சியகத்திற்கு 4000ற்கும் மேற்பட்ட தொன்மையான கைவினைப் பொருட்களை வழங்கியுள்ளார்.

## மூன்றாம் பாலினத்தவர் - பல்நோக்கு மருத்துவமனை

- சென்னையில் உள்ள ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையானது மூன்றாம் பாலினத்தவருக்கான சுகாதாரப் பாதுகாப்புத் தேவைகளுக்கென இயங்கும் ஒரு முழுநேர சிறப்புப் பிரிவைத் தொடங்கியுள்ளது.
- நாட்டில் மூன்றாம் பாலினத்தவருக்காக தனிப் பிரிவை ஒரு மருத்துவமனை கொண்டிருப்பது இதுவே முதல் முறையாகும்.



- இந்த மருத்துவமனையானது எல்லா நாட்களிலும் திருநங்கைகளுக்கு சுகாதார சேவைகளை வழங்கும்.
- பத்து வருடங்களுக்கு முன்பு 2009 ஆம் ஆண்டு இதே மருத்துவனையில் முதன் முறையாக திருநங்கைக்குப் பாலியல் மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

## 24 மணி நேரமும் கடைகள்

- தமிழ்நாட்டில் கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் அனைத்து ஏழு நாட்களிலும் 24 மணிநேரமும் இயங்கிட அரசு அனுமதி அளித்திருக்கின்றது.
- இந்த ஆணை தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் 6-வது பிரிவின் கீழ் பிறப்பிக்கப்பட்டு இருக்கின்றது.
- இந்த ஆணை மூன்று ஆண்டுக் காலத்திற்குப் பொருந்தும். இந்த ஆணை வர்த்தகச் சமூகத்திற்கு மிகப்பெரும் ஊக்கத்தை அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
- மேலும் அரசின் இந்த ஆணை இந்த நிறுவனங்களில் பணிபுரியும் பெண்களின் பாதுகாப்பின் மீதான முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகின்றது.

## வ.உ. சிதம்பரனார் துறைமுக அறக்கட்டளை

- தூத்துக்குடியில் உள்ள வ.உ.சி துறைமுக அறக்கட்டளை மற்றும் மத்திய கிடங்குக் கழகம் ஆகியவை நேரடித் துறைமுக நுழைவு (Direct Port Entry) வசதிக்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
- DPE ஆனது தொழிற்சாலைகளிலிருந்துச் சரக்குக் கொள்கலன் முனையத்திற்கு சரக்குக் கொள்கலனின் நேரடி இயக்கத்தை ஏற்படுத்தும். இது கொள்கலன் சரக்கு நிலையத்தில் எந்தவொரு இடைநிலை கையாளுதலும் இல்லாமல் அனைத்து நாட்களிலும் 24 மணி நேரமும் இயங்கும்.
- தமிழ்நாட்டின் இரண்டாவது மிகப்பெரிய துறைமுகம் வ.உ.சி துறைமுக அறக்கட்டளையாகும். இது மன்னார் வளைகுடாவில் அமைந்துள்ளது.

## ஆவடி மாநகராட்சி

- 18.06.2019 அன்று திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள ஆவடி சிறப்பு நிலை நகராட்சியானது 15வது மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது.
- இந்தப் புதிய மாநகராட்சியானது ஒரு மேயர், ஒரு ஆணையம், ஒரு நிலைக் குழு, செயல்பாட்டுக் குழு மற்றும் ஒரு ஆணையரைக் கொண்டிருக்கும்.
- தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 என்ற சட்டத்தின் விதிமுறைகள் எந்தவொரு விதத்திலும் ஆவடிக்குப் பொருந்தாது.
- ஆவடி மாநகராட்சியின் விதிமுறைகள் கோயம்புத்தூர் நகர மாநகராட்சிக் கழகச் சட்டம், 1981 ஆகியவற்றுடன் பொருந்தி அமைவதாக உள்ளது. எனவே ஆவடி மாநகராட்சிக்காக கோயம்புத்தூர் நகர மாநகராட்சிக் கழகச் சட்டம், 1981-ன் விதிமுறைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.
- சென்னை, கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, திருச்சி, திருநெல்வேலி, திண்டுக்கல், சேலம், தஞ்சாவூர், திருப்பூர், தூத்துக்குடி, வேலூர், நாகர்கோவில் மற்றும் ஓசூர் ஆகியவை தமிழ்நாட்டில் உள்ள இதர மாநகராட்சிகளாகும்.


## சென்னை வானிலையியல் துறை - தனித்துவம்

- சென்னையின் நுங்கம்பாக்கம் மற்றும் மீனம்பாக்கம் ஆகியவற்றில் உள்ள 2 வானிலையியல் மையங்கள் உலக வானிலையியல் அமைப்பினால் (World Meteorological Organisation) நீண்ட காலமாக கண்காணிப்பை மேற்கொள்ளும் நிலையங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- 100 ஆண்டுகளுக்கும் மேலாக கா நிலைக் கண்காணிப்புகளை மேற்கொள்ளும் இந்தியாவில் உள்ள 5 இதர நிலையங்களிடையே இந்த 2 நிலையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- இது காலநிலை மாறுபாட்டை மதிப்பிடுவதற்கும் காலநிலை அமைப்பில் ஏற்படும் மாற்றங்களைப் புரிந்து கொள்வதற்கும் ஒரு முக்கியப் பதிவுகளாகப் பயன்படுத்தக்கூடிய 100 ஆண்டுத் தகவல்களைப் பராமரித்தலுக்கான ஒரு சிறப்பு அங்கீகரிப்பாகும்.,
- 1792 ஆம் ஆண்டில் நாட்டின் முதலாவது வானிலையியல் நிலையம் சென்னையில் ஏற்படுத்தப்பட்டது.




## கொத்தடிமை தொழிலாளர்கள் முறையினைத் தடுக்கும் முறை

- மாநிலத்தில் கொத்தடிமை தொழிலாளர் முறையினை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக நிலையான இயக்க நடைமுறைக்கு தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- இது தொழிலாளர்கள் துறையின் முன்மொழிவு ஆகும்
- தமிழ்நாடானது நாட்டில் ஐந்தாவது அதிக ஆட்கடத்தல் வழக்குகளைப் பதிவு செய்துள்ள மாநிலம் ஆகும்.
- கொத்தடிமை தொழிலாளர் முறை (ஒழிப்பு) சட்டம் மற்றும் 2016 ஆம் ஆண்டின் கொத்தடிமை தொழிலாளர்கள் மறுவாழ்விற்கான மத்திய அரசின் திட்டம் ஆகியவற்றின் அமலாக்க நிறுவனங்களுக்கு வழிகாட்டும் வகையில் அவர்களை அடையாளம் காண்பது, மீட்பது மற்றும் மறுவாழ்வு அளிப்பது ஆகியவற்றில் ஒரே மாதிரியான நடைமுறையை அரசு கொண்டு வந்துள்ளது.




## பசுமை விருதுகள் 2018

- சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் முக்கியப் பங்கு வகித்த மாவட்ட ஆட்சியர்கள், தொழிலகங்கள் மற்றும் அலுவலர்களுக்கு தமிழக அரசானது பசுமை விருதுகளை வழங்கியது.
- இந்தப் பசுமை விருதுகளை தமிழக மாசுக் கட்டுப்பாட்டு வாரியமானது வழங்குகிறது.
- இது தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான சிறந்த பங்களிப்பை அளிக்கும் தொழிலகங்களை அங்கீகரிக்கிறது.
- நீலகிரியின் ஆட்சியரான இன்னசன்ட் திவ்யா, மதுரையின் முன்னாள் ஆட்சியரான G. வீர ராகவ ராவ் மற்றும் திருநெல்வேலியின் முன்னாள் ஆட்சியரான சந்தீப் நந்தூரி ஆகியோர் 2018 ஆம் ஆண்டிற்கான விருதுகளைப் பெற்றனர்.
- 2018 ஆம் ஆண்டிற்கான திறமையான முறையில் மாசுத் தடுப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறந்த தொழிலகங்களுக்கான விருது பின்வரும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.
    - அதானி கடல்சார் கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம்
    - ஜெய்விஷ்ணு ஜவுளி நிறுவனம்
    - ராம்கோ சிமெண்ட்ஸ்
- கல்வி நிறுவனங்களுக்கான பசுமை விருதுகளானது பின்வரும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.
    - ஸ்ரீவெங்கடேஸ்வரா பொறியியல் நிறுவனங்கள் – காஞ்சிபுரம்
    - மெப்கோ ஸ்க்லெங் பொறியியல் கல்லூரி
    - ராம்கோ வித்யாலயா – விருதுநகர் மாவட்டம்
- பயன்படுத்தி வீசப்படும் நெகிழிகளைத் தடை செய்வதற்கான மாநில அரசின் உத்தரவை திறம்பட செயல்படுத்தியோர்க்கான பசுமை விருதுகள்
    - உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்துக் கட்டுப்பாட்டு ஆணையர் – P. அமுதா
    - திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் – ஷில்பா பிரபாகர் சதீஷ்.



## ஜோலார்பேட்டையிலிருந்து நீர் கொண்டு வரப்படல்

- வேலூர் மாவட்டத்தின் ஜோலார்பேட்டையிலிருந்து சென்னைக்கு ஒரு நாளைக்கு 10 மில்லியன் லிட்டர்கள் அளவிலான நீரைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளைத் தெற்கு இரயில்வே தொடங்கியுள்ளது.
- சென்னையில் தண்ணீர்ப் பிரச்சனையைச் சமாளிப்பதற்கான திட்டத்திற்கு ரூ.65 கோடியிலான நிதியை தமிழ்நாடு முதலமைச்சர் ஒதுக்கியுள்ளார்.



## 5-வது நீர்த் தேக்கம்


- சென்னையின் 5-வது நீர்த்தேக்கம் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கண்ணன்கோட்டை மற்றும் தேர்வாய் கண்டிகை ஆகிய ஏரிகளை இணைத்துக் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது.
- இது 1 டிம்சி அடி நீரைத் தேக்கி வைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
- பூண்டி, சோழவரம், செங்குன்றம் மற்றும் செம்பரம்பாக்கம் ஆகிய நீர்த் தேக்கங்களால் ஏற்கெனவே சென்னைக்குத் தண்ணீர் அளிக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றது.

## வறட்சி மதிப்பீடு

- உலகம் முழுவதும் 400 பெரிய நகரங்களில் நீர் மேலாண்மை முன்னெடுப்புகள் மற்றும்

நீர்ப் பற்றாக்குறை குறித்த ஆய்வை இயற்கைக்கானப் பன்னாட்டு நிதியத்தின் சர்வதேச நீர் பொறுப்புடைமைத் திட்டம் மேற்கொண்டு இருக்கின்றது.

- மிகக் கடுமையான நீர்ப் பற்றாக்குறை மற்றும் வறட்சி ஆகியவற்றை எதிர்கொள்ளும் மிகப்பெரிய நகரங்களில் சென்னை முதலிடத்தில் உள்ளது.




## கடல்நீரைக் குடிநீராக்கும் 3-வது ஆலை


- தமிழக அரசு ஜெர்மனி நிறுவனத்துடன் இணைந்து ஒரு நாளைக்கு 150 மில்லியன் லிட்டர் நீரை (MLD - million litre per day) சுத்திகரிக்கும் திறன் கொண்ட 3-வது கடல்நீரைக் குடிநீராக்கும் ஆலையைக் கட்டத் திட்டமிட்டுள்ளது.
- இது காஞ்சிபுரம் மாவட்டத்தின் கிழக்குக் கடற்கரை சாலையின் நெம்மேலியில் தற்பொழுதுள்ள கடல்நீரைக் குடிநீராக்கும் ஆலைக்கு அருகில் கட்டப்படவிருக்கின்றது.
- இதற்காக பகுதியளவு மானியமானது நகரப் புத்தாக்கம் மற்றும் உருமாற்றுதலுக்கான அடல் திட்டத்தின் (AMRUT - Atal Mission for Urban Rejuvenation and Transformation) கீழ் பெறப்படவிருக்கின்றது.
- ஏற்கனவே மீஞ்சூர் மற்றும் நெம்மேலியில் 100 MLD திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் இரண்டு ஆலைகள் உள்ளன.

## தமிழ் மறவன்

- தமிழ்நாட்டின் மாநிலப் பட்டாம்பூச்சியாக தமிழ் மறவன் (சிரோச் ரோவ் தாய்ஸ்) பட்டாம்பூச்சி அறிவிக்கப்பட்டுள்ளது.
- வெளிப்புறத்தில் பழுப்பு நிற வளையத்துடன் முழுவதும் பழுப்பு நிறம் கொண்டதாக காணப்படும் இந்த பட்டாம்பூச்சி மேற்குத் தொடர்ச்சி மலைகளில் மட்டுமே காணப்படுகின்றது. மேற்குத் தொடர்ச்சி மலையில் காணப்படும் 32 வகை பட்டாம் பூச்சி இனங்களில் இதுவும் ஒன்றாகும்.
- தனது மாநிலத்திற்காக மாநிலப் பட்டாம் பூச்சியை அறிவிக்கும் நாட்டின் 5-வது மாநிலம்

தமிழ்நாடு ஆகும்.

- ❖ தனது மாநிலப் பட்டாம்பூச்சியாக நீல மார்மானை அறிவித்த முதலாவது மாநிலம் மகாராஷ்டிரா ஆகும். இதற்கு அடுத்து உத்தராகண்ட் (பொது மயில்), கர்நாடகா (தென் பறவை இறகுகள்), கேரளா (பட்டைகள் கொண்ட மலபார் மயில்) ஆகிய மாநிலங்கள் தங்களுடைய மாநிலப் பட்டாம் பூச்சியை அறிவித்துள்ளன.




- ❖ தமிழ்நாட்டின் இதர சின்னங்கள் பின்வருமாறு
  - அரசு முத்திரை : ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் கோபுரம்
  - விலங்கு : வரையாடு
  - பறவை : மரகதப் புறா
  - மலர் : செங்காந்தள் மலர்
  - மரம் : பனை மரம்
  - பழம் : பலாப்பழம்
  - விளையாட்டு : கபடி
  - நடனம் : பரதநாட்டியம்

# தேசியச் செய்திகள்

## இரண்டாவது முறை

- ❖ நரேந்திர மோடி அடுத்த ஐந்து ஆண்டுக் காலத்திற்கு இந்தியாவின் பிரதமராக தொடர்ந்து 2 முறையாக மே 30 அன்று பதவியேற்றுள்ளார்.
- ❖ மத்திய அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள துறைகள் பின்வருமாறு : 24 கேபினெட் அமைச்சர்கள், தனிப் பொறுப்புடன் கூடிய 9 இணை அமைச்சர்கள், 24 இணை அமைச்சர்கள்.

| | Cabinet Minister | Department | | Cabinet Minister | Department |
|---|---|---|---|---|---|
| 1 | Rajnath Singh | Defence. | 15 | Dr. Harsh Vardhan | Health and Family |
| 2 | Amit Shah | Home Affairs. | | | Science and Technology; |
| 3 | Nitin Jairam | Road Transport and Highways; and | | | Earth Sciences. |
| 4 | D.V. Sadananda | Chemicals and Fertilizers. | 16 | Shri Prakash Javadekar | Environment, Forest and |
| 5 | Smt. Nirmala | Finance; and Corporate Affairs. | | | Information and |
| 6 | Shri Ramvilas | Consumer Affairs, Food and Public | 17 | Shri Piyush Goyal | Railways; and |
| 7 | Shri Narendra Singh Tomar | Agriculture and Farmers Welfare; | | | Commerce and Industry. |
| | | Rural Development; and | 18 | Shri Dharmendra Pradhan | Petroleum and Natural |
| | | Panchayati Raj. | | | Steel. |
| 8 | Shri Ravi Shankar Prasad | Law and Justice; | 19 | Shri Mukhtar Abbas | Minority Affairs. |
| | | Communications; and | 20 | Shri Pralhad Joshi | Parliamentary Affairs; |
| | | Electronics and Information | | | Coal; and |
| 9 | Smt. Harsimrat | Food Processing Industries. | | | Mines. |
| 10 | Shri Thaawar | Social Justice and Empowerment. | 21 | Dr. Mahendra Nath | Skill Development and |
| 11 | Dr. Subrahmanyam | External Affairs. | 22 | Shri Arvind Ganpat | Heavy Industries and |
| 12 | Shri Ramesh | Human Resource Development. | 23 | Shri Giriraj Singh | Animal Husbandry, |
| 13 | Shri Arjun Munda | Tribal Affairs. | 24 | Shri Gajendra Singh | Jal Shakti. |
| 14 | Smt. Smriti Zubin Irani | Women and Child Development; Textiles. | | | |

| | Person | Ministers of State (Independent Charge) in Minstry of |
|---|---|---|
| 1 | Shri Santosh Kumar Gangwar | Labour and Employment. |
| 2 | Rao Inderjit Singh | Statistics and Programme Implementation; and Planning |
| 3 | Shri Shripad Yesso Naik | AYUSH); Defence |
| 4 | Dr. Jitendra Singh | Development of North Eastern Region; |
| | | Prime Minister's Office; |
| | | Personnel, Public Grievances and Pensions; |
| | | Department of Atomic Energy; |
| | | Department of Space. |
| 5 | Shri Kiren Rijiju | Youth Affairs and Sports; Minority Affairs |
| 6 | Shri Prahalad Singh Patel | Culture; Tourism |
| 7 | Shri Raj Kumar Singh | Power; |
| | | New and Renewable Energy; and |
| | | Skill Development and Entrepreneurship. |
| 8 | Shri Hardeep Singh Puri | Housing and Urban Affairs; |
| | | Civil Aviation; and |
| 9 | Shri Mansukh L. Mandavi | Shipping; Chemicals and Fertilizers. |

## ஜல் சக்தி அமைச்சகம்


- “ஜல் சக்தி அமைச்சகம்” என்ற பெயர் கொண்ட ஒரு புதிய அமைச்சகம் மத்திய அரசினால் அமைக்கப்பட்டுள்ளது.
- ஜல் சக்தி அமைச்சகமானது நீர் வளங்கள், நதிநீர் மேம்பாடு, கங்கைப் புத்தாக்க அமைச்சகத்துடன் குடிநீர் மற்றும் துப்புரவுத் துறை அமைச்சகத்தை ஒன்றிணைக்கின்றது.
- ஜல் சக்தி அமைச்சகத்தின் முதலாவது காபினெட் அமைச்சர் இராஜஸ்தானைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரான இராஜேந்திர சிங் ஷெகாவத் ஆவார்.
- ரத்தன் லால் கட்டாரியா என்பவர் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இந்த அமைச்சகத்தின் இணை அமைச்சராகப் பணியாற்றவிருக்கின்றார்.

## விமானச் சேவை - இந்தியா மற்றும் பாகிஸ்தான்

- அபுதாபியிலிருந்து புது தில்லி வரை செல்லும் எதிஹாட் விமானம் மூன்று மாத கால நீண்ட இடைவெளிக்குப் பின்பு பாகிஸ்தான் வழியாக இந்தியாவிற்குள் நுழைந்த முதலாவது விமானமாக உருவெடுத்துள்ளது. மூன்று மாதங்களுக்கு முன்பு இந்திய விமானப் படை பாலகோட்டில் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து இருநாடுகளும் விமானச் சேவைக்குத் தடை விதித்திருந்தன.
- 2019 ஆம் ஆண்டு ஜுன் 02 அன்று இரு நாடுகளுக்கிடையே விமானச் சேவை தொடங்கியது.

## வேலைவாய்ப்பின்மை விகிதம்

- 2017-18 ஆம் நிதியாண்டிற்கான நாட்டின் வேலைவாய்ப்பின்மை விகிதத்தை தேசிய மாதிரி ஆய்வு அலுவலகம் (NSSO - National Sample Survey Office) வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி 2017-18 ஆம் ஆண்டில் வேலை வாய்ப்பின்மை விகிதம் 6.1 சதவிகிதமாக இருக்கின்றது. மேலும் நாட்டில் கடந்த 45 ஆண்டு காலமாக இல்லாத அளவிற்கு வேலைவாய்ப்பின்மை அதிக அளவில் காணப்படுகின்றது.




- இந்தியா முழுவதிலும் ஆண்களிடையேக் காணப்படும் வேலையின்மை விகிதம் 6.2 சதவிகிதமாகவும் பெண்களிடையேக் காணப்படும் வேலையின்மை விகிதம் 5.7 சதவிகிதமாகவும் உள்ளது.
- மேலும் இந்த அறிக்கை ஆண்களிடையே காணப்படும் வேலையின்மை விகிதம் கிராமப்புறப் பகுதிகளுடன் (வேலையின்மை விகிதம் - 5.8%) ஒப்பிடும் போது நகர்ப்புறங்களில் (7.1%) அதிகமாகக் காணப்படுவதைக் காட்டுகின்றது.
- இதே போன்று பெண்களிடையேக் காணப்படும் வேலையின்மை விகிதம் கிராமப்புறப் பகுதிகளுடன் (வேலையின்மை விகிதம் - 3.8%) ஒப்பிடும் போது நகர்ப் புறங்களில்

(வேலையின்மை விகிதம் - 10.8) அதிகமாகக் காணப்படுகின்றது.

## 10-வது தேசிய அறிவியல் திரைப்படத் திருவிழா

- 2020 ஆம் ஆண்டின் ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதத்தில் திரிபுரா மாநிலத்தில் 10வது தேசிய அறிவியல் திரைப்படத் திருவிழா (National Science Film Festival of India - NSFFI) நடத்தப்பட விருக்கின்றது.
- அறிவியல், தொழில்நுட்பம், புத்தாக்கம், ஆற்றல், சுற்றுச்சூழல், விவசாயம் மற்றும் பாரம்பரிய அறிவு ஆகியவற்றை எடுத்துரைக்கும் நோக்கத்துடன் இத்திரைப்படத் திருவிழா நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. மேலும் இவற்றை எளிமையான முறையில் விரிவாக்கம் செய்வதன் மூலம் பொது மக்களுக்கு அறிவியலை நெருக்கமாக இது கொண்டுச் செல்லவிருக்கின்றது.
- திரைப்படத் திருவிழாவைத் தவிர, திரிபுராவில் தற்பொழுது பதவியில் உள்ள மாநில அரசு, ஒரு சிறப்புப் போட்டித் திறன்மிக்க திரைப்படத் தயாரிப்பு முன்னெடுப்பான "சேருமிடம் திரிபுரா" (Destination Tripura) என்பதனையும் நடத்தத் திட்டமிட்டுள்ளது.
- வட கிழக்கு மாநிலத்தில் இரண்டாவது முறையாக இத்திருவிழா நடத்தப்படவிருக்கின்றது.
- எட்டு ஆண்டுகளுக்கு முன்பு 2011 ஆம் ஆண்டில் NSFFI சென்னையில் நடத்தப்பட்டது.

## பஞ்சாப் மெயில் இரயிலின் 107 வது வருடம்

- பஞ்சாப் மெயில் இரயிலானது நாட்டின் மிகப் பழமையான தொலைதூரம் செல்லும் ரயில்களில் ஒன்றாகும்.
- இது 2019 ஆம் ஆண்டு ஜூன் 1 அன்று தனது 107 ஆம் வருடத்தை நிறைவு செய்தது.
- முன்னர் பஞ்சாப் லிமிட்டெட் என்று அழைக்கப்பட்ட இந்த இரயிலானது மும்பையிலிருந்து பெஷாவர் வரையிலான தனது முதல் பயணத்தை 1912 ஆம் ஆண்டு ஜூன் 1 அன்று தொடங்கியது.




- பெஷாவர் நகரம் தற்போது பாகிஸ்தானில் உள்ளது.
- இது ஆங்கிலேயர் காலத்திய இந்தியாவின் அதிவேக இரயிலாக அறியப்பட்டது.

- பிரிவினைக்கு முன்னதாக இந்த இரயிலானது மும்பையின் பெல்லார்டு பியர் மோல் நிலையத்திலிருந்து பெஷாவர் வரையிலான 2496 கி.மீ தொலைவை 47 மணி நேரத்தில் கடந்து சென்றது.
- தற்போது சத்ரபதி சிவாஜி மகாராஜா நிலையத்திலிருந்துத் தொடங்கி ரோஷ்பூர் கண்டோன்மெண்ட் வரையிலான இதன் வடக்கு நோக்கிய 1930 கி.மீ தூர பயணத்தை இது 34 மணிநேரம் 15 நிமிடத்தில் கடக்கிறது.

## SDG பாலினக் குறியீடு

- நீடித்த வளர்ச்சி இலக்குகள் பாலினக் குறியீட்டில் மொத்தமுள்ள 129 நாடுகளில் இந்தியா 95-வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- இது சர்வதேச பாலின சமத்துவத்தை அளவிடுவதற்கு உருவாக்கப்பட்ட ஒரு புதியக் குறியீடாகும்.
- இது பிராந்திய மற்றும் சர்வதேச அமைப்புகளின் கூட்டு முயற்சியினால் "சமத்துவ அளவீடுகள் 2030" என்ற நிறுவனத்தினால் மேம்படுத்தப்பட்டது.
- ஒவ்வொரு மதிப்பீட்டிற்கும் குறிக்கப்பட்ட இலக்குகள் தொடர்புடைய பாலின சமத்துவத்தை அடைவதை அந்தக் குறியீட்டில் உள்ள 100 மதிப்பெண்கள் பிரதிபலிக்கின்றன.
- இந்தப் பட்டியலில் 89.3 என்ற மதிப்பெண்ணுடன் டென்மார்க் முதலிடத்தில் உள்ளது. இந்தப் பட்டியலில் இதற்கு அடுத்து பின்லாந்து மற்றும் ஸ்வீடன் ஆகிய நாடுகள் உள்ளன.

## விமானப் போக்குவரத்து மேலாண்மை

- இந்திய விமான நிலையங்கள் ஆணையமானது (AAI - Airports Authority of India) இந்திய விமானப் போக்குவரத்து மேலாண்மையை நவீனப்படுத்தி, மேம்படுத்துவதற்காக போயிங் நிறுவனத்துடன் தொழில்நுட்ப உதவி ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- இது விரிவான 10 ஆண்டு தொலை நோக்குப் பார்வை கொண்ட ஒரு ஒப்பந்தமாகும்.
- இந்தத் தொலைநோக்குத் திட்டம் அமெரிக்க வர்த்தகம் மற்றும் வளர்ச்சி ஆணையத்திலிருந்து வரும் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படவிருக்கின்றது.
- AAI ஆனது இந்தியா முழுவதும் 125 விமான நிலையங்களைச் சொந்தமாகக் கொண்டு அவ்விமான நிலையங்களை நிர்வகிக்கின்றது.

## வணிகர்களுக்கான ஓய்வூதிய திட்டம்

- வணிகர் சமுதாயத்தினருக்கு ஓய்வூதியம் வழங்கும் புதியத் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவையானது ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் அனைத்துக் கடைக்காரர்கள், சில்லறை வியாபாரிகள் மற்றும் சுய தொழில் செய்பவர்கள் அனைவருக்கும் 60 வயதினை அடைந்த பின்பு மாதந்தோறும் குறைந்தபட்சமாக 3000 ரூபாய் உறுதியாக ஓய்வூதியம் வழங்கப்படும்.
- 18லிருந்து 40 வயதுடைய மற்றும் 1.5 கோடி ரூபாய்க்கும் குறைவான GST வரி செலுத்தும் விற்பனை அளவையுடைய அனைத்து சிறு கடைக்காரர்களும் சுய தொழில் புரிவோர்களும் சில்லறை வர்த்தகர்களும் இத்திட்டத்தில் சேரலாம்.

## PM-KISAN திட்டத்தின் விரிவாக்கம்

- பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதி (Pradhan Mantri Kisan Samman Nidhi-PM-KISAN) திட்டத்தின் உள்ளடக்க வரம்பை முழுமையாக விரிவாக்கம் செய்ய மத்திய அமைச்சரவையானது ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த முடிவினால், நிலங்களை வைத்திருக்கும் அனைத்து தகுதியான விவசாய குடும்பங்களும் (இது வழக்கமான விலக்களிப்பு நிபந்தனைகளுக்கு உட்பட்டது) இத்திட்டத்தின் கீழ் பயனடைவர்.

### *பிரதான் மந்திரி சம்மான் நிதி*


- விவசாயிகளுக்கு வருமான ஆதரவு தரும் திட்டமான பிரதான் மந்திரி சம்மான் நிதியானது 2019 ஆம் ஆண்டு இடைக்கால பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது.
- இந்தத் திட்டமானது பாதகமான வானிலை மற்றும் குறைவான விலைகள் வழங்கப்படுவதால் பாதிக்கப்பட்ட விவசாயிகளிடையே நிலவும் அமைதியின்மைக்கு தீர்வு காண்பதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் அரசானது விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் 6000 ரூபாயை வழங்கும்.

## கால்நடை நோய்களை கட்டுப்படுத்துவதற்கான புதிய முயற்சி

- கால்நடை வளர்க்கும் விவசாயிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் கால் மற்றும் வாய் நோய் (Foot and Mouth Disease-FMD) மற்றும் புருசெல்லோசிஸ் (Brucellosis) ஆகியவற்றை கட்டுப்படுத்துவதற்கான புதிய முயற்சிக்கு மத்திய அமைச்சரவையானது ஒப்புதல் அளித்துள்ளது.
- அடுத்த ஐந்து ஆண்டுகளில் நாட்டில் கால்நடைகளில் பரவும் இந்த நோய் முழுவதையும் முற்றிலுமாககே கட்டுப்படுத்துவதையும் அதனைத் தொடர்ந்து இந்நோயை முற்றிலும் ஒழிப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

### *கால் மற்றும் வாய் நோய் (FMD) மற்றும் புருசெல்லோசிஸ்*

- இந்த நோய்களானது பசு, எருமைகள், செம்மறி, ஆடு மற்றும் பன்றி போன்ற கால்நடைகளில் பரவும் பொதுவான நோய்களாகும்.
- பசு அல்லது எருமை இந்த FMD நோயால் பாதிக்கப்பட்டால் அதன் தாக்கம் நான்கு முதல் ஆறு மாதங்கள் வரை நீடிக்கும். இந்தத் தாக்கத்தினால் அதன் கறவை திறன் 100 சதவீதம் வரை குறையும்.
- மேலும் புருசெல்லோசிஸ்ஸால் பாதிக்கப்படும் கால்நடைகள் தங்கள் வாழ்நாள் முழுவதும் 30 சதவீத அளவிற்கு கறவைத் திறனை இழக்கின்றன.
- இந்நோயானது விலங்குகளிடையே மலட்டுத் தன்மைக்கு காரணமாகிறது.
- இதன் தாக்கமானது பண்ணைத் தொழிலாளர்கள் மற்றும் கால்நடை உரிமையாளர்களுக்கும் பரவுகின்றது.




## பிரதமரின் உதவித் தொகைத் திட்டம்

- தேசிய பாதுகாப்பு நிதியத்தின் கீழ் உள்ள பிரதமரின் உதவித் தொகைத் திட்டத்தில் ஒரு மிகப்பெரிய மாற்றத்திற்கு மத்திய அமைச்சரவையானது ஒப்புதல் அளித்துள்ளது.
- அமைச்சரவையானது உதவித் தொகையை சிறுவர்களுக்கு 2000 ரூபாயிலிருந்து ரூ2500 ஆகவும் சிறுமிகளுக்கு 2250 ரூபாயிலிருந்து ரூ.3000 ஆகவும் உயர்த்தியுள்ளது.
- பயங்கரவாத/நக்சலைட்டுகள் தாக்குதலின் போது உயிர்த் தியாகம் செய்த மாநில காவல் துறை அதிகாரிகளின் குழந்தைகளுக்கும் இந்த உதவித் தொகையின் வரம்பானது விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- மாநிலத்தின் காவல் துறை அதிகாரிகளுக்கான புதிய ஒதுக்கீடு வருடத்திற்கு 500 ரூபாய் ஆக உள்ளது.
- இந்த விவகாரத்திற்கு மத்திய உள்துறை அமைச்சகமானது ஒப்புதல் வழங்கு நிறுவனமாகச செயல்படும்.

### *தேசிய பாதுகாப்பு நிதியம்*

- தேசிய பாதுகாப்பு நிதியமானது 1962 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- இது தேசிய பாதுகாப்பு முயற்சியை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு அளிக்கப்படும் தன்னார்வ நன்கொடைகளை ரொக்கமாக வசூலிப்பதையும் அதன் பயன்பாட்டைத் தீர்மானிக்கும் பணிகளையும் மேற்கொள்கிறது.
- தற்போது இந்த நிதியானது ஆயுதப்படை, துணை இராணுவத்தினர் மற்றும் ரயில்வே பாதுகாப்புப் படையினர் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் நல்வாழ்விற்காக பயன்படுத்தப்படுகின்றது.
- இந்த நிதியமானது பிரதமரைத் தலைவராகவும், பாதுகாப்பு, நிதி மற்றும் உள்துறை அமைச்சர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட ஒரு நிர்வாகக் குழுவால் நிர்வகிக்கப்படுகின்றது.

## ஸ்விப்ட் இந்தியா மற்றும் தெற்காசியா மாநாடு

- ஸ்விப்ட் இந்தியா மற்றும் தெற்காசியா மாநாடானது மும்பையில் நடைபெற்றது.
- இம்மாநாடானது உலகளாவிய வங்கிகளுக்கிடையேயான நிதியியல் தொலைத்

தொடர்புக்கான சங்கம் (Society for Worldwide Interbank Financial Telecommunication) மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது.

- இம்மாநாட்டின் கருத்துருவானது, "பரிமாணாத்தில் டிஜிட்டல் மயமாக்கல் : புத்தாக்கம் மற்றும் இணைய ப்பாதுகாப்பின் எதிர்காலம்" என்பதாகும்.

## உட்சாலோ முன்முயற்சி

- காயமுற்று சக்கர நாற்காலியில் முடங்கியிருக்கும் இராணுவ வீரர்களை தற்சார்புடையவர்களாக மாற்றுவதற்கான ஒரு முயற்சியாக "உட்சாலோ" என்ற முன்முயற்சியை இராணுவத்தின் முடவியல் மறுவாழ்வு மையமானது தொடங்கியுள்ளது.
- உட்சாலோ என்பது இராணுவ மற்றும் துணை இராணுவப் படையைச் சேர்ந்த வீரர்களுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட பாதுகாப்பு கட்டணம் மற்றும் பிரத்தியேகத் தள்ளுபடிகளை வழங்கும் ஒரு பயணத் தளமாகும்.
- இது ஊனமுற்ற இராணுவ வீரர்களுக்கு அதிகாரம் அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த பிரத்தியேக முன்முயற்சியானது சக்கர நாற்காலியில் முடங்கியிருக்கும் ராணுவ வீரர்களின் வாழ்வில் ஒரு புதிய உத்தியை வழங்கியிருக்கின்றது.




## அமைச்சரவைக் குழுக்கள்

- இந்திய அரசானது ஆறு அமைச்சரவைக் குழுக்களை மீள் உருவாக்கம் செய்துள்ளது.
- இதனுடன் இரண்டு புதியக் குழுக்களையும் உருவாக்கியுள்ளது.
- தற்போது உருவாக்கப்பட்ட குழுக்களாவன
    - நியமனங்களுக்கான அமைச்சரவைக் குழு
    - வசிப்பிட விவகார அமைச்சரவைக் குழு
    - பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு
    - பாராளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு
    - பாதுகாப்பிற்கான அமைச்சரவைக் குழு
    - முதலீடு மற்றும் வளர்ச்சிக்கான அமைச்சரவைக் குழு

- வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டிற்கான அமைச்சரவைக் குழு

❖ இவற்றில் இரண்டு குழுக்கள் தவிர மற்ற அனைத்திற்கும் பிரதமர் தலைமை வகிப்பார்.

❖ பாராளுமன்ற விவகாரங்கள் மற்றும் வசிப்பிட விவகாரங்களுக்கான குழுக்களுக்கு உள்துறை அமைச்சரான அமித்ஷா தலைமை வகிப்பார்.

❖ முதலீடு மற்றும் வளர்ச்சிக்கான அமைச்சரவைக் குழு மற்றும் திறன் மேம்பாட்டிற்கான அமைச்சரவைக் குழு ஆகிய இரண்டும் புதிதாக உருவாக்கப்பட்ட குழுக்களாகும்.

❖ இவையல்லாமல் நிலைக் குழுக்களைப் பிரதமர் உருவாக்கி அதற்கான குறிப்பிட்ட பணிகளையும் அவர் அதற்கு ஒதுக்குவார்.

❖ மேலும் இவர் இந்தக் குழுக்களின் எண்ணிக்கையைக் கூட்டவோ குறைக்கவோ முடியும்.

## கல்விக் கொள்கையின் வரைவு

❖ இஸ்ரோவின் முன்னாள் தலைவரான Dr. கஸ்தூரி ரங்கன் தலைமையிலான குழுவானது தேசிய கல்விக் கொள்கையின் வரைவை மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சரான ரமேஷ் பொக்ரியாலிடம் சமர்ப்பித்துள்ளது.

❖ இக்குழுவானது கல்விக் கொள்கையை மறுபரிசீலனை செய்வதற்காக 2017 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

❖ தற்போதைய கல்விக் கொள்கையானது 1986 ஆம் ஆண்டு பிரதமர் ராஜீவ் காந்தியின் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்டுப் பின்னர் 1992 ஆம் ஆண்டு நரசிம்மராவின் ஆட்சிக் காலத்தில் திருத்தம் செய்யப்பட்டது.

❖ இந்த கொள்கை வரைவின் பரிந்துரைகளாவன:
  - பாடத்திட்டத்தில் இந்திய அறிவுசார் அமைப்புகளை இணைத்தல்,
  - தேசியக் கல்வி ஆணையத்தை அமைத்தல்,
  - தனியார் பள்ளிகளின் தன்னிச்சையான கட்டண உயர்வைத் தடுத்தல்.

❖ மேலும் இந்த நிபுணர் குழுவானது ஆசிரியர்களை உருவாக்குதல் மற்றும் கல்வித் திட்டங்கள் அனைத்தையும் பெரிய அளவிலான பல்முனைப் பல்கலைக்கழகங்கள் அல்லது கல்லூரிகளுக்கு மாற்றுவதன் மூலம் ஆசிரியர் கல்வியில் மாபெரும் மாற்றத்தையும் முன்மொழிந்துள்ளது.


❖ அனைத்து மாநிலங்களிலும் இந்தி மொழியைக் கட்டாயமாகக் கற்க வேண்டுமென்ற இந்தக் குழுவின் மும்மொழித் திட்ட முன்மொழிவானது தென் மாநிலங்கள் மற்றும் இந்தி பேசாத மாநிலங்களில் கடுமையான எதிர்ப்பைச சந்தித்தது.

❖ பின்னர் இந்த வரைவுக் கொள்கையானது கட்டாய இந்தி விதிகளை கைவிட்டது. ஆனால் இன்னும் கட்டாய மும்மொழிக் கொள்கையில் மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை.

❖ முன்னதாக, முன்னாள் அமைச்சரவைச் செயலாளரான TSR சுப்பிரமணியன் தலைமையிலான புதிய கல்விக் கொள்கையின் மாற்றத்திற்கான குழுவானது 2016 ஆம் ஆண்டில் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது.

## நிலையான அளவு சேர்க்கை மருந்துகள்

- 324 நிலையான அளவு சேர்க்கை மருந்துக்கள் நோயாளிகளுக்குப் பாதுகாப்பானவை மற்றும் பயனுள்ளவை என்பதை நிரூபிக்கும் பொருட்டு அவற்றின் "துல்லியமான தரவுகளை" சமர்ப்பிக்கும்படி "மருந்துகள் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவானது மருந்து தயாரிக்கும் நிறுவனங்களைக் கேட்டுக் கொண்டுள்ளது."
- நிலையான அளவு சேர்க்கை மருந்துகள் என்பவை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட செயல்படும் மருந்துப் பொருட்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரே மருந்தாக உருவாக்கப் படுபவையாகும்.
- இவை நிலையான அளவு மருந்துகளாகத் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப் படுகின்றன.
- இந்த மருந்துகள் ஒற்றைக் கூறு மருந்துகளை விட மலிவானவை ஆகும்.
- இதன் பொதுவான உதாரணம் : விக்ஸ் ஆக்சன் 500.




## தேசியக் கட்சி

- இந்தியத் தேர்தல் ஆணையம் தேசிய மக்கள் கட்சியை ஒரு தேசியக் கட்சியாக அறிவித்து இருக்கின்றது.
- இது அக்கட்சியை வடகிழக்குப் பிராந்தியத்திலிருந்து தேசியக் கட்சி என்ற தகுதியைப் பெறும் முதல் அரசியல் கட்சியாக மாற்றியுள்ளது. இதன் தேர்தல் சின்னம் புத்தகமாகும்.
- இக்கட்சி 2013 ஆம் ஆண்டில் பிஏ சங்மாவால் ஆரம்பிக்கப்பட்டது. இதன் தலைமையகம் மணிப்பூரின் இம்பாலில் அமைந்திருக்கின்றது.
- இந்த கட்சி அருணாச்சலப் பிரதேசம், மணிப்பூர், மேகாலயா மற்றும் நாகாலந்து ஆகிய மாநிலங்களில் மாநிலக் கட்சியாக அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்கின்றது.
- 2015 ஆம் ஆண்டில் இக்கட்சி தேர்தல் ஆணையத்தால் இடைக்காலத் தடை விதிக்கப்பட்ட முதலாவது கட்சியாக உருவெடுத்தது. ஏனெனில் 2014 ஆம் ஆண்டில் நடைபெற்ற மக்களவைத் தேர்தலின் போது அக்கட்சி தனது கட்சியின் தேர்தல் செலவுகளை சமர்ப்பிக்காத காரணத்தால் தேர்தல் ஆணையம் இந்நடவடிக்கையை மேற்கொண்டது.
- அரசியல் கட்சிகளின் பதிவு, 1951 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 29A என்ற விதிகளின் கீழ் நெறிமுறைப் படுத்தப்படுகின்றது.
- தேசியக் கட்சியாக அங்கீகாரமளிக்கப்பட வேண்டிய தகுதிகளாவன

If a party secures at least six percent of the valid votes polled in any four or more states, at a general election to the House of the People or, to the State Legislative Assembly;

and

In addition, it wins at least four seats in the House of the People from any State or States.

or

It wins at least two percent seats in the House of the People (i.e., 11 seats in the existing House having 543 members) and these members are elected from at least three different States.

## சாந்த குமார் குழு

- சாந்த குமார் குழு தனது பரிந்துரைகளை மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது வினியோகத் துறை அமைச்சர் ராம் விலாஸ் பாஸ்வானிடம் அளித்திருக்கின்றது.
- பின்வரும் காரணங்களுக்காக இது அமைக்கப்பட்டது.
    - இந்திய உணவுக் கழகத்தின் சீரமைப்பு
    - அதன் நிதி மேலாண்மையின் மேம்பாடு
    - உணவுத் தானியங்கள் கொள்முதல், சேமிப்பு மற்றும் விநியோகம் ஆகியவற்றில் அதன் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துதல்.
- அமைச்சகம் அக்குழுவின் முக்கியப் பரிந்துரைகளை நிறைவேற்றிட ஒப்புதல் அளித்திருக்கின்றது.
- முக்கியப் பரிந்துரைகளாவன :

•Reduce the number of beneficiaries under the Food Security Act — from the current 67 per cent to 40 per cent.

•Allow private players to procure and store food grains.

•Stop bonuses on minimum support price (MSP) paid by states to farmers, and adopt direct cash transfer system.

•FCI should involve itself in full-fledged grains procurement only in those states which are poor in procurement.

•Abolishing levy rice: Under levy rice policy, government buys certain percentage of rice (varies from 25 to 75 per cent in states) from the mills compulsorily, which is called levy rice. Mills are allowed to sell only the remainder in the open market.

•Deregulate fertiliser sector and provide cash fertiliser subsidy of Rs.7,000 per hectare to farmers.

•Outsource of stocking of grains

•Clear and transparent liquidation policy for buffer stock

## ஸ்பைஸ் குண்டுகள்

- இந்திய விமானப் படை 100ற்கும் மேற்பட்ட ஸ்பைஸ் (SPICE) குண்டுகளை வாங்குவதற்காக இஸ்ரேல் அரசாங்கத்துடன் ரூ. 300 கோடி மதிப்பிலான ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- ஸ்பைஸ் என்பது "திறன் வாய்ந்த, துல்லியமான தாக்கம் கொண்ட, செலவு குறைந்த குண்டு" என்பதன் விரிவாக்கம் ஆகும்.
- இதன் வரம்பு 60 கிலோ மீட்டர் ஆகும்.
- இது வானிலிருந்து நிலத்தை நோக்கிப் பாயும் நடவடிக்கையில் பயன்படுத்தப்படும் ஆயுதங்களில் பொருத்தப்பட்டுள்ளது.
- இந்திய விமானப் படை பாலகோட் விமானத் தாக்குதலில், இந்தக் குண்டின் ஸ்பைஸ் 2000 என்ற வகையைப் பயன்படுத்தியது.

## நிதி ஆயோக் மீள் உருவாக்கம்

- இந்திய அரசின் கொள்கை சிந்தனைச் சாவடி அமைப்பான நிதி ஆயோக்கை மீண்டும் அமைக்க பிரதமர் ஒப்புதல் அளித்துள்ளார்.
- 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மத்திய அரசானது திட்டக் குழுவிற்குப் பதிலாக நிதி ஆயோக்கை (இந்திய மாற்றத்திற்கான தேசிய நிறுவனம்) அமைத்தது.
- மற்றொரு முன்னாள் முழுநேர உறுப்பினரும் பிரதம மந்திரிக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவின் தலைவருமான பிபேக் தேப்ராய் மீண்டும் அமைக்கப்பட்ட இந்தக் குழுவில் இடம் பெறவில்லை.
- தற்போது உருவாக்கப்பட்ட இந்த புதிய அமைப்பின் உறுப்பினர்கள்:

| | |
|---|---|
| **Chairperson** | Prime Minister |
| **Vice-Chairperson** | Dr. Rajiv Kumar |
| **Full-Time Members** | V.K. Saraswat<br>Ramesh Chand<br>V.K. Paul |
| **Ex-officio Members** | Minister of Defence<br>Minister of Home Affairs<br>Minister of Finance<br>Minister of Agriculture and Farmers Welfare |

## வெளிநாட்டவருக்கான தீர்ப்பாயங்கள்

- மத்திய உள்துறை அமைச்சகமானது பகுதியளவு நீதித்துறை சார்ந்த வெளிநாட்டவர்களுக்கான தீர்ப்பாயங்களை அமைப்பதற்காக அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கியுள்ளது.

- இந்தத் தீர்ப்பாயங்கள் இந்தியாவில் சட்டவிரோதமாகத் தங்கியுள்ள நபர்கள் வெளிநாட்டவரா அல்லது இல்லையா என்பது குறித்து முடிவெடுக்கும்.
- இதற்கு முன்பு மத்திய அரசு மட்டுமே இந்த அதிகாரத்தைக் கொண்டிருந்தது.
- மேலும் இது தனிநபர்கள் தீர்ப்பாயங்களை அணுகுவதற்கும் அதிகாரங்களை வழங்கியுள்ளது.
- இதற்கு முன்பு சந்தேகத்திற்கிடமான வெளிநாட்டவர்களுக்கு எதிராக மாநில அரசு மட்டுமேத் தீர்ப்பாயத்தை நாட முடியும்.
- மேலும் இது குறித்த தகவல்களுக்கு இங்கே சொடுக்கவும் https://www.tnpscthervupettagam.com/assam-crisis/.

## நீண்ட காலமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் அமைச்சரவைச் செயலாளர்

- தற்போதைய அமைச்சரவைச் செயலாளரின் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்காக 60 ஆண்டுப் பழமையான விதிமுறையை மத்திய அரசு திருத்தியுள்ளது.
- அமைச்சரவைச் செயலாளர் (கேபினெட்) இரண்டு ஆண்டுப் பதவிக் காலத்திற்கு நியமிக்கப்படுகின்றார்.
- மத்திய அரசு அமைச்சரவைச் செயலாளரின் மொத்த பதவிக் காலத்தையும் சேர்த்து நான்கு ஆண்டுகளுக்கு மிகாமல் அவருக்கு பணி நீட்டிப்பு வழங்கும்.
- திருத்தியமைக்கப்பட்ட விதிமுறையின்படி, பிரதீப் குமார் சின்ஹாவிற்கு கூடுதலாக மூன்று மாத கால பணி நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.
- தற்போதைய அமைச்சரவைச் செயலாளர் பிரதீப் குமார் சின்ஹா இந்திய வரலாற்றில் செயலாளர் பணியில் நீண்ட காலமாகப் பணியாற்றும் அதிகாரியாக உருவெடுத்துள்ளார்.

## மாநில உணவுப் பாதுகாப்புக் குறியீடு

- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரங்கள் ஆணையமானது (Food Safety and Standards Authority of India - FSSAI) முதலாவது மாநில உணவுப் பாதுகாப்புக் குறியீட்டை உருவாக்கியுள்ளது.
- இந்தக் குறியீட்டில் சண்டிகர் முதலிடத்தில் உள்ளது.
- உலக உணவுப் பாதுகாப்பு தினக் கொண்டாட்டத்தின் போது FSSAI-யினால் தொடங்கப்பட்ட இதர முன்னெடுப்புகள் பின்வருமாறு
    - ராமன் 1.0 - கொழுப்புகள், நெய் மற்றும் சாப்பிடக் கூடிய எண்ணெய் ஆகியவற்றில் கலப்படத்தினை விரைவாகக் (ஒரு நிமிடத்திற்குக் குறைவாக) கண்டறியும் பணியினை மேற்கொள்ளும் பேட்டரியின் உதவியுடன் கையினால் இயக்கப்படக் கூடிய ஒரு சாதனம்.
    - உணவுப் பாதுகாப்பு மாயப் பெட்டி – உணவுக் கலப்படத்தினைச் சோதனை செய்வதற்காக கையேடு மற்றும் சோதனைப் பொருளைக் கொண்டிருக்கும் நபர்கள் அவர்களாகவே சோதனை செய்யப்படக் கூடிய உணவுப் பரிசோதனைப் பெட்டி.

- சரியான உணவு உண்ணும் விருதுகள் – பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான உணவுப் பொருட்களைத் தேர்ந்தெடுப்பதற்கு குடிமக்களுக்கு அதிகாரமளிப்பதற்காக உணவு நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்புகளை அங்கீகரிப்பதாகும்.

## காணாமல் போன ஏஎன்–32 விமானம்

- ஜூன் 3 அன்று, ஏஎன்–32 என்ற ஒரு போக்குவரத்து விமானம் அஸ்ஸாமின் ஜோர்காட்டில் இருந்து அருணாச்சலப் பிரதேசம் நோக்கிப் பறக்கத் தொடங்கிய சில நிமிடங்களில் காணாமல் போனது. இந்த விமானத்தில் 13 இந்தியர்கள் பயணித்தனர்.
- காணாமல் போன விமானத்தைக் கண்டுபிடிப்பதற்காக கோஸ்பாஸ் – சார்சாட் என்பதின் கீழ் புவிக் கண்காணிப்புச் செயற்கைக் கோள்களினால் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் அவற்றினால் அனுப்பப்பட்ட தகவல்களை இந்திய விமானப் படை மற்றும் இதர மீட்புப் படைகள் ஆராய்ந்து வருகின்றன.
- இது ஒரு சர்வதேச செயற்கைக் கோள் அடிப்படையிலான தேடுதல் மற்றும் மீட்பு அமைப்பாகும்.
- இது பின்வரும் அமைப்புகளைப் பயன்படுத்தி கப்பல்கள், விமானங்கள் மற்றும் தனிநபர்களினால் எடுத்துச் செல்லப்பட்ட அவசரகால உணர்விகளைத் தேடி, அவற்றைக் கண்டறிவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.
  - செயற்கைக் கோள்கள்
  - பூமியில் உள்ள நிலையங்கள்
  - திட்டக் கட்டுப்பாட்டு மையங்கள்
  - மீட்பு ஒருங்கிணைப்பு மையங்கள்
- ரஷ்ய மொழியில் கோஸ்பாஸ் (COSPAS) என்பது “நெருக்கடியில் உள்ள கப்பலைத் தேடுவதற்கான விண்வெளி அமைப்பு” என்பதாகும்.
- சார்சாட் (SARSAT) என்பது தேடுதல் மற்றும் மீட்பிற்கான செயற்கைக் கோள் உதவியுடன் கண்காணித்தல் என்பதாகும்.

## மாலத் தீவுகள் மற்றும் இலங்கைப் பயணம்

- இந்தியத் தேர்தலுக்குப் பின்பு பிரதமர் மோடி மாலத் தீவுகள் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டார்.
- அவருக்கு இலங்கை அதிபர் மைத்திரி பாலா சிறிசேனாவால் “சமாதி புத்தர் சிலை” ஒன்று பரிசாக அளிக்கப்பட்டது.
- சமாதி புத்தர் என்பது இலங்கையின் அனுராதாபுராவில் உள்ள மகாமிநவா பூங்காவில் அமைந்துள்ள ஒரு புகழ்பெற்ற சிலையாகும்.
- ஈஸ்டர் ஞாயிறு தீவிரவாதத் தாக்குதலுக்குப் பின்பு இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் முதல் சர்வதேசத் தலைவர் மோடி ஆவார்.
- இவர் மாலத்தீவு அதிபர் முகமது சோலிக்குடன் இணைந்து பாதுகாப்பு மற்றும் கடல்சார் பாதுகாப்பு போன்ற முக்கியப் பகுதிகள் உள்பட 6 இருநாட்டு ஒப்பந்தங்களில்

கையெழுத்திட்டுள்ளார்.

- பிரதமர் மோடிக்கு மாலத் தீவின் உயரிய விருதான “நிசான் இசுதீனின் ஆட்சியாளர்” என்ற விருது வழங்கப்பட்டது.
- மேலும் அவர் மாலத் தீவின் நாடாளுமன்றமான மஜ்லிஸில் உரையாற்றினார்.
- மேலும் மாலத் தீவைச் சேர்ந்த குடிமைப் பணி அதிகாரிகளுக்குப் பயிற்சி வழங்கவும் இந்தியா ஒப்புக் கொண்டுள்ளது.



## தேசியத் தகவல் கிடங்கு

- மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகம் பணித்துறை புள்ளியியல் மீதான ஒரு “தேசியத் தகவல் கிடங்கை” அமைக்கப் பரிந்துரை செய்துள்ளது.
- இது பெருநிலைப் பொருளியல் திரள்களின் தரத்தினை மேலும் மேம்படுத்துவதற்காக பெருந்தரவுப் பகுப்பாய்வுக் கருவிகளைப் பயன்படுத்தவிருக்கின்றது.
- மேலும் இது தேசியப் புள்ளியியல் ஆணையம் சுதந்திரமாகச் செயல்படுவதற்காக ஒரு சட்டமன்றக் கட்டமைப்பையும் ஏற்படுத்தவிருக்கின்றது.

## சவுக்கண்டி ஸ்தூபி

- மத்திய கலாச்சார அமைச்சகத்தின் கீழுள்ள இந்தியத் தொல்லியல் துறை ஆய்வகம் சவுக்கண்டி ஸ்தூபியைத் “தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாக்கப்பட்ட ஒரு பகுதியாக” அறிவித்துள்ளது.
- இது உத்தரப் பிரதேசத்தின் சாரநாத்தில் அமைந்துள்ளது.
- நான்கு பக்கங்களும் சாளரங்கள் கொண்டு விளங்குவதால் இது சவுக்கண்டி என்று அறியப்படுகின்றது.
- இது புத்தருடைய எச்சங்களின் நினைவுச் சின்னமாக விளங்குகின்றது. இது சிதைந்த நிலையில் காணப்படுகின்றது. இது அசலாக கி.பி. 5ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.
- இது கி.பி. 7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புகழ்பெற்ற சீனப் பயணியான யுவான்

சுவாங்கின் பதிவிலும் இடம் பெற்றுள்ளது.



## சுவச் சர்வேக்சான் குழு


- 2020 ஆம் ஆண்டின் சுவச் சர்வேக்சான் குழு (SSL 2020 - Swachh Survekshan League) வீட்டு வசதி மற்றும் நகர விவகாரங்களுக்கான அமைச்சர் ஹர்தீப் சிங் பூரியால் தொடங்கப்பட்டுள்ளது.
- இது இந்தியப் பெருநகரங்கள் மற்றும் சிறு நகரங்களின் காலாண்டுத் தூய்மைக் கணக்கெடுப்பிற்கான ஒரு ஆய்வாகும்.
- நகரங்களின் தூய்மை நிலையைத் தொடர்ந்து கண்காணித்தல் என்பது SSL குழுவின் ஒரு முன்னுரிமைப் பணியாக விளங்கும்.

## தேசியக் கடல்சார் பாரம்பரிய அருங்காட்சியகம்

- குஜராத்தின் லோத்தலில் உள்ள பழமையான ஹரப்பா நாகரீகம் பரவியிருந்த இடத்திற்கு அருகில் கடல்சார் அருங்காட்சியகத்தை அமைப்பதற்குப் போர்ச்சுக்கலுடன் இணைந்து இந்தியா செயல்படவிருக்கின்றது என்று இந்திய அரசு அறிவித்துள்ளது.
- இது போர்ச்சுக்கலின் லிஸ்பனில் உள்ள கடற்படை அருங்காட்சியக மாதிரியில் அமைக்கப்படவிருக்கின்றது. இது போர்ச்சுக்கீசியக் கடற்படையினால் நிர்வகிக்கப் படவிருக்கின்றது.
- இந்தத் திட்டம் சாகர்மாலா திட்டத்தின் கீழ் இந்தியத் தொல்லியல் துறை ஆய்வகம், இந்தியக் கடற்படை, குஜராத் மாநில அரசு ஆகியவற்றின் உதவியுடன் செயல்படுத்தப்பட விருக்கின்றது.

## NASAMS – II

- அமெரிக்காவானது நிலப்பரப்பிலிருந்து வான் இலக்கைத் தாக்கி அழிக்கும் தேசிய மேம்படுத்தப்பட்ட ஏவுகணை அமைப்பு – II (NASAMS-II) என்பதினை இந்தியாவிற்கு விற்பனை செய்ய ஒப்புதல் வழங்கியுள்ளது.




- இது வான்வெளித் தாக்குதல்களிலிருந்து தேசியத் தலைநகர்ப் பகுதியைப் பாதுகாப்பதற்கான மேம்படுத்தப்பட்ட வான் பாதுகாப்பு அமைப்பாகும்.
- எதிரி நாட்டின் விமானம், ஆளில்லா குட்டி விமானம் அல்லது வளர்ந்து வரும் ஏவுகணை அமைப்புகளிலிருந்து ஏற்படும் அச்சுறுத்தல்கள் ஆகியவற்றை விரைவாகக் கண்டறிந்து, அவற்றை அழிக்கும் திறனை இது அதிகரிக்கும்.

## விண்வெளிப் பாதுகாப்பு ஆராய்ச்சி அமைப்பு

- பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாதுகாப்பிற்கான அமைச்சரவைக் குழுவானது விண்வெளிப் பாதுகாப்பு ஆராய்ச்சி அமைப்பை (DSRA - Defence Space Research Agency) அமைக்க ஒப்புதல் வழங்கியுள்ளது.
- DSRA ஆனது விண்வெளிப் போர் சார்ந்த ஆயுத அமைப்புகள் மற்றும் தொழில் நுட்பங்கள் ஆகியவற்றை உருவாக்கும் பணியை மேற்கொள்ளும்.
- இது விண்வெளிப் பாதுகாப்பு அமைப்பிற்கு (DSA - Defence Space Agency) பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு உதவியை அளிக்கவிருக்கின்றது.
- DSA ஆனது விமானப் படையின் துணைத் தளபதி நிலையில் உள்ள அதிகாரியின் கீழ் பெங்களுருவில் அமைக்கப்படவிருக்கின்றது. இது முப்படைகளின் விண்வெளி சார்ந்த திறன்களை படிப்படியாக மேற்கொள்ளவிருக்கின்றது.
- 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், செயற்கைக் கோள்களை சுட்டு வீழ்த்தும் திறன் கொண்ட செயற்கைக் கோள் எதிர்ப்புப் பரிசோதனையை இந்தியா வெற்றிகரமாக நிகழ்த்தியது.

## கீர் பவானி மேளா

- ஒவ்வொரு ஆண்டும் ஜியேஸ்தா அஸ்தமியின் போது காஷ்மீரைச் சேர்ந்த பண்டிட்கள்

ரக்னியா தேவி என்ற பெண் கடவுளை வணங்குவதற்காக காஷ்மீரில் உள்ள 5 கோவில்களுக்குப் பயணம் மேற்கொள்கின்றனர்.

- ஸ்ரீநகருக்கு அருகில் துல்முல் கிராமத்தில் உள்ள கீர் பவானி கோவில் இந்தியா முழுவதும் இடம்பெயர்ந்து வாழும் 60,000 காஷ்மீர் பண்டிட்களுக்கான ஒரு மிக முக்கியமான கோவிலாகும்.
- கீர் பவானி மேளா என்பது பண்டிட்களுக்கான ஒரு முக்கியமான வருடாந்திரத் திருவிழாவாகும்.
- மாதா கீர் பவானி கடவுளின் பக்தர்கள் மே அல்லது ஜூன் மாதத்தின் முழு நிலவு சமயத்தில் 8 நாட்கள் இங்குக் கூடி விரதம் இருப்பர்.
- கீர் என்பது கடவுளை வணங்குவதற்காக கோவிலில் அமைந்துள்ள சுருளில் வழங்கப்படும் நெல் களியைக் குறிக்கின்றது.

## சர்வதேச அமைதிக் குறியீடு

- 2019 ஆம் ஆண்டின் சர்வதேச அமைதிக் குறியீட்டில் 163 நாடுகள் கொண்ட பட்டியலில் இந்தியா 5 இடங்கள் சரிந்து 141-வது இடத்தில் உள்ளது.
- மிகவும் அமைதியான நாடாக ஐஸ்லாந்து தொடர்ந்து நீடித்து வருகின்றது. மிகவும் அமைதியற்ற நாடாக ஆப்கானிஸ்தான் விளங்குகின்றது.
- பூடான் நாடு இந்த அமைதிக் குறியீட்டில் 15-வது இடம் பிடித்து தெற்காசியாவில் முன்னிலையில் உள்ளது.
- அந்தந்த நாடுகளில் நிலவும் அமைதி நிலையின்படி ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த சிந்தனைச் சாவடியான "பொருளாதார மற்றும் அமைதி நிறுவனம்" நாடுகளைத் தரவரிசைப்படுத்தியுள்ளது.
- இது சர்வதேச அமைதி நிறுவனங்கள் மற்றும் சிந்தனைச் சாவடிகளில் உள்ள சர்வதேச அமைதி வல்லுநர்கள் குழுவுடன் கலந்தாலோசித்துப் பொருளாதார நுண்ணறிவுப் பிரிவினால் (Economist Intelligence Unit - EIU) சேகரித்து வைக்கப்பட்ட தகவல்களுடன் இணைத்து உருவாக்கப்பட்டதாகும்.
- தற்பொழுது நடைபெற்று வரும் உள்நாட்டு மற்றும் சர்வதேசப் பிரச்சனைகள், இராணுவமயமாக்கல், சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இந்த நாடுகள் தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளன.

## HSTDV

- ஒடிசா கடற்கரையில் உள்ள டாக்டர் அப்துல் கலாம் தீவிலிருந்து மீவேகத் தொழில்நுட்ப செயல்முறை வாகனத்தின் (HSTDV - Hypersonic Technology Demonstrator Vehicle) முதலாவது சோதனையைப் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு (DRDO) நிகழ்த்தியுள்ளது.




- HSDTV திட்டத்தின் கீழ் DRDO "ஸ்கரம் ஜெட் இன்ஜினனால்" இயக்கப்படக் கூடிய மீவேக வாகனத்தை மேம்படுத்துகின்றது.
- இதனைக் குறைந்த செலவில் செயற்கைக் கோள்களை ஏவுவதற்குப் பயன்படுத்த முடியும்.
- இதனை எதிர்காலத்தில் நீண்ட தொலைவு கொண்ட ஏவுகணை அமைப்புகளிலும் பயன்படுத்த முடியும்.

## கைலாஷ் மானசரோவர் யாத்திரை

- இந்த ஆண்டின் கைலாஷ் மானசரோவர் யாத்திரைக்காக, புது தில்லியிலிருந்து முதலாவது பிரிவு புனிதப் பயணத்தை வெளியுறவுத் துறை அமைச்சர் S. ஜெய்சங்கர் தொடங்கி வைத்தார்.
- புனிதப் பயண ஏற்பாட்டிற்காக தில்லியில் மேற்கொள்ளப் படும் 3 நாள் பணிகள் உள்பட ஒவ்வொரு பிரிவுக்கும் புனிதப் பயணத்திற்கான காலம் 24 நாட்களாகும்.
- இந்தப் புனிதப் பயணம் 1981 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- கைலாஷ் மானசரோவர் யாத்திரை பின்வரும் இரண்டு பாதைகளில் மேற்கொள்ளப் படுகின்றது.
    - உத்தரகாண்டில் உள்ள லிபுலேக் கணவாய் - மலைப் பகுதியின் வழியாக இந்தப் பாதை செல்கின்றது.
    - சிக்கிமில் உள்ள நாதுல்லா கணவாய் - முழுவதும் வாகனத்தினால் பயணிக்கக்கூடிய பாதை. மூத்த குடிமக்களுக்கு இப்பாதை உதவிகரமாக இருக்கும்.
- இந்த யாத்திரை இந்தியா, நேபாளம் மற்றும் சீனா ஆகிய நாடுகளின் எல்லைகளை கடந்து செல்லக் கூடிய ஒரு சிக்கலான பாதையைக் கொண்டுள்ளது.
- தில்லி, உத்தரகாண்ட் மற்றும் சிக்கிம் ஆகிய மாநிலங்களின் உதவியுடனும் இந்தோ-திபெத்திய எல்லைப் பாதுகாப்புப் படையின் ஒத்துழைப்புடனும் இந்த யாத்திரை ஒருங்கிணைக்கப்படுகின்றது.




## நிதி ஆயோக் நிர்வாகக் குழுக் கூட்டம்

- நிதி ஆயோக் நிர்வாகக் குழுவின் 5-வது கூட்டம் பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில் புது தில்லியின் ராஷ்டிரபதி பவனில் நடத்தப் பட்டது.
- நிதி ஆயோக் நிர்வாகக் குழு கூட்டுறவுக் கூட்டாட்சிக் கொள்கைகளை உள்ளடக்கியுள்ளது.
- இது தேசிய வளர்ச்சி இலக்குகளின் செயல்பாடுகளை விரைவுபடுத்துவதற்காக துறைகளுக்கிடையேயான பிரச்சினைகள் மற்றும் கூட்டாட்சிப் பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்கான ஒரு தளமாக விளங்குகின்றது.
- இந்தக் குழுவின் உறுப்பினர்கள் பின்வருமாறு:
    - இந்தியப் பிரதமர், அனைத்து மாநிலங்களின் முதலமைச்சர்கள், சட்டமன்றம் உள்ள யூனியன் பிரதேசங்களின் முதலமைச்சர்கள் மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகளின் துணை நிலை ஆளுநர்.
    - பதவி வழி உறுப்பினர்களாக 4 மத்திய அமைச்சர்கள்.
    - சிறப்பு அழைப்பாளர்களாக 3 மத்திய அமைச்சர்கள்.
- 2024 ஆம் ஆண்டில் இந்தியப் பொருளாதாரம் 5 டிரில்லியன் டாலர் என்ற இலக்கை இந்தியா எட்டும் என்று மோடி அறிவித்துள்ளார்.




## பாரத் திறன்கள்

- மத்தியத் திறன் வளர்ச்சி மற்றும் தொழில்முனைவு அமைச்சகத்தின் கீழுள்ள பொதுப் பயிற்சி இயக்குநரகம் சிஸ்கோ மற்றும் அசஞ்சர் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்துள்ளது.
- இது டிஜிட்டல் பொருளாதாரத்திற்காக தனது தொழிற் பயிற்சி நிறுவனங்களின் (ITI - Industrial Training Institutes) மூலம் இளைஞர்களுக்குத் திறனை அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவில் உள்ள அனைத்து ITIகளிலும் பயிலும் ஏறத்தாழ 15 இலட்சம் மாணவர்கள் பாரத் திறன்கள் இணையவாயில் தளத்தின் மூலம் டிஜிட்டல் கல்விப் பெட்டகத்தை அணுகிப் பயன் பெறுவர்.

## கிராமப்புற ஏழைகள் மற்றும் காலநிலை மாற்றம்

- ஹைதராபாத்தில் உள்ள தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் நிறுவனம் நீடித்த வாழ்வாதாரம் மற்றும் கால நிலைக்கேற்றவாறுத் தகவமைத்துக் கொள்ளுதல் (SLACC - Sustainable Livelihoods and Adaptation to Climate Change) என்ற ஒரு பயிற்சித் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டம் கிராமப்புற விவசாயத்தை நம்பி இருக்கும் ஏழைக் குடும்பங்கள் தற்சமயம் நிகழும் காலநிலை மாற்றத்திற்கு ஏற்றவாறு தங்களைத் தகவமைத்துக் கொள்வதற்கு உதவுதல் மற்றும் அவர்களின் நீடித்த வாழ்வாதாரத்திற்கு உதவுதல் ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

- இது தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டுள்ளது.
- மத்தியப் பிரதேசம் மற்றும் பீகார் மாநிலங்களில் வறட்சி மற்றும் வெள்ள அபாயம் உள்ள 638 கிராமங்களில் இத்திட்டம் சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

## ஜன் அவுஷாத் மருந்துகள்

- இந்திய மருத்துவ பொதுத்துறை மருந்து நிறுவனங்கள் பணியகமானது (Bureau of Pharma PSUs of India-BBPI), ஜனவரி 2018 முதல் 18 மருந்துத் தயாரிப்பு நிறுவனங்களின் 25 தொகுதி மருந்துகள் தரம் குறைந்தவைகளாக உள்ளதாகக் கண்டறிந்துள்ளது.
- BBPI ஆனது மருந்தியல் துறையின் கீழ் செயல்படுகின்றது.
- இது மத்திய அரசின் மலிவு விலையில் மருந்துகள் வழங்கும் முதன்மை திட்டமான பிரதம மந்திரி பாரதீய ஜன் அவுஷாத் பரியோஜனாவை செயல்படுத்துவதற்கான பிரத்தியேக அமைப்பு ஆகும்.
- 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 நிலவரப்படி நாடு முழுவதும் 4677க்கும் அதிகமான ஜன் அவுஷாதி கேந்திராக்கள் செயல்படுகின்றன.




## சன்ரைஸ் – 2 நடவடிக்கை

- இந்தியா மற்றும் மியான்மர் நாட்டு இராணுவத்தினர் இணைந்து அவரவர் எல்லைப் பகுதியில் மூன்று வார காலத்திற்கு ஒரு ஒருங்கிணைந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன.
- இந்த கூட்டுப் பயிற்சிக்கு சன்ரைஸ் – 2 நடவடிக்கை எனப் பெயரிடப்பட்டது.
- அசாம் ரைபிள்ஸ் படையினரும் இந்த நடவடிக்கையில் இணைந்துக் கொண்டனர்.
- இவர்கள் மணிப்பூர், நாகலாந்து மற்றும் அசாம் பகுதியில் செயல்படும் பல தீவிரவாதக் குழுக்களை குறிவைத்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர்.

- மியான்மரானது அசாம், தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட நாகலாந்து மற்றும் மணிப்பூருடன் 1640 கி.மீ. நீள எல்லையைப் பகிர்ந்து கொள்கிறது.

## நமஸ்தே தாய்லாந்து

- 2019 ஆம் ஆண்டு ஜுன் 15 – 16 ஆகிய தேதிகளில் "நமஸ்தே தாய்லாந்து" எனும் இரண்டு நாள் திரைப்பட விழாவானது டெல்லியில் நடைபெற்றது.
- இது தாய்லாந்து கலாச்சாரத்தின் பன்முகத்தன்மையைக் கொண்டாடும் பிரம்மாண்டமான தாய் மொழித் திரைப்பட விழாவின் மூன்றாம் பதிப்பாகும்.
- இது தாய்லாந்து தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு இந்தியாவிற்கான தாய்லாந்தின் தூதரான சுடின்டார்ன் கோங்சக்டியால் திறந்து வைக்கப்பட்டது.

## IMD-இன் தலைவர்

- புகழ் பெற்ற விஞ்ஞானியும் புயல் எச்சரிக்கை நிபுணருமான மிருத்ஞ்செய் மகாபத்ரா இந்திய வானிலை ஆய்வுத் துறையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இவர் இந்தியாவின் "சூறாவளி மனிதர்" எனப் பிரபலமாக அறியப்படுகின்றார்.
- இவரும் இவரின் புயல் எச்சரிக்கைக் குழுவினரும் பைலின் (2013), ஹுட்ஹுட் (2014), டிட்லி (2018) ஆகிய புயல்கள் குறித்து துல்லியமான முன்னறிவிப்புகளை வழங்கினர்.

## 17-வது மக்களவை கூடியது

- 17.06.2019 அன்று 17வது மக்களவையின் முதலாவது கூட்டத் தொடர் தொடங்கியது.
- பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவியேற்ற போது இடைக்கால சபாநாயகராக வீரேந்திர குமார் இருந்தார்.
- தமிழ்நாட்டைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழில் பதவிப் பிரமாணம் எடுத்தனர்.
- அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் உள்ள ஏதாவது ஒரு மொழியில் பாராளுமன்ற உறுப்பினரால் பதவிப் பிரமாணம் அல்லது உறுதி மொழியை எடுக்க முடியும்.

## சீனாவை முந்திச் செல்லுதல்

- "2019 ஆம் ஆண்டின் உலக மக்கள் தொகை வாய்ப்புகள்" என்ற அறிக்கையின்படி, 2027 ஆம் ஆண்டில் சீனாவைப் பின்னுக்குத் தள்ளி இந்தியாவானது உலகின் மிகவும் அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக உருவெடுக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் இந்தியாவின் மக்கள் தொகை 1.37 பில்லியன் என்றும் சீனாவின் மக்கள்தொகை 1.43 பில்லியன் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.
- "2019 ஆம் ஆண்டின் உலக மக்கள் தொகை வாய்ப்புகள்" என்ற அறிக்கையானது

பொருளாதாரம் மற்றும் சமூக விவகாரங்களுக்கான ஐ.நா. துறையின் மக்கள் தொகைப் பிரிவினால் வெளியிடப்படுகின்றது.

## சர்வதேச உணவு இந்தியா

- மத்திய உணவுப் பதப்படுத்துதல் தொழிற்துறை அமைச்சர் ஹர்சிம்ரத் கவுர் 2019 ஆம் ஆண்டு நவம்பர் 01 - 04 வரை புது தில்லியில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் நிகழ்ச்சியான "சர்வதேச உணவு இந்தியா" என்ற நிகழ்ச்சி நடத்தப்படும் என்று அறிவித்துள்ளார்.
- உணவுப் பதப்படுத்துதல் துறையில் உள்ள அனைத்து சர்வதேச மற்றும் உள்ளூர் பங்காளர்களால் கலந்து கொள்ளப்படும் மிகப் பெரிய நிகழ்ச்சி இதுவாகும்.
- இந்நிகழ்ச்சியின் முழக்கம், "வளர்ச்சிக்காகப் பங்காளர்களை உருவாக்குதல்" என்பதாகும்.

## ஒரு தேசம் ஒரு தேர்தல்

- "ஒரு தேசம் ஒரு தேர்தல்" என்ற கருத்து குறித்து விவாதிப்பதற்காக நாடாளுமன்றத்தின் அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒன்றிற்குப் பிரதமர் மோடி அழைப்பு விடுத்துள்ளார்.
- நாடாளுமன்றத்தில் மொத்தமுள்ள 40 கட்சிகளில் 21 கட்சிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டன.
- இந்தக் கருத்தின் சாத்தியத் தன்மை குறித்து ஆராய்வதற்காக ஒரு குழு அமைக்கப்படும் என்று பிரதமர் அறிவித்துள்ளார்.
- இதற்கு முன்பு, சட்டமன்றத்திற்கு என்று ஒரு தனிப்பட்ட தேர்தலை நடத்துவது என்பது விதிவிலக்கு தானேயன்றி அது ஒரு கட்டாய விதி அல்ல என்று சட்ட ஆணையம் தனது 170வது அறிக்கையில் கூறியுள்ளது.

**Fact Box**

Both Lok Sabha and State Assemblies do not have a fixed term and can be dissolved earlier than their normal under the following Constitutional Provisions

Lok Sabha:

*Article 85(2)(b): Article 85 (2)(b) of the Constitution of India provides the President with the power to dissolve Lok Sabha.

State Assemblies:

*Article 174(2)(b): Similar provision for dissolution of State Legislative Assemblies by the Governor of State is provided under Article 174(2)(b).

*Article 356: In the event of a State being under President's Rule as provided under Article 356, the Legislative Assembly of the said State may be prematurely dissolved by the President.

## உணவுப் பொருள் பங்கீட்டு முறை

- அமைதிப் பகுதிகளில் பணியாற்றும் இராணுவ அதிகாரிகளுக்கு "உணவுப் பொருள் பங்கீட்டு முறைகளை" மீண்டும் கொண்டு வருவதற்கான மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் பரிந்துரைக்கு இந்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- 2017 ஆம் ஆண்டு ஜூலை 01 அன்று பாதுகாப்பு அதிகாரிகளுக்கு இலவச உணவுப் பொருள் பங்கீட்டு முறைகளுக்கு மாற்றாக சில சலுகைகளை அளிக்கலாம் என்ற மத்திய அரசு முடிவு எடுத்திருந்தது.
- தற்பொழுது இந்தப் பரிந்துரை ரத்து செய்யப்பட்டு, மீண்டும் பழமையான முறையே பின்பற்றப்படுகின்றது.

## நியமனக் குழு

- நியமனங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது (ACC - Appointments Committee of Cabinet) மூத்த அதிகாரியான அலோக் வர்தன் என்பவரை வெளிநாட்டு வர்த்தகப் பொது இயக்குநரகத்தின் (Directorate General of Foreign Trade) பொது இயக்குநராக 3 மாத காலத்திற்குப் பணி நீட்டிப்பு செய்துள்ளது.
- ACC ஆனது இந்திய அரசின் கீழ் உள்ள முக்கியப் பதவிகளுக்கான நியமனங்கள் குறித்து முடிவெடுக்கின்றது.
- இந்தக் குழுவின் தலைவர் பிரதமர் மோடி ஆவார்
- இந்தக் குழுவின் உறுப்பினர் உள்துறை அமைச்சராவார்.

## ஓட்டுநர் தகுதிநிலை

- மத்திய சாலைப் பாதுகாப்பு மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகமானது நாட்டில் போக்குவரத்து வாகன ஓட்டுநர்களுக்கான குறைந்தபட்ச கல்வித் தகுதியை நீக்க முடிவு செய்துள்ளது.
- தற்பொழுது 1989 ஆம் ஆண்டின் மத்திய மோட்டார் வாகன விதிமுறைகள் ஒரு வாகன ஓட்டுநர் எட்டாம் வகுப்பில் கண்டிப்பாக தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்று கூறுகின்றது.
- இந்த நடவடிக்கையானது நாட்டின் போக்குவரத்து மற்றும் தளவாடத் துறையில் இருக்கும் 22 இலட்சம் ஓட்டுநர்களின் பற்றாக்குறையைப் போக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

## நிதியுதவி – நைஜீரியா

- ஆப்பிரிக்க ஒன்றிய மாநாட்டினை நடத்துவதற்காக நைஜீரியாவிற்கு 15 மில்லியன் டாலர் நிதியுதவியை இந்தியா அளித்துள்ளது.
- இந்த மாநாடு 2019 ஆம் ஆண்டு ஜூலை 7-8 ஆம் தேதிகளில் நைஜீரியாவின் தலைநகரான நியாமேயில் நடைபெறவிருக்கின்றது.

- 2009 ஆம் ஆண்டில் நைஜீரியாவின் நியாமேயில் இந்தியக் குடியுரிமைத் தூதரகத் திட்டம் தொடங்கப்பட்டது.
- நிதியுதவியின் மூலம் நியாமேயில் மகாத்மா காந்தி சர்வதேச தீர்வு மையத்தையும் உருவாக்க இந்தியா திட்டமிட்டுள்ளது.

## கைபேசித் திருட்டு

- தொலைத் தொடர்புத் துறை அமைச்சகம் மத்திய கருவிகள் அடையாளப் பதிவுகளை (Central Equipment Identity Register - CEIR) வெளியிட முடிவு செய்திருக்கின்றது.
- நாடெங்கிலும் கைபேசிகளின் திருட்டு மற்றும் பரவலாகப் பயன்படுத்தப்படும் போலிக் கைபேசிகளைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது.
- CEIR என்பது ஒவ்வொரு கைபேசி சாதனத்தையும் பிரத்தியேகமாகக் கண்டறியக்கூடிய 15 இலக்க எண்களைக் கொண்ட சர்வதேச கைபேசிக் கருவி அடையாளங்களின் (IMEI - International Mobile Equipment Identities) தரவுதளமாகும்.
- இந்த தரவுதளம் பின்வரும் மூன்று பட்டியலில் கைபேசிகளைக் கொண்டிருக்கும்.
  - **வெள்ளைப் பட்டியல்** : வெள்ளைப் பட்டியலில் IMEI எண்களுடன் இருக்கும் கைபேசிகள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும்.
  - **கறுப்புப் பட்டியல்** : கறுப்புப் பட்டியலில் உள்ள கைபேசிகள் திருடப்பட்ட கைபேசிகளாக பதிவு செய்யப்பட்டிருக்கும். இந்த கைபேசிகள் வலையமைப்பை அணுக அனுமதிக்கப் படுவதில்லை.
  - **சாம்பல் நிறப் பட்டியல்** : இந்தப் பட்டியலில் உள்ள கைபேசிகள் குறிப்பிட்ட தரங்களை பூர்த்தி செய்யாமல் உள்ளன. இவை மேற்பார்வையின் கீழ் வலையமைப்பை அணுக அனுமதிக்கப்படும்.

## மக்களவை சபாநாயகர்

- 17-வது மக்களவையின் சபாநாயகராக ராஜஸ்தான் மாநிலத்தின் கோட்டாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாஜக கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான ஓம் பிர்லா ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- சபாநாயகராக ஒருவரைத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு எந்தவொரு தகுதி நிலையையும் அரசியலமைப்பு குறிப்பிடவில்லை.
- ஒருவர் மக்களவையின் உறுப்பினராக இருந்தாலே சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்படலாம்.
- மக்களவையின் சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் ஆகியோர் மக்களவை உறுப்பினர்களிடையே, தேர்தல் நடைபெறும் நாளில் மக்களவைக்கு வந்திருக்கும் மற்றும் ஓட்டெடுப்பில் பங்கெடுத்த உறுப்பினர்களின் வாயிலாக சாதாரண பெரும்பான்மையின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## யானைகளுக்கான சிகிச்சை

- மூட்டு வீக்கம் (அழற்சி), மூட்டு வலி மற்றும் கால்கள் நலிவடைதல் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டுள்ள யானைகளுக்காக, தனது முதலாவது சிறப்பு நீர் மருத்துவத்தை இந்தியா தொடங்கியுள்ளது.
- இது உத்தரப் பிரதேசத்தின் மதுராவில் யமுனை நதிக்கரையில் வனவிலங்கு SOS என்ற அமைப்பின் யானைகள் பாதுகாப்பு மற்றும் நல மையத்திற்கு (ECCC - Elephant Conservation and Care Centre) அருகில் அமைந்துள்ளது.
- இது தற்பொழுது மீட்கப்பட்ட 20 யானைகளைக் கொண்டுள்ளது. உத்தரப் பிரதேச வனத்துறை மற்றும் அரசு சாரா அமைப்பான வனவிலங்கு SOS ஆகியவை கூட்டாக இணைந்து இதனை நிர்வகிக்கின்றது.




## புதிய கடற்படை நீர்மூழ்கி கப்பல்கள்

- ஆறு நீர்மூழ்கிக் கப்பல்களை கட்டுவதற்கான, இந்திய யுக்திசார் பங்காளர்களை இறுதி செய்வதற்காக விருப்பத் தேவைகளின் பட்டியலை இந்திய அரசு வெளியிட்டுள்ளது.
- இவை இந்தியக் கடற்படையின் P-75 (I) திட்டத்தின் கீழ் கட்டப்படும்.
- மேலும் இவை யுக்திசார் கூட்டு மாதிரியின் (strategic partnership model-SPM) கீழ் கட்டப்படவுள்ளன.

### *யுக்திசார் கூட்டு மாதிரி*

- இது "இந்தியாவில் தயாரிப்போம்" திட்டத்தின் கீழ் உள்ள ஒரு முன்முயற்சியாகும்.
- இது இந்தியாவில் நீர்மூழ்கிக் கப்பல்களின் உள்நாட்டு வடிவமைப்பு மற்றும் கட்டுமானத் திறனை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதன் கீழ் ஒரு தனியார் இந்திய நிறுவனமானது வெளிநாட்டின் அசல் உபகரணங்களைத் தயாரிக்கும் நிறுவனத்துடன் கூட்டு சேரும்.
- இதில் இந்திய நிறுவனங்களானது 51% உரிமையைக் கொண்டிருக்கும்

## சங்கல்ப் நடவடிக்கை

- இந்தியக் கடற்படையானது பாரசீக வளைகுடா மற்றும் ஓமன் வளைகுடாவில் இந்தியக் கொடியைத் தாங்கிய கப்பல்கள் பாதுகாப்பாகச் செல்வதை உறுதிப்படுத்துவதற்காக சங்கல்ப் நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.

- நார்வே மற்றும் ஜப்பானின் இரண்டு எண்ணெய்க் கப்பல்கள் இப்பகுதியில் சமீபத்தில் தாக்கப்பட்டன.
- ஓமன் வளைகுடாவானது அரபிக்கடல் மற்றும் இந்தியப் பெருங்கடலிருந்து பாரசீக வளைகுடாவிற்கான ஒரே நுழைவு வாயிலை வழங்குகின்றது.
- பாரசீக வளைகுடாவானது அரேபிய தீபகற்பம் மற்றும் ஈரான் ஆகியவற்றிற்கிடையே அமைந்துள்ளது. இது ஷாத் அல் அராப் டெல்டா பகுதியிலிருந்து ஹார்மஸ் நீர்ச்சந்தி வரை பரவியுள்ளது.
- இப்பகுதியில் INS சென்னை மற்றும் INS சுனைனா ஆகிய இந்தியக் கடற்படைக் கப்பல்கள் கடல்சார் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்தப் பிராந்தியத்தில் நிறுத்தப்பட்டுள்ளன.
- இந்தியக் கடற்படையின் இந்தியப் பெருங்கடல் பிராந்திய தகவல் இணைவு மையமானது இந்த வளைகுடாப் பிராந்தியத்தில் கப்பல்களின் நடமாட்டங்களை உன்னிப்பாகக் கண்காணிக்கின்றது.




## கோல்ஹாபுரி செருப்பிற்குப் புவிசார் குறியீடு

- மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களின் தலா 4 மாவட்டங்களுக்கு கோல்ஹாபுரிடின் பாரம்பரிய தோல் செருப்புகளுக்காக புவிசார் குறியீடானது வழங்கப்பட்டுள்ளது.
- மகாராஷ்டிராவில் கோல்ஹாபூர், சாங்லி, கோலாப்பூர் மற்றும் சதாரா ஆகிய மாவட்டங்கள்
- கர்நாடகாவில் பெல்ஹாம், தார்வாட், பாகல்கோட், மற்றும் பீஜ்பூர் ஆகிய மாவட்டங்கள்.
- கோல்ஹாப்பூரைச் சேர்ந்த சத்ரபதி ஷாஹு மகாராஜா இதன் உற்பத்தியை ஊக்குவித்தார். மேலும் அவரின் ஆட்சியின் போது கோல்ஹாப்பூரில் 29 தோல் பதனிடும் மையங்களும் திறக்கப்பட்டன.



## பாலகோட் தாக்குதலின் சங்கேதப் பெயர்கள்

- பாலகோட் தாக்குதலானது இந்திய விமானப்படையால் "பந்தர் நடவடிக்கை" என சங்கேதப் பெயரிடப்பட்டுள்ளது.
- இந்திய இராணுவமானது அதன் உயர்ந்த செயல்பாட்டு எச்சரிக்கை மற்றும் எல்லைப் பகுதியின் பாதுகாப்பு நடவடிக்கைக்கு 'ஜாஃப்ரான் நடவடிக்கை' எனப் பெயரிட்டுள்ளது.
- இந்தியக் கடற்படையானது ஏற்கனவே செயல்பாட்டிற்குத் தயாராகும் ட்ரொபெக்ஸ்-2019 (Tropex-2019) பயிற்சியில் ஈடுபட்டிருந்ததால் அரபிக்கடலில் போர்க் கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்களை நிலை நிறுத்தியதற்கு எந்த குறிப்பிட்ட பெயரையும் இடவில்லை.

## விமானப் போக்குவரத்து மேலாண்மை

- மத்திய விமானப் போக்குவரத்து துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி விமானப் போக்குவரத்து பயண மேலாண்மை (ATFM - Air Traffic Flow Management) மத்திய கட்டுப்பாட்டு மையத்தை புது தில்லியில் தொடங்கி வைத்தார்.
- இது இந்தியாவில் உள்ள ஒவ்வொரு விமான நிலையத்திலும் விமானப் போக்குவரத்தின் ஒழுங்குபடுத்தப்பட்ட பயணத்தை உறுதி செய்கின்றது.
- மேலும் இது விமான நிலையங்கள், வான்வெளி மற்றும் பயண வழித் தடங்களில் நிலையான தகவல்களுடன் வானிலைத் தகவல்களையும் அளிக்கின்றது.
- ATFM-ஐ செயல்படுத்தும் அமெரிக்கா, ஐரோப்பா ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா, ஜப்பான் மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளைத் தொடர்ந்து இதனைச் செயல்படுத்தும் 7-வது நாடு இந்தியா ஆகும்.

## லிட்சி மற்றும் AES

- பீகாரின் முசாபர்பூர் மாவட்டத்தில் கொடிய மூளைச் செயலிழப்பு நோயின் (AES - Acute Encephalitis Syndrome) காரணமாக 100ற்கும் மேற்பட்ட குழந்தைகள் இறந்துள்ளன.
- குழந்தைகள் லிட்சிப் பழங்களைச் சாப்பிடுவதன் காரணமாக இந்த இறப்புகள்

ஏற்பட்டதாக முதலில் கருதப்பட்டது.

- ஆனால் தற்பொழுது லிட்சிப் பழங்கள் மற்றும் கொடிய மூளைச் செயலிழப்பு நோய் ஆகியவற்றிற்கிடையே எந்தவொரு தொடர்பும் இல்லை என்று முசாபர்பூரில் உள்ள தேசிய லிட்சி ஆராய்ச்சி மையத்தின் (NRCL - National Research Centre on Litchi) இயக்குநர் கூறியுள்ளார்.
- NRCL என்பது லிட்சிப் பழங்களின் மீதான ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் முதன்மை தேசிய நிறுவனமாகும்.

## கிரிஷி விக்யான் கேந்திரா


- இந்தியாவில் மாவட்ட அளவில் 713 கிரிஷி விக்யான் கேந்திராக்களை (KVKs - Krishi Vigyan Kendras) இந்திய அரசு அமைக்கவுள்ளது.
- இந்த கேந்திராக்கள் 2022 ஆம் ஆண்டில் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்காக விவசாயச் சமூகங்களிடையே தொழில் நுட்பங்களை பரவச் செய்யவிருக்கின்றது.
- KVK திட்டம் வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வித் துறையின் கீழ் செயல்படும் இந்திய வேளாண் ஆராய்ச்சி மன்றத்தினால் (மத்திய அரசினால்) 100 சதவிகிதம் நிதியளிக்கப்படுகின்றது.

## குடியரசுத் தலைவரின் மூன்றாவது பணியிட முன்மொழிவு

- வட கிழக்கு இந்தியாவில் குடியரசுத் தலைவரின் மூன்றாவது பணியிடத்தை அமைக்க வேண்டும் என மேகாலயாவின் முதல்வரான கான்ராட் K. சங்மா மத்திய அரசிடம் கோரிக்கை வைத்துள்ளார்.
- இந்தியாவின் சிம்லாவில் உள்ள பணியிடம் மற்றும் ஐதராபாத்தின் ராஷ்ட்ரபதி நிலையம் ஆகிய இரண்டும் குடியரசுத் தலைவருக்கு தற்பொழுது உள்ள துணைப் பணியிடங்களாகும்.
- ஒவ்வொரு ஆண்டும் கோடைக்காலத்தில் சிம்லாவிலும், குளிர்காலத்தில் ஐதராபாத்திலும் தலா இரண்டு வாரங்கள் தங்கி குடியரசுத் தலைவர் பணிபுரிவார்.

## வைஷ்ணவ தேவி ஆலயம்

- ஜம்மு காஷ்மீரில் உள்ள மாதா வைஷ்ணவ தேவி ஆலயம் 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பிரத்தியேகமாக ஆலயத்திற்குச் சொந்தமான பேரிடர் பதிலெதிர்ப்புப் படையைப் பெறவிருக்கின்றது.
- தேர்ந்தெடுக்கப்படும் ஆலயப் பணியாளர்கள் தேசியப் பேரிடர் மீட்புப் படையினால் பாதுகாப்பு மற்றும் மீட்புப் பணிகளில் 6 வார காலத்திற்குப் பயிற்சியளிக்கப்பட உள்ளனர்.
- இந்தப் புனித ஆலயம் ஜம்மு பகுதியின் ரியாசி மாவட்டத்தில் உள்ள திரிகுதா குன்றின் உச்சியில் அமைந்திருக்கின்றது.



## சிக்குன்குனியா தடுப்பு மருந்து

- சிக்குன்குனியா வைரஸ் தொற்று நோய்க்கு எதிராக நோய்த் தடுப்பு மருந்தினை வாழ்க்கை அறிவியல் நிறுவனம் (ILS - Institute of Life Sciences) வெற்றிகரமாக மேம்படுத்தியுள்ளது.
- சிக்குன்குனியா என்பது தொற்று ஏற்பட்ட (பாதிக்கப்பட்ட) கொசுக்கள், அதிலும் குறிப்பாக ஏடிஸ் ஏஜிப்தி மற்றும் எடிஸ் அல்போபிக்டஸ் ஆகியவற்றினால் மனிதர்களுக்குப் பரவும் ஒரு வைரஸ் நோயாகும்.
- சிக்குன்குனியா என்ற பெயரானது தான்சானியாவில் பேசக்கூடிய கிமகொண்டி மொழியில் உள்ள வினைச் சொல்லிலிருந்து உருவாகியது.
- இதன் பொருள் "திருகப்பட்டதாக மாறுதல்" என்பதாகும்.

***ILS***

- ILS ஆனது 1984 ஆம் ஆண்டில் ஒடிசாவில் உருவாக்கப்பட்டது.
- இது உயிரித் தொழில்நுட்பத் துறையின் கீழ் செயல்படும் வாழ்க்கை அறிவியலில் ஆராய்ச்சி மற்றும் கல்விக்கான உயர்கல்வியின் ஒரு தன்னிச்சையான நிறுவனமாகும்.

## மின் உற்பத்தி

- தேசிய மின்சாரப் பகிர்மான நிறுவனத்தை அமைப்பதற்காக என்டிபிசி மற்றும் இந்திய மின்சார அமைப்புக் கழகம் (Power Grid Corporation of India Limited - PGCIL) ஆகியவை ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
- PGCIL ஆனது இந்தியாவின் மிகப்பெரிய மின்சாரப் பரப்புகை அமைப்பினை நிர்வகிக்கின்றது.
- இந்தக் கூட்டுத் திட்டம் பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு மின்சாரத்தை வழங்கவிருக்கின்றது.

## DRDOவின் மருந்து

- பித்தோரகார்கில் உள்ள டிஆர்டிஓவின் தேசிய உயிரி ஆற்றல் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஹெர்பல் மருத்துவப் பிரிவின் தலைவரான ஹேமந்த் பாண்டே என்பவர் "லுகோஸ்கின்" என்ற ஒரு மூலிகை மருந்தை உருவாக்கியுள்ளார்.
- இவருடைய கண்டுபிடிப்பிற்காக இவருக்கு புகழ்பெற்ற "அறிவியல் விருது" வழங்கப்பட்டது.
- இந்த மூலிகை மருந்து தோலின் மீது வெள்ளைத் தழும்பு போன்ற ஒரு நிலையான லியுகோதெர்ம் என்பதற்குச் சிகிச்சையளிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.
- ஜுன் 25 ஆம் தேதி சர்வதேச முதுமை வெண்நோய் படல தினத்தைக் குறிக்கின்றது.

## ஸ்மார்ட் அட்டை ஓட்டுநர் உரிமம்

- நாடு தழுவிய ஸ்மார்ட் அட்டை ஓட்டுநர் உரிமம் குறித்து மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி மாநிலங்களவையில் தெரிவித்தார்.
- இது நாடு முழுவதிற்குமான ஓட்டுநர் உரிமத்தின் ஒரு பொது நிலையான வடிவம் மற்றும் அமைப்பு ஆகியவற்றை வகுத்துள்ளது.
- மேலும் இது தகவல்களின் இடம் மற்றும் எழுத்துகளின் வடிவம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.
- ஏற்கனவே இந்த அமைச்சகம் தனது சாரதி செயலியில் ஓட்டுநர் உரிமம் வைத்துள்ள அனைவரின் ஒரு நாடு தழுவிய பொதுத் தரவுத் தளத்தைக் கொண்டிருக்கின்றது.
- இது தேசியத் தகவல் மையத்தினால் (NIC - National Informatics Centre) வடிவமைக்கப்பட்டுள்ளது.

## ReCAAP

- கடற்களவு மற்றும் ஆயுதம் ஏந்திய கடற்கொள்ளை தொடர்பான பிரச்சினைகள் மீதான பயிலரங்கத்தை இந்தியக் கடலோரக் காவற்படை நடத்தியது.
- ஆசியாவில் உள்ள கப்பல்களுக்கு எதிராக கடற்களவு மற்றும் ஆயுதம் ஏந்திய கடற்கொள்ளையைத் தடுப்பது மீதான பிராந்திய ஒத்துழைப்பு ஒப்பந்தம் (ReCAAP - Regional Cooperation Agreement on Combating Piracy and Armed Robbery) மற்றும் தகவல் பகிர்மான மையம் (ISC - Information Sharing Centre) ஆகியவற்றுடன் கூட்டாக இணைந்து நடத்தப்பட்டது.




*குறிப்பு*

- ❖ இது ஆசியாவில் உள்ள கடற்பகுதியில் கடற்களவு மற்றும் ஆயுதம் ஏந்திய கடற்கொள்ளையைத் தடுப்பதற்காக உருவாக்கப்பட்ட முதலாவது பிராந்திய அரசாங்கங்களுக்கிடையேயான ஒப்பந்தமாகும்.
- ❖ இது 2006 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- ❖ இதன் தலைமையகம் சிங்கப்பூரில் உள்ளது.
- ❖ தற்பொழுது ReCAAP-ல் 20 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

## பழங்குடியினர் மீதான தாக்கங்கள்

- ❖ கடந்த ஐந்து ஆண்டுக் காலத்தில் இந்தியப் பழங்குடியினர் சமூகங்களின் மீதான அரசுத் திட்டங்களின் தாக்கம் குறித்த ஒரு அறிக்கையை இந்திய மானுடவியல் ஆய்வு நிறுவனம் (ASI - Anthropological Survey of India) சமர்ப்பித்துள்ளது.
- ❖ ASI ஆனது கொல்கத்தாவை தலைமையிடமாகக் கொண்டு 1945 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- ❖ இது மத்திய கலாச்சாரத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் உயிரி-கலாச்சார ஆய்வுகளின் மானுடவியல் ஆராய்ச்சிக்கான ஒரு முதன்மையான ஆராய்ச்சி அமைப்பாகும்.

## இந்தியப் பாலின விகிதம்


- ❖ பிறப்பின் போதான அனைத்து இந்தியப் பாலின விகிதம் 2015-16 ஆம் ஆண்டிலிருந்து 8 புள்ளிகள் அதிகரித்துள்ளன. 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை 1000 ஆண்களுக்கு 931 பெண் குழந்தைகளாக இந்த விகிதம் அதிகரித்துள்ளது.
- ❖ இந்த விகிதமானது 2015-16 கால கட்டத்தில் 923 பெண்களாகவும், 2016-17 கால கட்டத்தில் 926 பெண்களாகவும், 2017-18 காலகட்டத்தில் 929 பெண்களாகவும் இருந்தது.
- ❖ கேரளா மற்றும் சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்கள் 1000 ஆண்களுக்கு 959 பெண்களுடன் முதலிடத்தில் உள்ளன. இதற்கு அடுத்த இடங்களில் மிசோரம் (958) மற்றும் கோவா (954)

ஆகிய மாநிலங்கள் உள்ளன.

- இந்தப் பட்டியலின் கடைசி இடங்களில் டாமன் & டையூ (889) லட்சத் தீவுகள் (891) மற்றும் பஞ்சாப் (900) ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- பாலின விகிதம் என்பது 1000 ஆண்களின் எண்ணிக்கைக்கு எவ்வளவு பெண்கள் உள்ளனர் என்பதைக் குறிக்கின்றது.

## சுகாதாரக் குறியீடு

- நிதி ஆயோக் "சுகாதாரமான மாநிலங்கள், முன்னேறுகின்ற இந்தியா" என்ற அறிக்கையின் 2-வது பதிப்பை வெளியிட்டுள்ளது.




- இது 2015-16 (அடிப்படை ஆண்டு) மற்றும் 2017-18 (ஆதார ஆண்டு) ஆகிவற்றுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் 21 பெரிய மாநிலங்களைப் பகுப்பாய்வு செய்தது.
- இந்தத் தரவரிசை 3 பிரிவுகள் (பெரிய மாநிலங்கள், சிறிய மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள்) மற்றும் 10 கூறுகளுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இது சுகாதாரமுள்ள மாநிலமாக கேரளாவும் சுகாதாரமற்ற மாநிலமாக உத்தரப் பிரதேசமும் இருக்கின்றது என்று கூறுகின்றது.
- இதில் தமிழ்நாடு 9வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- கேரளாவில் பச்சிளங் குழந்தை இறப்பு விகிதமானது (Neo-natal mortality rate - NMR) உயிருடன் இருக்கும் 100 குழந்தைகளில் 6 குழந்தையாக இருக்கின்றது. ஒடிசாவில் இந்த விகிதம் 32 ஆக இருக்கின்றது.
- ஒட்டு மொத்த செயல்பாடுகளில் சிறிய மாநிலங்களின் வரிசையில் மிசோரம்

முதலிடத்திலும் மணிப்பூர் இரண்டாவது இடத்திலும் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.

❖ ஒட்டு மொத்த செயல்பாடுகளில் ஒன்றியப் பிரதேசங்களின் வரிசையில் சண்டிகர் மற்றும் தாத்ரா & நாகர் ஹவேலி ஆகியவை முன்னிலையில் உள்ளன.

## புதிய நியமனங்கள்

❖ 2019 ஆம் ஆண்டு ஜுன் 26 அன்று ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவின் (RAW - Research and Analysis Wing) புதிய தலைவராக மூத்த இந்தியக் காவற் பணி அதிகாரியான சமந்த் கோயல் என்பவரை மத்திய அரசு நியமித்துள்ளது.

❖ நுண்ணறிவு அமைப்பின் (IB - Intelligence Bureau) இயக்குனராக மூத்த இந்தியக் காவற்பணி அதிகாரியான அரவிந்த் குமார் என்பவரை மத்திய அரசு நியமித்துள்ளது.

❖ இவர்களது பெயர்கள் பிரதமர் தலைமையிலான நியமனங்களுக்கான அமைச்சரவைக் குழுவினால் இறுதி செய்யப்பட்டன. இந்த நியமனங்களுக்கான அமைச்சரவைக் குழுவில் உள்துறை அமைச்சரும் அடங்குவார்.

❖ மத்திய அரசு நிதி ஆயோக்கின் தலைமை நிர்வாக அதிகாரியான அமிதாப் காந்த் என்பவரின் பதவிக் காலத்தை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டித்துள்ளது.

## ஊட்டச்சத்து அறிக்கை

❖ ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்டம் மற்றும் மத்திய புள்ளியல் & திட்டச் செயல்படுத்துதல் துறை அமைச்சகம் ஆகிய இரண்டும் இணைந்து ஊட்டச்சத்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

❖ இது பட்டினியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான இரண்டாவது நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை அடைதலுக்கான நாட்டின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்தது.

❖ இது 5 வயதிற்கும் கீழுள்ள இந்தியக் குழந்தைகளில் 4 சதவிகிதக் குழந்தைகள் 2022 ஆம் ஆண்டில் வளர்ச்சி குன்றியவர்களாக இருப்பர் என்பதைக் கண்டறிந்துள்ளது.

❖ மொத்த மக்கள் தொகையில் 30 சதவிகித ஏழைகளிடையே ஆற்றலின் தனி நபர் நுகர்வானது சராசரியாக 1811 கிலோ கலோரிகளாக (பரிந்துரைக்கப்பட்டது - ஒரு நாளைக்கு 2155 கிலோ கலோரிகள்) உள்ளது.

## 5 நீதிபதிகள் – பொது நல வழக்குகள்

❖ பொது நல வழக்கு விவகாரங்களை இந்திய உச்ச நீதிமன்றத்தின் 5 நீதிபதிகள் விசாரிப்பார்கள் என்ற ஒரு புதிய பணிப் பட்டியலை இந்திய உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் அறிவித்துள்ளார்.

❖ இதற்கு முன்பு, புதிதாக தாக்கல் செய்யப்படும் பொது நல வழக்குகள் இந்தியத் தலைமை நீதிபதியினாலும், அவருக்கு அடுத்த இடத்தில் இருக்கும் மூத்த நீதிபதியினாலும் விசாரிக்கப்பட்டு வந்தன.




## இந்திய பிரமரின் ஜப்பான் பயணம்

- இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அவருடைய சக இணையான ஜப்பானியப் பிரதமர் ஷின்சோ அபேவுடன் விரிவான பேச்சுவார்த்தை நடத்தினார்.
- ஜப்பானின் ரேவா சகாப்தத் தொடக்கம் மற்றும் மோடி இரண்டாவது முறையாக பிரதமராகப் பதவியேற்பு ஆகியவற்றின் பிறகு இரு நாட்டுத் தலைவர்களுக்கிடையே நடைபெற்ற முதலாவது சந்திப்பு இதுவாகும்.
- அக்டோபரில் நடைபெறவிருக்கும் ஜப்பானியப் பேரரசர் நருஹிட்டோவின் முடிசூட்டு விழாவில் இந்தியக் குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் கலந்து கொள்வார் என்று பிரதமர் அறிவித்தார்.

## உள்ளூர்மொழிக்கான மொழிபெயர்ப்பு மீதான தேசியத் திட்டம்

- மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் உள்ளூர்மொழியில் மொழிபெயர்ப்பிற்கான ஒரு பரிந்துரையை மத்திய அமைச்சரவை முன்பு சமர்ப்பிக்க விருக்கின்றது.
- இது ஆங்கிலம் மற்றும் உள்ளூர் மொழி ஆகிய இரண்டிலும் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிக் கூறுகளை ஏற்படுத்துவதன் மூலம் அனைவரும் அறிவியல் தொழில்நுட்பத்தை அணுகும்படி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதை அடைவதற்காக இயந்திர மொழிபெயர்ப்பு மற்றும் மனிதர்கள் மூலம் மொழிபெயர்ப்பு ஆகியவற்றை கூட்டாக இணைத்துப் பயன்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.
- உள்ளூர் மொழிக்கான மொழிபெயர்ப்புத் தவிர, இந்த அமைப்பினால் கண்டறியப்பட்ட பிற திட்டங்கள் பின்வருமாறு:

- குவாண்டம் எல்லை
- செயற்கை நுண்ணறிவு
- தேசிய பல்லுயிர்ப் பெருக்கத் திட்டம்
- மின்சார வாகனங்கள்
- மனிதச் சுகாதாரத்திற்கான உயிரி – அறிவியல்
- ஆழ் கடல் ஆய்வு

**Going local**

The Ministry of Electronics and IT's Natural Language Translation mission aims to enable access to teaching and researching material in English and one's native language

| Language | Mother tongue of speakers (%) |
|---|---|
| Hindi and associated languages | 43.63 |
| Bengali | 8.03 |
| Marathi | 6.86 |
| Telugu | 6.7 |
| Tamil | 5.7 |
| Gujarati | 4.58 |
| Urdu | 4.19 |
| Kannada | 3.61 |




The proposed cost of the Natural Language Translation mission is ₹450 crore

SOURCE: CENSUS 2011

## ஜல் சக்தி அபியான்

- ஜூலை 01 ஆம் தேதியிலிருந்து தண்ணீர்ப் பற்றாக்குறை அதிகமுள்ள 255 மாவட்டங்களில் மழைநீர் சேகரிப்பு மற்றும் நீர்ப் பாதுகாப்பு முயற்சிகளை துரிதப்படுத்துவதற்காக ஜல் சக்தி அபியான் என்றப் பிரச்சாரத்தைத் தொடங்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- 2018 ஆம் ஆண்டில் அமல்படுத்தப்பட்ட கிராம சுவராஜ் அபியான் மாதிரியைப் பின்பற்றி இந்தப் பிரச்சாரம் தொடங்கப்பட இருக்கின்றது.
- இந்தப் பிரச்சாரம் ஜூலை 01 முதல் செப்டம்பர் 15 வரை தென்மேற்குப் பருவமழை பெறும் மாநிலங்களில் செயல்படுத்தப்பட விருக்கின்றது.
- பருவமழை திரும்புதல்/பின்வாங்குதல் அல்லது வட கிழக்குப் பருவமழையின் போது மழை பெறும் மாநிலங்களில் அக்டோபர் 01 முதல் நவம்பர் 30 வரை இப்பிரச்சாரம் செயல்படுத்தப்படும்.
- Indiawater.gov.in என்ற இணைய தளத்தில் உள்ள நிகழ்நேர கட்டுப்பாட்டகம் மற்றும் கைபேசி செயலிகளின் மூலம் நிகழ்நேரத்தில் இதன் செயல்பாடுகள் கண்காணிக்கப்பட விருக்கின்றன.




## காவல் நிலையங்களின் தரவரிசை - 2018

- 2018 ஆம் ஆண்டிற்கான காவல் நிலையங்களின் தரவரிசையை மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- இராஜஸ்தானின் பிகானிர் மாவட்டத்தில் உள்ள கலு காவல் நிலையம் நாட்டின் சிறந்த காவல் நிலையமாக தர வரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- இத்தரவரிசையில் அந்தமான் நிக்கோபாரில் உள்ள கேம்பெல் வளைகுடா காவல் நிலையம் இரண்டாவது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டின் தேனியில் உள்ள பெரியகுளம் காவல் நிலையம் 8-வது இடத்தில் உள்ளது.
- 2017 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் கோயம்புத்தூரில் உள்ள ஆர்எஸ் புரம் காவல் நிலையம் சிறந்த காவல் நிலையமாக தரவரிசைப்படுத்தப் பட்டிருந்தது. இதற்கு அடுத்த இடங்களில் ஹைதராபாத்தின் பஞ்சகுட்டா காவல் நிலையமும் லக்னோவின் குடம்பா காவல் நிலையமும் இருந்தன.

| State Name | District | Police Station Name | Final Rank | Part A Rank | Part B Rank |
|---|---|---|---|---|---|
| Rajasthan | Bikaner | Kalu | 1 | 1 | 1 |
| A&N Islands | Nicobar | Campbell Bay | 2 | 2 | 2 |
| West Bengal | Murshidabad | Farakka | 3 | 5 | 5 |
| Puducherry | Puducherry | Nettapakkam | 4 | 6 | 9 |
| Karnataka | Dharwad | Gudageri | 5 | 4 | 19 |
| Himachal Pradesh | Shimla | Chopal | 6 | 7 | 21 |
| Rajasthan | Bundi | Lakheri | 7 | 9 | 14 |
| Tamil Nadu | Theni | Periyakulam | 8 | 3 | 58 |
| Uttrakhand | Pithoragarh | Munsyari | 9 | 12 | 16 |
| Goa | South Goa | Curchorem | 10 | 8 | 26 |

## பெண் குழந்தைகளுக்கான தற்காப்புப் பயிற்சி

- இந்திய அரசு சமக்ரா சிக்சா என்ற திட்டத்தின் கீழ் பெண் குழந்தைகளுக்கான தற்காப்புப் பயிற்சியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- பெண் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து வருவதை நினைவில் கொண்டு பெண்களின் பாதுகாப்பை உறுதிபடுத்துவதற்காக இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- தற்காப்புப் பயிற்சியானது கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயாக்களிலும் அளிக்கப்படுகின்றது.
- மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகத்தின் கீழுள்ள நிர்பயா நிதியின் மூலம் இத்திட்டத்திற்காக மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கப்படும்.
- "சமக்ரா சிக்சா" என்பது பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறையினால் தொடங்கப்பட்ட பள்ளிக் கல்விக்கான ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட திட்டமாகும்.

## 20-வது ஆண்டு கார்கில் நினைவு தினம்

- கார்கில் போரின் 20-வது ஆண்டை அனுசரிப்பதற்காக குவாலியர் விமானப்படைத் தளத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளை இந்திய விமானப் படை (IAF – Indian Air Force) நடத்தியது.
- இது கார்கில் போரின் போது ஜம்மு காஷ்மீரின் கார்கில் பகுதியில் IAFன் புகழ்பெற்ற "டைகர் ஹில்" தாக்குதல் குறித்து விளக்கிக் காட்டியது.
- இந்தத் தாக்குதலில் இந்திய விமானப் படையின் மிராஜ் – 2000 என்ற விமானம் முக்கியப் பங்காற்றியது.
- கார்கில் போரின் போது இந்திய இராணுவத்தின் "விஜய் நடவடிக்கையின்" ஒரு பகுதியாக "சபேத் சாகர்" என்ற ஒரு நடவடிக்கையை IAF மேற்கொண்டது.

## அரிசி செறிவூட்டப்படல்

- மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகம் "அரிசி செறிவூட்டல்" மற்றும் பொது விநியோக முறையின் மூலம் அதனை விநியோகித்தல் என்பதன் மீதான ஒரு முன்னோடித் திட்டத்தைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது.
- செறிவூட்டல் என்பது ஊட்டச்சத்துக் குறைபாட்டை எதிர்த்துப் போராடுவதற்காக நிறைவை உண்டாக்குகின்ற ஒரு உத்தியாகும்.
- வழக்கமான அரைக்கப்பட்ட அரிசி வகைகளில் நுண் ஊட்டச்சத்துகள் குறைவாக உள்ளன. இது கார்போஹைட்ரேட்டின் ஆதாரமாக மட்டுமே விளங்குகின்றது.
- அரிசி செறிவூட்டல் என்பது ஊட்டச்சத்தை அதிகரிப்பதற்கான ஒரு முக்கியமான வாய்ப்பாகும்.
- இது வைட்டமின்-A, வைட்டமின்-B1, வைட்டமின்-B12, போலிக் அமிலம், இரும்பு மற்றும் ஜிங்க் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

## ஒரு தேசம் ஒரு அட்டை

- நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத்திற்கான மத்திய அமைச்சர் ராம் விலாஸ் பாஸ்வான் “ஒரு தேசம் ஒரு அட்டை” திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.
- இது நாடெங்கிலும் உள்ள பொது விநியோக முறையின் கீழ் இயங்கும் கடைகளை வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் (Migrants – இடப்பெயர்வாளர்கள்) அணுகுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நடவடிக்கையானது பயனாளிகள் கடை உரிமையாளர்களைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதையும் ஊழலைத் தடுப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## டிஜிட்டல் கிராமங்கள்

- பிரதான் மந்திரி கிராமின் டிஜிட்டல் சக்சார்த்த அபியான் திட்டத்தின் (PMGDISHA - Pradhan Mantri Gramin Digital Saksharta Abhiyan) கீழ் ஏறத்தாழ 2.22 கோடி கிராம மக்களுக்கு டிஜிட்டல் கல்வி வழங்கப்பட்டுள்ளதாக மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ரவி சங்கர் பிரசாத் அறிவித்துள்ளார்.
- மத்திய அரசு 636 பயிற்சியளிக்கும் பங்குதாரர்களைப் பதிவு செய்துள்ளது.
- கிராமப்புற மக்கள் 3.5 இலட்சம் பொதுச் சேவை மையங்களில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர்.
- இந்திய இரயில்வே, கிராமப்புற நிலையில் ஒளியியல் இழை அமைப்பை ஏற்படுத்தி, இத்திட்டத்தை மேலும் ஊக்கப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## காச நோய் ஒழிப்பு

- நாடெங்கிலும் காச நோய் ஒழிப்பு மற்றும் அதற்குச் சிகிச்சையளிப்பு ஆகியவற்றுக்கு உதவுவதற்காக உலக வங்கியுடன் 400 மில்லியன் டாலர் மதிப்பிலான கடன் ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது.
- இந்தத் திட்டம் 2025-ஆம் ஆண்டில் இந்தியாவில் காச நோய் ஒழிப்பிற்கான அரசின் தேசிய யுத்திசார் திட்டத்திற்கு உதவும்.
- இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் காச நோயினால் ஏறத்தாழ 5 இலட்சம் மக்கள் இறக்கின்றனர்.

## "பழங்குடியினரிடம் செல்க" பிரச்சாரம்

- அமேசான் குளோபல் மற்றும் இந்தியப் பழங்குடியினக் கூட்டுறவுச் சந்தையிடல் வளர்ச்சிக் கட்டமைப்பு (TRIFED - Tribal Cooperative Marketing Development Federation of India) ஆகியவற்றுடன் இணைந்து "பழங்குடியினரிடம் செல்க" என்ற ஒரு பிரச்சாரத்தை பழங்குடியின விவகாரங்களுக்கான மத்திய இணை அமைச்சர் ரேணுகா சிங் தொடங்கியுள்ளார்.
- இந்தக் கூட்டாண்மைப் பிரச்சாரமானது TRIFED மற்றும் 700ற்கும் மேற்பட்ட இந்தியப் பழங்குடியினர்களின் சமூகப் பொருளாதார நலன்களுக்கு உதவுதல், பழங்குடியினர்களின் கைத்தொழில்கள் மற்றும் கலைகளை ஊக்கப்படுத்துதல் மற்றும் அதைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்றவற்றை நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

### *TRIFED*

- 1987 ஆம் ஆண்டில் TRIFED உருவாக்கப்பட்டது.
- இது மத்தியப் பழங்குடியின விவகாரங்கள் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய அளவிலான ஒரு தலைமை அமைப்பாகும்.
- இது தில்லியைத் தலைமையிடமாகக் கொண்டு 13 பிராந்திய அலுவலகங்களைக் கொண்டுச் செயல்படுகின்றது.
- இது பழங்குடியினரால் காடுகளிலிருந்துப் பெறப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட பொருட்களுக்கு நியாயமான விலையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



# சர்வதேசச் செய்திகள்

## நாணய (கரன்சி) கண்காணிப்புப் பட்டியல்

- அமெரிக்காவின் டிரம்ப் நிர்வாகம், தனது முக்கியமான வர்த்தகப் பங்காளர்களின் நாணய (கரன்சி) கண்காணிப்புப் பட்டியலிலிருந்து இந்தியா மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளை நீக்கியுள்ளது.
- இந்தப் பட்டியலில் சீனா, ஜெர்மனி, ஜப்பான், தென் கொரியா ஆகிய நாடுகள் தொடர்ந்து நீடிக்கின்றன.
- இந்தப் பட்டியலில் இந்தியா 2018 ஆம் ஆண்டில் இணைக்கப்பட்டது.
- இதன் விளைவாக 2018 ஆம் ஆண்டில் இந்தியாவின் அந்நிய செலவாணி கொள்முதலின்

அளவு மற்றும் கொள்முதல் மேற்கொள்ளப்படும் காலம் ஆகியவை குறைந்திருந்தன.

## SCO-ன் இரண்டாவது வெகுஜன ஊடகக் கூட்டம்

- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO - Shanghai Cooperation Organization) இரண்டாவது வெகுஜன ஊடகக் கூட்டம் பிஷ்கெக்கில் (கிர்கிஸ்தானின் தலைநகரம்) நடத்தப்பட்டது.
- SCO உறுப்பு நாடுகளைச் சேர்ந்த வெகுஜன ஊடக அமைப்புகளுக்கிடையே கூட்டிணைவுகளை வெற்றிகரமாக ஏற்படுத்துவதற்கு வலியுறுத்தும் "ஊடகக் கூட்டத்தின் தீர்மானத்தை" அதன் உறுப்பு நாடுகள் ஏற்றுக் கொண்டன.
- இந்தியாவின் சார்பாக மத்திய தகவல் ஒளிபரப்புத் துறையிலிருந்து ஒரு பிரதிநிதி இந்த சர்வதேசக் கூட்டத்தில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றார்.

### *SCO மற்றும் SCO வெகுஜன ஊடகக் கூட்டம்*

- SCO என்பது யுரேசியாவின் அரசியல், பொருளாதார மற்றும் பாதுகாப்புக் கூட்டிணைவாகும்.
- இது 2001 ஆம் ஆண்டு ஜுன் 15 அன்று சீனாவின் ஷாங்காயில் தொடங்கப்பட்டது.
- இது சீனா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், ரஷ்யா, தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளினால் உருவாக்கப்பட்டது.
- தற்பொழுது இது 8 உறுப்பு நாடுகள் மற்றும் 4 பார்வையாளர் நாடுகளைக் கொண்டுள்ளது.
- 2018 ஆம் ஆண்டு ஜுன் 01 அன்று சீனாவின் பெய்ஜிங்கில் முதலாவது SCO ஊடக மாநாடு நடத்தப்பட்டது.
- இது SCO அமைப்பில் உள்ள உறுப்பு நாடுகளுக்கிடையே வெகுஜன ஊடகத் துறையில் பரிமாற்றம் மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



## "மாற்றத்திற்கான வணிக நிலை" குறித்த அறிக்கை

- சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு (International Labour Organization - ILO), தனது இரண்டாவது சர்வதேச அறிக்கையான, "வணிகம் மற்றும் மேலாண்மையில் பெண்கள்: மாற்றத்திற்கான வணிக நிலை" என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது ஆய்வு செய்யப்பட்ட நிறுவனங்களில் பாதிக்கும் மேலான நிறுவனங்களில் ஆரம்ப நிலையிலான மேலாண்மைப் பதவிகளில் 30 சதவிகித பெண்கள் மட்டுமே பணியில் உள்ளதைக் காட்டுகின்றது.
- ஆசிய மற்றும் பசிபிக் பகுதிகளில் மட்டும், பெண் தொழிலாளர் சக்தியின் பங்கெடுப்பின் சராசரி விகிதம் 1991 ஆம் ஆண்டில் 52.9 லிருந்து 2018 ஆம் ஆண்டில் 45.3 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. அதாவது 7.6 சதவிகிதம் புள்ளிகள் குறைந்துள்ளது.

## வரியில்லா இறக்குமதித் திட்டத்திற்கான தகுதி நீக்கம்

- மே 31 அன்று வளர்ந்து வரும் நாடுகளுக்கான வரியில்லா இறக்குமதித் திட்டத்திற்கான இந்தியாவின் தகுதி நிலையை அமெரிக்கா நீக்கியுள்ளது.
- அமெரிக்க வர்த்தக சட்டங்கள் தொடர்பானவற்றின் கீழ் அமெரிக்க நிறுவனங்களுக்கு "அதன் சந்தைகளுக்கு நியாயமான மற்றும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு அணுகலை வழங்கும்" என்ற உத்தரவாதத்தை இந்தியா அளிக்காததன் காரணமாக அமெரிக்கா இந்நடவடிக்கையை எடுத்துள்ளது.
- இதன்படி, 2019 ஆம் ஆண்டு ஜூன் 05 ஆம் தேதியன்று இந்தியாவிற்கான அதன் முன்னுரிமை வர்த்தக முறையை நீக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது.
- இந்த வரியில்லாத் திட்டத்தின் மிகப்பெரிய பயனாளி இந்தியா ஆகும். இத்திட்டத்தின் கீழ் வரியில்லாமல் 120 நாடுகளைச் சேர்ந்த சில இறக்குமதிப் பொருட்கள் அமெரிக்காவிற்குள் நுழைகின்றன.

## சிறப்புக் காஷ்மீர் தூதர்

- இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பானது (OIC - Organisation of Islamic Cooperation) சவுதி அரேபியாவைச் சேர்ந்த யூசெப் அல்டோபெக் என்பவரை ஜம்மு காஷ்மீருக்கான சிறப்புத் தூதராக அறிவித்துள்ளது.
- இதன் மூலம் இந்த அமைப்பானது காஷ்மீர் மீதான இந்தியா - பாகிஸ்தான் பிரச்சினையில் தலையிட்டு, தீர்வு காண்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சவுதி அரேபியாவின் மெக்காவில் நடைபெற்ற OIC உறுப்பு நாடுகளின் 14-வது இஸ்லாமிய சந்திப்பின் போது இந்த முடிவு எடுக்கப்பட்டது.
- இந்தியா இதற்கு கடும் எதிர்ப்பைப் பதிவு செய்துள்ளது.

### *OIC*

- OIC என்பது 1969 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஒரு சர்வதேச அமைப்பாகும்.
- இது 57 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது. இது சவுதி அரேபியாவின் ஜெட்டாவை தலைமையிடமாகக் கொண்டுள்ளது.
- இதன் நோக்கம் உலகெங்கிலும் உள்ள முஸ்லீம்களின் நல்வாழ்வு மற்றும் செயல்பாடுகளை உறுதி செய்வது மற்றும் அவர்களின் நலன்களைப் பாதுகாப்பதாகும்.

## G-20 அமைச்சரவை மட்டத்திலான சந்திப்பு

- வர்த்தகம் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் மீதான G-20 அமைச்சரவை மட்டத்திலான சந்திப்பு ஜப்பானிய நகரான சுகுபாவில் நடத்தப்பட்டது.
- G-20-ல், தனது முதலாவது சுழல் முறையிலான தலைவர் பதவியை ஜப்பான் ஏற்றது.
- G-20-ன் தற்போதைய தலைவர் சின்சோ அபே ஆவார்.
- இந்தச் சந்திப்பின் போது டிஜிட்டல் மயமாக்கத்தின் முக்கியத்துவம் குறித்தும் அனைவரையும் உள்ளடக்கிய, புத்தாக்கத் தன்மை மற்றும் மனிதனை மையமாகக் கொண்ட எதிர்கால சமுதாயமான "சமூகம் 5.0" ஆகியவற்றை அடைய அது எவ்வாறு உதவும் என்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

***G-20 பற்றி***

- G-20 (20 நாடுகள் கொண்ட ஒரு குழு) என்பது 19 நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றைச் சேர்ந்த அரசாங்கங்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்களுக்கான ஒரு சர்வதேச மன்றமாகும்.
- இது 1999 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- G-20 பொருளாதாரம் பின்வருவனவற்றைக் கொண்டிருக்கின்றது:
    - மொத்த உலக உற்பத்தியில் 90%
    - உலக வர்த்தகத்தில் 80 சதவிகிதம் (அல்லது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கிடையேயான வர்த்தகம், 75%)
    - உலக மக்கட்தொகையில் மூன்றில் இரண்டு மடங்கு
    - உலக நிலப்பரப்பில் ஏறத்தாழ பாதியளவு நிலப்பரப்பு




## கடலிலிருந்து ஏவு வாகனம் (ராக்கெட்)

- முதன்முறையாக சன்டோங் மாகாணத்தின் மஞ்சள் கடலில் உள்ள நகரக்கூடிய ஏவு தளத்திலிருந்து "லாங் மார்ச் 11" என்ற ஒரு ஏவு வாகனத்தை சீனா ஏவியுள்ளது.

- ஒரு மிதக்கும் தளத்திலிருந்து சுற்றுவட்டப் பாதைக்கு செயற்கைக் கோள்களை செலுத்தும் திறனை இதுவரை அமெரிக்கா மற்றும் இரஷ்யா ஆகிய நாடுகள் மட்டுமே வெற்றிகரமாக பரிசோதனை செய்துள்ளன.

## உலக மாற்றுத் திறனாளிகள் சந்திப்பு

- 2019 ஆம் ஆண்டு ஜுன் 06 முதல் ஜுன் 08 வரை அர்ஜென்டினாவின் பியூனஸ் அயர்ஸில் 2-வது உலக மாற்றுத் திறனாளிகள் சந்திப்பு (Global Disability Summit) நடத்தப்பட்டது.
- இந்தியாவின் சார்பாக மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்புத் துறை அமைச்சரான தாவர்சந்த் கெலாட் தலைமையிலான குழு பங்கேற்றிருக்கின்றது.
- இந்தச் சந்திப்பு மாற்றுத் திறனாளி நபர்கள் சுதந்திரமான மற்றும் கௌரவமான வாழ்க்கையை வாழ்வதற்கான வழிமுறையை உருவாக்க முயற்சிக்கின்றது.

## தேசிய நலன்

- தேசிய நலனுக்கான திட்டமுறை 2031 என்ற ஒன்றை ஐக்கிய அரபு அமீரக அமைச்சரவை ஏற்றுக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டம் அதிக அளவிலான முக்கியமான குறிக்கோள்கள் மற்றும் முன்னெடுப்புகள் ஆகியவற்றின் மூலம் வாழ்க்கைத் தரத்தில் உலகத் தலைமை நாடாக, அந்த நாட்டை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஐக்கிய அரபு அமீரகத்தின் துணை அதிபர், பிரதமர் மற்றும் துபாய் ஆட்சியாளரான ஷேக் முகமது பின் ரசீத் அல் மக்டோம் என்பவர் அபுதாபியில் இத்திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

## மெக்சிகோ சர்வதேச புத்தகக் கண்காட்சி

- மெக்சிகோவில் நடைபெற்ற 33வது கௌதலஜாரா சர்வதேச புத்தகக் கண்காட்சியில் “சிறப்பு விருந்தினர் நாடாக” இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- இந்தப் புத்தகக் கண்காட்சியில் இந்தியக் காட்சிக் கூடம் 35 இந்திய எழுத்தாளர்கள், கலைஞர்கள், நாட்டின் பண்டையக் கால வரலாறு மற்றும் கலாச்சாரப் பாரம்பரியம் ஆகியவற்றைக் காட்சிப்படுத்த விருக்கின்றது.

### *இந்தக் கண்காட்சியைப் பற்றி*

- கௌதலஜாரா சர்வதேச புத்தகக் கண்காட்சி என்பது அமெரிக்காவின் மிகப்பெரிய புத்தகக் கண்காட்சியாகும்.
- பிராங்பர்ட் புத்தகக் கண்காட்சிக்குப் பின்பு உலகின் இரண்டாவது மிகப்பெரிய புத்தகக் கண்காட்சி இதுவாகும்.
- இது 1987 ஆம் ஆண்டில் கௌதலஜரா பல்கலைக் கழகத்தினால் தொடங்கப்பட்டது.
- 1993 ஆம் ஆண்டில் அதன் முதலாவது சிறப்பு விருந்தினர் நாடு கொலம்பியா ஆகும்.

## CICA

- தஜிகிஸ்தானின் துசான்பேயில் நடைபெற்ற ஆசியாவிற்கான கலந்துரையாடல் மற்றும் நம்பிக்கைக் கட்டமைப்பு நடவடிக்கைகள் (CICA - Conference on Interaction and Confidence Building Measures in Asia) என்ற கருத்தரங்கின் 5-வது பதிப்பில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் S. ஜெய்சங்கர் கலந்து கொண்டார்.
- இந்த மாநாட்டின் கருத்துரு, "பாதுகாப்பான மற்றும் மிக வளமான CICA பிராந்தியத்திற்கான ஒரு பங்கிடப்பட்ட தொலைநோக்குப் பார்வை" என்பதாகும்.

### *CICA*

- CICA என்பது ஆசியாவில் அமைதி, பாதுகாப்பு மற்றும் நிலைப்புத் தன்மை ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக பல நாடுகள் கொண்ட ஒரு மன்றமாகும்.
- குறைந்த பட்சம் எந்த ஒரு நாடும் அதன் ஒரு பகுதியை ஆசியாவில் கொண்டிருந்தால் CICA-ல் உறுப்பினர் நாடாக ஆவதற்கு அது தகுதியுடையதாகும்.
- இது 1999 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இதன் தலைமையகம் கஜகஸ்தானின் நூர் சுல்தானில் உள்ளது.
- இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டதிலிருந்து இந்தியா இதில் உறுப்பு நாடாக உள்ளது.

## SCO சந்திப்பு

- கிர்கிஸ்தானின் தலைநகரான பிஷ்கெக்கில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (SCO - Shanghai Cooperation Organisation) மாநாட்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொண்டார்.
- தேர்தலுக்குப் பிறகு பிரதமராகப் பதவியேற்ற பின்பு இவருடைய முதலாவது பன்னாட்டுப் பங்கெடுப்பு இதுவாகும்.
- அவர் SCO-ன் பிராந்தியத் தீவிரவாத எதிர்ப்பு அமைப்பின் கீழ் (Regional Anti-Terrorist Structure - RATS) சர்வதேசத் தீவிரவாதத்திற்கு எதிராக ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உறுப்பு நாடுகளைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### *SCO*

- SCO என்பது அரசாங்கங்களுக்கிடையேயான ஒரு நிரந்தர சர்வதேச அமைப்பாகும்.
- இது ஒரு யுரேசியாவின் அரசியல், பொருளாதார மற்றும் பாதுகாப்புக் கூட்டிணைவாகும்.
- இது 2001 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இதற்கு முன்பு ஷாங்காய் 5 என்ற அமைப்பாக இது செயல்பட்டது.
- SCO-ன் முதன்மையான முடிவெடுக்கும் அமைப்பு உறுப்பு நாடுகளின் தலைவர்களைக் கொண்ட குழுவாகும்.
- இது 8 நிரந்தர உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது.




- SCO-ல் பார்வையாளர் நாடுகளாக ஆப்கானிஸ்தான், பெலாரஸ், ஈரான் மற்றும் மங்கோலியா ஆகிய நாடுகள் உள்ளன.

## கிம்பர்லி செயல்முறை

- 2019 ஆம் ஆண்டு ஜுன் 17 முதல் ஜுன் 21 வரை கிம்பர்லி செயல்முறையின் கூட்டத் தொடர் சந்திப்பானது இந்தியாவினால் மும்பையில் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.
- கிம்பர்லி செயல்முறை என்பது ஒழுங்கற்ற வைரங்களின் வர்த்தகங்களை ஒழுங்குபடுத்தும் ஒரு சர்வதேச சான்றளிப்புத் திட்டமாகும். இது பிரச்சினையை ஏற்படுத்தும் அல்லது வன்முறையைத் தூண்டும் வைரங்களின் வர்த்தகத்தைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டு ஜனவரி 01 முதல் கிம்பர்லி செயல்முறை சான்றளிப்புத் திட்டத்தின் (KPCS - Kimberley Process Certification Scheme) தலைவராக இந்தியா உள்ளது.
- வன்முறைக்கான அல்லது இரத்த வைரங்கள் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களை வீழ்த்துவதற்காகவும் கிளர்ச்சியாளர்களுக்கு நிதியுதவி அளிப்பதற்காகவும் ஆப்பிரிக்காவில் ஆயுதமேந்திய கிளர்ச்சியாளர்களால் பயன்படுத்தப்படும் ஒழுங்கற்ற வைரங்களாகும்.

## முகநூல் மெய்நிகர் நாணயம்

- 2020 ஆம் ஆண்டில் "லிப்ரா" என்ற ஒரு மெய்நிகர் நாணயத்தை வெளியிட முகநூல் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இது மின்னணு வணிகம் மற்றும் சர்வதேசப் பண வழங்கீடுகளிலும் ஈடுபட முடிவு செய்துள்ளது.
- தனது புதிய டிஜிட்டல் நாணயத்தை நிர்வகிக்கவிருக்கும் ஜெனீவாவில் உள்ள லிப்ரா மன்றம் என்ற நிறுவனத்துடன் 28 பங்காளர்களை இது இணைத்துள்ளது.
- முகநூல் நிறுவனம் லிப்ராக்களைச் சேமிக்க, செலுத்த மற்றும் செலவிட வேண்டி டிஜிட்டல் பணப்பைகளை அளிக்கவிருக்கும் காலிப்ரா என்ற ஒரு துணை நிலை அமைப்பை உருவாக்கியிருக்கின்றது.
- முகநூலின் தகவலின் படி, ரோமன் எடை அளவீடுகள், நீதிக்கான ஜோதிட அடையாளம் மற்றும் சுதந்திரத்திற்கான பிரெஞ்சு வார்த்தை ஆகியவற்றினால் ஈர்க்கப்பட்டு "லிப்ரா" என்று அதற்குப் பெயரிடப்பட்டுள்ளது.

## அனைவருக்குமான துப்புரவு

- “குடிநீர், துப்புரவு மற்றும் உடல் நல இயல் : 2000 – 2017 : பாகுபாடுகள் மீதான சிறப்புக் கவனம்” என்ற ஒரு அறிக்கை சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- இது ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம் (UNICEF - United Nations Children’s Fund) மற்றும் உலக சுகாதார அமைப்பு (WHO - World Health Organization) ஆகியவற்றினால் வெளியிடப்பட்டது.

### *முக்கிய அம்சங்கள்*

- உலகம் முழுவதும் 2.2 பில்லியன் மக்கள் பாதுகாப்பான குடிநீர் கிடைக்காமல் உள்ளனர்.
- 4.2 பில்லியன் மக்கள் சுகாதாரச் சேவைகளைப் பெற முடியாமலும் 3 பில்லியன் மக்கள் அடிப்படையான கைகழுவும் வசதிகளைப் பெறாமலும் உள்ளனர்.
- உலகெங்கிலும் உள்ள 650 மில்லியன் மக்கள் 2000 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கிடையேத் திறந்தவெளிக் கழிப்பிட முறையை நிறுத்தியுள்ளனர். இதில் மூன்றில் இரண்டு பங்கினர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
- ஆனால் 44 சதவிகித இந்தியக் குடும்பங்கள் மட்டுமே குழாய் மூலமான குடிநீரைப் பெறுகின்றன.

## சிப்ரி ஆண்டறிக்கை 2019

- 2019 ஆம் ஆண்டில் சிப்ரி ஆண்டறிக்கையின் சிறப்பம்சங்களை ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் (Stockholm International Peace Research Institute - SIPRI) வெளியிட்டுள்ளது.
- இது போர்க் கருவிகள், ஆயுதக் குறைப்பு மற்றும் சர்வதேசப் பாதுகாப்பு ஆகியவற்றை மதிப்பிடுகின்றது.
- 2019 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அமெரிக்கா, இரஷ்யா, ஐக்கிய இராஜ்ஜியம், பிரான்ஸ், சீனா, இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல் மற்றும் வட கொரியா ஆகிய நாடுகள் 13,865 அணு ஆயுதங்களைக் கொண்டிருந்தன.
- இந்த அறிக்கையானது இந்தியா 2018 ஆம் ஆண்டில் கொண்டிருந்ததைப் போலவே 2019 ஆம் ஆண்டிலும் 130-140 இதர போர்க்கருவிகளைக் கொண்டிருக்கின்றது என்று கூறுகின்றது.

**World nuclear forces, January 2019**

| Country | Deployed warheads* | Other warheads** | Total 2019 | Total 2018 |
|---|---|---|---|---|
| USA | 1 750 | 4 435 | 6 185 | 6 450 |
| Russia | 1 600 | 4 900 | 6 500 | 6 850 |
| UK | 120 | 80 | 200 | 215 |
| France | 280 | 20 | 300 | 300 |
| China | | 290 | 290 | 280 |
| India | | 130–140 | 130–140 | 130–140 |
| Pakistan | | 150–160 | 150–160 | 140–150 |
| Israel | | 80-90 | 80–90 | 80 |
| North Korea | .. | .. | (20–30) | (10–20) |
| Total | 3 750 | 10 115 | 13 865 | 14 465 |

*Source: SIPRI Yearbook 2019*

## பல்கலைக்கழக தரவரிசை

- சமீபத்திய QS உலக பல்கலைக்கழக தரவரிசைகளின் பட்டியலில் அமெரிக்காவில் உள்ள மாசாசுசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம் முதலிடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- இந்தியப் பல்கலைக் கழகங்களின் தரவரிசைப் பட்டியலில் மும்பையில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் முதலிடத்தில் உள்ளது.
- இந்தப் பட்டியலில் முதல் 500 இடங்களில் 9 இந்தியப் பல்கலைக் கழகங்கள் உள்ளன.
- பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனம், ஐந்தாண்டு காலத்தில் 1,00,000க்கும் மேற்பட்ட முறை அதன் ஆராய்ச்சி மேற்கோள் காட்டப்பட்ட முதல் இந்திய நிறுவனம் ஆகும்.

| UNIVERSITY | INDIA RANKING | | | WORLD RANKING | | |
|---|---|---|---|---|---|---|
| | 2020 | 2019 | Change | 2020 | 2019 | Change |
| IIT Bombay | 1 | 1 | — | 152 | 162 | ▲ |
| IIT Delhi | 2 | 3 | ▲ | 182 | 172 | ▼ |
| IISc Bangalore | 3 | 2 | ▼ | 184 | 170 | ▼ |
| IIT Madras | 4 | 4 | — | 271 | 264 | ▼ |
| IIT Kharagpur | 5 | 6 | ▲ | 281 | 295 | ▲ |
| IIT Kanpur | 6 | 5 | ▼ | 291 | 283 | ▼ |
| IIT Roorkee | 7 | 7 | | 383 | 381 | ▼ |
| Univ of Delhi | 8 | 9 | ▲ | 474 | 487 | ▲ |
| IIT Guwahati | 9 | 8 | ▼ | 491 | 472 | ▼ |

## ஹாங்காங் போராட்டம்

- ஹாங்காங்கிலிருந்து சீனாவிற்கு நாடு கடத்துவதற்கு அனுமதிக்கும் ஒரு பரிந்துரைக்கப்பட்ட மசோதாவை ஹாங்காங் தலைவரான கேரி லாம் காலவரையறையின்றி ஒத்தி வைத்துள்ளார்.




- பரிந்துரைக்கப்பட்ட நாடு கடத்துதல் மசோதாவானது ஹாங்காங் நாட்டுடன் நாடு கடத்துதல் ஒப்பந்தம் செய்யப்படாத பகுதிகளுக்கு குற்றவாளிகளை நாடு கடத்துவதற்காக ஹாங்காங் அரசை அனுமதிக்கின்றது.
- ஹாங்காங்கில் சீனாவின் ஆதிக்கத்தை இந்த மசோதா அதிகரிக்கும் என்று சிவில் சமூக

அமைப்புகள் மற்றும் ஹாங்காங்கின் மக்களாட்சிக்கு ஆதரவளிக்கும் ஆர்வலர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

- 1997 ஆம் ஆண்டு ஹாங்காங் பிரிட்டிஷ் நாட்டினால் சீனாவிற்கு வழங்கப்பட்ட போது, பிரிட்டிஷ் சட்டத்தின்படி, ஹாங்காங் முழுவதும் துணைநிலை தன்னாட்சிப் பகுதி கொண்ட நகரமாக தொடரும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.
- சீனா மற்றும் ஹாங்காங் ஆகியவற்றிற்கிடையே தற்பொழுதுள்ள "ஒரு தேசம் இரண்டு நிர்வாகம்" என்ற மாதிரியை இச்சட்டம் சிதைக்கவிருக்கின்றது.

## குத்தி மசோதா

- நேபாள அரசின் சர்ச்சைக்குரிய "குத்தி மசோதாவை" (Guthi Bill) நீக்கக் கோரியும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் ஆயிரக்கணக்கான மக்கள் போராட்டம் நடத்தினர்.
- குத்திகள் என்பவை பாரம்பரிய சமூகப் பொருளாதார அறக்கட்டளை நிறுவனங்களாகும்.
- இவை சாகுபடி செய்யப்பட்ட அல்லது குத்தகைக்கு விடப்பட்ட நில உடைமைகளின் வருமானத்தைப் பயன்படுத்தி சமயம், பொதுச் சேவை அல்லது சமூகப் பணிகளை செய்கின்றன.
- நேபாள அரசானது இவற்றைத் தேசிய மயமாக்க திட்டமிட்டுள்ளது.
- இந்த நடவடிக்கையானது நேபாளத்தின் பல நூற்றாண்டுகள் பழமையான கலாச்சாரம் மற்றும் மரபுகளுக்கு அச்சுறுத்தலாகவும் நில ஆக்கிரமப்பாளர்களுக்கு ஆதரவாகவும் இருக்கும் என மக்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

## சவுதி அரேபியா

- நிதியியல் நடவடிக்கைப் பணிக் குழுவில் (FATF - Financial Action Task Force) முழு உறுப்பினர் அங்கீகாரம் வழங்கப்பட்ட முதலாவது அரேபிய நாடு சவுதி அரேபியா ஆகும்.
- 2015 ஆம் ஆண்டில் சவுதி அரேபியா இந்தக் குழுவில் பார்வையாளர் அங்கீகாரத்தைப் பெற்றது.

### *FATF*

- FATF என்பது நிதி மோசடி எதிர்ப்பு மற்றும் தீவிரவாதத்திற்கு நிதி அளித்தலைத் தடுப்பதற்காக தரங்களை நிர்ணயிக்கும் ஒரு சர்வதேச அமைப்பாகும்.
- இது 1989 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இதன் தலைமையகம் பிரான்சு தலைநகர் பாரீஸில் உள்ளது.
- இது 37 உறுப்பு நாடுகள் மற்றும் வளைகுடா ஒத்துழைப்பு ஆணையம் மற்றும் ஐரோப்பிய ஆணையம் ஆகிய 2 பிராந்திய அமைப்புகளைக் கொண்டுள்ளது.

## ஆள் கடத்தல்

- அமெரிக்க அரசுத் துறையானது சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு 2019 ஆம் ஆண்டிற்கான "ஆள் கடத்தல்" மீதான தனது அறிக்கையை வெளியிட்டுள்ளது.

- நாட்டின் கடத்தல் அளவுகோலில் "நிலை 2" என்ற இடத்தில் இந்தியா தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- "பாலிர்மோ நடைமுறை" என்பது ஆள்கடத்தலை, குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள் கடத்தலைத் தடுப்பது, முறியடிப்பது மற்றும் குற்றவாளிகளை தண்டிக்கும் நோக்கம் கொண்ட ஒரு சர்வதேச அமைப்பாகும்.
- இது ஐக்கிய நாடுகளினால் 2000 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

## சுற்றுலாப் பயணிகளுக்கான இலவச நுழைவு இசைவு

- ஐக்கிய அரபு அமீகரகமானது பெற்றோர்களுடன் அந்நாட்டிற்குச் சுற்றுலா வரும் 18 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு நுழைவு இசைவுச் சீட்டிற்கான கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது என அறிவித்துள்ளது.
- இந்த கட்டணத் தள்ளுபடியானது ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதம் 15 ஆம் தேதி முதல் செப்டம்பர் 15 வரையிலான காலகட்டத்தில் அமீரகத்திற்குப் பயணிக்கும் 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு மட்டுமே பொருந்தும்.
- இந்த விதிவிலக்கானது முதன்முதலில் அந்நாட்டு அமைச்சரவையால் கடந்த ஆண்டு செப்டம்பரில் அறிவிக்கப்பட்டது.
- இந்த ஆண்டு இது முதன்முறையாக செயல்படுத்தப்படவிருக்கிறது.


## கான் குவெஸ்ட் 2019 – வருடாந்திர இராணுவப் பயிற்சி

- வருடந்தோறும் நடைபெறும் பன்னாட்டு அமைதிப்படை இராணுவப் பயிற்சியான கான் குவெஸ்ட் 2019 ஆனது மங்கோலியாவில் தொடங்கியது.
- இது மங்கோலியா, சீனா, ஜெர்மனி மற்றும் இந்தியா உள்ளிட்ட 38 நாடுகளின் பங்களிப்பைக் கொண்டுள்ளது.
- பெனின், ஸாம்பியா, மால்டோவா, ருவாண்டா, டோகோ, இஸ்ரேல் மற்றும் ஜோர்டான் ஆகிய ஏழு நாடுகளின் அமைதிப் படையானது முதன்முறையாக இப்பயிற்சியில் பங்கேற்கின்றன.

## அமெரிக்க பசுமைக் கட்டிட குழுவின் பட்டியல்

- அமெரிக்க பசுமைக் கட்டிடக் குழுவானது இந்தியாவில் அதிகபட்ச LEED (Leadership in Energy and Environmental Design-ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் வடிவமைப்பில் தலைமை) சான்றிதழ் பெற்ற பசுமைக் கட்டிடங்களைக் கொண்ட முதல் 10 மாநிலங்களைப் பட்டியலிட்டுள்ளது.
- இதன் இரண்டாம் பதிப்பு அறிக்கையின்படி மகாராஷ்டிரா முதலிடத்தையும் அதனைத் தொடர்ந்து கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களும் உள்ளன.
- LEED என்பது நீடித்த தன்மையுடன் கீழ்க்காணும் சிறப்பியல்புகளைக் கொண்ட கட்டிடங்களின் சர்வதேச அடையாளமாகும்.
    - குறைந்த அளவு கார்பன் உமிழ்வு
    - வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் செலவுகளைக் குறைத்தல்

- நீடித்த வளங்களுக்கான நடைமுறைகளுக்கு முன்னுரிமை அளித்தல்
- ஆரோக்கியமான சூழலை உருவாக்குதல்.




## நேரு மையம்

- இந்தியக் கலாச்சார உறவுகள் ஆணையத்தின் (ICCR - Indian Council for Cultural Relations) கீழ் செயல்படும் இலண்டனின் நேரு மையத்தின் புதிய இயக்குநராக புகழ்பெற்ற எழுத்தாளரான அமிஷ் திரிபாதி நியமிக்கப்பட்டுள்ளார்.
- இவர் “நாகர்களின் இரகசியம்” மற்றும் “சீதா – மிதிலாவின் மாவீரன்” போன்ற புகழ்பெற்ற புத்தகங்களை எழுதியுள்ளார்.
- நேரு மையம் என்பது ஐக்கிய இராஜ்ஜியத்தின் இலண்டனின் தெற்கு அட்லே தெருவில் அமைந்துள்ள ஒரு கலாச்சார மையமாகும்.
- இது இந்தியா மற்றும் ஐக்கிய இராஜ்ஜியத்திற்கிடையே கலாச்சாரப் பரிமாற்றத்தை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் 1992 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.

## மவுரித்தானியா தேர்தல்

- வடமேற்கு ஆப்பிரிக்க நாடான மவுரித்தானியாவில் முதன்முறையாக தேர்தல்கள் நடத்தப்பட்டன.
- இது 1960 ஆம் ஆண்டில் பிரான்சிடமிருந்து சுதந்திரம் பெற்றது.
- ஆனால் இது இராணுவ சர்வாதிகாரிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்படாத அரசாங்கங்களால் ஆளப்பட்டது.
- முகமது அவுல்டு கசோவ்னி என்பவர் அந்நாட்டின் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## வங்கதேச இரும்புத் தாது

- வங்க தேசத்தில் முதன்முறையாக தினஜ்பூரின் இசாப்பூர் கிராமத்தில் இரும்புத் தாது சுரங்கம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- இந்தச் சுரங்கத்தில் 65 சதவிகிதம் இரும்பு உள்ளது. இது தாதுவின் உயர் தரத்தைக் குறிக்கின்றது.

- கனடா, சீனா, பிரேசில், ஸ்வீடன் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய பெரும்பாலான நாடுகளில் இரும்பானது 50 சதவிகிதத்திற்கும் கீழ் உள்ளது.
- சுரங்கப் பணியானது வங்க தேசத்திற்கு புதிய வருவாயைக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## ரஷ்யாவிற்கான வாக்களிக்கும் உரிமை

- ஐரோப்பிய ஆணையத்தின் நாடாளுமன்ற சபையானது இரஷ்யாவின் வாக்களிக்கும் உரிமையை மீண்டும் பெற்றுத் தருவதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளது.
- ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு கிரீமியா தீபகற்பத்தை 2014 ஆம் ஆண்டில் இரஷ்யா சட்டவிரோதமாக தன்னுடன் இணைத்தது. இதன் பிறகு இரஷ்யாவின் வாக்களிக்கும் உரிமை பறிக்கப்பட்டது.
- ஐரோப்பிய ஆணையமானது பிரான்சில் உள்ள ஸ்ட்ராஸ்பெர்க்கினைத் தலைமையிடமாகக் கொண்டு 1949 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- இது ஐரோப்பியாவின் மனித உரிமைகள், மக்களாட்சி மற்றும் சட்டப்படியான ஆட்சி ஆகியவை குறித்து விவாதிக்கின்றது.

## பண மோசடி

- கோமல் (goAML) அமைப்பை அறிமுகப்படுத்திய வளைகுடாவின் முதலாவது நாடு ஐக்கிய அரபு அமீரகமாகும்.
- கோமல் அமைப்பானது போதைப் பொருள் மற்றும் குற்றங்கள் மீதான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தினால் முறைப்படுத்தப்பட்ட குற்றங்களைத் தடுப்பதற்காக உருவாக்கப்பட்டது.
- இது பண மோசடி மற்றும் தீவிரவாதத்திற்கு நிதி அளித்தல் ஆகியவற்றைத் தடுப்பதற்காக உறுப்பு நாடுகளின் நிதியியல் நுண்ணறிவுப் பிரிவுகளுக்கு அளிக்கப்படுகின்றது.

goAML
Anti-Money Laundering System

## ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் தற்காலிக உறுப்பினர்

- ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் (UN Security Council - UNSC) தற்காலிக உறுப்பினராவதற்கு ஐக்கிய நாடுகளில் 55 உறுப்பினர்களைக் கொண்ட ஆசிய – பசிபிக் குழுவில் உள்ள அனைத்து நாடுகளின் ஒருமித்த ஆதரவையும் இந்தியா பெற்றுள்ளது.
- இந்தியா 2021-22 ஆம் ஆண்டிலிருந்து 2 ஆண்டு காலம் இப்பதவியை வகிக்கும்.
- 1950-51 ஆம் ஆண்டிலிருந்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் தற்காலிக உறுப்பினர்

நாடாக ஏற்கெனவே இந்தியா 7 முறை பதவி வகித்துள்ளது.

- ஒவ்வொரு ஆண்டும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை மொத்தமுள்ள உறுப்பினர்களில் 5 தற்காலிக உறுப்பு நாடுகளை 2 ஆண்டு காலத்திற்குத் தேர்ந்தெடுக்கின்றது.
- சபையின் முடிவுகளை அதன் உறுப்பு நாடுகள் கண்டிப்பாக செயல்படுத்த வேண்டும் என்ற முறையில் உள்ள ஒரே ஐக்கிய நாடுகள் அமைப்பு இதுவேயாகும்.

### நீர்மூழ்கிக் கப்பலிலிருந்துச் செலுத்தப்படும் ஏவுகணை JL-3

- நீர்மூழ்கிக் கப்பலிலிருந்துச் செலுத்தப்படும் புதிய கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையைப் பரிசோதனை செய்துள்ளதை சீனாவின் பாதுகாப்புத் துறை அமைச்சகம் உறுதி செய்துள்ளது.
- இது போகாய் கடலிலிருந்துச் செலுத்தப்பட்டது. இது மேற்கு சீனாவில் பல ஆயிரம் மைல்கள் பறந்து அதன் இலக்கை அடைந்தது.
- இது நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து செலுத்தப்பட்டு அமெரிக்காவில் உள்ள எந்தவொரு பகுதியையும் தாக்கும் திறன் கொண்ட ஒரு யுத்திசார் ஏவுகணை என்று அமெரிக்காவினால் இது கருதப்படுகின்றது.
- JL-3 என்ற குறியீட்டுப் பெயர் கொண்ட இது சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் மிகவும் இரகசியமான இராணுவத் திட்டங்களில் ஒன்றாகும்.

## பொருளாதாரச் செய்திகள்

### இரண்டாம் நிலை சந்தை

- இந்திய ரிசர்வ் வங்கியானது கனரா வங்கியின் தலைவரான TM மனோகரின் கீழ் ஒரு பணிக் குழுவை உருவாக்கியுள்ளது.
- இது பெருநிறுவனக் கடன்களுக்குத் தேவையான "இரண்டாம் நிலைச் சந்தையின்" வளர்ச்சிக்குத் தேவையான கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறை தலையீடுகள் ஆகியவற்றைக் குறித்துப் பரிந்துரைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
- இந்தியாவில் இரண்டாம் நிலை கடன் சந்தையானது சொத்துகள் மறுகட்டமைப்பு நிறுவனங்களுக்கு விற்பனைக்கான பகுதியில் மட்டுமே மேற்கொள்ளப்படும்.
- இதை விரிவுபடுத்த எந்தவொரு முறைப்படுத்தப்பட்ட நடைமுறையும் மேம்படுத்தப்படவில்லை.

### சர்வதேச தொழில்முனைவு மாநாடு

- சர்வதேச தொழில்முனைவு மாநாட்டின் (Global Entrepreneurship Summit - GES) 9-வது பதிப்பு நெதர்லாந்தின் ஹேக்கில் நடத்தப்பட்டது.
- இது ஐரோப்பிய ஒன்றியத்தில் முதன்முறையாக நடத்தப்பட்டது. 2019 ஆம் ஆண்டின் GES ஆனது நெதர்லாந்து மற்றும் அமெரிக்காவினால் கூட்டாக இணைந்து ஒருங்கிணைக்கப்பட்டது.

- 2019 ஆம் ஆண்டில் GES-ல் விவசாயம், நீர், ஆற்றல், ஆரோக்கியம் மற்றும் இணைப்பு ஆகிய பகுதிகளில் 33 இந்திய நிறுவனங்கள் பங்கு பெற்றிருக்கின்றன.

## முக்கியப் பொருளாதார குறியீடுகள்

- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விகிதமானது 2017-2018 ஆம் நிதியாண்டில் இருந்த 7.2 சதவீதத்திலிருந்து 2018-19 ஆம் நிதியாண்டில் 6.8 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- வேளாண்மை மற்றும் உற்பத்தித் துறைகளின் மோசமான செயல்திறன்களே இதற்குக் காரணமாகக் கருதப்படுகிறது.
- 2014-15 ஆம் ஆண்டிற்குப் பிறகு மிகக் குறைந்த வளர்ச்சி விகிதம் இதுவேயாகும்.
- மேலும் மத்தியப் புள்ளியல் துறை அலுவலகமானது வேலையின்மை விகிதத் தரவையும் வெளியிட்டுள்ளது.
- இதன்படி வேலையின்மை விகிதமானது கடந்த 45 ஆண்டுகளில் அதிகபட்ச அளவான 6.1 சதவிகிதத்தை எட்டியுள்ளது.
- பொதுக் கணக்குக் கட்டுப்பாட்டாளர் வெளியிட்டுள்ள தரவின் படி நிதிப் பற்றாக்குறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.39 சதவீதமாக (6.45 லட்சம் கோடி) உள்ளது

## PMI குறியீடு

- நிக்கேய் இந்தியாவின் உற்பத்தியாளர் கொள்முதல் மேலாளர் குறியீடானது ஏப்ரல் மாதத்தில் 51.8 ஆக அதிகரித்துள்ளது.
- PMI ஆனது கடந்த 22 மாதங்களாக தொடர்ந்து 50 புள்ளிகளுக்கும் அதிகமாகவே உள்ளது.
- 50க்கும் அதிகமாக உயர்ந்துள்ள இந்த புள்ளியானது PMI குறியீட்டில் உற்பத்தித் துறையின் விரிவாக்கத்தைக் குறிக்கின்றது.

## பணக் கொள்கை மறுசீராய்வு

- இந்திய ரிசர்வ் வங்கியால் தனது மாதம் இருமுறை செய்யப்படும் பணக் கொள்கை மறுசீராய்வில் ரெப்போ விகித அளவை தற்போதுள்ள 6 சதவீதத்திலிருந்து 25 அடிப்படைப் புள்ளிகள் குறைத்து 5.75 சதவிகிதமாக உடனடியாக அமல்படுத்தியுள்ளது.
- இது இவ்வருடத்தில் RBI-ன் மூன்றாவது வட்டிக் குறைப்பு ஆகும்.
- மேலும் 2010 ஆம் ஆண்டிலிருந்து இதுவே மிகக் குறைவான ரெப்போ விகிதம் ஆகும்.

## வாராக் கடன்கள் மீதான தீர்மானம்

- இந்திய ரிசர்வ் வங்கி வாராக் கடன்கள் மீதான தீர்விற்காக ஒரு புதிய விவேகமான கட்டமைப்பு ஒன்றை அளித்து இருக்கின்றது.

- அதன் முந்தைய "வாராக் கடன்கள் மீதான தீர்விற்காக திருத்தப்பட்ட கட்டமைப்பை" உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்திருந்தது.
- இந்தப் புதியக் கட்டமைப்பு கடன் வழங்குபவர்களுக்கு கடன் கட்டத் தவறியவர்கள் மீதான கணக்கை சீராய்வு செய்ய 30 நாட்கள் கால அவகாசம் அளிக்கின்றது.
- வங்கிகள் கடன்களைக் கட்டத் தவறியதன் முதல் தவணையிலிருந்து 180 நாட்களுக்கு உள்ளாக ஒரு தீர்வுத் திட்டம் ஒன்றை ஏற்படுத்திட வேண்டும்.
- இந்தப் புதிய அறிக்கை அனைத்து சிறு நிதியியல் வங்கிகளுக்கும் அமைப்பு ரீதியில் முக்கியத்துவம் பெற்ற வைப்பு நிதிகள் பெறாத வங்கி சாராத நிதியியல் நிறுவனங்களுக்கும், வைப்பு நிதிகள் பெறுகின்ற நிதியியல் நிறுவனங்களுக்கும் பொருந்தும்.

## நிதியியல் செயல்திறன் குறியீடு

- இந்திய தொழில்துறை கூட்டமைப்பானது (Confederation of Indian Industry - CII) மத்திய மற்றும் மாநில அரசின் வரவு செலவுத் திட்டங்களை மதிப்பீடு செய்ய ஒரு நிதியியல் செயல்திறன் குறியீட்டை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தக் குறியீடானது வருவாய் செலவுகள், மூலதனச் செலவுகள், வருவாய்கள், நிதியியல் நுட்பம் மற்றும் பொதுக் கடனின் அளவு ஆகியவற்றின் தர மதிப்பீடுகளை உள்ளடக்கியது.
- இந்த அறிக்கையின்படி குறைந்த வருமானம் உடைய மாநிலங்களின் நிதி செயல்திறனானது அதிக வருமானமுடைய மாநிலங்களை விட சிறப்பாக உள்ளது.

## வரித் தகவல் பரிமாற்றம்

- 2019 ஆம் ஆண்டு மே 21 அன்று மார்ஷல் தீவுடன் வரிப் பரிமாற்ற ஒப்பந்தம் (TIEA - tax information exchange agreement) ஒன்றில் ஈடுபட்டுள்ளதாக இந்தியா அறிவிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.
- இது வரி தொடர்பான விவகாரங்கள் மீதான தகவல் பரிமாற்றத்திற்காக ஒரு சிறந்த கட்டமைப்பை அளிக்கின்றது. இது வரி ஏய்ப்பு மற்றும் வரித் தவிர்ப்பு ஆகியவற்றைத் தடுக்க உதவும்.
- மார்ஷல் தீவுகள் ஹவாய் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்குகிடையே, பசுபிக் கடலில் உள்ள எரிமலைத் தீவுகள் மற்றும் பவளத் தீவுகளின் சங்கிலித் தொடராகும்.

## உலக முதலீட்டு அறிக்கை

- 2019 ஆம் ஆண்டின் உலக முதலீட்டு அறிக்கை வணிக மற்றும் வளர்ச்சி மீதான ஐக்கிய நாடுகள் கருத்தரங்கினால் (UNCTAD - United Nation Conference on Trade and Development) வெளியிடப்பட்டுள்ளது.
- இது 2018 ஆம் ஆண்டில் இந்தியாவிற்குள் நுழைந்த அந்நிய நேரடி முதலீடானது (FDI - Foreign Direct Investment) 6 சதவிகிதம் அதிகரித்து 42 பில்லியன் அமெரிக்க டாலராக வளர்ந்துள்ளது என்று கூறுகின்றது.
- 2017-18 ஆம் ஆண்டுகளில் FDI பெற்றதற்கான முன்னிலையில் உள்ள 20 பெரும் பொருளாதாரங்களிடையே இந்தியா தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளது.

- உற்பத்தி, தொலைத் தொடர்பு மற்றும் நிதியியல் சேவை ஆகிய துறைகள் இவற்றில் முன்னிலை வகிக்கின்றன.

***UNCTAD***

- 195 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ள இந்த அமைப்பு 1964 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- இதன் முக்கியப் பணி வளர்ந்து வரும் நாடுகளின் வர்த்தகம், முதலீடு மற்றும் வளர்ச்சி வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்வதாகும்.
- மேலும் இது உலகப் பொருளாதாரத்தில் வளரும் நாடுகள் ஒருங்கிணைவதற்காக அந்த நாடுகளின் முயற்சிகளுக்கு உதவுகின்றன.

## அரசுத் தொழிலாளர் காப்பீடு

- அரசுத் தொழிலாளர் காப்பீட்டு (Employees State Insurance - ESI) சட்டத்தின் கீழ், தனது பங்களிப்பை 6.5 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாக அரசு குறைத்துள்ளது.
- பணியளிப்பவர்களின் பங்களிப்பு 4.75 சதவிகிதத்திலிருந்து 3.25 சதவிகிதமாகக் குறைக்கப்படுகின்றது.
- தொழிலாளர்களின் பங்களிப்பு 1.75 சதவிகிதத்திலிருந்து 0.75 சதவிகிதமாகக் குறைக்கப்படுகின்றது.
- இது 3.6 கோடி தொழிலாளர்களுக்கும் 12.85 இலட்சம் பணியளிப்பவர்களுக்கும் பயன்படவிருக்கின்றது.
- இந்தக் குறைக்கப்பட்ட பங்களிப்பு விகிதமானது ESI திட்டத்தின்கீழ் அதிகப் பணியாளர்களையும் முறைசார் துறையில் அதிக தொழிலாளர்களையும் கொண்டு வரவிருக்கின்றது.

***ESI***

- 1948 ஆம் ஆண்டின் ESI சட்டமானது காப்பீடு செய்யப்பட்ட நபர்களுக்கு மருத்துவம், நிதி, மகப்பேறு, மாற்றுத் திறன் மற்றும் பிறரைச் சார்ந்துள்ளவர்கள் ஆகியோர்களுக்குப் பயன்களை அளிக்கின்றது.
- மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் மூலம் இந்திய அரசு ESI சட்டத்தின் கீழ் பங்களிப்பு விகிதத்தை நிர்ணயிக்கின்றது.

## IBBI

- தலைமைப் பொருளாதார ஆலோசகர் கிருஷ்ணமூர்த்தி சுப்பிரமணியன் மற்றும் ஐடிபிஐ வங்கியின் முன்னாள் மேலாண் இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியான B. ஸ்ரீராம் ஆகியோர் இந்திய நொடித்தல் மற்றும் திவால் நிலை வாரியத்தின் (IBBI - Insolvency and Bankruptcy Board of India) பகுதி நேர உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
- IBBI என்பது 2016 ஆம் ஆண்டு அக்டோபர் 01 அன்று உருவாக்கப்பட்ட ஒரு நொடித்தல் ஒழுங்குமுறை ஆணையமாகும்.
- இதற்கு 2016 ஆம் ஆண்டின் நொடித்தல் மற்றும் திவால் நிலைச் சட்டத்தின் மூலம் சட்டப்பூர்வ அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- IBC (Insolvency and Bankruptcy Code) ஆனது தனிநபர்கள், நிறுவனங்கள், பங்காளர் நிறுவனங்கள் மற்றும் குறைவாக பொறுப்புள்ள பங்காளர் நிறுவனங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. இது பின்வரும் 2 தீர்ப்பாயங்களைப் பயன்படுத்தி வழக்குகளைக் கையாளுகின்றது.
    - தேசிய நிறுவனச் சட்டத் தீப்பாயம் (National company law tribunal - NCLT)
    - கடன் மீட்புத் தீர்ப்பாயம் (Debt recovery tribunal - DRT).

## வர்த்தகப் போர்

- இந்திய வர்த்தகத் துறை அமைச்சகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, தற்பொழுது அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கிடையே நடைபெற்றுக் கொண்டிருக்கும் வர்த்தகப் போரானது ஏறத்தாழ 350 பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான ஒரு வாய்ப்பினை இந்தியாவிற்கு வழங்குகின்றது.
- தாமிரத் தாதுக்கள், இரப்பர், காகிதம், காகித அட்டை, கம்பி வலையமைப்பில் குரல்/தகவல்களைப் பரிமாற்றுவதற்கான உபகரணங்கள், ஒத்திசைவிகள் மற்றும் குழாய்கள் ஆகிய இந்தியப் பொருட்கள் சீன சந்தையில் முக்கிய இடம் பிடிக்கக் கூடியதாகும்.
- தொழிற்துறைத் தடுப்பான்கள், கடினமாக்கப்பட்ட இரப்பர், கார்பன் அல்லது கிராபைட் மின்வாய்கள் மற்றும் இயற்கைத் தேன் ஆகிய இந்தியப் பொருட்கள் அமெரிக்கச் சந்தையில் ஏற்றுமதி வாய்ப்புகளைப் பெறவிருக்கின்றன.

## பெப்ஸ் (BEPS) திட்டம்

- வரி ஏய்ப்புக் கண்காணிப்பு மீதான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சி அமைப்பின் (OECD - Organisation for Economic Co-operation and Development) திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக அடிப்படைத் தேய்மானம் மற்றும் இலாப செயல் மாற்ற ஒப்பந்தம் (BEPS - Base Erosion and Profit Shifting) என்ற ஒரு பன்னாட்டு ஒப்பந்தத்தை இந்தியா உறுதி செய்திருக்கின்றது.
- பன்னாட்டு நிறுவனங்கள் ஒரு பிராந்தியத்தில் இலாபங்களை ஈட்டுகின்றன.
- ஆனால் இந்நிறுவனங்கள் குறைந்த அல்லது வரி விதிக்காத இடங்களுக்கு அவற்றை மாற்றுகின்றன.
- இவை இறுதியாக சுழிய அளவிற்கு அல்லது மிகக் குறைந்த அளவிற்குப் பெருநிறுவன வரிகளை செலுத்துகின்றன.
- BEPS என்பதன் நோக்கம் இது போன்ற நடவடிக்கைகளைத் தடுப்பதாகும்.

## பெண் தொழிலாளர் சக்தி

- தேசிய மாதிரி ஆய்வு அலுவலகத்தினால் (NSSO) வெளியிடப்பட்ட தொடர் தொழிலாளர் சக்தி ஆய்வுத் தகவலானது (Periodic Labour Force Survey - PLFS) 2017-18 ஆம் ஆண்டில் இந்தியாவில் பெண் தொழிலாளர் சக்தி குறைந்துள்ளது என்று கூறியுள்ளது.

- இந்தியாவில் பெண் தொழிலாளர் சக்தி பங்கேற்பு விகிதம் (Labour Force Participation Rate - LFPR) இந்தியாவில் 15 வயதிற்கும் மேல் உள்ள பெண்களில் 4 நபர்களில் 3 நபர்கள் பணியாற்றாமலும் வேலை தேடாமலும் உள்ளனர் என்று கூறுகின்றது.
- பீகார் மாநிலம் மிகக் குறைந்த பெண் தொழிலாளர் சக்தி பங்கேற்பு விகிதத்தைக் கொண்டுள்ளது. ஆனால் இதில் இந்தியாவின் தென் மற்றும் கிழக்கு மாநிலங்கள் சிறப்பாக செயலாற்றியுள்ளன.
- சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின்படி (International Labour Organization - ILO) 2018 ஆம் ஆண்டின் ஏப்ரல் மற்றும் ஜூலை மாத காலகட்டத்தில் பணியில் உள்ள இந்தியப் பெண்கள் ஒரு வாரத்திற்கு சராசரியாக 44.4 மணி நேரங்கள் பணியாற்றுகின்றனர் என்று கணித்துள்ளது.
- வளர்ந்து வரும் நாடுகளின் சராசரி விகிதமான ஒரு வாரத்திற்கு 35-36 மணி நேர அளவிற்கு பெண்கள் பணியாற்றுகின்றனர் என்பதினை விட இது அதிகமாகும்.

## சிறு வணிகர்கள் அந்நியச் செலாவணி

- இந்திய ரிசர்வ் வங்கி சில்லறை வணிகர்களுக்காக ஒரு அந்தியச் செலாவணி வர்த்தகத் தளம் அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளது.
- சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் தனிநபர்கள் ஆகியோர் இதன் மூலம் பயன்பெறுவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
- இந்தத் தளம் இந்திய தீர்வு வழங்கு நிறுவனத்தினால் மேம்படுத்தப்படுகின்றது.
- வர்த்தகம் செய்யப்படக்கூடிய குறைந்தபட்சத் தொகை 1000 டாலர்கள். இவை 500 டாலர்கள் என்ற மடங்கு விகிதத்தில் வழங்கப்படுகின்றன.

## இந்திய சர்வதேச பிரம்மாண்ட வணிகக் கண்காட்சி

- இந்திய சர்வதேச பிரம்மாண்ட வணிகக் கண்காட்சியின் இரண்டாம் பதிப்பு கொல்கத்தாவின் பிதான்நகரில் (அல்லது சால்ட் லேக்) ஜுன் 15 அன்று தொடங்கப்பட்டது.
- 10 நாட்கள் நடைபெறும் இக்கண்காட்சியானது ஜுன் 23 வரை நடைபெறும்.
- இக்கண்காட்சியானது முதன்முதலில் 1994 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- இதன் தொடக்கத்திலிருந்து, இது நாடு முழுவதும் உள்ள வணிகச் சமூகத்திற்கு ஒரு முக்கிய நிகழ்வாக உருவாகியுள்ளது.

## இந்தியாவில் மொத்த உள்நாட்டு உற்பத்திக் கணக்கீடு

- இந்தியப் பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழு, “இந்தியாவில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP - gross domestic product) மதிப்பீடு: முன்னோக்குகள் மற்றும் தகவல்கள்” என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மேம்படுத்தப்பட்ட GDP மதிப்பீட்டு முறைக்கு இந்தியா மாறியதற்கான தெளிவான காரணத்தை இது அளிக்கின்றது.

- இந்தப் புதிய முறை பின்வரும் 2 முக்கியமான மேம்பாடுகளுடன் 2011-12 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகப் பயன்படுத்துகின்றது.
  - MCA21 தரவுத் தளத்தினை இணைத்தல்
  - தேசிய கணக்கு அமைப்புகள், 2008-ன் பரிந்துரைகளை இணைத்தல்.

## FSDC

- நிதியியல் நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் (FSDC - Financial Stability and Development Council) 20-வது சந்திப்பானது மத்திய நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்களுக்கான அமைச்சரான நிர்மலா சீதாராமன் தலைமையில் நடைபெற்றது.
- 2010 ஆம் ஆண்டில் FSDC உருவாக்கப்பட்டது.
- நிதியியல் நிலைப்புத் தன்மையைப் பராமரித்து, அவற்றை வலுப்படுத்துதல் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கிடையே அதன் ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல் ஆகியவை இதன் நோக்கங்களாகும்.
- FSDC-ன் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| RBI Governor | IBBI Chairman | Finance Secretary |
| SEBI Chairman | Chief Economic Adviser | Secretary, Corporate Affairs |
| IRDA Chairman | Secretary, DEITY | Secretary, Financial Services |
| PFRDA Chairman | Revenue Secretary | Minister of State of Dept. of Economic Affairs |

## IGST திரும்பப் பெறுதல்

- மத்திய மறைமுக மற்றும் சுங்க வரிகளுக்கான வாரியமானது IGST பணத்தைத் திரும்பப் பெறுவதில் மோசடிகள் மற்றும் இழப்புகளைத் தவிர்க்க மனிதர்களால் சோதனை செய்வதை அறிமுகப்படுத்தியுள்ளது.
- அனைவரும் சரியான நேரத்தில் முழுவதும் தானியங்கி முறையில் IGST பணத்தை திரும்பப் பெறலாம் என அரசு அனைத்து ஏற்றுமதியாளர்களுக்கும் உறுதியளித்துள்ளது.
- IGST ஆனது மாநிலங்களுக்கிடையிலான பொருட்களின் பரிமாற்றத்தின் மீது விதிக்கப்படுகின்றன.
- இது மத்திய மற்றும் மாநில அரசுகளிடையே பகிர்ந்து கொள்ளப்படுகின்றது.

## வங்கிகளின் வாராக் கடன்

- வங்கித் துறையில் வாராக் கடன்கள் (NPA - non-performing assets) குறித்த அறிக்கையை

இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ளது.

- NPA அறிக்கையானது இந்திய ரிசர்வ் வங்கியினால், அதன் நிதியியல் நிலைப்புத் தன்மை அறிக்கைகளின் ஒரு பகுதியாக வெளியிடப்பட்டது.
- 31-03-2019 தேதியின்படி, பொதுத் துறை வங்கிகளில் மொத்த NPA-க்களின் மொத்த மதிப்பு ரூ. 8,06,412 கோடியாகும்.
- பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளின் வாராக் கடன்களின் மதிப்பு ரூ. 9,49,279 கோடியாகும்.

## UK சின்ஹா குழு

- சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை (MSME - Micro, Small and Medium Enterprises) குறித்து ஆராய்வதற்காக 8 உறுப்பினர்கள் கொண்ட ஒரு வல்லுநர் குழுவை இந்திய ரிசர்வ் வங்கி அமைத்துள்ளது.
- இது இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (SEBI - Securities and Exchange Board of India) தலைவரான UK சின்ஹாவால் தலைமை தாங்கப்படுகின்றது.
- இக்குழு MSME துறையில் போதுமான மற்றும் குறித்த காலத்திற்குள் அளிக்கப்படுகின்ற நிதியைப் பாதிக்கும் காரணிகள் குறித்து ஆராய்கின்றது.
- இது MSME துறைக்கு ரூ. 5,000 கோடி நிதியை அளிக்கப் பரிந்துரைத்துள்ளது.

CREDIT FLOW TO MSME SECTOR (AMOUNT IN ₹ CRORE)

| Year ended | Banks | NBFCs |
|---|---|---|
| March 2014 | 10,39,930 | 8,576 |
| March 2015 | 11,71,026 | 28,648 |
| March 2016 | 12,16,007 | 88,013 |
| March 2017 | 12,96,398 | 111,310 |
| March 2018 | 13,24,239 | 144,140 |
| March 2019* | 15,77,566 | 162,217 |

## இந்திய ரிசர்வ் வங்கியின் அமைப்பு

- இந்திய ரிசர்வ் வங்கி ஒரு “புகார் மேலாண்மை அமைப்பைத்” தொடங்கியுள்ளது.
- இது அதன் இணைய தளத்தில் பொது மக்கள் தங்களுடைய புகார்களை பதிவு செய்ய அனுமதிக்கின்றது.
- வணிக வங்கிகள், நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் வங்கி சாரா நிதியியல் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு எதிராகப் புகார்களை அளிக்க முடியும்.
- இந்த அமைப்பை மேசைக் கணினி மற்றும் கைபேசிச் சாதனங்கள் ஆகியவற்றின் மூலம் அணுக முடியும்.

## பணவழங்கீட்டுத் தகவல் பாதுகாப்பு

- இந்தியாவில் மட்டுமே அமைந்துள்ள அமைப்புகளில் ஒரு முழுமையான பணவழங்கீடுகள் குறித்த தகவல்களைச் சேமிக்குமாறு பணவழங்கீட்டு அமைப்பு நிறுவனங்களுக்கு மத்திய ரிசர்வ் வங்கி அறிவுறுத்தியுள்ளது.
- இந்தப் பணவழங்கீட்டுத் தகவல்களானது பெயர், கைபேசி எண், ஆதார் எண், ஒற்றைப் பயன்பாட்டுக் கடவுச் சொல், பயனாளர் குறியீடு ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.
- பணவழங்கீடுகள் வெளிநாட்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தால், வெளிநாட்டு அமைப்புகளில் உள்ள தகவல்களை அழிக்க வேண்டும். இத்தகவல்களை ஒரு வேலை நாள் அல்லது 24 மணி நேரத்திற்குள் இந்தியாவிற்கு திரும்பக் கொண்டு வர வேண்டும்.

## ரமேஷ் சந்த் பணிக் குழு

- மொத்த விலைக் குறியீட்டின் (அடிப்படை ஆண்டு 2011-2012) தற்போதைய நிலையைத் திருத்தியமைப்பதற்காக ஒரு பணிக் குழுவை அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- இக்குழு நிதி ஆயோக்கின் உறுப்பினரான ரமேஷ் சந்த் என்பவரால் தலைமை தாங்கப்படவிருக்கின்றது.
- 2011-12 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்ட தற்போதைய மொத்த விலைக் குறியீடு 2017 ஆம் ஆண்டு மே மாதத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.




## அருணா சுந்தரராஜன் குழு

- தொலைத் தொடர்புத் துறையை உயிர்ப்பூட்டுவதற்காக அருணா சுந்தரராஜன் தலைமையிலான ஒரு குழுவை மத்திய தொலைத்தொடர்புத் துறை அமைச்சகம் அமைத்துள்ளது.
- இந்தக் குழு அலைவரிசை பயன்பாட்டுக் கட்டணம் உள்ளிட்ட அனைத்து விதமான கட்டணங்கள் மற்றும் தொலைத்தொடர்புத் துறையில் தொழில் செய்வதற்கு உகந்த நிலை ஆகியவை குறித்து ஆய்வு செய்யும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ககன்யான்

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (Indian Space Research Organisation - ISRO) ககன்யான் திட்டத்திற்கான வீரர்களைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் அவர்களுக்குப் பயிற்சியளித்தல் ஆகியவற்றிற்காக இந்திய விமானப் படையுடன் (IAF - Indian Air Force) புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்தத் திட்டம் 2022 ஆம் ஆண்டில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
- IAFன் இந்திய விண்வெளி மருத்துவ நிறுவனம் (IAM - Institute of Aerospace Medicine) விண்வெளி வீரர்களின் தேர்வு மற்றும் வீரர்களுக்கானப் பயிற்சி ஆகியவற்றை மேற்கொள்ளும்.
- இது ககன்யான் திட்டத்திற்கான பயிற்சிக்காக மூன்று விண்வெளி வீரர்களைக் கொண்ட 3 குழுக்களை (9 உறுப்பினர்கள்) தேர்ந்தெடுக்கவிருக்கின்றது.
- 2019 ஆம் ஆண்டு ஜனவரி 30 அன்று, ISRO தனது தலைமையகமான பெங்களுரூவில் மனித விண்வெளி மையத்தை அமைத்துள்ளது.
- இது எதிர்காலத் தொழில்நுட்பங்களுக்குப் பரிசோதனைகள் மற்றும் செயல்முறைகளை மேற்கொள்வதற்காக இந்தியாவிற்கு என்று விண்வெளியின் ஒரு தனித்துவ நுண் ஈர்ப்பு அமைப்பை அளிக்கின்றது.

## ஒதுக்கப்பட்ட கோள் - NGTS 4b

- நெப்ட்டியூனியன் பாலைவனத்தில், அதன் வளிமண்டலத்தில் ஒரு ஒழுங்கற்ற வடிவிலான வெளிக்கோள் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு உள்ளதாக வானியலாளர்கள் கூறியுள்ளனர்.
- “ஒதுக்கப்பட்ட கோள்” என்ற குறியீட்டுப் பெயர் கொண்ட NGTS-4b ஆனது நெப்டியூனை விடச் சிறியது ஆகும். ஆனால் இது புவியின் அளவை விட மூன்று மடங்கு பெரியதாகும்.
- மேலும் இது ஒரு ஆண்டில் சூரியனைச் சுற்றி வரும் புவியின் சுற்றுப் பாதைக்கு சமமானதாகும்.
- நெப்டியூனியன் பாலைவனத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இதே வகையிலான முதலாவது வெளிக்கோள் இதுவாகும்.
- நெப்டியூனியன் பாலைவனம் என்பது நெப்டியூன் அளவிலான கோள்கள் காணப்படாதப் பகுதியில் நட்சத்திரங்களுக்கு அருகில் அமைந்த ஒரு பகுதியாகும்.


## நிலவில் நூலகம் – பேர்ஷீட்

- உலகின் முதல் நிலவில் அமைந்துள்ள நூலகமானது 30 மில்லியன் பக்கங்களைக் கொண்டுள்ளது.
- இது இஸ்ரேல் நாட்டிலிருந்து அனுப்பட்டு நிலவில் மோதி தரையிறங்கிய பேர்ஷீட் விண்கலத்திலிருந்து ஏப்ரல் 12 அன்று பறக்கவிடப்பட்டது.

- இது 5 மில்லியன் ஆண்டுகளுக்கு அங்கு இருக்கும்.

## மரபணு மாற்றம்

- ஹெச்ஐவி கிருமியிலிருந்து ஏற்படும் தொற்றிலிருந்து குழந்தைகளின் பாதுகாப்பை ஏற்படுத்தும் முயற்சியில் சீன ஆராய்ச்சியாளர் டாக்டர் ஹூ ஒரு குறிப்பிட்ட மரபணுவை மாற்றம் செய்திட மருத்துவ ரீதியில் சோதிக்கப்படாத ஒரு மரபணு மாற்றம் செய்யும் கருவியை (CRISPR- Cas9) பயன்படுத்தியுள்ளார்.
- இவர் இரட்டைப் பெண் கருவில் CCR5 என்றழைக்கப்படும் ஒரு மரபணுவை மாற்றம் செய்து அதை செயலிழக்கச் செய்தார்.
- CCR5 மரபணுவானது செல்களில் ஹெச்ஐவி கிருமியை உள்ளே புகுத்திடவும் செல்களைத் தாக்கிடவும் அனுமதிக்கும் ஒரு புரதத்தினைக் குறியிடுகின்றது.
- செயல்பாட்டிலிருக்கும் ஒரு CCR5 மரபணு இல்லாத குழந்தைகள் ஹெச்ஐவி கிருமியின் தொற்றிற்கு எதிர்ப்பு உடையவர்களாகத் திகழ்வர்.
- இந்த முயற்சியைப் பற்றி நீதி நெறிமுறை பற்றிய கருத்துகள் எழுப்பப்பட்டன.
- அதனால் சீன அரசு மரபணு மாற்றத் தொழில்நுட்பத்தில் கடுமையான விதிமுறைகளைப் புகுத்தியிருக்கின்றது.



## சைபீரிய ஓநாய்


- பற்கள் மற்றும் ரோமங்களுடன் பாதுகாக்கப்பட்ட 40,000 ஆண்டுகள் பழமையான துண்டிக்கப்பட்ட ஓநாய் தலை ஒன்று கிழக்கு சைபீரியாவில் கண்டுபிடிக்கப்பட்டது.
- இது ரஷ்யாவின் சைபீரியாவில் யகுதிப் பகுதியில் உள்ள டையர்கெத்யாக் நதிக் கரையில் கண்டுபிடிக்கப்பட்டது.
- இது பனி ஊழிக் காலத்தின் ப்ளைட்டோசீன் சகாப்தத்தின்போது (Pleistocene era) வாழ்ந்துள்ளது.
- புவி வெப்பமடைதல் மற்றும் நிரந்தரமாக இருக்கும் பனிகள் உருகுதல் ஆகியவற்றின் காரணமாக இது போன்றவைகள் கண்டுபிடிக்கப்படுகின்றன.
- இந்த ஆண்டின் தொடக்கத்தில் பனிகட்டிகளுக்குள் உறைந்த நிலையில் திரவ இரத்தம் மற்றும் சிறுநீர் கழிவுகளுடன் 42,000 ஆண்டுகள் பழமையான இளங்குதிரை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாக விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர். இது நிரந்தரப் பனிக்கட்டியில் வைத்து பாதுகாக்கப்படுகின்றது.
- ஒரு பனி யுகம் என்பது பூமியின் மேற்பரப்பு மற்றும் வளிமண்டலத்தின் வெப்பநிலையில் நீண்ட நாள் குறைவாகும். இதன் விளைவாக கண்ட மற்றும் துருவ பனிக்கட்டிகள், ஆல்பைன் பனிப்பாறைகள் அங்கு உருவாகின்றன அல்லது விரிவடைகின்றன.
- பூமி தற்போது நான்காம் நிலை பனிப் பாறையாக்கத்தில் உள்ளது. இது பிரபலமாக பனி யுகம் என்று அழைக்கப்படுகின்றது.




## நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்பு

- உலக சுகாதார அமைப்பானது அனைத்து நாட்டு அரசுகளும் "AWaRe" (for Access, Watch, and Reserve) எனும் கருவியை ஏற்றுக் கொள்ளுமாறு ஒரு உலகளாவிய விழிப்புணர்வு பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- இது நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்பு, அதன் பரவல், அதன் பாதகமான விளைவுகள் மற்றும் அதனால் ஏற்படும் செலவுகளைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- WHO-ன் அத்தியாவசிய மருந்துகள் பட்டியலால் உருவாக்கப்பட்ட இந்தக் கருவியானது அதிகரித்து வரும் நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்பைத் தடுக்கவும் நுண்ணுயிர் எதிர்ப்புப் பொருட்களைப் பாதுகாப்பாகவும் மிகுந்த திறனுடையதாகவும் பயன்படுத்தக் கூடியதாக மாற்றும்.

- இது நுண்ணுயிர் எதிர்ப்புப் பொருட்களை மூன்று குழுவாக வகைப்படுத்துகின்றது
    - அணுகுதல் : மிகவும் பொதுவான மற்றும் தீவிரமான தொற்று நோய்களுக்குப் பயன்படுத்தப்படும் நுண்ணுயிர் எதிர்ப்புப் பொருட்களைக் கொண்டது
    - கண்காணிப்பு : சுகாதார அமைப்பில் அனைத்து நேரங்களிலும் கட்டாயமாக கிடைக்க வேண்டிய நுண்ணுயிர் எதிர்ப்புப் பொருட்களைக் கொண்டது.
    - பாதுகாக்கப்பட்டவை : மிகக்குறைவான அளவில் பயன்படுத்தப்பட வேண்டியவை அல்லது பாதுகாக்கப்பட வேண்டியவை மற்றும் கடைசி முயற்சியாக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டிய பொருட்களைக் கொண்டது.




## ராவணா I செயற்கைக்கோள்

- ராவணா I செயற்கைக்கோளானது சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து ஜப்பான் மற்றும் நேபாளத்தின் இரண்டு BIRDS 3 செயற்கைக்கோள்களுடன் வெற்றிகரமாக சுற்றுப்பாதையில் செலுத்தப்பட்டது.
- இந்தச் செயற்கைக்கோளானது அமெரிக்காவிலிருந்து சிக்னஸ் – 1 விண்கலத்தின் உதவியுடன் ஏப்ரல் 17 அன்று சர்வதேச விண்வெளி மையத்திற்கு அனுப்பப்பட்டது.
- இது இலங்கை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளின் படங்களைப் பிடித்தல் மற்றும் செயல்பாட்டு அணுகுமுறையை நிலையப்படுத்துதல் உள்ளிட்ட ஐந்து பணிகளை இது நிறைவேற்றுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## நிலவுத் திட்டம்

- நாசாவின் 2024 ஆம் ஆண்டு நிலவுத் திட்டத்திற்கான ஏற்பாடுகளின் போது, விஞ்ஞானிகள் சந்திர வெளியேற்ற அமைப்பு விண்கலப் பகுதி (LESA - Lunar Evacuation System Assembly) என்ற ஒரு கருவியை சோதனை செய்து கொண்டு இருக்கின்றனர்.

- LESA என்பது பிரமிடு போன்ற ஒரு அமைப்பாகும். இதன் நோக்கம் சந்திரனின் மேற்பரப்பில் பாதிக்கப்பட்டுள்ள அல்லது காயமடைந்த விண்வெளி வீரர்களை மீட்பதாகும்.
- சந்திரனின் மேற்பகுதி போன்று இருக்கும் கடலின் கீழ்ப்புறப் பகுதியில் இது சோதனை செய்யப்படுகின்றது.

## அதிக எடை கொண்ட பால்கன் விண்கலம்

- எலோன் மஸ்கினின் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம், தனது மூன்றாவது மற்றும் சிக்கலான திட்டமான அதிக எடை கொண்ட பால்கன் விண்கலத்தை விண்ணிற்குச் செலுத்தியுள்ளது.
- இது பின்வரும் முக்கியமான பொருட்களை எடுத்துச் சென்றது.
    - தொலைதூர விண்வெளி அணுக் கடிகாரம் - DSAC (Deep Space Atomic Clock ) ஆனது ஏற்கெனவே வெளிநாட்டு GPS செயற்கைக்கோள்களில் உள்ள அணுக் கடிகாரங்களை விட 50 மடங்கு துல்லியத் தன்மை கொண்டது. இதன் நோக்கம் ஒரு புவி நேரத்தைச் சார்ந்திருக்காமல் தன்னகத்தே விண்கலப் பயணத்திற்கு உதவுவதாகும்.
    - ASCENT (Advanced Spacecraft Energetic Non-toxic Propellant) பசுமை எரிபொருள் - ராக்கெட்டுகளில் பயன்படுத்தப்படும் ஹைடர்செயின் எரிபொருள் மனிதர்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு மிகவும் தீங்கு விளைவிக்கக் கூடியது. மேம்படுத்தப்பட்ட விண்கல ஆற்றலுள்ள நச்சுத் தன்மையற்ற உந்து பொருளானது குறிப்பிடத்தக்க அளவில் மாசுபாட்டைக் குறைக்கின்றது.
    - சூரிய ஒளியின் மூலம் பயணம் - இது சூரிய ஒளியால் மட்டுமே செலுத்தப்படும் முதல் சுற்றுப்பாதை விண்கலமாக மாற முற்படுகின்றது.

## மிகப்பெரிய மீத்தேன் இருப்பு


- நாசாவின் செவ்வாயில் உள்ள கியூரியாசிட்டி வாகனம், அக்கோளில் இதுவரை அளவிடப்படாத மிக அதிக அளவிலான மீத்தேனைக் கண்டறிந்துள்ளது.
- இது 21 ppbv (per billion units by volume - கன அளவில் ஒரு பில்லியன் அலகில் 21 பகுதிகள்) என்று அளவிடப்பட்டுள்ளது.
- இந்த கண்டுபிடிப்பு நடமாடும் வாகனத்தின் பாகமான செவ்வாயில் மாதிரிப் பகுப்பாய்வினை சரி செய்யக்கூடிய லேசர் நிறமாலை மானியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது.
- கியூரியாசிட்டி செவ்வாய்த் திட்டம் நாசாவினால் கேப் கேனவரிலிருந்து 2011 ஆம் ஆண்டு நவம்பர் 26 அன்று செலுத்தப்பட்டது.

## அவிஸ்கர் ஹைபர்லூப்

- மதராஸ் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த குழுவினர் உள்நாட்டிலேயேத் தயாரித்து மேம்படுத்தப்பட்ட ஒரு ஹைப்பர்லூப் பெட்டியை ஸ்பேஸ்எக்ஸ் அமைப்பால்

நடத்தப்படும் ஒரு போட்டியின் இறுதிச் சுற்றில் வெளியிடத் திட்டமிட்டு இருக்கின்றனர்.

- இது இந்தியாவில் முதன்முதலில் சுயமாக இயங்கக்கூடிய, முழுமையான, மற்றும் ஒரு தன்னிச்சை வாய்ந்த ஹைபர்லூப் பெட்டியைக் கட்டமைப்பதற்காக உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்ட ஒரு சாதனமாகும்.
- ஹைபர்லூப் என்பது போக்குவரத்தின் 5-வது முறைமையாகும். இது வெற்றிடக் குழாயில் செல்லக்கூடிய ஒரு அதிவேக இரயிலாகும்.




## 75 by 75


- நாட்டின் 75-வது ஆண்டு சுதந்திர தினத்தை அனுசரிப்பதற்காக பெங்களூருவில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் காங்கிரஸ் கூட்டமைப்பு “75 by 75” என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- அதன், “75 மாணவர்களின் 75 செயற்கைக் கோள் திட்டம் 2022” என்பதன் கீழ், இந்தியப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்களால் 75 சிறிய செயற்கைக் கோள்கள் வரை கட்டமைக்கப்பட்டு, அடுத்த ஆண்டின் இறுதியில் மற்றும் 2022 ஆம் ஆண்டில் பல தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அவை விண்ணுக்குச் செலுத்தப்பட இருக்கின்றன.

## பஞ்ச் திட்டம்

- இந்திய வான் இயற்பியல் நிறுவனத்தைச் சேர்ந்த இந்தியாவின் சூரிய ஒளி இயற்பியல் வல்லுநரான தீபாங்கர் பானர்ஜி என்பவர் நாசாவினால் செயல்படுத்தப்படும் பஞ்ச் திட்டத்தின் இணை ஆய்வாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- பஞ்ச் என்பது “சூரியனின் கொரோனா (ஒளிவட்டம்) மற்றும் சூரியனைச் சுற்றியுள்ள வான்வெளி மண்டலம் (ஹீலியோஸ்பியர்) ஆகியவற்றை ஒன்றிணைப்பதற்கான ஒளி முனைவு திருப்புமானி” ஆகும்.
- இது சூரியனின் வெளிப்புற ஒளிவட்டத்திற்கு அப்பால் உள்ள பகுதிகளைப் படம் பிடிக்கும்.
- இது அதிக அளவிலான கொரோனா வெளியேற்றங்கள் மற்றும் சூரிய ஒளிக் காற்று

ஆகியவற்றைக் கண்காணித்து அவற்றைப் படமெடுக்கும்.

- அதிக அளவிலான கொரோனா வெளியேற்றமானது பூமிக்கு அருகில் வானிலை நிகழ்வுகளைப் பாதித்து அவற்றை இயக்கும் திறன் கொண்டது.




## விரைவான ரேடியோ அலைச் சிதறல்கள்

- சர்வதேச வானியலாளர்களின் குழு முதன்முறையாக விரைவான ரேடியோ அலைச் சிதறல்களுக்கான (FRB - Fast Radio Bursts) துல்லியமான மூலத்தைக் கண்டுபிடித்துள்ளது.
- FRBக்கள் நுண் வினாடிகள் மட்டுமே ஒளிரும். 10,000 ஆண்டுகளில் சூரியன் ஏராளமான ஆற்றலை வெளியிடுவதைப் போல் இதுவும் மில்லி வினாடியில் ஏராளமான ஆற்றலை வெளியிடும்.
- முதலாவது FRB ஆனது 2007 ஆண்டில் கண்டறியப்பட்டது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## காற்று மாசுபாடு

- மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் காற்று மாசுபாடு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக "ஹவா ஆனா தி" என்ற பாடலை வெளியிட்டுள்ளது.
- ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 05 அன்று "உலக சுற்றுச்சூழல் தினம்" கொண்டாடப்படவிருக்கும் நிலையில் இந்தப் பாடல் வெளியிடப்பட்டுள்ளது.
- தேசியத் தூய்மைக் காற்றுத் திட்டம் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தினால் 102 நகரங்களில் PM 2.5 மற்றும் PM 10 அளவிலான மாசுக்களை 20 – 30 சதவிகிதம் வரை குறைக்கும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது.
- 84 நகரங்கள், தங்களது வரைவு செயல் திட்டங்களைச் சமர்ப்பித்துள்ளன.

## புதிய குளவி இனங்கள்


- சமீபத்தில் ஆராய்ச்சியாளர்கள் கோவாவில் உள்ள மரபணுக்களைச் சேர்ந்த புதிய குளவி

இனங்களைக் கண்டறிந்துள்ளனர்.

- இது மேற்குத் தொடர்ச்சி மலைக் காடுகளில் தெற்கு கோவாவில் அமைந்துள்ள கோட்டிகோ வனவிலங்குச் சரணாலயத்திலிருந்து கண்டெடுக்கப் பட்டது.
- இது கோவாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளரான "பராக் ரங்னேக்கர்" என்பவரின் நினைவாக "குடகுருமியா ரங்னேக்கர்" என்றுப் பெயரிடப்பட்டுள்ளது.
- இவர் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் 220 வகை பட்டாம் பூச்சி இனங்களைப் பதிவு செய்துள்ளார். இதில் 13 இனங்கள் இதற்கு முன்பு கண்டறியப்படவில்லை.
- குளவிகள் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் திறன் கொண்டவை. எனவே இவை பயிர்களைப் பாதுகாப்பதற்காக பயன்படுத்தப்படுகின்றன.

## எனோப்ளோடிரூப்பீஸ் தவான்ஜென்சிஸ் – புதிய வண்டு

- அருணாச்சலப் பிரதேசத்தின் தவாங் மாவட்டத்தில் ஒரு புதிய சாண வண்டு இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- இந்த இனம் எனோப்ளோடிரூப்பீஸ் தவான்ஜென்சிஸ் என்று பெயரிடப்பட்டுள்ளது.




- 27 மில்லி மீட்டர் அளவுடைய இந்த வண்டு ஒளிரக் கூடிய கருநீலத்தில் காணப்படுகின்றது.
- இது மிகப் பரவலாகக் காணப்படும் சாண வண்டுகளை விடப் பெரிதாக உள்ளது.

## அழியும் நிலையிலுள்ள இனங்கள்

- உலக வனவிலங்கு நிதியத்தின் அறிக்கைப்படி (WWF - World Wildlife Fund) ரஷ்யாவின் 6 பாலூட்டிகள், பறவை மற்றும் மீன் இனங்கள் ஆகியவை அழியும் நிலையை எதிர் நோக்கியுள்ளன.
- இப்பட்டியல் சாய்கா கலைமான், கிர்பால்கன் பறவை, பாரசீகச் சிறுத்தை, கரண்டிவாய் உள்ளான் எனும் பறவை, சஹாலின் எனும் உணவிற்குப் பயன்படும் ஒரு பெரிய மீன் மற்றும் கழுகா என்ற ஒரு மீன் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
- இதற்கிடையில், கடந்த நூற்றாண்டில் அழிவின் விளிம்பில் இருந்த சில இனங்களின்

எண்ணிக்கையானது பாதுகாப்பு முயற்சிகளின் காரணமாக அதிகரித்துள்ளது.

### *உலக வனவிலங்கு நிதியம்*

- இது 1961 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஒரு சர்வதேச அரசு சாரா அமைப்பாகும்.
- இது உலகின் மிகப்பெரிய வனவிலங்குப் பாதுகாப்பு அமைப்பாகும்.
- இதன் தலைமையகம் கிளாண்டில் (சுவிட்சர்லாந்து) அமைந்துள்ளது.
- இது 1988 ஆம் ஆண்டு முதல் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை "வாழும் கோள்கள்" என்ற ஒரு அறிக்கையை வெளியிடுகின்றது.

## பவளப் பாறைகள் - அச்சுறுத்தல்

- தூத்துக்குடியில் உள்ள சுகந்தி தேவதாசன் கடல்சார் ஆராய்ச்சி நிறுவனத்தின் (Suganthi Devadason Marine Research Institute - SDMRI) பாறை ஆராய்ச்சிக் குழு வாலைத் என்ற தீவுப் பகுதியில் அழிவை ஏற்படுத்தக் கூடிய பாசியின் ஊடுருவலைக் கண்டறிந்துள்ளது.
- இந்த ஊடுருவியுள்ள இனங்கள் கப்பாப்ஹைய்கூஸ் ஆல்வாரீசெய் என்று பெயரிடப்பட்டுள்ளன. இந்தக் கடற்பாசிகள் பவளப் பாறைகளின் மீது படர்ந்து அவற்றை அழிக்கின்றன.
- இது பவளப் பாறைகள் உள்ள மன்னார் வளைகுடாவின் வாலைத் தீவிற்குப் பரவியுள்ளது. இது கடல்சார் தேசியப் பூங்காவின் புதிய பவளப் பாறைகளை அழிக்கத் தொடங்கியுள்ளது.
- 2005 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அரசு ஆணையானது, தூத்துக்குடி கரையோரத்தின் தெற்குப் பகுதி மற்றும் பாக் ஜலசந்தியின் வடக்கில் உள்ள நீர்ப்பகுதிகள் ஆகியவற்றில் மட்டும் கடற் பாசிகளைப் பயிரிட அனுமதியளித்துள்ளது.

### *ஊடுருவிய இனங்கள்*

- ஊடுருவிய இனங்கள் என்பது குறிப்பிட்ட இடத்தை வாழிடமாகக் கொண்டிராத (இயற்கையாக அல்லது தீவிரமாக அறிமுகப்படுத்தப்பட்ட இனங்கள்) இனங்களாகும்.
- இது சுற்றுச் சூழல், மனிதப் பொருளாதாரம் மற்றும் மனித வளம் ஆகியவற்றிற்கு சேதம் விளைவிக்கும் என நம்பப்படும் அளவிற்குப் பரவக் கூடிய திறன் கொண்டது.

## எட்னா எரிமலை

- இந்த வருடத்தில் முதல் முறையாக எட்னா எரிமலை வெடித்துள்ளது.
- இத்தாலிய நாட்டின் தீவான சிசிலியில் உள்ள இந்த மலையானது கடந்த இரண்டு ஆண்டுகளாக வெடிக்காத நிலையில் இருந்தது.
- இது ஐரோப்பாவில் செயல்படும் நிலையில் இருக்கும் இரண்டாவது உயரமான எரிமலையான விசுவியஸ் எரிமலையை விட இரண்டரை மடங்கு அதிகமான செயல்படும் நிலையைக் கொண்ட எரிமலையாகும்.



## புது டெல்லிக்கு சிவப்பு நிற எச்சரிக்கை

- ❖ இந்திய வானிலை ஆராய்ச்சி மையமானது தேசியத் தலைநகரத்திற்கு சிவப்பு நிற எச்சரிக்கையை வழங்கியுள்ளது.
- ❖ வானிலை ஆய்வு மையமானது மொத்தமாக பச்சை, மஞ்சள், பொன்னிறம் மற்றும் சிவப்பு ஆகிய நான்கு எச்சரிக்கை நிறங்களைக் கொண்டுள்ளது.
- ❖ பச்சை நிறமானது இயல்பான சூழலையும் சிவப்பு நிறமானது மிகவும் மோசமான வானிலைச் சூழலையும் குறிக்கின்றது.

## இந்திய இராணுவத்தின் “Go Green” முன்முயற்சி

- ❖ மேற்கு வங்காளத்தில் உள்ள கொல்கத்தாவில் வில்லியம் கோட்டை மையத்தில் உள்ள கிழக்கு கட்டுப்பாட்டுத் தலைமையகத்தில் “தொடர்ச்சியான சுற்றுச்சூல் காற்று கண்காணிப்பு அமைப்பை” இந்திய ராணுவமானது செயல்நிலைப் படுத்தியுள்ளது.
- ❖ இந்த காற்று தர கண்காணிப்புப் அமைப்பின் செயல்நிலைப் படுத்துதலானது இந்திய இராணுவத்தால் ஏப்ரல் 2019-ல் நாடு முழுவதும் துவக்கப்பட்ட “Go Green” என்ற முன்முயற்சியின் ஒரு பகுதியாகும்.
- ❖ இது காற்றின் வீசும் திசை, காற்று மாசுபாடு, சுற்றுப்புற வெப்பநிலை, ஒப்பீட்டு ஈரப்பதம், வெப்பக் கதிர்வீச்சு, வளிமண்டல அழுத்தம் மற்றும் மழை அளவை ஆண்டு முழுவதும் அளவிடும்.
- ❖ இது கொல்கத்தாவின் ஆறாவது தொடர்ச்சியான சுற்றுச்சூழல் காற்று கண்காணிப்பு அமைப்பாகும்.

## கிரேட்டா துன்பெர்க்

- 16 வயது நிரம்பிய ஸ்வீடனைச் சேர்ந்த இளம் பருவநிலை ஆர்வலரான கிரேட்டா துன்பெர்க் என்பவர் "அம்னெஸ்டி இன்டர்நேஷனலின் 2019 ஆம் ஆண்டிற்கான மனச் சாட்சியின் தூதர்" என்ற விருதை வென்றுள்ளார்.
- உலகளாவிய வெப்பமயமாதல் காரணமாக எதிர்நோக்கியுள்ள அபாயம் குறித்து உலக மக்களின் கருத்துக்களை அணி திரட்டியதற்காக இவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.
- இவருடைய "எதிர்காலத்திற்காக வெள்ளிக் கிழமைகள்" என்ற இயக்கமானது உலகம் முழுவதும் பரவியுள்ளது. இது உலகம் முழுவதும் உள்ள குழந்தைகள் பருவ நிலை குறித்துப் போராடுவதற்காக வெள்ளிக் கிழமைகளில் விடுமுறை எடுப்பது குறித்த ஒரு இயக்கமாகும்.

*இந்த விருதைப் பற்றி*

- அம்நெஸ்டியின் இந்த விருது 2002 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- இது மனச் சாட்சியின்படி தமது நடவடிக்கைகள் மற்றும் அநீதிகளை எதிர்கொள்தல் ஆகியவற்றின் மூலம் மனித உரிமைகளை காத்தல் மற்றும் தமது திறமைகளைப் பயன்படுத்தி மற்றவர்களை ஈர்த்தல் ஆகியவற்றில் ஈடுபடும் குழுக்கள் மற்றும் தனிநபர்களை அங்கீகரிக்கின்றது.



## புதிய தாவரங்கள் மற்றும் விலங்குகள்

- அறிவியல் விஞ்ஞானிகள் மற்றும் வகைப்பாட்டியல் வல்லுநர்கள் 2018 ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து 596 புதிய தாவர மற்றும் விலங்கினங்களை ஆவணப் படுத்தியுள்ளனர்.

- இந்தக் கண்டுபிடிப்புகள் குறித்த விவரமானது "இந்தியத் தாவரவியல் ஆய்வு நிறுவனம் (Botanical Survey of India - BSI) மற்றும் இந்திய விலங்கியல் ஆய்வு நிறுவனம் (Zoological Survey of India - ZSI)" ஆகியவை இணைந்து வெளியிட்ட "தாவர கண்டுபிடிப்புகள் 2018 மற்றும் விலங்குக் கண்டுபிடிப்புகள் 2018" என்ற ஆய்வு நூலில் அறிவிக்கப்பட்டுள்ளது.

**Fact Box**

- Of the 596 species, 372 come under fauna (311 invertebrates and 61 vertebrates).
- Newly identified 224 plant species include seed plants, pteridophytes, bryophytes, fungi and lichen.
- About 31% of the plant species were discovered in the Himalayas.
- In the case of animals, the Western Ghats remained a biological hotspot from where about 50% of the species were found.
- Of the 61 species of vertebrates discovered this year, reptiles dominate (30 species).
- 21 species of fishes, nine species of amphibians, and one mammalian sub-species were also found.

- இந்தக் கண்டுபிடிப்புகளை உறுதிப்படுத்த மூலக்கூறு டிஎன்ஏ தொழில்நுட்பம் மற்றும் மரபு வழியியல் ஆகியவற்றின் மீது BSI கவனம் செலுத்தி இருக்கின்றது.
- இந்தப் புதிய கண்டுபிடிப்புகளுடன் இந்தியாவின் விலங்கு இனங்களின் திருத்தியமைக்கப்பட்ட பட்டியலில் 1,01,681 இனங்கள் உள்ளன. இது உலகின் மொத்த இனங்களில் 6.49 சதவிகிதமாகும்.
- 59 இனங்களுடன் கேரளாவில் அதிக எண்ணிக்கையிலான இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேற்கு வங்கத்தில் 38 இனங்களும் தமிழ்நாட்டில் 26 இனங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## இந்திய சுற்றுச்சூழல் அறிக்கை 2019

- சுற்றுச்சூழல் புள்ளி விவரங்கள் மற்றும் பகுப்பாய்வுகளைக் கொண்ட வருடாந்திர அளவீட்டு அறிக்கையான இந்திய சுற்றுச்சூழல் 2019 அறிக்கையானது என்பது அறிவியல் மற்றும் சுற்றுச்சூழலுக்கான மைய உதவியுடன் வெளியிடப்படும் Down To Earth என்ற பத்திரிக்கையால் தொகுக்கப்பட்டுள்ளது.

### *சில முக்கிய கண்டுபிடிப்புகள்*

- இந்தியாவின் மொத்த இறப்புகளில் 12.5 சதவீத இறப்பிற்குக் காற்று மாசுபாடு காரணமாகும்.
- 2030 ஆம் ஆண்டின் ஐநாவின் நீடித்த வளர்ச்சி இலக்கினை அடைவதற்கு, காலநிலை மாற்ற ஆயத்தப் பணிகளை கண்காணிக்கும் குறியீடுகளை இந்தியா இதுவரை கண்டறியவில்லை.
- நாட்டில் உள்ள நிலப்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர் இரண்டுமே மிகவும் குறைவாக உள்ளது. 86 நீர்நிலைகள் மிகக் கடுமையாக மாசுபட்டுள்ளன.
- 24 x 7 பொது சுகாதார மையங்களின் எண்ணிக்கையானது 35 சதவீதம் குறைவாக உள்ளது.

மேலும் 26 சதவீத மருத்துவ அலுவலர்களின் பணியிடங்கள் காலியாக உள்ளன.

- 2050 ஆம் ஆண்டளவில் உலகின் நகர்ப்புறத்தில் வசிப்பவர்கள் எண்ணிக்கையில் 416 மில்லியன் மக்களை இந்தியா இணைக்கும் எனவும் உலகளாவிய மக்கள் தொகையில் 58 சதவீதத்திற்குத் தாயகமாக இந்தியா இருக்கும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.
- 2010 மற்றும் 2014 ஆம் ஆண்டிற்கிடையே இந்தியாவின் பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வானது 22% சதவீதம் அதிகரித்துள்ளது.
- சமீபத்தில் இந்தியாவானது சக்தி வாய்ந்த காட்டுத்தீ கண்காணிப்பு மற்றும் எச்சரிக்கை அமைப்பிற்கு மாறியுள்ளது. (SWPP–VIIRS) இதன் மூலம் சிறந்த துல்லியத் தன்மையுடனும் நுட்பமாகவும் காட்டுத் தீயைக் கண்டறிய இயலும்.
- கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்தியாவின் வேலையின்மை விகிதமானது, 1.9 மடங்கு அதிகரித்துள்ளது.

## நுண்துகள் காற்று மாசுபாட்டைக் குறைப்பதற்கான இந்தியாவின் முதல் உமிழ்வு வர்த்தகத் திட்டம்

- நுண்துகள் காற்று மாசுபாட்டை குறைக்க இந்தியாவின் முதல் உமிழ்வு வர்த்தகத் திட்டத்தினை குஜராத்தின் முதல்வர் விஜய் ரூபானி 2019 ஆம் ஆண்டின் உலக சுற்றுச்சூழல் தினத்தன்றுத் தொடங்கி வைத்தார்.
- சந்தை அடிப்படையிலான திட்டமான இதில் உமிழ்வின் உச்ச வரம்பை அரசானது நிர்ணயிக்கின்றது. மேலும் தொழிலகங்கள் இந்த வரம்பிற்குள் தங்கள் உமிழ்வுகளைப் பராமரிப்பதற்காக உமிழ்வு அனுமதிகளை வாங்கவும் விற்கவும் இது அனுமதிக்கிறது.
- இந்த உச்ச வரம்பு வர்த்தக முறையின் கீழ், அனைத்துத் தொழிற்சாலைகளாலும் மொத்தமாக ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்கு காற்றில் உமிழக் கூடிய மொத்த மாசுபாட்டின் அளவையும் ஒழுங்கமைவு அமைப்பானது முதலில் நிர்ணயிக்கும்.
- பின்னர், குறிப்பிட்ட மாசுபாட்டு அளவை அனுமதிக்கும் ஒரு அனுமதித் தொகுப்பு உருவாக்கப்படும். இதன் ஒட்டுமொத்தக் கூடுதலானது, அனுமதிக்கப்பட்ட ஒட்டுமொத்த உச்சவரம்பிற்குச் சமமாக இருக்கும்.
- இந்த அனுமதிச் சீட்டுகளானது வாங்கக் கூடியவோ விற்கக் கூடியவோ அளவிலான உமிழ்வின் அளவு ஆகும்.
- ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் ஒரு குறிப்பிட்ட பங்கு அனுமதிப் பத்திரங்கள் ஒதுக்கப்படும். (இது சமமாகவோ, அதன் அளவைப் பொறுத்தோ அல்லது இதர விதிமுறைகளைப் பின்பற்றியோ அமையும்)
- இதற்குப் பின்னர், எந்தவொரு இதர பிற பொருள்களைப் போன்றும் இந்த உமிழ்வு அனுமதிப் பத்திரங்களைத் தொழிற்சாலைகள் தமக்கிடையே ஒருவருக்கொருவர் வர்த்தகம் செய்து கொள்ளலாம்.

## இந்தியக் கடற்படையின் சுற்றுச்சுழல் பாதுகாப்பு வரைவுத் திட்டம்

- இந்தியக் கடற்படையானது தனது சுற்றுச்சூழலுக்கு உகந்த “இந்தியக் கடற்படை சுற்றுச்சூழல் பாதுகாப்பு வரைவுத் திட்டம்” என்ற திட்டம் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பில்

முன்னோக்கிச் செல்கின்றது.

- இந்த திட்டமானது நடவடிக்கை, பராமரிப்பு, நிர்வாகம், கட்டமைப்பு மற்றும் சமூக வாழ்க்கை ஆகியவற்றில் வரம்பைக் கொண்ட குறிப்பிட்ட செயல் திட்டங்களை உள்ளடக்கியதாகும்.
- இந்த செயல் திட்டமானது "ஆற்றல் நுகர்வில் குறைப்பு" மற்றும் "பல்வகைத் தன்மையுடைய ஆற்றல்களைப் பயன்படுத்துதல்" ஆகியவற்றை முக்கிய விளைவாகக் கருதுகின்றது.

## 2018 ஆம் ஆண்டில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்திக்கான செலவுகள்

- சர்வதேச புதுப்பிக்கத்தக்க ஆற்றல் நிறுவனமானது (International Renewable Energy Agency-IRENA) 2018 ஆம் ஆண்டில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்திக்கான செலவுகள் எனும் தலைப்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.
- இந்த ஆய்விற்காக IRENA அமைப்பானது 2010 முதல் 2018 வரை எட்டு மிகப்பெரிய சூரிய ஒளி ஆற்றல் சந்தை நாடுகளை ஆய்வு செய்தது.
- சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இத்தாலி, ஜப்பான், ஐக்கியப் பேரரசு மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் இதில் அடங்கும்.
- இந்த அறிக்கையின்படி உலகளாவிய அளவில் மிகக் குறைவான விலையில் சூரிய ஒளி ஆற்றலை உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா திகழ்கிறது.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களானது உலகளவில் உற்பத்தி விலைக் குறைப்பைக் கண்டுள்ளன.

### *IRENA*

- 2009 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த அமைப்பின் ஒப்பந்தமானது 2010 ஆம் ஆண்டு ஜூலை 08 ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது. இதன் தலைமையகம் அபுதாபியின் மஸ்தார் நகரில் அமைந்துள்ளது.
- இது வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளின் ஆற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மீது பிரத்தியேகமாக கவனம் செலுத்தும் முதல் சர்வதேச அமைப்பாகும்.
- இது ஒத்துழைப்பு, மேம்பட்ட அறிவு , புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தேர்ந்தெடுப்பு மற்றும் அவற்றின் நீடித்த பயன்பாடு ஆகியவற்றை ஊக்குவிக்கும் அரசுகளுக்கிடையேயான ஒரு அமைப்பு ஆகும்.
- இது ஐக்கிய நாடுகளின் அதிகாரப்பூர்வப் பார்வையாளர் அந்தஸ்து பெற்ற அமைப்பு ஆகும்.

## PET – மறுசுழற்சி

- மகாராஷ்டிராவைச் சேர்ந்த பாலிஜென்டா தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் சர்வதேச விளையாட்டுக்கான ஆடைகளைத் தயாரிக்கும் அடிடாஸ் என்ற நிறுவனம் 2024 ஆம் ஆண்டில், தனது பொருட்களில் இயல் நெகிழிகளின் (இதற்கு முன் பயன்படுத்தப்படாத நெகிழிகள்) பயன்பாட்டை ஒழிப்பதை நோக்கமாகக்

கொண்டுள்ளது.

- கழிவுப் பொருட்களாக ஒதுக்கப்பட்ட PET பாட்டில்களிலிருந்து நூலிழையைத் தயாரிக்கும் இந்தியாவில் உள்ள இதே வகையிலான ஒரே நிறுவனம் இதுவேயாகும்.
- பாலி எத்திலீன் டெரிப்தாலேட் (PET - Polyethylene Terephthalate) பாட்டில்கள் சர்வதேச மற்றும் இந்திய அளவில் நெகிழிக் கழிவுகளுக்கு மிக முக்கியப் பங்காற்றுகின்றன.
- இது PET என்பதை அதன் அடிப்படைப் பொருளான எஸ்தராக மாற்றுகின்றது.
- இதன் பின்பு, இது பாலியெஸ்டர் மெல்லிழை நூலைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகின்றது.

## கடலில் நெகிழிப் பொருட்கள்

- கடந்த ஆண்டு கடலில் உள்ள நெகிழிப் பொருட்கள் பிரகடனம் குறித்து உறுதிமொழி எடுத்த பின்பு, 2021 ஆம் ஆண்டில் நாட்டில் ஒற்றைப் பயன்பாடு கொண்ட நெகிழிப் பொருட்களுக்குத் தடை விதிக்கப்படும் என்று கனடா நாட்டின் பிரதமர் ஜஸ்டின் டிரூடோ அறிவித்துள்ளார்.
- "கடலில் உள்ள நெகிழிப் பொருட்கள் பிரகடனம்" என்பது உலகில் உள்ள பெருங்கடல்களில் காணப்படும் மாசுபாடுகளுக்கு எதிராக எந்த ஒரு கட்டுப்பாட்டையும் விதிக்காத பிரகடனமாகும்.
- கடந்த ஆண்டு கியூபெக்கில் நடைபெற்ற ஜி-7 மாநாட்டின் போது ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து பிரான்ஸ், ஜெர்மனி, பிரிட்டன் மற்றும் இத்தாலி ஆகியவை இந்தப் பிரகடனம் குறித்து உறுதிமொழி எடுத்துக் கொண்டன.
- இந்தப் பிரகடனத்தில் அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் இணையவில்லை.

## மிக்ரிலெட்டா அய்சானி

- வடகிழக்கு இந்தியாவில், அதிலும் குறிப்பாக அஸ்ஸாம் மாநிலத்தில் "நெல் தவளை" என்ற ஒரு புதிய இனத்தினை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.



- இது மிக்ரிலெட்டா அய்சானி என்று பெயரிடப்பட்டு இருக்கின்றது.

- சமஸ்கிருதத்தில் அய்சானி என்பது வடகிழக்கைக் குறிக்கும்.
- மிக்ரிலெட்டா பேரினத்தின் கீழ் உலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட இனங்களில் 5-வது இனமாக அய்சானி தவளை உருவெடுத்துள்ளது.
- இந்தப் பேரினங்கள் குறுகிய வாய் கொண்ட தவளைக் குழுக்களாகும். இது நெல் தவளை என்று பொதுவாக அறியப்படுகின்றது. இது தெற்கு ஆசியாவில் முதன்மையாகவும் பரவலாகவும் காணப்படுகின்றது.

## ஆசியத் தங்கப் பூனைகள்

- இலண்டன் விலங்கியல் சமூகத்தைச் சேர்ந்த இந்திய விஞ்ஞானிகள் "ஆசியத் தங்கப் பூனையின்" 6 வண்ண வடிவங்களை அருணாச்சலப் பிரதேசத்தின் திபாங் பள்ளத்தாக்கில் கண்டுபிடித்துள்ளனர்.
- அதன் வண்ண வடிவங்கள் சீரற்ற மரபணு மாற்றங்களிடைமிருந்துத் தோன்றுகின்றன என்று கருதப்படுகின்றது. இது இயற்கைத் தேர்வின் மூலம் அந்த இனத்தில் காணப்படுகின்றது.
- ஆசிய தங்கப் பூனையானது சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு மன்றத்தின் அச்சுறுத்தல் நிலையில் உள்ள இனங்களுக்கான சிவப்புப் பட்டியலில் "அண்மை அச்சுறு நிலையில் உள்ள இனமாக" வகைப்படுத்தப்பட்டுள்ளது.

## பசுமைத் தரமிடல்


- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை, கப்பல் போக்குவரத்து, மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை அமைச்சர் நிதின் கட்கரி நாக்பூரில் நடத்தப்பட்ட பிராந்திய கிரஹா மாநாட்டின் 10-வது பதிப்பில் உரையாற்றினார்.
- ஒருங்கிணைந்த வாழ்விட ஆய்விற்கான பசுமைத் தரமிடல் (Green Rating for Integrated Habitat Assessment - GRIHA) என்பது கட்டிடங்களில் சுற்றுச்சூழலுக்கு உகந்த நிலைகளை ஆய்வு செய்வதற்கான ஒரு தரமிடல் குறியீடாகும்.
- கிரஹா தரமிடல் ஆனது கிரஹா ஆணையத்தினால் வழங்கப்படுகின்றது. இது இந்தியாவில் அதிக அளவிலான பசுமைக் கட்டிடங்களை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மெக்சிகோ வளைகுடாவில் உள்ள உயிரில்லாப் பகுதி

- இந்த ஆண்டில் மெக்சிகோ வளைகுடாவில் உள்ள கடல்சார் "உயிரில்லாப் பகுதி" மிகப்பெரிய உயிரில்லாப் பகுதிகளில் ஒன்று என வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.
- இது 8000 சதுர மைல்களுக்கு மேல் பரவும் என்று ஆராய்ச்சியாளர்கள் எதிர்பார்க்கின்றனர். இது மீன் பிடித்தல், கடல் வளங்கள் ஆகியவற்றைக் கடுமையாகப் பாதிக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் கணித்துள்ளனர்.
- உயிரில்லாப் பகுதிகள் என்பது உலகில் உள்ள கடல்கள் மற்றும் மிகப்பெரிய ஏரிகள்

ஆகியவற்றில் மிகக் குறைந்த அளவு ஆக்ஸிஜன் உள்ள பகுதிகளாகும்.

- இது மனித நடவடிக்கைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இதர காரணிகளிலிருந்து ஏற்படும் அதிகப்படியான ஊட்டச்சத்து மாசுபாட்டினால் (நைட்ரஜன் மற்றும் பாஸ்பரஸ்) ஏற்படுகின்றது.
- இது கடலுக்கு அடியில் மற்றும் அதன் அருகில் உயிர் வாழும் கடல்சார் உயிரினங்களுக்குத் தேவையான ஆக்ஸிஜனின் அளவைக் குறைக்கின்றது.
- மிஸ்ஸிஸிப்பி நதி மற்றும் அதன் அதிகப்படியான ஊட்டச்சத்து மிக்க பொருட்கள் மெக்சிகோ வளைகுடாவின் வளர்ந்து வரும் உயிரில்லாப் பகுதிக்குக் காரணம் என்று குற்றம் சாட்டப்படுகின்றன.




## கெல்ப் காடுகள்

- சர்வதேச அளவில் கெல்ப் காடுகள் (Kelp Forests) போன்ற கடல்சார் வாழ்விடங்களை காலநிலை மாற்ற நிகழ்வுகள் மாற்றியமைக்கின்றன.
- கெல்ப் என்பது உலகம் முழுவதும் கடற்கரை முகத்துவாரத்திற்கு அருகிலுள்ள ஆழமற்ற நீர்ப் பரப்பு, ஊட்டச் சத்து மிக்க உப்பு நீர் ஆகியவற்றில் வளரும் மிகப்பெரிய பழுப்பு நிறக் கடற்பாசி வகையாகும்.
- 350ற்கும் மேற்பட்ட வெவ்வேறான இனங்கள் மற்றும் 1,00,000 வரையிலான சிறிய முதுகெலும்பற்ற இனங்கள் ஆகியவை ஒரே கெல்ப் தாவரத்தில் வாழும் திறன் கொண்டவை.



- அதிக அளவிலான மீன்கள், பறவைகள் மற்றும் பாலூட்டிகள் ஆகியவை நீருக்கு அடியில் உள்ள கெல்ப் காடுகளைச் சார்ந்துள்ளன.

- இந்தக் காடுகள் உள்ள இடங்கள் : மேற்கு ஆஸ்திரேலியா, கிழக்குக் கனடா, தெற்கு ஐரோப்பா, வடக்கு கலிபோர்னியா மற்றும் கிழக்கு அமெரிக்கா.
- இது மிகக் கடுமையான ஆர்க்டிக் சுற்றுச் சூழலிலும் வளர்ந்து, உயிர்வாழும் திறன் கொண்டு விளங்குகின்றது.

## உலகின் மிக உயர்ந்த வானிலை மையங்கள்

- தேசிய புவியியல் சங்கமானது எவரெஸ்ட் சிகரத்தில் உலகின் மிக உயரத்தில் செயல்படும் வானிலை மையங்களை நிறுவியுள்ளது.
- இது ஆராய்ச்சியாளர்கள், மலையேறுபவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு மலையின் நிலைமைகளைப் பற்றி நிகழ்நேரத் தகவல்களை வழங்கும்.



- இந்தக் குழுவானது உலகின் மிக உயரத்தில் செயல்படும் இரண்டு தானியங்கி வானிலை மையங்களை பால்கனி (8430 மீட்டர்) தெற்கு கணவாய் ஆகிய பகுதிகளிலும் (7945) அதனுடன் சேர்த்து இதர 3 வானிலை மையங்களையும் எவரெஸ்டில் நிறுவியுள்ளது.
- போர்ட்சே (3810மீ), எவரெஸ்ட் அடித்தள முகாம் (5315 மீ) மற்றும் இரண்டாம் முகாம் (6464மீ) ஆகியவை இதர மூன்று நிலையங்களாகும்.

## UNEPயின் புதிய தலைவர்

- ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டத்தின் (United Nations Environment Programme-UNEP) புதிய நிர்வாக இயக்குநராக டென்மார்க்கைச் சேர்ந்த இங்கர் ஆண்டர்சன் சமீபத்தில் பொறுப்பேற்றுள்ளார்.
- இவர் அடுத்த 4 வருடங்களுக்கு இந்தப் பதவியை வகிப்பார்.



- இவர் முன்னதாக இயற்கைப் பாதுகாப்பிற்கான சர்வதேச ஒன்றியத்தின் பொது இயக்குனராக 2015 ஆம் ஆண்டு ஜனவரி முதல் 2019 ஆம் ஆண்டு மே வரை பணியாற்றினார்.
- நைரோபியைத் தலைமையகமாகக் கொண்ட UNEP நிறுவனமானது உலகமெங்கிலும் 6 பிராந்திய அலுவலகங்களைக் கொண்டுள்ளது.
- மேலும் ஐநாவின் சுற்றுச்சூழல் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல், சுற்றுச்சூழல் ரீதியிலான சிறந்தக் கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதில் வளரும் நாடுகளுக்கு உதவுதல் ஆகியவையும் இதன் மற்ற பணிகளாகும்.

## பான் சவால்

- காடுகள் நிலப்பரப்பினை மீட்டெடுத்தலுக்கு இந்தியாவின் திறனை அதிகரிப்பதற்காக உறுப்பினர் நாடுகளின் மாநாடு – 14 என்ற நிகழ்வை முன்னிட்டும் சர்வதேச முன்னெடுப்பின் ஒரு பகுதியாகவும் "பான் சவால்" என்ற ஒரு தலைமைத் திட்டத்தை மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பிரகாஷ் ஜவ்டேகர் தொடங்கி வைத்தார்.
- பான் சவால் பின்வருவனவற்றை கொண்டு வருவதற்கான ஒரு சர்வதேச முயற்சியாகும்.
  - உலகின் அழிக்கப்பட்ட மற்றும் குறைக்கப்பட்ட 150 மில்லியன் ஹெக்டேர் நிலங்களை 2020 ஆம் ஆண்டில் மீட்டெடுத்தல்
  - 2030 ஆம் ஆண்டில் 350 மில்லியன் ஹெக்டேர் நிலங்களை மீட்டெடுத்தல்.
- இந்தத் தனித்துவத் திட்டமானது ஹரியானா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, நாகாலாந்து மற்றும் கர்நாடகா ஆகிய ஐந்து மாநிலங்களில் சோதனை அடிப்படையில் 3.5 ஆண்டு காலத்திற்குச் செயல்படுத்தப்படவிருக்கின்றது.
- 2016 ஆம் ஆண்டில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பினால் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி 29 சதவிகித இந்திய நிலங்கள் சிதைக்கப் பட்டுள்ளன.
- மேலும் 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பாலைவனமாக்கலைத் தடுப்பதற்கான ஐ.நா ஒப்பந்தத்தின் (United Nations Convention to Combat Desertification - UNCCD) COP-14 endra மாநாட்டை முதன்முறையாக இந்தியா நடத்தவிருக்கின்றது.

## மலைகள் உருகுதல்

- அறிவியல் மேம்பாடுகள் என்ற ஒரு பத்திரிக்கையில் வெளியிடப்பட்ட ஒரு ஆய்வின்படி, இமயமலையில் உள்ள பனிப் பாறைகள் நூற்றாண்டின் தொடக்கத்திற்கு முன்பு இருந்ததை விட இரு மடங்கு வரையில் இப்போது உருகி வருகின்றன.
- இவர்கள் 40 ஆண்டு கால செயற்கைக்கோள் தகவல்கள், இந்தியா முழுவதும் 2000 கிலோ மீட்டர்கள், சீனா, நேபாளம் மற்றும் பூட்டான் ஆகியவற்றைக் கண்காணித்தனர்.
- இவர்கள் 2000 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் பனிக்கட்டியின் ஒரு அடி மற்றும் அரை அடிக்கு நிகரான பனிப்பாறைகளின் இழப்பைக் கண்டறிந்துள்ளனர்.
- சராசரி வெப்பநிலை அதிகரிப்பு 1975 முதல் 2000 ஆம் ஆண்டு வரை இருந்ததை விட 2000 முதல் 2016 ஆம் ஆண்டு வரை 1.8 டிகிரி பாரன்ஹீட் என்ற அளவில் அதிகரித்திருக்கின்றது.

## நகரமயமாக்கலின் விளைவு

- புவனேஸ்வரில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கடந்த பத்து ஆண்டுகளில் நகரங்களின் நகரமயமாக்கல் எவ்வாறு உள்ளூர் வெப்பநிலையை மிக வேகமாக அதிகரித்துள்ளது என்பது குறித்து ஆவணப்படுத்தியுள்ளனர்.
- 2001 – 2010 வரையிலான கால கட்டத்தில் கட்டாக் மற்றும் புவனேஸ்வரின் உள்ளூர் மேற்பரப்பு வெப்பநிலையானது 40-50 சதவிகிதம் என்ற அளவிற்கு அதிகரித்துள்ளது.
- 2001 – 2010 வரையிலான கால கட்டத்தில் ஒடிசாவில் உள்ள நகரங்களில் உள்ளூர் வெப்பநிலை 0.5 டிகிரி செல்சியஸ் அதிகரிப்பதற்கு காரணம் நகரமயமாக்கல் மட்டுமே.
- ஐ.நா. வாழ்விடம் (UN-HABITAT) என்ற அமைப்பின் அறிக்கையின்படி, புவியின் மேற்பரப்பில் 2 சதவீதத்திற்குக் குறைவான இடத்தினை உலக நகரங்கள் கொண்டுள்ளன. ஆனால் இவை 71 முதல் 76 சதவிகித பசுமை இல்ல வாயு உமிழ்விற்கு காரணமாக அமைகின்றன.

## ராஜாஜி புலிகள் காப்பகம்

- ராஜாஜி புலிகள் காப்பகத்திற்குள் இருக்கும் கண்டி சாலை கட்டமைப்புப் பணியை இனியும் தொடராமல் நிறுத்தி வைக்கவும் மாநில அரசிற்கு அறிவிப்பை வழங்கவும் இந்திய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- ராஜாஜி புலிகள் காப்பகமானது உத்தரகாண்டில் உள்ள ராஜாஜி தேசியப் பூங்காவின் ஒரு பகுதியாகும்.
- பரிந்துரைக்கப்பட்டுள்ள சாலையானது புலிகள் காப்பகத்திற்கு உள்ளேயும் ராஜாஜி மற்றும் கார்பெட் புலிகள் காப்பகங்களுக்கிடையே உள்ள வனவிலங்குப் பாதையின் குறுக்கேயும் செல்கின்றது.

## பேங்காக் தீர்மானம்


- ஆசியான் பிராந்தியத்தில் கடல் கழிவுகளை எதிர்த்துப் போராடுவதற்கான பேங்காக்

தீர்மானமானது 10 உறுப்பு நாடுகள் கொண்ட தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பின் (ASEAN - Association of Southeast Asian Nations) தலைவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

- 2017 ஆம் ஆண்டு கடல் பாதுகாப்பு அறிக்கையின்படி, ஒவ்வொரு ஆண்டும் சீனா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், வியட்நாம் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகள் 8 மில்லியன் டன்கள் நெகிழிக் கழிவுகளில் பாதிக்கும் மேலான கழிவுகளை கடலில் கொட்டுகின்றன.
- பேங்காக் தீர்மானம் ஒற்றைப் பயன்பாடு கொண்ட நெகிழி மீதான தடை குறித்து எந்தவொன்றையும் குறிப்பிடவில்லை.

## கடுமையான வானிலை

- ஐக்கிய நாடுகளின் உலக வானிலையியல் அமைப்பானது (WMO - World Meteorological Organization) இரண்டு இடங்களில் 54º செல்சியஸ் அளவிலான கடுமையான வெப்பநிலையை அதிகாரப்பூர்வமாக மதிப்பீடு செய்துள்ளது.
- 2016 ஆம் ஆண்டு ஜூலை 21 அன்று குவைத்தின் மிட்ரிபாக்கில் ஒன்றும் 2017 ஆம் ஆண்டு மே 28 அன்று பாகிஸ்தானின் துர்பத்தில் மற்றொன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.




## பீகார் மாதிரி

- பீகார் அரசு, அம்மாநிலத்தின் வெவ்வேறு நகரங்களில் மரங்களை வெட்டுவதற்கான தடையை சமீபத்தில் அறிவித்துள்ளது.
- இந்த உத்தரவானது வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது அம்மாநிலச் சொத்துகளுக்கு மட்டுமே பொருந்தும்.
- அதிகரித்துவரும் மாசுபாடு, மிகக் கடுமையான வெப்ப நிலை ஆகியவை இந்தத் தடைக்கான காரணம் என்று கூறியுள்ளது.
- தற்பொழுது பீகாரில் நிலவிவரும் வெப்ப அலையானது மிகக் கொடிய மூளைச் செயலிழப்பு நோயினால் 150ற்கும் மேற்பட்ட குழந்தைகளின் இறப்பிற்கு காரணம் என்றும் கருதப்படுகின்றது.
- உலகில் மிகவும் மாசுபட்ட 7-வது நகரமாக பீகாரின் தலைநகரான பாட்னா விளங்குகின்றது.

## ஈர்க்கப்பட்ட ஆமை

- வனத் துறையைச் சேர்ந்த ஊர்வன அறிவியலைச் சேர்ந்த குழுவினர், ஹெல்ப் எர்த் மற்றும் ஆமைகள் உயிர்ப் பிழைத்தல் கூட்டிணைவு என்ற இரண்டு அரசு சாரா நிறுவனங்கள் ஆகியோர் இணைந்து அருணாச்சலப் பிரதேசத்தின் சுபன்ஸ்ரீ மாவட்டத்தில் ஒரு புதிய ஆமையைக் கண்டுபிடித்துள்ளனர்.



- இது ஈர்க்கப்பட்ட ஆமை (மனோரியா இம்பரசா) என்ற பெயரிடப்பட்டுள்ளது.
- இந்தியாவில் உள்ள ஆமைகளின் முதலாவது பதிவு இதுவாகும்.
- ஏற்கெனவே இந்தியா ஆசிய வன ஆமைகளின் ஒரே வாழ்விடமாகத் திகழ்கின்றது.
- மனோரியா எமிஸ் என்பது ஆசியாவில் உள்ள மிகப்பெரிய ஆமை இனமாகும்.

## பாலைவன டைனோசர் - வெர்பெர்சவ்ரூஸ்

- பாலைவனத்தில் வாழக்கூடிய மாமிச வகை டைனோசர் இனம் ஒன்று (மறைந்து போன விலங்கு வகை) தெற்கு பிரேசிலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



- 90 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு டைனோசர்கள், நகங்களைப் பயன்படுத்தி சிறிய அளவிலான இரையைப் பிடித்தன.

- வெர்பெர்சவ்ரூஸ் பரானாஎன்சிஸ் என்ற உயிரின வகையின் புதைபடிவங்கள் பிரேசிலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

# மாநிலச் செய்திகள்

## மின்னணு சிகரெட்டுகள்

- சமீபத்தில் இராஜஸ்தான் மாநில அரசு அம்மாநிலத்தில் இ-சிகரெட்டின் உற்பத்தி, விநியோகம், விளம்பரம் மற்றும் விற்பனை ஆகியவற்றைத் தடை செய்வதற்கான தனது முடிவை அறிவித்துள்ளது.
- இது ஆன்லைன் (நிகழ் நேரம்) மற்றும் கடைகள் ஆகிய இரண்டு முறையிலும் இ-சிகரெட்டுகளின் விற்பனை, சேமித்து வைத்தல், உற்பத்தி, விநியோகம் மற்றும் விளம்பரம் ஆகியவற்றைத் தடை செய்துள்ளது.

## அருணாச்சலப் பிரதேசம் – புதிய முதலமைச்சர்

- பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் பேமா காண்டு அருணாச்சலப் பிரதேசத்தின் 10வது முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்.
- முதன்முறையாக பதவியேற்பு விழாவானது ராஜ்பவனில் நடத்தப்படுவதற்குப் பதிலாக இட்டாநகரின் முக்கிய இடமான சமூகநல மன்ற மையத்தில் நடத்தப்பட்டது. அந்த இடத்திற்கு இவரது தந்தையான டோர்ஜி காண்டுவின் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

## இ – சிகரெட்டுகள் மீதான தடை – மகாராஷ்டிரா மற்றும் இராஜஸ்தான்

- நிக்கோடின் எனும் போதைப் பொருளுக்கு அடிமையாவதலிலிருந்துப் பின்வாங்கச் செய்வதற்காக இ-சிகரெட்டுகள் மீது தடை விதிக்க மகாராஷ்டிரா மற்றும் இராஜஸ்தான் ஆகிய மாநில அரசுகள் முடிவு செய்துள்ளன.
- மின்னணு (electronic) முறையில் நிக்கோடின் வழங்கும் அமைப்புகள் பழமையான புகையிலைப் பொருட்களை விட மிகவும் தீங்கு விளைவிக்கக் கூடியதாக இருக்கும்.
- மகாராஷ்டிரா மாநில அரசு, இ-சிகரெட்டுகளைத் தவிர இ-சிகரெட்டுகளைப் போன்ற ஒரு சாதனம் மற்றும் மின்னணு ஹூக்கா ஆகியவற்றைத் தடை செய்துள்ளது.
- இந்தத் தடைக்கான உத்தரவானது ஒவ்வொரு ஆண்டும் மே 31 அன்று கொண்டாடப்படும் உலகப் புகையிலையற்ற தினத்தின் போது இராஜஸ்தானில் வெளியிடப்பட்டது.

## உலக சுகாதார அமைப்பு விருது - இராஜஸ்தான்

- உலக சுகாதார அமைப்பானது (WHO - World Health Organization) புகையிலையை கட்டுப்படுத்தும் துறையில் இராஜஸ்தான் மாநிலம் நிகழ்த்திய சாதனைகளை அங்கீகரிக்கும் விதமாக இந்த ஆண்டின் உலக சுகாதார அமைப்பின் விருதுக்கு, அம்மாநிலத்தின் மருத்துவ மற்றும் சுகாதாரத் துறையைத் தேர்ந்தெடுத்துள்ளது.

- WHO ஆனது இந்தப் புகழ்பெற்ற விருதுக்கு தென்கிழக்கு ஆசியப் பகுதிகளிலிருந்து ஐந்து அமைப்புகளைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- இந்த விருதைப் பெறும் இந்தியாவின் ஒரே அரசு அமைப்பு இராஜஸ்தான் மாநிலச் சுகாதாரத் துறையாகும். அந்த அமைப்பு மேற்கொண்ட புகையிலையற்ற முன்னெடுப்புகளுக்காக இந்த விருது அதற்கு வழங்கப்படவிருக்கின்றது.
- தென் கிழக்கு ஆசியப் பகுதிகளில் தாய்லாந்து மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகளிலிருந்து மூன்று அமைப்புகள் இந்த விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- புது தில்லியில் உள்ள வல்லபாய் படேல் இதய நிறுவனமும் இந்த விருதைப் பெறும் அமைப்புகளில் ஒன்றாகும்.

## கங்கை மாசுபாட்டிற்கு அபராதம் - NGT

- தேசியப் பசுமைத் தீர்ப்பாயமானது (NGT - National Green Tribunal) கங்கை நதியில் மாசுபாடுகளைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்காததற்காக பீகார், ஜார்க்கண்ட் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களுக்கு தலா ரூ. 25 லட்சத்தை அபராதமாக விதித்துள்ளது.
- இந்த அபராதத் தொகை சுற்றுச்சூழலை மீட்டெடுப்பதற்குப் பயன்படுத்தப் படவிருக்கின்றது.

## குறைந்தபட்ச ஆதரவு விலையில் மாற்றுப் பயிர்கள்

- ஹரியானா மாநிலத்தில் நிலத்தடி நீர் குறைந்து வருவதனால் நீர் அதிகம் தேவைப்படும் பயிரான நெல்லைப் பயிரிடுவதைக் குறைப்பதற்கு ஹரியானா அரசு திட்டமிட்டுள்ளது.
- கடந்த ஆண்டுகளில் நிலத்தடி நீர்க் குறைவானது அம்மாநிலத்தில் 60 வறட்சி மண்டலங்கள் உருவாகக் காரணமாகியுள்ளது. இதில் 10 மாவட்டங்களில் 21 மிக அதிக மிக வறட்சி மண்டலங்களும் உள்ளடங்கும்.
- அம்மாநில அரசு 7 வட்டாரங்களில் ஒரு பரிசோதனைத் திட்டத்தைத் தொடங்க முடிவு செய்துள்ளது. இத்திட்டம் விவசாயிகளுக்கு மானியங்கள் அளிக்கப்படுவதன் மூலம் “மக்காச் சோளம்” மற்றும் ‘துவரம் பருப்பு’ பயிரினங்களைப் பயிரிடுவதை ஊக்குவிப்பதாகும்.
- புதிய திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட விவசாயிகளுக்கு விலையில்லா விதைகள் வழங்கப்பட விருக்கின்றன. விவசாயிகளுக்கு இரண்டு தவணைகளாக ஏக்கருக்கு ரூபாய் 2000 உதவித் தொகை வழங்கப்படும்.
- மக்காச் சோளப் பயிர்க் காப்பீட்டுத் தொகையானது அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட விருக்கின்றது.
- மேலும், உற்பத்தி செய்யப்பட்ட மக்காச் சோளம் அரசினால் குறைந்தபட்ச ஆதரவு விலையில் வாங்கப்படவிருக்கின்றது.

## நிபா வைரஸ்

- கேரளாவில் நிபா வைரஸ் பாதிப்புகள் மீண்டும் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- "சீரான மருத்துவம்" என்ற அறிவியல் இதழில், நிபா வைரஸ் தொற்றிலிருந்து குரங்குகளைப் பாதுகாப்பதற்காக "ரெம்டிசிவிர்" என்ற பரிசோதனை மருந்தைக் கண்டறிந்துள்ளதாக அறிவியல் விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.
- தற்பொழுது நிபா வைரசைக் குணப்படுத்துவதற்கான தடுப்பு மருந்து அல்லது அனுமதியளிக்கப்பட்ட தடுப்பு மருந்து ஏதும் இல்லை.
- நிபா வைரஸ் தொற்றுக்கான தற்பொழுதுள்ள ஒரே சிகிச்சை முறை ஓரிணை உயிர் தற்காப்புச் சிகிச்சை மட்டுமே உள்ளது.

## எலிபெண்டா திருவிழா

- இரண்டு நாட்களுக்கு நடைபெறும் எலிபெண்டா திருவிழாவானது மும்பையின் காராபூரி தீவில் நடைபெற்றது.
- இத்திருவிழாவானது மகாராஷ்டிர சுற்றுலா மேம்பாட்டு நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
- இந்நிறுவனமானது சுற்றுலா மற்றும் மும்பையின் கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்காக வருடந்தோறும் இத்திருவிழாவினை ஏற்பாடு செய்கின்றது.
- பாரம்பரிய தளமான எலிபெண்டா குகையை மட்டுமல்லாமல் நகரத்தின் பாரம்பரியத்தினையும் கொண்டாடும் இத்திருவிழாவானது 2012 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

## உதவித்தொகை பெறுவதற்கான வருடாந்திர வருமான வரம்பு உயர்வு

- அஸ்ஸாம் மாநில அரசானது மாணவர்கள் தங்கள் முதுகலைப் பட்டப்படிப்பு வரையிலான படிப்பிற்கு உதவித் தொகை பெறுவதற்காக அவர்களின் பெற்றோரின் வருடாந்திர வருமான உச்ச வரம்பை 1 லட்சத்திலிருந்து 2 லட்சமாக உயர்த்தியுள்ளது.
- இந்தத் திட்டமானது அஸ்ஸாமின் தனியார் கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களுக்குப் பொருந்தாது.
- மத்திய மற்றும் மாநில அரசில் பணிபுரியும் பெற்றோர்களின் குழந்தைகளும் இத்திட்டத்தில் பயனடைய தகுதியற்றவர்கள் ஆவர்.

## "ஆப்கி பேட்டி" திட்டம் - ராஜஸ்தான்

- ராஜன்தான் மாநில அரசானது "ஆப்கி பேட்டி" திட்டத்தின் கீழ் பள்ளிச் சிறுமிகளுக்கு வழங்கி வந்த நிதியுதவியை உயர்த்தியுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் வறுமைக்கோட்டிற்கு கீழேயுள்ள மற்றும் தாய் அல்லது தந்தை அல்லது இருவரையும் இறந்த பள்ளிச் சிறுமிகளுக்கு மாநிலத்தில் நிதியிதவி அளிக்கப்படும்.

- உதவித் தொகையானது 1 முதல் 8 வரை பயிலும் சிறுமிகளுக்கு 1100 ரூபாயிலிருந்து 2100 ரூபாயாகவும் 9 முதல் 12 வகுப்பு வரை பயிலும் சிறுமிகளுக்கு 1500 ரூபாயிலிருந்து ரூ2500 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

## ஆந்திரப் பிரதேச அமைச்சரவை

- ஆந்திரப் பிரதேச மாநில முதல்வர் YS. ஜெகன் மோகன் ரெட்டி, தனது அமைச்சரவையில் 5 துணை முதல்வர்களைச் சேர்த்துள்ளார்.
- இது நாட்டில் இதுவரை இல்லாத அளவிற்கு அதிக அளவிலான துணை முதல்வர்களைக் கொண்டுள்ளது என்று நம்பப் படுகின்றது.
- இவர்கள் அந்த மாநிலத்தின் முக்கியமான சமுதாயக் குழுக்களிலிருந்துத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவையாவன : எஸ்சி, எஸ்டி, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர் மற்றும் காப்பு சமூகத்தினர்.
- அவர்களாவன

| பெயர் | சமூகப் பிரிவு | அமைச்சகம் | தொகுதி |
|---|---|---|---|
| அம்சத் பாட்ஷா | சிறுபான்மையினர் | சிறுபான்மையினர் நலத்துறை | கடப்பா |
| புஸ்பஸ்ரேவாணி பமுலா | பழங்குடியினர் | பழங்குடியினர் நலத்துறை | குருப்பம் |
| நாராயணசாமி | பட்டியலிடப்பட்ட வகுப்பினர் | உற்பத்தி மற்றும் வணிக வரி | கங்காதர நெல்லூர் |
| அலா கிருஷ்ணா ஸ்ரீனிவாஸ் | காப்பு சமூகத்தினர் | சுகாதாரம், குடும்ப நலன் மற்றும் மருத்துவக் கல்வி | எல்லூரு |
| பில்லி சுபாஷ் சந்திர போஸ் | பிற்படுத்தப்பட்ட பிரிவினர் | வருவாய், பதிவுத் துறை, முத்திரை | சட்டசபை (மேலவை) உறுப்பினர் |

## கழிவுப் பொருட்களிலிருந்து ஆற்றல் பெறும் இந்தியாவின் முதல் திட்டம்

- டெல்லி மெட்ரோ இரயில் நிறுவனமானது கழிவிலிருந்து ஆற்றல் பெறும் அமைப்பிலிருந்துப் பெறப்படும் மின்னாற்றலை உபயோகிக்கும் திட்டத்தினைச் செயல்படுத்தும் முதன்முதலான நிறுவனமாக உருவெடுத்திருக்கின்றது.
- காசிப்பூரில் அமைந்துள்ள 12 மெகாவாட் திறனுடைய, கழிவிலிருந்து ஆற்றல் உற்பத்தி செய்யும் அமைப்பிலிருந்து டெல்லி மெட்ரோ இரயில் நிறுவனமானது 2 மெகாவாட் மின்சாரத்தைப் பெறத் தொடங்கியுள்ளது.
- மேலும் இது IL&FS சுற்றுச்சூழல் உள்கட்டமைப்பு மற்றும் சேவைகள் என்ற நிறுவனத்துடன் இணைந்து அரசு – தனியார் கூட்டுப் பங்களிப்பு முறையில் நாளொன்றுக்கு 150 டன் திறனுடைய கட்டுமான மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை மறுசுழற்சி செய்யும் வசதியை ரோகிணியில் செயல்நிலைப் படுத்தியுள்ளது.

## EBPG இடஒதுக்கீடு திரும்பப் பெறப்படுதல்

- ஹரியானா மாநில அரசானது அரசு வேலைகள் மற்றும் அரசால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்களில் பொதுப் பிரிவினரில் பொருளாதார ரீதியில் பின்தங்கியோர் (Economically Backward Persons in General Category - EBPG) மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (C-பிரிவு) ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட இடங்களைத் திரும்பப் பெற்றுள்ளது.
- மேலும் அரசானது மாநில அரசின் அனைத்து துறைகளிலும் மேற்கண்ட இட ஒதுக்கீட்டு முறைப்படி ஒதுக்கப்பட்ட இடங்களை பொது / ஒதுக்கப்படாதப் பிரிவிற்கு மாற்றுமாறு கேட்டுக் கொண்டுள்ளது.
- இந்த முடிவானது EBPG பிரிவினரைத் தவிர ஜாட், ஜாட் இன சீக்கியர்கள், ஜாட் இன இஸ்லாமியர்கள், தியாகி, ரோர் மற்றும் பிஸ்னோயிஸ் ஆகிய பிற்படுத்தப்பட்ட (பிரிவு – C) பிரிவில் சேர்க்கப்பட்ட ஆறு இனத்தவரையும் பாதிக்கும்.

## தங்க நிறமுடைய வால் குரங்குகள்

- காகோய்ஜானா காப்புக் காடுகளில் கொய்யாப் பழம், மாம்பழம், நாவற் பழம் மற்றும் இதர கனிகளை அளிக்கக்கூடிய மரங்களை நடுவதற்காக மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் (MGNREGA) கீழ் ரூ. 27.24 இலட்சம் மதிப்புடைய ஒரு திட்டத்தினை அஸ்ஸாமின் போங்காய்கோன் மாவட்ட நிர்வாகம் தொடங்கியுள்ளது.
- உணவுத் தேடலின்போது மின்சாரம் தாக்கி உயிரிழக்கக் கூடிய மிகவும் அரிதான தங்க நிற வால் உடைய குரங்குகளைப் பாதுகாத்து, அவற்றிற்குத் தேவையான உணவை அளிக்க இதன் மூலம் திட்டமிட்டுள்ளனர்.
- MGNREGA திட்டத்தின் கீழ் பாலூட்டிகளுக்கு உணவு வழங்குதலில் கவனத்தைச் செலுத்திச் செயல்படுத்தப்படுவது இதுவே முதல்முறையாகும்.



## வெளிநாட்டவர் தீர்ப்பாயம்

- இந்திய அரசு அஸ்ஸாம் மாநிலத்தில் மின்னணு-வெளிநாட்டவர் தீர்ப்பாயத்தினை அமைப்பதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இது பின்வருவனவற்றிற்காக செயல்படுத்தப்பட விருக்கின்றது.
  - மாநிலம் முழுவதும் அங்க அடையாளம் மற்றும் வாழ்க்கைக் குறிப்புத்

தகவல்களைப் பராமரித்தல்.

  - சட்ட விரோத இடம்பெயர்வாளர் தகவல்களைக் கண்டுபிடித்தல்.
  - நலத் திட்டங்களுக்காக தகுதியுள்ளப் பயனாளிகளைச் சட்டப்பூர்வமாக அங்கீகரித்தல்.

- இது நீதித் துறை மற்றும் காவல் துறை ஆகிய இரண்டு துறைகளுக்கும் உதவும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

## மூளைக் காய்ச்சல் இறப்புகள்

- பீகாரின் முசாபர்பூரில் கொடிய மூளைச் செயலிழப்பு நோயின் (AES - Acute Encephalitis Syndrome) காரணமாக 84 குழந்தைகள் இறந்துள்ளனர்.
- மருத்துவர்களின் கூற்றுப்படி, மிக அதிகப்படியான வெப்பம் மற்றும் ஈரப்பதம் ஆகியவற்றின் காரணமாக ஏற்பட்ட AES நோயினால் குழந்தைகள் பாதிக்கப்பட்டு இறப்புகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.
- உள்ளூரில் இந்த காய்ச்சல் “சம்கி” என்று அழைக்கப்படுகின்றது.

***AES***

- இந்தியாவில் AES நோய் (5% - 35%) ஏற்படுவதற்கு மிக முக்கியக் காரணம் ஜப்பானிய மூளைக் காய்ச்சல் வைரஸாகும் (JEV - Japanese Encephalitis Virus).
- இந்தியாவில், வடக்கு மற்றும் வடகிழக்குப் பகுதிகளில் ஏற்படுகின்ற AES நோயானது குழந்தைகள் வெறும் வயிற்றில் பழுக்காத லிட்சிப் பழங்களை சாப்பிடுவதால் ஏற்படுவதாக தொடர்புபடுத்தப் படுகின்றது.
- AES ஏற்படுவதற்கு மிக முக்கியமான வைரஸ்களாக நிபா வைரஸ், ஜிகா வைரஸ் ஆகியவையும் கண்டறியப்பட்டுள்ளன.
- AES நோய் பெரும்பாலும் குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினரைத் தாக்குகின்றது.
- இது கணிசமான நோயுறுதல் மற்றும் உயிரிழப்பிற்கு வழி வகுக்கும்.

## மெல்லிய கறுப்பு ஓடு கொண்ட ஆமை

- அசாமின் குவஹாத்தியில் உள்ள உக்ரதாரா ஆலயம், தற்பொழுது குஞ்சு பொறித்துள்ள 34 அரிய மெல்லிய கறுப்பு ஓடு கொண்ட ஆமைகலைப் பார்வையிட ஒரு சிறப்பு தரிசனத்தை ஒருங்கிணைத்தது. இந்தக் குஞ்சு பொறிக்கப்பட்ட ஆமைகள் வெகு சீக்கிரம் வனப்பகுதியில் மீண்டும் கொண்டு விடப்படவி ருக்கின்றன.
- இந்த ஆமைகள் கொண்டுள்ள மெல்லிய ஓடு மற்ற ஆமைகளை விட நிலப் பகுதியில் வேகமாக நகர்வதற்கும் நீரில் எளிதாக நகர்வதற்கும் இந்த ஆமைகளை அனுமதிக்கின்றது.



- இது அஸ்ஸாம் மற்றும் வங்க தேசங்களில் உள்ள சில கோவில்களின் குளங்களில் மட்டுமே காணப்படுகின்றது.
- இதன் அறிவியல் பெயர் : நில்சோனியா நிக்ரிகான்ஸ் ஆகும்.
- இதன் IUCN பாதுகாப்பு நிலை: மறைந்துபோன இனம்.

## இமாச்சல மலையேற்றம்

- இமாச்சலப் பிரதேச அரசு எந்தவொரு நெருக்கடி நிலையையும் எதிர் கொள்வதற்காக புவியிடங்காட்டி (GPS - Global Positioning System) சாதனத்தை மலையேற்ற வீரர்கள் கட்டாயமாக கொண்டுச் செல்ல வேண்டும் என்று கூறியுள்ளது.
- இந்த அரசு ராம்பூர் மற்றும் மாண்டி நகரங்களில் தேசியப் பேரிடர் பதிலெதிர்ப்புப் படைக்கான மீட்பு மற்றும் நிவாரணத் தளத்தை அமைக்க முடிவு செய்துள்ளது.
- குல்லு மாவட்டம் மற்றும் டல்ஹௌசி நகரம் ஆகியவற்றில் முன் அறிவிப்பு அமைப்புகள் அமைக்கப்படவிருக்கின்றன.
- மலையேற்ற வீரர்களிடையே இமாச்சலப் பிரதேசம் புகழ்பெற்று விளங்குகின்றது.

## பாரம்பரிய நிலைக்கான பரிந்துரைகள்

- காக்கிநாடாவிற்கு அருகில் கோரிங்கா வனவிலங்கு சரணாலயத்தில் உள்ள கோதாவரி சதுப்பு நிலக் காடுகளுக்கு யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தளத்திற்கான நிலையைப் பெறுவதற்கான நடைமுறையை ஆந்திரப் பிரதேச அரசு தொடங்கியுள்ளது.
- கோரிங்கா வனவிலங்கு சரணாலயமானது 24 மர இனங்களுடன் இந்தியாவில் உள்ள இரண்டாவது மிகப்பெரிய சதுப்பு நிலக் காடாகும்.

## சாதிக்பூர் சினௌலி

- இந்திய தொல்பொருள் ஆய்வு மையமானது உத்திரப் பிரதேசத்தின் சாதிக்பூர் சினௌலியைத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இடமாக அறிவிப்பதற்கான பணியைத் தொடங்கியுள்ளது.

- இந்த தளமானது கி.மு இரண்டாயிரம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் இருந்த பிந்தைய ஹரப்பா நாகரீகக் காலத்தில் இறந்தவர்களைப் புதைக்கும் மிகப்பெரிய இடமாக இருந்தது.
- மூன்று தேர்கள், கால்களையுடைய சவப்பெட்டிகள், கேடயங்கள், வாள் மற்றும் தலைக்கவசங்கள் ஆகியன இந்த இடத்திலிருந்துக் கண்டறியப்பட்ட சில பொருட்களாகும்.



## ஒடிசா வெள்ள வரைபடம்

- ஒடிசா மாநில முதலமைச்சர் நவீன் பட்நாயக் தனித்துவம் மிக்க ஒரு வெள்ளப் பேரிடர் வரைபடத்தை வெளியிட்டார்.
- இது சிறந்த முறையில் வெள்ள மேலாண்மையை மேற்கொள்ள அந்த மாநிலத்திற்கு உதவும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
- இந்த வரைபடமானது 2011-ஆம் ஆண்டிலிருந்து 2018-ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் செயற்கைக் கோள் மூலம் எடுக்கப்பட்ட படத்தின் மூலம் வெள்ளப் பெருக்கு ஏற்படும் பகுதிகள் குறித்த தரவுகளைக் கொண்டிருக்கும்.
- ஒடிசாவிற்கான வெள்ளப் பேரிடர் மண்டலம் மீதான ஆய்வை ஹைதராபாத்தில் உள்ள இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (Indian Space Research Organisation - ISRO) தேசியத் தொலைதூர உணர்வு மையம் மேற்கொண்டது.

## நிப்பான் அறக்கட்டளை

- மணிப்பூரின் தலைநகரான இம்பாலுக்கு அருகில் சிவப்புக் குன்று எனும் இடத்தில் அமைந்துள்ள அமைதி அருங்காட்சியகத்திற்கு நிப்பான் அறக்கட்டளை நிதியளித்துள்ளது.
- இரண்டாம் உலகப் போரின்போது நடைபெற்ற மிகக் கடுமையான போர்களில் ஒன்றான இம்பால் போரின் 75-வது நினைவு தினத்தைக் குறிப்பதற்காக இந்த நிதி வழங்கப்பட்டது.
- 1944-ஆம் ஆண்டு, மார்ச் மாதம் முதல் ஜுன் மாதம் வரை இம்பால் மற்றும் கோஹிமாவைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஜப்பானைச் சேர்ந்த வீரர்கள் சுபாஷ் சந்திர போஸின் இந்திய தேசிய இராணுவம் மற்றும் ஆங்கிலப் படைகளுடன் போரிட்டனர்.

- இந்தப் போரின் 50-வது நினைவு தினத்தைக் குறிப்பதற்காக 1994-ல் சிவப்புக் குன்று எனும் இடத்தில் ஜப்பானியப் போர் நினைவகம் கட்டப்பட்டது.

## புகையில்லாத சமையலறை



- சமையலறையில் புகையில்லாதச் சூழலை அமைக்கும் நோக்கம் கொண்ட ஒரு திட்டத்தை மகாராஷ்டிரா அரசு அறிவித்துள்ளது.
- இத்திட்டம் "சுல்லா அற்ற மற்றும் புகையற்ற மகாராஷ்டிரா" என்று பெயரிடப்பட்டுள்ளது. சுல்லா என்பது விறகு கொண்டு பயன்படுத்தப்படும் ஒரு வகை அடுப்பாகும்.
- இது எந்தவொரு திரவ பெட்ரோலிய வாயு விநியோகத் திட்டம் அல்லது உஜ்வாலா ஆகிய திட்டங்களின் கீழ் பயனடையாதப் பெண்களை இலக்காகக் கொண்டிருக்கின்றது.

## பூரி ஜெகன்நாத்


- ஒவ்வொரு ஆண்டும் ஸ்ரீஜெகன்நாத் ஆலயத்தில் உள்ள தெய்வங்களின் நீராடும் சடங்குமுறை ஒடிசாவின் பூரியில் சமீபத்தில் அனுசரிக்கப்பட்டது.



- இது ஸ்னனா யாத்திரை என்று அழைக்கப்படுகின்றது. இது இந்து மாதமான ஜெயிஸ்தாவின் போது முழு நிலவு நாளன்று அனுசரிக்கப்படுகின்றது.
- மேலும் இது ஸ்ரீஜெகன்நாத் தெய்வத்தின் பிறந்த தினமாகவும் கருதப்படுகின்றது.
- இந்த விழா பெரும்பாலும் பூரி ஜெகன்நாத் ஆலயத்தின் வருடாந்திர ரத யாத்திரைத் திருவிழாவிற்கு முன்பு நடைபெறுகின்றது.

## போலாவரம் திட்டம் நீட்டிப்பு

- கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் பல பயன்பாடு கொண்ட போலாவரம் நீர்ப்பாசனத் திட்டக் கட்டமைப்புப் பணிகளுக்கான அனுமதி மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தினால் 2 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.
- இது ஆந்திரப் பிரதேசத்தின் மேற்கு கோதாவரி மாவட்டம் மற்றும் கிழக்கு கோதாவரி மாவட்டம் ஆகியவற்றில் பாயும் கோதாவரி நதியில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது.
- இதன் நீர்த்தேக்கங்கள் சத்தீஸ்கர் மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களின் பகுதிகளிலும் பரவியுள்ளன.
- இது 2014 ஆம் ஆண்டில் தேசியத் திட்டமாக அறிவிக்கப்பட்டது.
- இது 3 இலட்சம் ஹெக்டேர் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் அளிக்கும் என்றும் 960 மெகா வாட் திறன் கொண்டு நீர் மின் ஆற்றலை உற்பத்தி செய்யும் என்றும் 25 இலட்சம் மக்களுக்கு குடிநீர் அளிக்கும் என்றும் எதிர்பார்க்கப் படுகின்றது.



## காலேஸ்வரம் ஏற்று நீர்ப்பாசனத் திட்டம்

- ஜுன் 21 அன்று காலேஸ்வரம் ஏற்று நீர்ப் பாசனத் திட்டமானது (KLIP - Kaleshwaram Lift Irrigation Project) தெலுங்கானா மாநில முதலமைச்சர் K. சந்திரசேகர் ராவால் தொடங்கி வைக்கப்பட்டது.
- உலகின் மிகப்பெரிய மற்றும் பலபடி நிலை கொண்ட இந்த பல பயன்பாட்டு ஏற்று நீர்ப்பாசனத் திட்டமானது கோதாவரி நதியின் குறுக்கேக் கட்டப்பட்டுள்ளது.
- KLIP ஆனது நீரை அரை கிலோமீட்டர் உயரத்திற்கு ஏற்றம் செய்யும்.
- இது மிகக்குறுகிய காலத்தில் முடிக்கப் பெற்ற இதே வகையைச் சேர்ந்த உலகின் பெரிய திட்டமாகக் கருதப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| THE LONGEST AND BIGGEST IRRIGATION SYSTEM | Total number of lifts 20 | New reservoirs 20 | Live storage 147.71 TMC |
| Total length 1,832 km | Total number of pump houses 22 | Old and excising reservoirs 5 | Highest pump capacity 139 mw |
| Total gravity canal 1,531 km | Total number of pumps 120 | Live storage 147.71 TMC | Per day 2 TMC water can be lifted, by far the biggest |
| Total tunnel length 203 (not single tunnel) | Power requirement 5,512 MW (2 TMC) | Highest pump capacity 139 mw | Highest power consumption scheme, requires about 7.7 giga watts (7,700 mw) |
| Pressure pipe line 98 km | Power requirement 7,700 MW (3 TMC) | Old and excising reservoirs 5 | |

## அம்மா வோடித் திட்டம் நீட்டிப்பு – ஆந்திரப் பிரதேசம்

- அரசு மற்றும் தனியார் கல்லூரிகள் ஆகியவற்றிலும் உறைவிடப் பள்ளிகள் மற்றும் விடுதிகள் ஆகியவற்றிலும் பயிலும் இடைநிலை மாணவர்களுக்கும் அம்மா வோடித் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளதாக ஆந்திரப் பிரதேச மாநில முதலமைச்சர் அறிவித்துள்ளார்.
- அம்மா வோடித் திட்டத்தின் கீழ், தம்முடைய குழந்தைகளைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு அனுப்பும் ஒவ்வொரு தாய்மார்களுக்கும் வருடாந்திர நிதியுதவியாக ரூ.15,000 அளிக்கப்படவிருக்கின்றது.

## சிந்து தர்ஷன் திருவிழா

- 2019 ஆம் ஆண்டின் சிந்து தர்ஷன் திருவிழாவின் 23-வது பதிப்பானது காஷ்மீரின் லே என்ற பகுதியில் உள்ள சிந்து காட் ஷேய் என்ற இடத்தில் அனுசரிக்கப்பட்டது.
- 1997 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இத்திருவிழா முதன்முறையாக அனுசரிக்கப்பட்டது.
- இது இந்தியாவின் ஒற்றுமை, அமைதியாக வாழ்தல், மத நல்லிணக்கம் மற்றும் நாட்டின் வலிமையான வீரர்களுக்கு மரியாதை செலுத்துதல் ஆகியவற்றின் குறியீடாக சிந்து நதியை அடையாளப் படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



## மராத்தா இட ஒதுக்கீடு

- சமூக மற்றும் பொருளாதார ரீதியிலான பிற்படுத்தப்பட்டோர் சட்டம் 2018 என்ற சட்டத்தின் கீழ் மராத்தாச் சமூகத்தினருக்கு இட ஒதுக்கீடு அளிப்பதற்கான மகாராஷ்டிரா அரசின் முடிவை மும்பை உயர் நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.
- ஆனால் இச்சமூகத்திற்கு மாநில அரசால் வழங்கப்பட்ட 16 சதவிகித இட ஒதுக்கீடு "நியாயமற்றது" (நீதிக்கு முரணானது) என்று கூறியுள்ளது.
- உயர் நீதிமன்றம் கல்விக்கு 12 சதவிகித இட ஒதுக்கீட்டையும், அரசு வேலைக்கு 13 சதவிகித இட ஒதுக்கீட்டையும் அளித்து முந்தைய இட ஒதுக்கீட்டு சதவிகிதத்தைக் குறைத்துள்ளது.
- கூடுதலாக வழங்கப்பட்ட 12-13 சதவிகித மராத்தா இட ஒதுக்கீடானது, அம்மாநிலத்தின் மொத்த இட ஒதுக்கீட்டை 64–65 சதவிகிதம் வரை உயர்த்தவுள்ளது. இந்த இட ஒதுக்கீடானது, இந்திரா சௌகானி வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள 50 சதவிகித இட ஒதுக்கீட்டை விடவும் அதிகமாக உள்ளது.

## ஜெய்ப்பூர் காலணி கொரியா

- தென் கொரியத் தூதர் பாங் கில் ஷின் மற்றும் ஜெய்ப்பூரைச் சேர்ந்த பகவான் மகாவீர் விக்லாங் சஹாயாதா சமிதி (BMVSS - Bhagwan Mahaveer Viklang Sahayata Samiti) ஆகியோர் இணைந்து "ஜெய்ப்பூர் காலணி கொரியா" என்ற முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளனர்.
- செயற்கை உறுப்புகள், செயற்கைக் கைகள், முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்டிருப்பதை மையமாகக் கொண்ட தட்டைப் பாதங்கள் ஆகியவற்றை அமைப்பதற்காக மருத்துவத் தொழில்நுட்ப வணிகத்துடன் கொரியா இணைந்துள்ளது.
- 1975-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட BMVSS அமைப்பு 1.78 மில்லியன் மாற்றுத் திறனாளிகளுக்கும் மேல் மறுவாழ்வு அளிக்கும் உலகின் மிகப்பெரிய அமைப்பாகும்.
- இது மாற்றுத் திறனாளிகளுக்கு செயற்கை உறுப்புகள், இடுக்கிகள் மற்றும் பிற உபகரணங்களை இலவசமாக வழங்குகின்றது.
- ஜெய்ப்பூர் காலணி என்பது முழங்காலுக்குக் கீழே ஊனமுடன் இருப்பவர்களுக்கு இரப்பரை அடிப்படையாகக் கொண்ட நீடித்த மற்றும் எடை குறைவான செயற்கைக் காலாகும்.



### நாகாலாந்தின் தேசியக் குடிமக்கள் பதிவேடு

- அசாமில் செயல்படுத்தப்பட்டதைப் போன்று தேசியக் குடிமக்கள் பதிவேட்டின் திருத்தப்பட்ட பட்டியலைத் தயாரிக்க நாகாலாந்து மாநில அரசு முடிவு செய்துள்ளது.
- இது நாகாலாந்து பூர்வகுடி மக்களின் பதிவேடு என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இது அனைத்துப் பூர்வகுடி மக்களின் முக்கியப் பட்டியலாகக் கருதப்படுகின்றது. இது பூர்வகுடி மக்களுக்குப் போலியான சான்றிதழ்கள் வழங்கப்படுவதை ஆய்வு செய்யும்.



### முதலாவது வலிமையான கேரளா

- மத்திய அரசு, கேரள அரசு மற்றும் உலக வங்கி ஆகியவை இணைந்து "முதலாவது வலிமையான கேரளா" என்ற திட்டத்திற்கு 250 மில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பிலான கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- இது இயற்கைப் பேரிடர்கள் மற்றும் பருவநிலை மாற்றம் ஆகியவற்றின் தாக்கங்களுக்கு எதிராக வலிமையான கேரளாவை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது பசுமையான மற்றும் வலிமையான கேரளாவைக் கட்டமைக்கும் நோக்கம் கொண்ட "மீள்கட்டமைப்பு கேரள வளர்ச்சித் திட்டம்" என்ற கேரளாவின் திட்டத்திற்கு ஆதரவளிக்க எண்ணும் மத்திய அரசின் ஆதரவின் ஒரு பகுதியாகும்.

## பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

### கரம்பீர் சிங் – 24வது கடற்படை தலைமைத் தளபதி

- கடற்படைத் தலைவரான அட்மிரல் கரம்பீர் சிங் 24வது கடற்படைத் தலைமைத் தளபதியாகப் பொறுப்பேற்றார். இதற்கு முன்பு அட்மிரல் சுனில் லம்பா கடற்படைத் தலைமைத் தளபதியாக இருந்தார்.
- விசாகப்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் கடற்படையின் கிழக்குக் கடற்படையின் கட்டளையிடும் அதிகாரியாக (தளபதியாக) அட்மிரல் கரம்பீர் பணியாற்றினார்.



- தலைமைத் தளபதியின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகள் அல்லது 62 வயதைப் பூர்த்தி செய்யும் வரை, இவற்றில் எது முதலில் வருகிறதோ அதுவரையில் அப்பதவியில் அவர் இருப்பார்.

## கண்காப்பு விமானம் – அதிகாரி மோகனா சிங்

- விமானப் படை அதிகாரியான மோகனா சிங் என்பவர் மேம்படுத்தப்பட்ட அதிவேக கண்காணிப்பு விமானத்தில் பறந்த முதலாவது பெண் போர் விமானியாக உருவெடுத்துள்ளார்.
- இவர் மேற்கு வங்காளத்தில் உள்ள கலைக்குண்டா விமானப் படைத் தளத்தில் இச்சாதனையை நிகழ்த்தினார்.



- ஒரு வாரத்திற்கு முன்பு, விமானப் படை அதிகாரியான பாவனா காந்த் என்பவர் மிக்-21 பைசன் ரக விமானத்தினை இயக்கும் முழு நேர அதிகாரியாக உருவெடுத்தார்.

## ஜோன் மிரோ விருது 2019

- இந்திய சமகாலக் கலைஞரான நளினி மலானி என்பவர் 2019 ஆம் ஆண்டிற்கான 7-வது ஜோன் மிரோ விருதை வென்றுள்ளார்.
- உலகில் மிகவும் புகழ்பெற்ற இந்த சமகாலக் கலை விருதை வென்ற முதலாவது இந்தியக் கலைஞராக இவர் உருவெடுத்துள்ளார்.
- இந்த விருதானது பார்சிலோனாவைச் சேர்ந்த பண்டாசியோ ஜோன் மிரோவால் வழங்கப்படுகின்றது.
- "உலகம் முழுவதுமுள்ள அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்ட மற்றும் ஒதுக்கப்பட்ட நபர்களுக்கு அதிலும் மிகவும் குறிப்பாகப் பெண்களுக்கு" குரல் கொடுப்பதற்கான ஒரு பணியில் இவரது வியக்கத்தகுப் பணி அமைப்புக்காக இவ்விருது இவருக்கு வழங்கப்பட்டது.
- இது ஸ்பெயினைச் சேர்ந்த ஓவியர் மற்றும் சிற்பியான ஜோன் மிரோவின் வாழ்க்கை மற்றும் பணி ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருக்கும் ஆய்வு, கண்டுபிடிப்பு, அர்ப்பணிப்பு மற்றும் சுதந்திரம் ஆகியவற்றை எடுத்துக் காட்டும் கலைஞர்களின் தற்போதையப் பணியை அங்கீகரிக்கின்றது.

## மெக்ஸிகோ நாட்டின் வெளிநாட்டவர்களுக்கான உயரிய குடிமகன் விருது

- முன்னாள் இந்திய குடியரசுத் தலைவரான பிரதிபா பாட்டீலுக்கு "ஆர்டன் மெக்ஸிகானா டெல் அகுயிலா அஸ்டெகா" (அஸ்டெக் ஈகீள் ஆர்டர்) எனும் மெக்ஸிகோ நாட்டு அரசால் வெளிநாட்டவருக்கு வழங்கப்படும் உயரிய குடிமகன் விருது வழங்கப்பட்டுள்ளது.
- S.ராதாகிருஷ்ணனுக்கு அடுத்ததாக இந்த கௌரவத்தைப் பெறும் இரண்டாவது இந்தியக் குடியரசுத் தலைவர் இவரேயாவார்.
- பிரதிபா பாட்டில் 2007-2012 ஆம் ஆண்டுகளில் குடியரசுத் தலைவராக இருந்த முதல் பெண் ஆவார்.

## தேசிய பாதுகாப்பு ஆலோசகர்

- ஓய்வு பெற்ற இந்திய காவல் பணி அதிகாரியான அஜித் தோவலை இந்திய அரசானது தேசிய பாதுகாப்பு ஆலோசகராக மீண்டும் நியமித்துள்ளது.
- இவருக்கு காபினெட் அமைச்சருக்கு நிகரான தகுதி வழங்கப்பட்டுள்ளது.
- முன்னுரிமை வரிசை அட்டவணையில் அமைச்சருக்கு நிகரான தகுதி நிலையைப் பெற்ற முதல் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இவர் உருவெடுத்துள்ளார்.



- இவரின் முந்தைய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பணிக் காலத்தில் இவருக்கு இணை அமைச்சர் நிலைக்கு நிகரான நிலை வழங்கப்பட்டிருந்தது.
- இந்த தேசிய ஆலோசகர் பதவியானது 1998 ஆம் ஆண்டு அடல் பிஹாரி வாஜ்பாய் பிரதமராக இருந்த போது உருவாக்கப்பட்டதாகும்.
- இந்திய வெளியுறவுப் பணி அதிகாரியான பிரஜேஷ் மிஸ்ரா இந்தியாவின் முதல் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஆவார்.
- 1968 ஆண்டின் IPS அதிகாரியான அஜித் தோவல் உளவுத் துறையின் இயக்குநராக 2005 ஆம் ஆண்டு பணி ஓய்வு பெற்றார்.

## உலகளாவியத் தலைமையாளர் விருது

- இந்தியாவில் பிறந்தவரும் கூகுள் நிறுவனத் தலைமை நிர்வாக அதிகாரியுமான சுந்தர் பிச்சை மற்றும் NASDAQ-ன் தலைவரான அதேனா ப்ரைடுமேன் ஆகிய இருவரும் USIBC-ன் புகழ்பெற்ற 2019 ஆம் ஆண்டிற்கான உலகளாவியத் தலைமையாளர் விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இந்த விருதானது இரு நாடுகளுக்கும் இடையே வணிக மற்றும் தொழில்துறை வளர்ச்சியை ஊக்குவிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கும் அமெரிக்கா மற்றும் இந்தியாவில் உள்ள சிறந்தப் பெருநிறுவன நிர்வாகிகளை அங்கீகரிக்கிறது.
- வாஷிங்டனைச் சார்ந்த ஆலோசனைக் குழுவான அமெரிக்க – இந்தியா வர்த்தகக் குழுமமானது (US India Business Council-USIBC) இந்த விருதுகளை வழங்குகின்றது.
- இந்த விருதானது 2007 ஆம் ஆண்டிலிருந்து வருடந்தோறும் வழங்கப்பட்டு வருகின்றது.

## யோகா விருதுகள்

- தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் அந்தராஷ்ட்ரிய யோகா திவாஸ் ஊடக மாநாட்டு விருதுகளை ஏற்படுத்தி இருக்கின்றது.
- இவ்விருது ஜீன் 21-ம் தேதியன்று நடைபெறும் சர்வதேச யோகா தின நிகழ்ச்சியின்போது யோகாவைப் பரவச் செய்வதில் உதவிட ஊடகத்தை ஊக்குவித்திட எண்ணுகின்றது.
- மொத்தத்தில் 33 விருதுகள் வழங்கப்பட இருக்கின்றன. அவற்றில் மூன்று முக்கிய

முறைகளான அச்சு, வானொலி மற்றும் தொலைக்காட்சி ஆகியவற்றிற்கு ஒவ்வொன்றிற்கும் 11 விருதுகள் வழங்கப்படும்.

- எட்டாவது பட்டியல் மொழிகளின் அனைத்து சக மொழிகளிலும் ஆங்கிலத்திலும் பணிபுரியும் ஊடக நிறுவனங்கள் இவ்விருதினைப் பெறுவதற்குத் தகுதியுடையவையாகும்.

## ஐ.நா. நிலநடுக்கோட்டு விருது

- 2019 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் நிலநடுக்கோட்டு விருதை தெலுங்கானா மாநில தக்காண வளர்ச்சி சமூகத்தின் பெண்கள் அமைப்புகள் பெற்றுள்ளன.
- இந்தப் பெண் விவசாயிகள் சங்காரெட்டி மாவட்டத்தின் மிக அதிகமாக மழை பெய்யும் கிராமங்களில் தங்களது சொந்த விதை வங்கிகளை ஏற்படுத்திக் கொண்டும் திணை வகைகளைப் பயிரிட்டுக் கொண்டும் இருக்கின்றனர்.
- கால நிலை மாற்றம் மற்றும் நீடித்த வளர்ச்சி ஆகியவற்றிற்கு உள்ளூர் சார்ந்த மற்றும் இயற்கை முறையிலான தீர்வுகளை அளித்து தலைசிறந்த ஆதாரமாக விளங்குவதற்காக இந்த அமைப்புக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

### *இந்த விருதைப் பற்றி*

- இந்த விருது ஐக்கிய நாடுகள் வளர்ச்சி திட்ட அமைப்பிற்குள் செயல்படும் நிலநடுக்கோட்டு முன்னெடுப்பினால் வழங்கப்படுகின்றது.
- இந்த விருது பல்லுயிர்ப் பெருக்கத்தின் பாதுகாப்பு மற்றும் நீடித்த பயன்பாடு ஆகியவற்றின் மூலம் வறுமையைக் குறைக்கும் சமூக முயற்சிகளுக்கு உலக அளவில் அங்கீகாரத்தை அளிப்பதற்காக இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படுகின்றது.


## புனைவுக் கதைக்கான பெண்கள் பரிசு

- அமெரிக்காவைச் சேர்ந்த தயாரி ஜோன்ஸ் என்பவர் "அமெரிக்கத் திருமணம்" எனும் தனது புனைவுக் கதைக்காக புனைவுக் கதைக்கான பெண்கள் பரிசினை வென்றுள்ளார்.
- இந்தப் புத்தகமானது இளம் ஆப்பிரிக்க அமெரிக்கருக்கு வழங்கப்பட்ட தவறான தண்டனையைப் பற்றியும் அது அவரின் திருமணத்தை எவ்வாறு பாதிக்கின்றது என்பதைப் பற்றியும் விளக்குகின்றது.
- கடந்த வருடம் புக்கர் பரிசு பெற்ற அன்னா பர்ன்ஸ் எழுதிய "மில்க் மேன்" மற்றும் முன்னாள் புக்கர் பரிசு பெற்ற பாட் பார்க்கரின் புதிய புதினமான பெண்களின் மௌனம் ஆகியவையும் இவ்விருதிற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

### *புனைவுக் கதைக்கான பெண்கள் பரிசு*


- உலகெங்கிலும் பெண்களால் எழுதப்படும் புனைவுக் கதைகளைப் பரந்த அளவு வாசகர்களுக்குக் கொண்டுச் சென்று கொண்டாடுவதற்காகவும் ஊக்குவிப்பதற்காகவும் வழங்கப்படும் இந்த பரிசானது 1996 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- முந்தைய வருடத்தில் ஐக்கியப் பேரரசில் வெளியிடப்பட்ட மற்றும் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட முழு நீள அசல் புதினங்களின் பெண் எழுத்தாளர்களுக்கு வருடந்தோறும்

இப்பரிசு வழங்கப்படுகின்றது.




## அமிதவ் கோஷ்

- இந்தியாவில் முன்னிலையில் உள்ள சமகால ஆங்கில எழுத்தாளர்களில் ஒருவரான அமிதவ் கோஷ் என்பவருக்கு 2018 ஆம் ஆண்டின் ஞானபீட விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இலக்கியத்தில் அவருடைய தலைசிறந்தப் பங்களிப்பிற்காக இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.



- இந்த விருது கோபால கிருஷ்ண காந்தியினால் வழங்கப்பட்டது.
- இவர் இதற்கு முன்பு "நிழல் வரிகள்" (1998) என்ற தன்னுடைய நாவலுக்காக சாகித்ய அகாதமி விருதைப் பெற்றுள்ளார்.
- கண்ணாடி மாளிகை, பசி அலை, இபிஸ் என்ற மூன்று நாவல் தொகுதியான "ஸீ ஆப் பாப்பீஸ்" ஆகியவை இவருடைய இதரப் படைப்புகளாகும்.

*ஞானபீட விருது பற்றி*

- ஞானபீட விருது இலக்கியம் மற்றும் ஆராய்ச்சி அமைப்பான பாரதிய ஞானபீடம் என்ற அமைப்பினால் வழங்கப்படுகின்றது.
- இது 1944 ஆம் ஆண்டில் சாகு சாந்தி பிரசாந்த் ஜெயின் என்பவரால் ஏற்படுத்தப்பட்டது.
- முதலாவது ஞானபீட விருது 1965 ஆம் ஆண்டில் G. சங்கரா குரூப் (மலையாளம்) என்பவருக்கு வழங்கப்பட்டது.
- இந்த வருடாந்திர விருது ஆங்கிலம் மற்றும் இந்திய அரசியலமைப்பின் எட்டாவது பட்டியலில் உள்ள இந்திய மொழிகளில் எழுதும் இந்திய எழுத்தாளர்களுக்கு மட்டும் வழங்கப்படுகின்றது.
- மூர்த்தி தேவி விருது மற்றும் நவலேகான் விருது ஆகியவை இந்த அமைப்பினால் வழங்கப்படும் இதர விருதுகளாகும்.

## சாகித்ய அகாதமி விருதுகள்

- சாகித்ய அகாதமி நிறுவனம் 2019 ஆம் ஆண்டிற்கான பால் சாகித்ய புரஸ்கார் விருதிற்காக 22 எழுத்தாளர்களையும் 2019 ஆம் ஆண்டின் யுவ புரஸ்கார் விருதிற்காக 23 எழுத்தாளர்களையும் தேர்ந்தெடுத்துள்ளது.
- மைதிலி மொழிக்கான பால் சாகித்ய புரஸ்கார் மற்றும் யுவ புரஸ்கார் விருதுகள் பின்னாளில் அறிவிக்கப்படவிருக்கின்றன.
- பால் சாகித்ய புரஸ்காரானது விருது வழங்கப்படும் ஆண்டிற்கு முந்தைய ஆண்டுக் காலத்தில் (ஜனவரி, 01, 2003 – டிசம்பர் 31, 2017) முதன்முறையாக வெளியிடப்பட்ட புத்தகங்களுக்கு வழங்கப் படுகின்றது.
- இது எட்டாவதுப் பட்டியலில் உள்ள அனைத்து மொழிகளுக்கும் ஆங்கில மொழிக்கும் வழங்கப்படுகின்றது.
- யுவ புரஸ்கார் என்பது ஆங்கிலம் மற்றும் இராஜஸ்தானி ஆகிய மொழிகளுடன் சேர்த்துப் பட்டியலிடப்பட்ட 22 மொழிகள் என மொத்தம் 24 மொழிகளில் ஏதாவது ஒரு தலைசிறந்தப் பங்களிப்பை வழங்கிய இளம் எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் ஒரு வருடாந்திர இலக்கிய விருதாகும்.
- 2011 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட யுவ புரஸ்கார் விருது 35 வயதிற்குட்பட்ட இளம் எழுத்தாளர்களை அங்கீகரிக்கின்றது.
- தமிழ்நாட்டிலிருந்து 2019 ஆம் ஆண்டிற்கான யுவ புரஸ்கார் விருதிற்கு எழுத்தாளர் சாமிநாதனும் பால சாகித்ய புரஸ்கார் விருதிற்குத் தேவி நாச்சியப்பனும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- 2016 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட "வால்" என்ற ஒரு கவிதைத் தொகுப்பிற்காக சபரிநாதனுக்கும் குழந்தை இலக்கியங்களில் நாச்சியப்பனின் பங்களிப்பிற்காக அவருக்கும் இவ்விருதுகள் வழங்கப் படுகின்றன.

## அக்சயப் பாத்திரம் – BBC விருதுகள்

- அக்சயப் பாத்திரம் நிறுவனத்திற்கு BBC உலக சேவையின் "உலகளாவிய சாம்பியன்

விருது" வழங்கப்பட்டுள்ளது.

- இது இந்தியாவில் உலகின் மிகப்பெரிய பள்ளி உணவுத் திட்டத்தினை நடத்தும் இலாப நோக்கமற்ற நிறுவனமாகும்.
- இந்த விருதானது பிரிஸ்டோலில் நடைபெற்ற BBC உணவு மற்றும் வேளாண் விருதுகள் நிகழ்ச்சியில் வழங்கப்பட்டது.
- இவ்விருதானது உலகின் உற்பத்தி, செயலாக்கம், நுகர்வு அல்லது சிறந்த உணவு ஆகியவற்றிற்காக அதன் செயல்முறைகளை மாற்றும் நபர் அல்லது திட்டத்தினை அங்கீகரிக்கிறது.




## நிஷான் இசுசுதீன் தனித்தன்மை வாய்ந்த ஆட்சிக்கான விருது

- பிரதமர் நரேந்திர மோடிக்கு மாலத்தீவு அரசால் புகழ்பெற்ற நிஷான் இசுசுதீன் தனித்தன்மை வாய்ந்த ஆட்சிக்கான விருதானது வழங்கப்பட்டது.
- இந்த விருதானது இருநாடுகளுக்கும் இடையிலான நீண்டகால மற்றும் இணக்கணமான உறவுகளை உறுதிப்படுத்த இவர் செய்த சேவைகளை அங்கீகரிப்பதற்காக வழங்கப்பட்டுள்ளது.
- இவ்விருதானது மாலத்தீவு அரசால் வெளிநாட்டுப் பிரமுகர்களுக்கு வழங்கப்படும் மிக உயர்ந்த விருதாகும்.



## மாத்ரி ஸ்ரீ விருதுகள்

- பத்திரிக்கைத் துறையில் தங்களது பங்களிப்பினைச் சிறப்பாக செலுத்தியதற்காக அச்சு மற்றும் மின்னணு ஊடகத்தைச் சேர்ந்த 29 பத்திரிக்கையாளர்களுக்கு மாத்ரி ஸ்ரீ ஊடக விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.
- மாத்ரி ஸ்ரீ ஊடக விருதுகள் நெருக்கடி நிலைக் காலத்தின் போது ஏற்படுத்தப்பட்டன.
- இதன் முதலாவது விருது லாலா ஜகத் நாராயண் என்ற பத்திரிக்கையாளருக்கு வழங்கப்பட்டது.

## யோகா மேம்பாட்டு விருது

- யோகா மேம்பாடு மற்றும் அதன் முன்னேற்றத்திற்கான சிறந்த பங்களிப்பிற்காக வழங்கப்படும் 2019 ஆம் ஆண்டிற்கான பிரதமரின் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
- இந்த விருதுகளானது யோகாவை மேம்படுத்துவதற்காகவும் அதை முன்னேற்றுவதற்காகவும் அளிக்கப்பட்ட சிறந்த பங்களிப்பிற்காக வழங்கப்படுகின்றது.
- குஜராத்தைச் சேர்ந்த லைப் மிஷனின் சுவாமி ராஜாஸ்ரீ முனி, இத்தாலியின் அன்டோனீட்டா, பீகாரின் யோகாப் பள்ளி, ஜப்பானைச் சேர்ந்த முங்கர் மற்றும் ஜப்பான் யோகா நிகேதன் ஆகியோர் இவ்வருட விருதினைப் பெறும் நபர்களாவர்.

PM Awards for

*Outstanding Contribution for promotion & Development of Yoga -2019.*

| Award/ Category | Individual | Organization |
|---|---|---|
| National | Swam Raja Rishi Muni, Life of Mission | Bihar School of Yoga, Munger. |
| Interna-tional | Antonietta Rozzi, Italy | Japan Yoga Niketan, Japan. |

## ICAO-க்கான இந்திய பிரதிநிதி

- கனடாவின் மாண்டிரியலில் உள்ள சர்வதேச உள்நாட்டு விமானப் போக்குவரத்து நிறுவனக் குழுவிற்கான (International Civil Aviation Organisation-ICAO) இந்தியாவின் பிரதிநிதியாக மூத்த அதிகாரியான ஷெபாலி ஜீனிஜா நியமிக்கப்பட்டுள்ளார்.
- ICAO ஆனது ஐக்கிய நாடுகளின் ஒரு சிறப்பு நிறுவனமாகும்
- ICAO ஆனது விமானப் பயணங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் ஆகியவற்றுடன் தொடர்புடையது ஆகும்.
- இது 1944 ஆம் ஆண்டில் சர்வதேச உள்நாட்டுப் போக்குவரத்து ஒப்பந்தத்தின் (சிகாகோ ஒப்பந்தம்) மூலம் உருவாக்கப்பட்டது.

## இரஞ்சித் சிங் சிலை - லாகூர்

- மகாராஜா இரஞ்சித் சிங்கின் 180வது நினைவு தினத்தின் போது, இவருடைய சிலை லாகூர் கோட்டையில் திறக்கப்பட்டது.
- மகாராஜா இரஞ்சித் சிங் என்பவர் பஞ்சாப்பின் ஒரு புகழ்பெற்ற ஆட்சியாளர் ஆவார்.
- இச்சிலைத் திறப்பு விழாவிற்காக ஏறத்தாழ 500 நபர்கள் வாகா எல்லையைக் கடந்துச் சென்றனர்.
- இதன் முக்கிய விழாவானது குருத்வாரா தேரா சாஹிப்பில் நடைபெறவிருக்கின்றது.



## சைரஸ் பூனாவாலா – ஆக்ஸ்போர்டு கௌரவப் பட்டம்

- செரம் இந்தியா நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் சைரஸ் பூனாவாலா ஆவார்.
- உயிர்காக்கும் மருந்து மற்றும் மக்கள் சேவை போன்ற துறைகளில் இவருடையப் பணிக்காக, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்திலிருந்து கௌரவப் பட்டத்தை இவர் பெற்றுள்ளார்.
- 1966 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட செரம் நிறுவனம் அதிக அளவிலான வீரியத்தைக் கொண்ட உயிர்காக்கும் மருந்துகளைத் தயாரிக்கும் உலகின் ஒரு மிகப்பெரிய மருந்துத் தயாரிப்பு நிறுவனமாகும்.
- இதன் தலைமையகம் – புனே, இந்தியா.



## குடியரசுத் தலைவர் விருது - நால்கோ

- சமூக வளர்ச்சியில் பெருநிறுவன சமூகப் பொறுப்பு நிதியை நன்முறையில் பயன்படுத்தியதற்காக குடியரசுத் தலைவர் விருதிற்கு ஒடிசாவில் உள்ள நால்கோ நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- 2015 ஆம் ஆண்டில், இந்த நிறுவனம் "பேட்டி பச்சாவோ பேட்டி பதாவோ" என்ற திட்டத்தைப் போன்றே "அலிஅலி ஜிகா" என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியது.

- இது அனுகுல் மற்றும் கோராபுட் மாவட்டங்களில் இருக்கும் 66 கிராமங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களைச் சேர்ந்த 8 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் 416 பெண் குழந்தைகளுக்கான கல்விக் கட்டணச் செலவுகளைச் செலுத்தியுள்ளது.

### வாழ்நாள் சாதனையாளர் விருது - மார்க் துலி

- ஐக்கிய இராஜ்ஜியம் - இந்தியா ஆகிய நாடுகளுக்கிடையேயான உறவில், தன்னுடையப் பங்களிப்பைச் செலுத்தியதற்காக இலண்டனில் நடைபெற்ற ஐக்கிய ராஜ்ஜியம் - இந்தியா விருதுகள் வழங்கும் விழாவில் புகழ்பெற்ற பிரிட்டிஷ் பத்திரிக்கையாளர் சர் மார்க் துலி என்பவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.
- இவர் புது தில்லியில் உள்ள பிபிசி நிறுவனத்தின் முன்னாள் தலைவர் ஆவார். இவருக்கு 1992 ஆம் ஆண்டில் பத்ம ஸ்ரீ விருதும் 2005 ஆம் ஆண்டில் பத்ம பூசண் விருதும் வழங்கப்பட்டது.

## விளையாட்டுச் செய்திகள்

### மனு பாக்கர் - ஒலிம்பிக்

- இந்தியாவைச் சேர்ந்த மனு பாக்கர் 2020 ஆம் ஆண்டில் டோக்கியோவில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக்கில் பெண்களுக்கான 10மீ துப்பாக்கிச் சுடுதலில் இந்தியாவின் சார்பாக பங்கேற்கும் தகுதியைப் பெற்றார்.
- இவர் முனிச்சில் நடைபெற்ற மூன்றாவது சர்வதேச துப்பாக்கிச் சுடுதல் கூட்டமைப்பின் உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் நான்காவது இடத்தைப் பிடித்துப் போட்டியை நிறைவு செய்துள்ளார்.
- சவுரப் சவுத்ரி மற்றும் அபிஷேக் வெர்மா ஆகியோர் முறையே தில்லி உலகக் கோப்பை மற்றும் பெய்ஜிங் உலகக் கோப்பைகளில் ஆண்களுக்கான 10மீ துப்பாக்கிச் சுடுதலில் பட்டங்களை வென்றதையடுத்து பெண்களுக்கான 10மீ துப்பாக்கிச் சுடுதலில் இந்தியாவின் முதலாவதுப் பதக்கத்தை பாக்கர் வென்றுள்ளார்.

### இந்திய ஓபன் சர்வதேசப் போட்டித் தொடர்

- குவஹாத்தியில் நடைபெற்ற இந்திய ஓபன் சர்வதேச குத்துச் சண்டைப் போட்டித் தொடரில் இந்தியா 12 தங்கம், 18 வெள்ளி மற்றும் 27 வெண்கலம் ஆகியவை உள்பட மொத்தம் 57 பதக்கங்களை வென்றுள்ளது.
- எம்சி மேரி கோம், சிவ தாபா, எல் சரிதா தேவி மற்றும் நமன் தன்வார் ஆகியோர் அவரவர்களுடைய இறுதிப் போட்டியில் தங்கப் பதக்கங்களை வென்றுள்ளனர்.
- இந்தப் போட்டித் தொடரில் மேரி கோமின் இரண்டாவது தங்கப் பதக்கம் இதுவாகும். இதற்கு முன்பு கடந்த ஆண்டு தேசியத் தலைநகரில் நடைபெற்ற போட்டியில் 48 கிலோ எடைப் பிரிவில் இவர் தங்கம் வென்றுள்ளார்.

## 400-வது கிராண்ட் ஸ்லாம் போட்டி

- ரோஜர் பெடரர் கிராண்ட் ஸ்லாம் போட்டியில் தனது 400-வது ஆட்டத்தை கேஸ்பெர் ருட்டுக்கு எதிராக விளையாடினார்.
- சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த இவர் இந்த மைல்கல்லை அடைந்த முதல் ஆண் அல்லது பெண் வீராக உருவெடுத்துள்ளார்.



- இந்தப் பட்டியலில் அதிக கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் விளையாடிய இரண்டாவது வீரராக செரினா வில்லியம்ஸ் உள்ளார்.
- ஜப்பானின் குருமி நராவை பிரெஞ்ச் ஓபன் போட்டியின் இரண்டாம் சுற்றில் தோற்கடித்த ஆட்டமானது செரினா வில்லியம்ஸின் 382வது போட்டியாகும்.
- நோவோக் ஜோகோவிக் மற்றும் ரபேல் நடால் ஆகியோர் அதிக கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் விளையாடிய மூன்றாவது மற்றும் நான்காவது வீரர்களாக உள்ளனர்.

## நிஹால் சரின் - 2800 எலோ புள்ளிகள் மதிப்பீடு

- இந்தியாவைச் சேர்ந்த நிஹால் சரின் FIDE மதிப்பீட்டுப் பட்டியலில் 2600 எலோ புள்ளிகளைப் பெற்ற உலகின் மூன்றாவது இள வயது வீரராக உருவெடுத்துள்ளார்.
- 14 வயதான இவர் கேரளாவைச் சேர்ந்தவராவார்.
- மேலும் இவர், 2009 ஆம் ஆண்டில் 15 வயதான பரிமாராஜன் நேகி புரிந்த சாதனையை முறியடித்த இந்தியாவின் இளம் வயது வீரராவார்.

***<u>இந்திய சதுரங்க தரவரிசை</u>***

- ஐந்து முறை உலக சாம்பியனான விஸ்வநாதன் ஆனந்த உலகளவில் 9 ஆம் இடத்தில் உள்ளார்.
- இவருக்கு அடுத்து 25 வது இடத்தில் பெண்டியாலா ஹரிகிருஷ்ணா உள்ளார்.
- விதித் குஜராத்தி, B அதிபன் மற்றும் கிருஷ்ணா சசிகிரண் ஆகியோர் முதல் 100 இடங்களில் உள்ள பிற இந்தியர்கள் ஆவர்.
- நிஹால் 240 ஆம் இடத்தில் உள்ளார்.

- நார்வேயைச் சேர்ந்த உலக சாம்பியனான மாக்னஸ் கார்ல்சன் உலகின் முதல் இடத்தில் தொடருகின்றார்.
- இந்தியாவின் கொனேரு ஹம்பி பெண்கள் வரிசையில் உலகளவில் 4-வது இடத்தில் உள்ளார்.
- துரோணாவள்ளி ஹர்கா 14வது இடத்தில் உள்ளார்.

## 20 வயதிற்கு உட்பட்ட யூரேசியன் தடகள சாம்பியன்ஷிப்

- கஜகஸ்தானின் அல்மாடி நகரில் 2 நாட்கள் நடைபெற்ற 20 வயதிற்கு உட்பட்டோருக்கான யூரேசியன் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய தடகள வீரர்கள் 5 தங்கப் பதக்கம் மற்றும் 3 வெள்ளிப் பதக்கங்களை வென்றனர்.
- தமிழ் நாட்டைச் சேர்ந்த ஸ்ரீகிரண் நந்தகுமார் ஆண்களுக்கான 300 மீட்டர் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார்.

| **வீரர்கள்** | **விளையாட்டு** | **பதக்கம்** |
|---|---|---|
| குரிந்தர் வீர்சிங் | 100 மீட்டர் | தங்கம் |
| விக்ராந்த் பஞ்சால் | 400 மீட்டர் | தங்கம் |
| ஸ்ரீகிரண் | 800 மீட்டர் | தங்கம் |
| அப்து ரசாக்<br>பிரிஸ்ஸில்லா டேனியல்<br>ப்ளோரன்ஸ் பர்லா<br>விக்ராந்த் பஞ்சால் | 4 × 400 மீட்டர் கலப்பு ஓட்டம் | தங்கம் |
| ரோஹித் யாதவ் | ஈட்டி எறிதல் | தங்கம் |
| அப்துல் ரஸாக் | 400 மீட்டர் | வெள்ளி |
| பிரிஸில்லா டேனியல் | 800 மீட்டர் | வெள்ளி |
| சாஹில் ஸில்வால் | ஈட்டி எறிதல் | வெள்ளி |

## UEFA சாம்பியன்ஷிப் - லிவர்பூல்

- டோட்டன்ஹாமை 2-0 என்ற கணக்கில் வீழ்த்தி லீவர்பூல் அணியானது 6 வது முறையாக ஐரோப்பாவின் சாம்பியனாக உருவெடுத்துள்ளது.
- முகமது சலா மற்றும் டிவோக் ஆரிகி ஆகியோர் தலா 2 கோல்கள் அடித்தனர்.



- கடந்த ஏழு ஆண்டுகளில் லிவர்பூல் அணிக்கு கிடைத்த முதல் டிராபி இதுவேயாகும்.

## ISSF உலகக் கோப்பை

- முனீச்சில் நடைபெற்ற சர்வதேச துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியாவானது 5 தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.
- மனுபக்கர் மற்றும் சவுரப் சவுத்ரி ஆகியோர் 10 மீட்டர் காற்று கைத் துப்பாக்கி கலப்புக் குழுப் பிரிவில் பட்டம் வென்றனர்.
- அஞ்ஜும் மவுட்கில் மற்றும் திவ்யனேஷ் சிங் பன்வார் ஆகியோர் 10 மீட்டர் காற்று துப்பாக்கி கலப்புக் குழுப் போட்டியில் தங்கம் வென்றனர்.
- இதர வெற்றியாளர்கள்
  - ஆபூர்வி சந்தெல்லா – மகளிருக்கான 10 மீட்டர் காற்றுத் துப்பாக்கி – தங்கம்
  - ரஹி சர்னோபாத் – மகளிருக்கான 25 மீட்டர் கைத் துப்பாக்கி – தங்கம்
  - சவுரப் சவுத்திரி – ஆடவருக்கான 10 மீட்டர் காற்று கைத் துப்பாக்கி - தங்கம்

## பலிதான் முத்திரை

- சர்வதேசக் கிரிக்கெட் குழு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்திடம் MS தோனியின் விக்கெட் கையுறைகளிலிருந்து இராணுவ முத்திரையை நீக்கிட கேட்டுக் கொண்டிருக்கின்றது.
- முன்னாள் இந்திய அணித் தலைவரான MS தோனி இந்திய துணை ராணுவ சிறப்புப் படைகளின் பலிதான் முத்திரையுடன் கூடிய விக்கெட் கையுறைகளை அணிந்தவராகக் காணப்பட்டார்.
- இது இங்கிலாந்தின் சவுதாம்ப்டனில் நடைபெற்ற தென் ஆப்பிரிக்காவிற்கு எதிரான இந்தியாவின் துவக்க ஆட்டத்தின் போது நிகழ்த்தப்பட்டது.
- பலிதான் முத்திரை என்பது போர்க்கள குத்துவாள் ஒன்றைக் கீழ்நோக்கிய நிலையில் கொண்டிருக்கும். மேலும் கத்தியின் பக்கவாட்டிலிருந்து மேல் நோக்கிய நிலையில் இரு இறக்கைகளும், அதன் குறுக்கு வெட்டில் பலிதான் என்ற வார்த்தையும் பொறிக்கப்பட்டு இருக்கும்.
- பலிதான் என்பதற்கு தியாகம் எனப் பொருள்

- தோனி தரைப்படை ராணுவத்தின் பாராசூட் பிரிவில் (வான்குடை மிதவைப் பிரிவு) ஒரு கௌரவ லெப்டினன்ட் கர்னல் ஆவார்.




## பிரெஞ்சு ஓபன்

- 2019 ஆம் ஆண்டின் பிரெஞ்சு ஓபனின் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஆஸ்லே பார்டியும் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் ஸ்பெயினைச் சேர்ந்த ரபேல் நடாலும் வெற்றி பெற்றுள்ளனர்.
- ரபேல் நடால் 12 வது முறையாக பிரெஞ்சு ஓபன் பட்டத்தைப் பெற்றுள்ளார்.
- ஆண்களுக்கான இரட்டையர் பிரிவில் ஜெர்மனியைச் சேர்ந்த கெவின் கிராவெய்ட்ஸ் மற்றும் ஆண்டிரியாஸ் மியஸ் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.
- பெண்களுக்கான இரட்டையர் பிரிவில் ஹங்கேரியைச் சேர்ந்த டைமா பாபோஸ் மற்றும் பிரெஞ்சைச் சேர்ந்த கிறிஸ்டினா மிலாடெனோவிக் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

*இப்போட்டியைப் பற்றி*

- பிரெஞ்சு ஓபன் போட்டியின் 123-வது பதிப்பு பாரிஸில் உள்ள ரோலாண்டு கேரோஸில் நடத்தப்பட்டது.
- இது ஆண்டின் இரண்டாவது டென்னிஸ் கிராண்ட் ஸ்லாம் போட்டியாகும்.
- இது வெளியரங்கில் களிமண் தரையில் விளையாடப்படுகின்றது.
- ஆஸ்திரேலியன் ஓபன், விம்பிள்டன் மற்றும் அமெரிக்க ஓபன் ஆகியவை ஆண்டின் இதர கிராண்ட் ஸ்லாம் போட்டிகளாகும்.
- 2019 ஆம் ஆண்டிற்கான இதன் இதர நிகழ்வுகள் மற்றும் வெற்றியாளர்கள் பின்வருமாறு

**Mixed Doubles**
Latisha Chan / Ivan Dodig
**Boys' Singles**
Holger Vitus Nødskov Rune
**Girls' Singles**
Leylah Annie Fernandez
**Boys' Doubles**
Matheus Pucinelli de Almeida / Thiago Agustín Tirante
**Girls' Doubles**
Chloe Beck / Emma Navarro
**Legends Under 45 Doubles**
Sébastien Grosjean / Michaël Llodra
**Women's Legends Doubles**
Nathalie Dechy / Amélie Mauresmo
**Legends Over 45 Doubles**
Sergi Bruguera / Goran Ivanišević

**Wheelchair Men's Singles**
Gustavo Fernández
**Wheelchair Women's Singles**
Diede de Groot
**Wheelchair Quad Singles**
Dylan Alcott
**Wheelchair Men's Doubles**
Gustavo Fernández / Shingo Kunieda
**Wheelchair Women's Doubles**
Diede de Groot / Aniek van Koot
**Wheelchair Quad Doubles**
Dylan Alcott / David Wagner

## யுவராஜ் சிங்

- 2011 ஆம் ஆண்டில் நடைபெற்ற உலகக் கோப்பையில் சிறந்த விளையாட்டை வெளிப்படுத்தியவரும் இந்தியாவின் மிகவும் புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர்களில் ஒருவருமான யுவராஜ் சிங் சர்வதேசக் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறப் போவதாக அறிவித்துள்ளார்.





- புற்றுநோயிலிருந்து மீண்டு வந்தவரான இவர் 40 டெஸ்ட் போட்டிகள், 304 ஒரு நாள் போட்டிகள், 58 இருபது ஓவர் கிரிக்கெட் போட்டிகள் ஆகியவற்றில் விளையாடியுள்ளார்.
- இவர் சவுரவ் கங்குலியின் தலைமையின் கீழ் 2000 ஆம் ஆண்டில் கிரிக்கெட்டில் அறிமுகமானார்.
- 2007 ஆம் ஆண்டின் 20 ஓவர் உலகக் கோப்பையில் இங்கிலாந்து அணியின் ஸ்டுவர்ட் ப்ராட் வீசிய ஒரு ஓவரில் 6 சிக்சர்கள் அடித்ததற்காக இவர் சிறப்பாக அறியப்படுகின்றார். இவர் அப்போட்டியில் 50 ரன்களை விரைவாகக் (12 பந்துகள்) கடந்தார்.
- 2011 கிரிக்கெட் உலகக் கோப்பையில் இவர் தொடர் நாயகன் ஆவார்.

## ITTF ஹாங்காங் ஓபன்

- 2019 ஆம் ஆண்டின் ITTF உலக ஹாங்காங் ஓபன் போட்டித் தொடரில் ஒற்றையர் பிரிவில் இரண்டு தங்கப் பதக்கங்கள் மற்றும் இரட்டையர் பிரிவில் இரண்டு தங்கப் பதக்கங்கள் என அனைத்து 4 தங்கப் பதக்கங்களையும் சீனா வென்றுள்ளது.
- வாங் இடி என்பவர் ஜப்பானைச் சேர்ந்த மிமா இடோ என்பவரை வீழ்த்தியதன் மூலம் முதலாவது பெண்கள் ஒற்றையர் பட்டத்தை வென்றுள்ளார்.
- ஹாங்காங் ஓபன் என்பது 2008 ஆம் ஆண்டிலிருந்து விளையாடப்பட்டு வரும் ஒரு டேபிள் டென்னிஸ் போட்டியாகும். இது 2018 ஆம் ஆண்டிலிருந்து ITTF உலகப் போட்டித் தொடரின் ஒரு பகுதியாக விளையாடப்பட்டு வருகின்றது.
- இது சர்வதேச டேபிள் டென்னிஸ் கூட்டமைப்பின் (ITTF - International Table Tennis Federation) கீழ் ஹாங்காங் டேபிள் டென்னிஸ் மன்றத்தினால் நடத்தப்படுகின்றது.

## உலகத் தடகளம்

- சர்வதேசத் தடகளக் கூட்டமைப்பு மன்றம் (International Association of Athletics Federations), "உலகத் தடகளம்" என்று தனது பெயரைத் தானே மாற்றிக் கொண்டுள்ளது. இது தனது பெயர் மாற்றத்தினைப் பிரதிபலிப்பதற்காக ஒரு புதியச் சின்னத்தை வெளியிட்டுள்ளது.
- இந்தப் புதிய சின்னத்தில் "World" என்பதில் "W" ஆனது போட்டியில் வெற்றி பெற்ற பின்பு வீரர் தனது கையை உயர்த்துவதையும் "Athletics" என்பதில் "A" ஆனது தடகள வீரரின் கவனத்தையும் குறிக்கின்றது. "W" மற்றும் "A" ஆகியவற்றின் மேல் வில் போன்ற ஒரு அமைப்பு தடகள சமூகம் ஒன்றிணைந்து வருவதையும் குறிக்கின்றது.




## கோபா அமெரிக்கா

- 2020 ஆம் ஆண்டின் கோபா அமெரிக்கா போட்டியில் கலந்து கொள்ளுமாறு ஆஸ்திரேலியா மற்றும் கத்தார் ஆகிய நாடுகளுக்கு தென் அமெரிக்கக் கால்பந்தின்

நிர்வாக அமைப்பான “கோன்மேபோல்” அழைப்பு விடுத்துள்ளது.

- கோபா 2020 போட்டித் தொடரானது அர்ஜென்டினா மற்றும் கொலம்பியா ஆகிய நாடுகளால் இணைந்து நடத்தப்படவிருக்கின்றது.
- இது 1916 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இது ஒரு பழமையான, சர்வதேச, கண்டங்களுக்கிடையேயான கால்பந்துப் போட்டியாகும்.
- இது 10 தென் அமெரிக்கக் கண்ட நாடுகள் மற்றும் 2 சிறப்பு அழைப்பாளர்களுக்கிடையே பொதுவாக விளையாடப்படுகின்றது.
- பிரேசிலில் நடைபெறவிருக்கும் 2019 ஆம் ஆண்டின் கோபா போட்டியில் கத்தார் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கு பெறவிருக்கின்றன.

## விரைவான 11000 ஓட்டங்கள்

- விரைவாக ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் 11000 ஓட்டங்கள் எடுத்த சச்சின் டெண்டுல்கரின் சாதனையை விராட் கோலி முறியடித்துள்ளார்.
- 276 போட்டிகளில் விளையாடி சச்சின் எடுத்திருந்த 11 ஆயிரம் ஓட்டங்களை கோலி 222 போட்டிகளிலேயே எடுத்துள்ளார்.
- இந்திய அணியின் தலைவரான இவர் இந்த புகழ்மிக்கக் குழுவில் 3வது இந்திய வீரராகவும் ஒட்டுமொத்தத்தில் ஒன்பதாவது வீரராகவும் இணைந்துள்ளார்.
- ஏனைய 2 இந்திய வீரர்கள்
    - சச்சின் டெண்டுல்கர் – 18426 ஓட்டங்கள்.
    - சவுரவ் கங்குலி – 11363 ரன்கள்.




## பசிபிக் சர்வதேச பில்லியர்ட்ஸ் – பீட்டர் கில்கிரிஸ்ட்

- பலமுறை உலக சாம்பியன் பட்டம் வென்ற பீட்டர் கில்கிரிஸ்ட் இந்தியாவின் சவுரப் கோத்தாரியை இறுதிப் போட்டியில் வீழ்த்தி 2019 ஆம் ஆண்டிற்கான பசிபிக் சர்வதேச

பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப் பட்டத்தினை வென்றார்.

- இந்தப் போட்டியானது ஆஸ்திரேலியாவின் மெல்போர்னில் நடத்தப் பட்டது.



## உலக டென்னிஸ் தரவரிசை

- பெண்கள் டென்னிஸ் மன்றத்தின் (WTA - Women's Tennis Association) தரவரிசையில் ஜப்பானைச் சேர்ந்த நோமி ஒசாகா என்பவர் முதலிடத்தில் உள்ளார்.
- பெண்கள் டென்னிஸ் போட்டியை நிர்வகிப்பதற்காக WTA ஆனது மில்லி ஜீன் கிங் என்பவரால் 1973 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.
- டென்னிஸ் தொழில்சார் மன்றத்தின் (ATP - Association of Tennis Professionals) தரவரிசையில் செரிபியாவைச் சேர்ந்த நோவாக் ஜோகோவிக் முதலிடத்தில் உள்ளார்.
- ஆண்கள் டென்னிஸ் போட்டியை நிர்வகிப்பதற்காக ATP-ஆனது ஜேக் கிராமர், டொனால்டு டெல் மற்றும் கிளிப் டிரைஸ்டன் ஆகியோரால் 1972 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

## கூடைப் பந்து சாம்பியன்ஷிப்

- ஆண்கள் மற்றும் பெண்களுக்கான பெடரேசன் கோப்பை கூடைப் பந்து சாம்பியன் ஷிப்பின் 33வது பதிப்பு கிரேட்டர் நொய்டாவில் உள்ள கௌதம் புத்தா பல்கலைக் கழகத்தில் நடத்தப்பட்டது.
- பஞ்சாப் காவல் துறை இந்திய இராணுவத்தை வீழ்த்தி ஆண்கள் பட்டத்தை வென்றுள்ளது.
- கிழக்கு இரயில்வே தமிழ்நாடு அணியை வீழ்த்திப் பெண்கள் பட்டத்தை வென்றுள்ளது.

## IOC - தடை நீக்கம்

- எந்தவொரு சர்வதேச விளையாட்டுப் போட்டிகளையும் நடத்துதல் மற்றும் அவற்றிற்கு ஆதரவளித்தல் தொடர்பாக இந்தியாவின் மீது விதிக்கப்பட்ட அனைத்துத் தடைகளையும் சர்வதேச ஒலிம்பிக் குழு (IOC - International Olympic Committee) நீக்கியுள்ளது.

- சர்வதேசப் போட்டிகளில் தகுதி பெறும் அனைத்து விளையாட்டு வீரர்களையும் இந்தியாவிற்குள் நுழைய அனுமதிப்பதாக ஒரு எழுதப்பட்ட உறுதிமொழியை இந்திய அரசு IOC-யிடம் வழங்கியது.
- பாகிஸ்தான் மற்றும் கொசாவா உள்ளிட்ட அனைத்து நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களும் இந்தியாவில் நடைபெறவிருக்கும் IOC விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க அனுமதிக்கப்படவிருக்கின்றனர்.

## கேலோ இந்தியா

- நாடு முழுவதையும் உள்ளடக்கும் விதமாக "கேலோ இந்தியா திட்டத்தின்" வரம்பை விரிவுபடுத்த புதிய அரசு முடிவு செய்துள்ளதாக குடியரசுத் தலைவர் ராம் நாத் கோவிந்த் தெரிவித்துள்ளார்.
- நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டு அமர்வில் உரையாற்றிய போது இதனை அவர் அறிவித்தார்.
- தற்போது இந்தத் திட்டத்தின் கீழ் 2500 திறமைமிக்க வீரர்கள் தேர்வு செய்யப்பட்டுப் பயிற்சி பெறுகின்றனர். கூடுதலாக ஒவ்வொரு ஆண்டும் 2500 வீரர்கள் இவ்வசதியினைப் பெறுவர்.

### *கேலோ இந்தியா விளையாட்டுகள்*

- இது இந்தியாவின் விளையாட்டுக் கலாச்சாரத்தை அடிமட்ட அளவிலிருந்துப் புதுப்பிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வருடந்தோறும் நடைபெறும் இந்நிகழ்வின் முதல் பதிப்பானது டெல்லியிலும் (2018) இரண்டாம் பதிப்பு (2019) புனேவிலும் நடைபெற்றது.
- கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளிலிருந்து 1000 விளையாட்டு வீரர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு உதவித் தொகையாக வருடந்தோறும் 5 லட்சம் ரூபாய் அடுத்த 8 ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.

## தேசிய பதக்கம் வென்ற முதல் செவித்திறன் குறைபாடுள்ள துப்பாக்கிச் சுடும் வீரர்

- துப்பாக்கிச் சுடும் போட்டிகளில் தேசிய அளவிலான பதக்கம் வென்ற முதல் செவித்திறன் குறைபாடுள்ள துப்பாக்கிச் சுடும் வீரர் தனுஷ் ஸ்ரீகாந்த் (16) ஆவார்.
- இவர் 21 வயதிற்குட்பட்டோருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் துப்பாக்கிப் பிரிவின் பொதுப்பிரிவில் பதக்கம் வென்றுள்ளார்.
- இவர் மூத்தோர் பிரிவில் உலக சாதனைப் படைத்த ரஷ்யாவின் அலெக்சாண்டர் மற்றும் இளையோர் பிரிவில் சீனாவின் யூஃபெங் வாங்க் ஆகிய வீரர்களை விட அதிக புள்ளிகளைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.
- இவர் ஏற்கனவே கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளில் 21 வயதிற்குட்பட்டோருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் தங்கம் வென்றவராவார்.




## ஒலிம்பிக் தலைமையகம்

- ஒலிம்பிக் விளையாட்டுகளின் 125-வது நினைவு தினத்தின் போது சர்வதேச ஒலிம்பிக் குழு (IOC - International Olympic Committee), தனது புதிய தலைமையகத்தை ஸ்விட்சர்லாந்தின் லவ்சானியில் அதிகாரப் பூர்வமாக நிறுவியுள்ளது.
- ஒலிம்பிக் விளையாட்டுகள் பியரி டி கௌபெர்ட்டினால் புத்துயிரூட்டப்பட்டு 125 ஆண்டுகளுக்குப் பின்பு இந்தப் புதிய தலைமையகம் திறக்கப்பட்டிருக்கின்றது.
- IOC என்பது தேசிய ஒலிம்பிக் குழுக்களின் நிர்வாக அமைப்பாகும்.
- இது கோடைக் கால ஒலிம்பிக் மற்றும் குளிர்கால ஒலிம்பிக் ஆகிய இரண்டையும் நடத்தும் பொறுப்பு பெற்று விளங்குகிறது.

## ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப்

- ஸ்னூக்கர் இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் பங்கஜ் அத்வானி தாய்லாந்தைச் சேர்ந்த தனாவாத் திரபோங்பைபோன் என்பவரை 6 – 3 என்ற கணக்கில் வீழ்த்தி 35-வது ஆண்கள் ஆசிய ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றுள்ளார்.
- பங்கஜ் அத்வானியின் இந்த வெற்றியின் மூலம் கியூ (Cue) விளையாட்டுகளில் வாழ்நாள் கிராண்ட் ஸ்லாமை நிறைவு செய்துள்ளார்.
- இவர் தற்பொழுது ஆசிய மற்றும் உலக சாம்பியன்ஷிப்களின் அனைத்துப் பிரிவுகளிலும் வெற்றி பெற்ற ஒரே வீரர் ஆவார்.
- பில்லியர்ட்ஸ் மற்றும் ஸ்னூக்கர் ஆகிய இரண்டிலும் வெற்றி பெற்ற ஒரே வீரர் இவராவார்.
- 1984 ஆம் ஆண்டில் இந்தப் பிரீமியர் தொழில்சாரா ஆசிய ஸ்னூக்கர் தொடர் தொடங்கியது.
- இந்தத் தொடரை ஆசிய பில்லியர்ட்ஸ் விளையாட்டுகள் கூட்டமைப்பு நடத்துகின்றது.



## பெண்கள் ரக்பி

- இந்திய மகளிர் ரக்பி அணியினர், தங்களுடைய முதலாவது சர்வதேச பெண்களுக்கான 15s பிரிவு வெற்றியைப் பெற்றுள்ளனர்.
- இவர்கள் பிலிப்பைன்ஸின் மணிலாவில் நடைபெற்ற ஆசிய மகளிர் ரக்பி சாம்பியன்ஷிப் பிரிவு 1-ல் சிங்கப்பூர் அணியை வீழ்த்தினர்.
- இவர்கள் வெண்கலப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளனர்.

## மிக விரைவான 20,000 ரன்கள்

- 2019 ஆம் ஆண்டின் உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டியில் மான்செஸ்டரில் நடைபெற்ற மேற்கு இந்தியத் தீவுகளுக்கு எதிரான இந்தியாவின் 6-வது ஆட்டத்தில், விராட் கோலி 37 ரன்களை எடுத்தபோது சர்வதேச அளவில் 20,000 ரன்களை மிக விரைவாகக் கடந்த வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.
- கோலி தன்னுடைய 417-வது போட்டியில் 20,000 ரன்களை எட்டினார் (131 டெஸ்ட் போட்டிகள், 223 ஒரு நாள் போட்டிகள், 62 இருபது ஓவர் போட்டிகள்).



- ❖ சச்சின் டெண்டுல்கர் மற்றும் பிரையன் லாரா ஆகியோர் இச்சாதனையை நிகழ்த்த 453 போட்டிகளை எடுத்துக் கொண்டனர்.
- ❖ ரிக்கி பாண்டிங் தன்னுடைய 468-வது போட்டியில் 20,000 ரன்களை எட்டினார்.
- ❖ ஒட்டுமொத்தமாக, சர்வதேச அளவில் 20,000 ரன்களை எட்டிய சச்சின் டெண்டுல்கர் மற்றும் ராகுல் டிராவிட் ஆகியோருக்கு அடுத்து, இச்சாதனையை நிகழ்த்திய 3-வது இந்திய வீரர் மற்றும் உலகின் 12-வது பேட்ஸ்மேன் விராட் கோலி ஆவார்.


### AIBA-வின் ஒலிம்பிக் அங்கீகாரம் மீதான தற்காலிகத் தடை

- ❖ சர்வதேச ஒலிம்பிக் குழு, AIBA-ன் (சர்வதேச குத்துச் சண்டைக் கூட்டமைப்பு - International Boxing Association) ஒலிம்பிக் அங்கீகாரத்திற்குத் தற்காலிகத் தடை விதிக்க முடிவு செய்துள்ளது.
- ❖ மேலும், 2020 ஆம் ஆண்டின் டோக்கியோ விளையாட்டுகளுக்கான தகுதிப் போட்டி மற்றும் இறுதிப் போட்டித் தொடர்களை நடத்தும் பொறுப்பினை இக்குழு ஏற்றுக் கொண்டுள்ளது.
- ❖ AIBA என்பது தொழில்சாரா குத்துச் சண்டைப் போட்டிகள் (ஒலிம்பிக் போன்ற), விருதுகள், உலக மற்றும் துணைநிலை சாம்பியன்ஷிப்களை அங்கீகரிக்கும் ஒரு விளையாட்டு அமைப்பாகும்.
- ❖ சுவிட்சர்லாந்தின் லவ்சானியைத் தலைமையிடமாகக் கொண்ட இந்த அமைப்பு 1946 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

# முக்கிய தினங்கள்

### உலக பால் தினம் – ஜூன் 1

- ❖ ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 01 அன்று உலக பால் தினம் அனுசரிக்கப்படுகின்றது.




- ❖ இத்தினமானது 2001 ஆம் ஆண்டில் ஐ.நாவின் உணவு மற்றும் வேளாண் அமைப்பினால் ஏற்படுத்தப்பட்டது.
- ❖ இது சர்வதேச உணவுப் பொருளாக பால் இருப்பதற்கான முக்கியத்துவத்தை

அங்கீகரிக்கின்றது.

- இத்தினமானது பாலின் மீது கவனம் செலுத்துவதற்கும் ஆரோக்கியமான உணவுகள், பொறுப்பான உணவு உற்பத்தி, வாழ்வாதாரம் மற்றும் சமூகத்தை ஆதரிப்பதில் பாலின் பங்கு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் ஒரு வாய்ப்பினை அளிக்கின்றது.

## சர்வதேச பெற்றோர்கள் தினம் – ஜூன் 1

- ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 01 அன்று சர்வதேசப் பெற்றோர்கள் தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இத்தினமானது 2012 ஆம் ஆண்டில் ஐ.நா. பொதுச் சபையினால் பறை சாட்டப்பட்டது.
- இத்தினமானது பெற்றோர்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோருக்கிடையேயான உறவை வளர்ப்பதில் பெற்றோர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்ததற்காகவும் குழந்தைகளுக்கான அவர்களது தன்னலமற்ற பங்களிப்புகளுக்காகவும் உலகெங்கிலும் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள பெற்றோர்களைப் பாராட்டுவதற்கான ஒரு வாய்ப்பினை வழங்குகின்றது.
- குடும்பம் சார்ந்த கொள்கைகள் ஐக்கிய நாடுகளின் நீடித்த வளர்ச்சி இலக்குகள் 1 முதல் 5 வரையுள்ளவற்றை அடைய முக்கியப் பங்காற்றும்.

## சர்வதேச பாலியல் தொழிலாளர்கள் தினம் - ஜூன் 02

- ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 2 அன்று விலைமகள் தினம் அல்லது சர்வதேச பாலியல் தொழிலாளர்கள் தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இது பாலியல் தொழிலாளர்களையும் அவர்களின் அடிக்கடி சுரண்டப்படும் பணி நிலைமைகளையும் அங்கீகரிக்கின்றது.
- இத்தினமானது பாலியல் தொழிலாளர்களின் மனிதாபிமானமற்ற பணி நிலைமைகள் குறித்து கவனத்தை ஈர்ப்பதற்காக 1975 ஆம் ஆண்டு ஜூன் 02 அன்று லியோன் நகரில் எக்லெய்ஸ் செயின்ட் – நிசிர் என்ற பகுதியை நூற்றுக்கும் மேற்பட்ட பாலியல் தொழிலாளர்கள் ஆக்கிரமித்திருந்ததை நினைவு கூர்கின்றது.

## உலக மிதிவண்டி தினம் - ஜூன் 03

- 56 நாடுகளுடன் இணைந்து ஐக்கிய நாடுகள் அமைப்பினால் 2019 ஆம் ஆண்டு ஜூன் 03 அன்று உலக மிதிவண்டி தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இத்தினம் இரண்டு நூற்றாண்டுகளாகப் பயன்பாட்டில் இருக்கும் மிதிவண்டியின் தனித்துவம், நீண்ட காலப் பயன்பாடு, பல்துறைப் பயன்பாடு ஆகியவற்றை அங்கீகரிக்கின்றது. இது ஒரு எளிமையான, குறைந்த செலவு கொண்ட, நம்பத் தகுந்த, தூய்மையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையிலான போக்குவரத்தின் ஒரு வகையாகும்.
- 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஜூன் 03 ஆம் தேதியை சர்வதேச உலக மிதிவண்டி தினமாக அறிவித்தது.




## நிதியியல் கல்வி வாரம்: ஜூன் 3-7

- நிதியியல் கல்வி வாரமானது ஒவ்வொரு ஆண்டும் ஒரு முக்கியத் தலைப்புகளின் கீழ் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான ரிசர்வ் வங்கியின் மையப்படுத்தப்பட்டப் பிரச்சாரமாகும்.
- இவ்வருட நிதியியல் கல்வி வாரமானது 'விவசாயிகள்' மீதும் முறையான வங்கி அமைப்பின் ஒரு அங்கமாக இருப்பதன் மூலம் அவர்கள் எவ்வாறு பயன் பெறுகிறார்கள் என்பதனை விளக்குவதன் மீதும் மையம் கொண்ட கருத்துருவை அடிப்படையாகக் கொண்டது.
- விவசாயிகளுக்கு அத்தியாவசிய நிதியியல் விழிப்புணர்வுச் செய்திகளைப் பரப்புவதற்காக RBI வங்கியானது ஜூன் மாதத்தில் தூர்தர்ஷன் மற்றும் அகில இந்திய வானொலி ஆகியவற்றின் மூலம் மையப்படுத்தப்பட்ட வெகு ஜன ஊடகப் பிரச்சாரத்தை மேற்கொள்கிறது.

## ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்ட அப்பாவி குழந்தைகளுக்கான சர்வதேச தினம் – ஜூன் 4

- ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்ட அப்பாவி குழந்தைகளுக்கான சர்வதேச தினமானது, ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 4 அன்று ஐக்கிய நாடுகளால் அனுசரிக்கப்படுகின்றது.
- இந்த நாளானது உலகெங்கிலும் உள்ள உடல், மன மற்றும் உணர்வுப் பூர்வமாக பாதிக்கப்பட்ட குழந்தைகளின் வலியை அங்கீகரிக்கின்றது.
- இந்நாளானது 1982 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19 அன்று ஏற்படுத்தப்பட்டது.
- இது உண்மையில் 1982 ஆம் ஆண்டின் லெபனான் போரினால் பாதிக்கப்பட்டோரின் மீது கவனம் செலுத்தியது. பின்னர் உலகளாவிய அளவில் இத்தினம் உருவாக்கப்பட்டது.

## உலக சுற்றுச்சூழல் தினம் - ஜூன் 5

- ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 5 அன்று உலக சுற்றுச்சூழல் தினம் (WED - World Environment Day) அனுசரிக்கப்படுகின்றது.
- WED ஆனது 1972 ஆம் ஆண்டு மனித சுற்றுச் சூழல் மீதான ஸ்டாக்ஹோல்ம் கருத்தரங்கின் முதல் நாளன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் உருவாக்கப்பட்டது.
- இது 1974 ஆம் ஆண்டில் "ஒரே ஒரு பூமி" என்ற கருத்துருவுடன் முதன் முறையாகக் கடைபிடிக்கப்பட்டது.
- இது நமது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கு உலகளாவிய விழிப்புணர்வு மற்றும் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான ஒரு சர்வதேச தினமாகும்.
- 2019 ஆம் ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு "காற்று மாசுபாடு" என்பதாகும். இந்த ஆண்டின் இத்தினத்தை சீனா தலைமையேற்று நடத்துகின்றது.
- 2018 ஆம் ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு "நெகிழி மாசுப்பாடைக் கட்டுப்படுத்து" என்பதாகும். இத்தினத்தை இந்தியா தலைமையேற்று நடத்தியது.

## உலக உணவுப் பாதுகாப்புத் தினம் – ஜூன் 07


- முதல் வருடாந்திர உலக உணவுப் பாதுகாப்புத் தினமானது ஜூன் 07 அன்று அனுசரிக்கப்பட்டது.
- இதன் கருத்துருவானது "உணவுப் பாதுகாப்பு : அனைவரின் வேலை" என்பதாகும்.




- இந்த நாளானது பாதுகாப்பான உணவின் முக்கியத்துவத்தைக் கடைபிடிக்கவும் பாதுகாப்பற்ற உணவு தொடர்பான சிக்கல்களைக் குறைக்கவும் அனுசரிக்கப்படுகின்றது.
- வளர்ந்த மற்றும் வளர்ந்து வரும் நாடுகளில் உள்ள சுமார் 3 மில்லியன் மக்கள் உணவு மற்றும் நீரினால் ஏற்படும் நோய்களினால் உலகமெங்கிலும் இறக்கின்றனர்.
- 2018 ஆம் ஆண்டின் ஐ.நா. பொதுச் சபையின் தீர்மானத்தின் மூலம் இந்த வருடாந்திர தினமானது கடைபிடிக்க முடிவெடுக்கப்பட்டது.
- இந்த கொண்டாட்டத்தின் தொடக்க பதிப்பானது உலக சுகாதார நிறுவனம் மற்றும் உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம் ஆகியவற்றால் கூட்டாக இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது.

## உலகப் பெருங்கடல் தினம் – ஜுன் 08

- ❖ உலகப் பெருங்கடல் தினமானது ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 08 அன்று அனுசரிக்கப்படுகின்றது.
- ❖ இத்தினமானது பெருங்கடலின் மகத்துவத்தைக் கொண்டாடுவதோடு அதன் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்துகின்றது.




- ❖ இதற்கான யோசனையானது 1992 ஆம் ஆண்டில் ரியோவில் நடைபெற்ற புவி மாநாட்டில் கனடாவின் பெருங்கடல் மேம்பாட்டிற்கான சர்வதேச மையம் மற்றும் கனடாவின் பெருங்கடல் நிறுவனம் ஆகியவற்றால் முன்மொழியப்பட்டது.
- ❖ சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாட்டிற்கான பிரண்ட்லேண்ட் உலக ஆணையமானது உலகளாவியப் பெருங்கடல் தினத்திற்கு உத்வேகம் அளித்தது.
- ❖ முதல் பெருங்கடல் தினமானது 1992 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- ❖ புவியின் 70 சதவீத ஆக்ஸிஜனை உலகில் உள்ள பெருங்கடல்கள் உற்பத்தி செய்கின்றன.
- ❖ ஐ.நா சபையானது 2019 ஆம் ஆண்டின் கருத்துருவாக, “பாலினம் மற்றும் கடல்கள்” என்பதனைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- ❖ இந்த கருத்துருவானது, பெருங்கடல்கள், கடல்கள் மற்றும் கடல்வாழ் உயிரிகளைப் பாதுகாப்பத்தில் பாலினச் சமத்துவத்தின் முக்கியப் பங்கினை உரைக்கின்றது.

## ஐக்கிய நாடுகள் ரஷ்ய மொழி தினம் – ஜுன் 06

- ❖ வருடந்தோறும் ஜுன் மாதம் 06 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் ரஷ்ய மொழி தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- ❖ இந்நிகழ்வு 2010 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அமைப்பால் நிறுவப்பட்டதாகும்.


- இந்நிகழ்வின் அனுசரிப்பு ரஷ்யக் கவிஞர் அலெக்சாண்டர் புஷ்கின் என்பவரின் பிறந்த நாளோடு ஒத்துப் போகின்றது.
- அவர் நவீன ரஷ்ய இலக்கியத்தின் தந்தை என அறியப்படுகின்றார்.
- பன்மொழித் தன்மை மற்றும் கலாச்சாரப் பன்மை ஆகியவற்றை ஊக்குவிக்கவும், தனது நிறுவனம் முழுவதும் ஐக்கிய நாடுகளின் அலுவலகப் பணி மொழிகள் ஆறையும் சமமாகப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கவும் ஐக்கிய நாடுகள் இத்தினத்தைக் கொண்டாடுகின்றது.

## உலக மூளைக் கட்டி தினம் – ஜுன் 08

- ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 08 அன்று உலக மூளைக் கட்டி தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- பொது மக்களிடையே மூளைக் கட்டி குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஜெர்மன் மூளைக் கட்டி மன்றம் 2000 ஆம் ஆண்டில் முதன்முறையாக இத்தினத்தை அனுசரித்தது.
- மூளைக் கட்டி ஏற்படுவதற்கான காரணம் மற்றும் அனைவருக்குமான ஏற்கத்தகு சிகிச்சை குறித்துக் கண்டறிதல் ஆகியவை குறித்துப் பொதுமக்கள் மற்றும் ஆராய்ச்சி & மேம்பாட்டு நிறுவனங்களின் ஈர்ப்பைப் பெறுவதற்காக இத்தினம் அனுசரிக்கப்படுகின்றது.

## பவள முக்கோண தினம் – ஜுன் 09

- ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 09 அன்று பவள முக்கோண தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இது 2012 ஆம் ஆண்டு ஜுன் 10 அன்று உலகப் பெருங்கடல்கள் தினமாக முதன்முறையாக அனுசரிக்கப்பட்டது.




- கடல் பாதுகாப்பு, அதிலும் குறிப்பாக பவள முக்கோணப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இத்தினம் அனுசரிக்கப்படுகின்றது.

***பவள முக்கோணம்***

- பவள முக்கோணம் ஆனது உலகில் கடல்சார் பல்லுயிர்ப் பெருக்கத்தின் மையமாக விளங்குகின்றது.
- இது கடல்களின் அமேசான் எனவும் அழைக்கப்படுகின்றது.
- இது ஏறக்குறைய இந்தோனேசியா, மலேசியா, பப்புவா நியூ கினியா, பிலிப்பைன்ஸ், சாலமன் தீவுகள் மற்றும் திமோர் – லெஸ்தி ஆகிய பகுதிகளின் வெப்ப மண்டலக் கடல் நீரின் முக்கோணப் பகுதியாகும்.
- இது காங்கோ வடிநிலம் மற்றும் அமேசான் மழைக் காடுகள் ஆகியவற்றுடன் இணைந்து பூமியில் உள்ள 3 பெரிய சுற்றுச்சூழல் மண்டலங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

## உலக குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினம் – ஜுன் 12

- ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 12 அன்று உலக குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இது குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடுப்பதற்கு விழிப்புணர்வு மற்றும் செயல் நடவடிக்கைகள் ஆகியவற்றை ஏற்படுத்தும் நோக்கத்திற்காக 2002 ஆம் ஆண்டில் முதன்முறையாக ஏற்படுத்தப்பட்டது.
- குழந்தைத் தொழிலாளர்களின் எந்தவொரு வடிவத்திற்கும் எதிராக ஒரு உலகளாவிய இயக்கத்தை ஏற்படுத்துவதை இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.




## சர்வதேச வெளிறல் விழிப்புணர்வு தினம் – ஜூன் 13

- ஜூன் 13 அன்று உலக அளவில் சர்வதேச வெளிறல் விழிப்புணர்வு தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இது வெளிறல் குறித்த தொன்மத்தை அகற்றுவதற்கும், அது குறித்த களங்கத்தை குறைப்பதற்கும், சிறந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், வெளிறலுடன் வாழும் மக்களுக்கு எதிரான வன்முறையைக் குறைப்பதற்கும் அனுசரிக்கப்படுகின்றது.
- இது வெளிறலுடன் வாழும் மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து ஊக்கப்


படுத்துவதற்காக ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் தீர்மானத்தினால் 2015 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.

- இந்த ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு, “இன்னும் உறுதியுடன் எழுந்து நில்” என்பதாகும்.




## உலகக் குருதிக் கொடையாளர் தினம் - ஜுன் 14

- ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 14 அன்று உலகம் முழுவதும் உலக குருதிக் கொடையாளர் தினம் அனுசரிக்கப்படுகின்றது
- இந்த நிகழ்வு, உயிர் காக்கும் இரத்தத்தைத் தானாகவே முன்வந்து கொடுக்கும் குருதிக் கொடையாளர்களுக்கு நன்றி செலுத்துகின்றது. இது தொடர்ந்து இரத்தம் வழங்குதல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது.
- இந்த ஆண்டின் உலகக் குருதிக் கொடையாளர் தினத்தை நடத்தும் நாடு ருவாண்டா ஆகும்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “அனைவருக்குமான பாதுகாப்பான இரத்தம்” என்பதாகும்.




- 58-வது உலக சுகாதார சபை ஜீன் 14 ஆம் தேதியை வருடாந்திர அளவில் நடைபெறக் கூடிய நிகழ்ச்சியாக உலகக் குருதிக் கொடையாளர் தினத்தைத் தேர்ந்தெடுத்தது.
- இது 2005 ஆம் ஆண்டு முதன்முறையாக அனுசரிக்கப்பட்டது.
- உலக சுகாதார தினம், உலக காசநோய் தினம், உலக நோய்த் தடுப்பு வாரம், உலக மலேரியா தினம், உலக புகையிலை எதிர்ப்புத் தினம், உலக கல்லீரல் அழற்சி தினம்

மற்றும் உலக எய்ட்ஸ் தினம் போன்ற உலக சுகாதார அமைப்பினால் நடத்தப்படும் 8 சர்வதேச பொதுச் சுகாதாரப் பிரச்சாரங்களில் இதுவும் ஒன்றாகும்.

## உலகக் காற்று தினம் – ஜுன் 15

- உலகக் காற்று தினம் என்பது ஒவ்வொரு ஆண்டும் ஜுன் – 15 அன்று நிகழக்கூடிய ஒரு உலகளாவிய நிகழ்ச்சியாகும்.
- இது விண்ட் ஐரோப்பா மற்றும் சர்வதேச காற்று ஆற்றல் ஆணையத்தால் ஒருங்கிணைக்கப்படுகின்றது.
- இது காற்று ஆற்றல், அதன் வலிமை மற்றும் வாய்ப்புகள் குறித்து குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினர் அறிந்து கொள்வதற்காக அனுசரிக்கப்படும் ஒரு தினமாகும்.
- 2009 ஆம் ஆண்டில் இந்த நிகழ்வு ஒரு சர்வதேச அனுசரிப்பு தினமாகத் தொடங்கப் பட்டது.




## உலக மூத்தோர் கொடுமை விழிப்புணர்வுத் தினம் – ஜுன் 15

- ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 15 அன்று உலக மூத்தோர் கொடுமை விழிப்புணர்வுத் தினம் அனுசரிக்கப்படுகின்றது.




- மூத்த குடிமக்கள் மீதான கொடுமைகள் மற்றும் அவர்களைப் பாதிப்படையச் செய்தல்

ஆகியவற்றிற்கு எதிராகக் குரல் கொடுப்பதற்காக இத்தினம் அனுசரிக்கப்படுகின்றது.

- மூத்தோர் கொடுமைகளைத் தடுத்தலுக்கான சர்வதேச அமைப்பினால் விடுக்கப்பட்ட கோரிக்கையைத் தொடர்ந்து 2011 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஐ.நா சபையினால் இத்தினம் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது.
- ஐ.நா. அறிக்கையின்படி மூத்த குடிமக்கள் 6 நபர்களில் 1 நபர் ஏதாவது ஒரு கொடுமைக்கு உள்ளாகின்றனர்.

## வெளிநாட்டிலிருந்து குடும்பத்திற்குப் பணத்தை அனுப்புதலுக்கான சர்வதேச தினம் - ஜுன் 16

- ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 16 அன்று வெளிநாட்டிலிருந்து குடும்பத்திற்குப் பணத்தை அனுப்புதலுக்கான சர்வதேச தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- தங்களது தாய்நாட்டில் வாழும் அவர்களது 800 மில்லியன் குடும்ப உறுப்பினர்களின் வாழ்வை மேம்படுத்துவதற்காக 200 மில்லியன் சர்வதேச இடப்பெயர்வுத் தொழிலாளர்கள் அளிக்கும் பங்களிப்பினை இத்தினம் அங்கீகரிக்கின்றது.
- இந்தத் தினத்தின் நோக்கம் இந்தப் பங்களிப்புகள் மில்லியன் கணக்கான குடும்பங்கள், சமூகங்கள், நாடுகள் மற்றும் ஒட்டுமொத்தப் பிராந்தியங்களின் மீது ஏற்படுத்தும் தாக்கம் குறித்த ஒரு மிகப்பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.




## பாலைவனமாக்கல் மற்றும் வறட்சிக்கு எதிரான உலக தினம் - ஜுன் 17

- பாலைவனமாக்கல் மற்றும் வறட்சிக்கு எதிரான உலக தினமானது ஜுன் 17 அன்று உலகமெங்கிலும் அனுசரிக்கப்படுகின்றது.
- ஐ.நா. பொதுச் சபையானது 1995 ஆம் ஆண்டில் பாலைவனமாக்குதலுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் ஒப்பந்த வரைவை ஏற்படுத்திய போது இத்தினத்தின் அனுசரிப்பினை அறிவித்தது.
- இந்த நாளானது பாலைவனமாக்கல் மற்றும் வறட்சியைப் பற்றியும் அவற்றைத் தடுத்து

நிறுத்துவதற்கான வழிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அனுசரிக்கப்படுகின்றது.

- இவ்வருடத்தின் கருத்துருவானது, "ஒன்றாக இணைந்து எதிர்காலத்தை வளர்ப்போம்" என்பதாகும்.
- இந்தக் கருத்துருவானது கடந்த 25 ஆண்டுகால செயல்பாடுகள் மற்றும் அடுத்த 25 ஆண்டு கால எதிர்பார்ப்பினையும் பிரதிபலிக்கின்றது.
- ஐ.நா. சபையின் படி பாலைவனமாக்கல் என்பது வறண்ட, அரை வறண்ட மற்றும் உலர் துணை ஈரப்பதமான பகுதிகளில் ஏற்படும் நிலச் சீரழிவைக் குறிக்கின்றது.
- பாலைவனமாக்கல் என்பது ஏற்கனவே இருக்கும் பாலைவனங்களின் விரிவாக்கத்தை குறிக்காது.




## நீடித்த அறுசுவை உணவியல் தினம் – ஜுன் 18

- ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 18 அன்று நீடித்த அறுசுவை உணவியல் தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இது நீடித்த அறுசுவை உணவியலின் பங்கு குறித்து உலகம் செலுத்த வேண்டிய அவசியத்தை எடுத்துரைக்கின்றது.



- 2016 ஆம் ஆண்டில் ஐ.நா. பொதுச் சபைத் தீர்மானமாக இயற்றப்பட்ட ஒரு தீர்மானத்தினால் ஜுன் 18 ஆம் தேதி ஒரு வருடாந்திர நீடித்த அறுசுவை உணவியல் தினமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- இத்தினம் உலகின் இயற்கை மற்றும் கலாச்சாரப் பன்முகத் தன்மையுடன் தொடர்புடைய கலாச்சார வெளிப்பாடாக அறுசுவை உணவியலை ஒப்புக் கொள்கின்றது.

## சர்வதேசச் சுற்றுலா தினம் – ஜுன் 18

- உலகம் முழுவதும் ஜுன் 18 ஆம் தேதி சர்வதேசச் சுற்றுலா தினமாக அனுசரிக்கப்படுகின்றது.
- இது 1789 ஆம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சி ஏற்பட்டதிற்குப் பின்னர் பிரான்ஸில் முதன்முறையாகத் தோன்றியது. இங்கு மிகப்பெரிய அளவிலான உரையாடலுடன் திறந்த வெளியில் உணவும் உண்ணும் வாய்ப்பினை மக்கள் பெற்றனர்.
- இத்தினம் ஒருவர், மற்றவர்களுடன் இணைந்து திறந்தவெளியில் மகிழ்ச்சியாக இருப்பதையும், அவர்களுடன் இணைந்து உணவு உண்பதையும் அனுசரிக்கின்றது. இதுவே பாரம்பரியமாக "சுற்றுலா" என்று அழைக்கப்படுகின்றது.

## கோவா புரட்சி தினம் – ஜுன் 18

- 2019 ஆம் ஆண்டு ஜுன் 18 அன்று கோவா புரட்சி தினம் அனுசரிக்கப்பட்டது.
- 1961 ஆம் ஆண்டு டிசம்பர் 19 அன்று கோவா போர்ச்சுகலிடமிருந்து விடுதலை பெற்றது.
- ஆனால் 1946 ஆம் ஆண்டு ஜுன் 18 அன்று போர்ச்சுக்கீசியரிடமிருந்து கோவா விடுதலை பெறுவதற்கான போராட்டத்தை ராம் மனோகர் லோகியா தொடங்கினார்.
- லோகியாவினால் தொடங்கப்பட்ட காலனியாதிக்க ஆட்சிக்கு எதிரான போராட்டம் தொடங்கிய தேதியின் நினைவாக இத்தினம் அனுசரிக்கப்படுகின்றது.




## மன இறுக்க உரிமைகள் தினம் - ஜுன் 18


- 2019 ஆம் ஆண்டு ஜுன் 18 அன்று மன இறுக்க உரிமைகள் தினம் அனுசரிக்கப்படுகின்றது.




- இத்தினம் மன இறுக்கத்தை கொண்டுள்ளவர்களுக்கு செறுக்கின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கின்றது.
- இது மன இறுக்கத்திற்கான உரிமைகள் குறித்துப் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற "விடுதலைக்கான ஆஸ்பைஸ்" என்ற ஒரு குழுமத்தினால் ஏற்படுத்தப்பட்டது.
- மன இறுக்கத்திற்கான தெளிவான காரணம் கண்டறியப்பட வில்லை. ஆனால் இது மரபணு மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளுடன் தொடர்புடையது என்று அறியப்படுகின்றது.

## உலக அரிவாள் உயிரணு (செல்) தினம் – ஜுன் 19

- 2019 ஆம் ஆண்டு ஜுன் 19 அன்று உலக அரிவாள் உயிரணு (செல்) தினம் அனுசரிக்கப்படுகின்றது.




- உலக அரிவாள் உயிரணு நோய் (SCD - Sickle cell disease) குறித்தும் அதன் சிகிச்சை முறைகள் குறித்தும் பொது மக்களிடையே விழிப்பணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் இத்தினம் அனுசரிக்கப்படுகின்றது.

- SCD என்பது ஹீமோகுளோபினின் மரபுவழி மரபணு ஒழுங்கின்மையாகும்.
- 2008 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது SCD-ஐ ஒரு பொதுச் சுகாதாரப் பிரச்சினை என்றும் உலகின் மிக முக்கியமான மரபணு நோய்களில் SCD ஒன்று என்றும் அங்கீகரிக்கக் கூடிய ஒரு தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது.
- இது 2009 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்படுகின்றது.

## சச்சரவுகளின் போதான பாலியல் வன்கொடுமைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் – ஜுன் 19

- ஜுன் 19 அன்று சச்சரவுகளின் போதான பாலியல் வன்கொடுமைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் அனுசரிக்கப்பட்டது.
- 2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை இத்தினத்தை பறைசாற்றியது.
- இத்தினம் உலகெங்கிலும் பாலியல் வன்கொடுமைகளினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவற்றில் இருந்து மீண்டு உயிர் வாழ்பவர்களைக் கௌரவிப்பதற்காக அனுசரிக்கப்படுகின்றது.
- மேலும் இந்தக் குற்றங்களை ஒழிப்பதற்காக எதிர்த்து நின்று போராடி உயிர் நீத்தவர்கள் மற்றும் துணிவுடன் தங்களது வாழ்வை அர்ப்பணித்தவர்கள் ஆகியோர்களுக்கு இத்தினம் மரியாதை செலுத்துகின்றது.

## உலக அகதிகள் தினம் - ஜுன் 20

- ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 20 அன்று உலக அகதிகள் தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இந்த ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு, "அகதிகளுடன் வாழுங்கள், உலக அகதிகள் தினத்தின் போது அதற்கான முயற்சியை எடுங்கள்" என்பதாகும்.
- இத்தினம் அகதிகளின் பங்களிப்புகள் மற்றும் நிலைகளை (கதைகளை) அனுசரிக்கின்றது. இத்தினம் அகதிகள் நிலைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது.
- அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையரின் தகவலின்படி, கடந்த ஆண்டின் இறுதியில் 70.8 மில்லியன் குழந்தைகள், பெண்கள் மற்றும் ஆண்கள் ஆகியோர் கட்டாயமாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.
- 2000 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஜுன் 20 ஆம் தேதியை உலக அகதிகள் தினமாக அனுசரிப்பதற்கான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

## உலக இசை தினம் - ஜுன் 21


- ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 21 அன்று உலக இசை தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இது வட துருவத்தில் ஆண்டின் மிக நீண்ட பகல் பொழுது கொண்ட கோடைக்காலத்தின் நீண்ட பகல் தினத்தின் தொடக்கத்தைக் குறிக்கின்றது.
- உலக இசை தினம் பிரான்சில் முதன்முறையாக அனுசரிக்கப்பட்டது. ஆனால் தற்பொழுது

இத்தினம் உலகம் முழுவதும் இந்தியா உள்ளிட்ட 120 நாடுகளில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

- இது அமெரிக்க நடிகரான ஜோயல் கோஹென் பேக் என்பவரால் 1976 ஆம் ஆண்டில் முதன்முறையாக பரிந்துரைக்கப்பட்டது.
- 1982 ஆம் ஆண்டு ஜுன் 21 அன்று முதலாவது உலக இசை தினம் நிகழ்ந்தது.
- இத்தினம் இசை மற்றும் இசைக் கலைஞர்களை அனுசரிக்கின்றது.

## கோடைக்காலத்தின் நீண்ட பகல் நாள் - ஜூன் 21

- இவ்வருடத்தின் ஜூன் மாதம் 21 ஆம் நாளானது 2019 ஆம் ஆண்டின் நீண்ட பகலை உடைய நாளாகும்.
- பூமத்திய ரேகைக்கு வடக்கே உள்ள பகுதிகளுக்கு இது கோடைக்காலத்தின் தொடக்கமாகும்.
- பூமியின் வரலாற்றில் மிக நீண்ட நாளானது 1912 ஆம் ஆண்டில் நிகழ்ந்ததாக அறிவியலாளர்கள் மதிப்பிட்டுள்ளனர்.
- சூரியனானது கடக ரேகை அல்லது 23.5° வட அட்ச ரேகைக்கு மேல் நேரடியாக இருக்கும் போது கோடைக்காலத்தின் நீண்ட பகல் ஏற்படுகின்றது.
- வடக்கு அரைக் கோளத்தில் அதிகபட்சமான சூரிய ஒளி விழும் நாளானது எந்தவொரு வருடத்திலும் பொதுவாக ஜூன் 20, 21 அல்லது 22 அன்று நிகழ்கிறது.




## சர்வதேச ஒலிம்பிக் தினம் - ஜூன் 23

- உலகம் முழுவதும் ஜூன் 23 அன்று சர்வதேச ஒலிம்பிக் தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இத்தினம் உலகம் முழுவதும் விளையாட்டுகளில் பெருந்திரளான பங்கெடுப்புகளை ஊக்குவிப்பதையும் நேர்மையான விளையாட்டு, ஒற்றுமை, மரியாதை மற்றும் விளையாட்டுத் திறன் ஆகிய ஒலிம்பிக் குறிக்கோள்களைப் பரப்புவதையும் நோக்கமாகக்

கொண்டுள்ளது.

- 1894 ஆம் ஆண்டு ஜூன் 23 அன்று, ஒலிம்பிக் விளையாட்டுகளை உயிரூட்டுவதற்கு பியரி டி கவுபெர்ட்டின் என்பவரின் பரிந்துரைக்கு ஆதரவளிப்பதற்காக 12 நாடுகளைச் சேர்ந்தவர்கள் பிரான்சின் பாரிஸ் நகரில் ஒன்று கூடினர்.
- இவர்கள் சர்வதேச ஒலிம்பிக் குழுவை (IOC - International Olympic committee) அமைத்தனர்.
- 1948 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், 1894 ஆம் ஆண்டு ஜூன் 23 அன்று பாரீஸில் IOC உருவாக்கியதை அனுசரிப்பதற்காக ஒலிம்பிக் தினம் என்ற கருத்தாக்கத்திற்கு IOC ஒப்புதல் வழங்கியுள்ளது.

## சர்வதேச கைம்பெண்கள் தினம் - ஜூன் 23

- சர்வதேச கைம்பெண்கள் தினம் என்பது ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 23 அன்று நிகழக்கூடிய ஒரு சர்வதேச விழிப்புணர்வு தினமாகும்.
- இத்தினம் 2010 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளால் தொடங்கப்பட்டது.
- இத்தினமானது பல நாடுகளில், அவர்களது கணவர்களின் இறப்புக்குப் பின்னர் கைம்பெண்கள் எதிர்கொள்ளும் மனித உரிமை மீறல்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்தினம் கைம்பெண்கள் கண்ணியத்துடன் வாழ்வதற்கு ஒரு சிறந்த ஆதரவு அமைப்பை ஏற்படுத்துவதற்கான தேவையைக் குறிக்கின்றது.




## UNPSC தினம் – ஜுன் 23

- ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 23 அன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சேவை தினம் (United Nations public service day) அனுசரிக்கப்படுகின்றது.
- இத்தினம் சமூகத்தின் மீதான பொதுச் சேவையின் மதிப்பு மற்றும் வளர்ச்சிப் பணியில் பொதுச் சேவையின் பங்களிப்பு ஆகியவற்றை எடுத்துக் காட்டுகின்றது.
- இத்தினத்தில் ஐக்கிய நாடுகள் பொதுச் சேவை விருதுகள் வழங்கப்படுகின்றன.
- 2003-ஆம் ஆண்டில் முதலாவது விருது வழங்கும் விழா நிகழ்ந்தது.
- இது சிறப்புமிக்க பொதுச் சேவைகளின் புகழ்பெற்ற சர்வதேச அங்கீகரிப்பாகும்.
- 2019-ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் பொதுச் சேவைக் கூட்டம் அஸ்பர்ஜெயினில் நடைபெற இருக்கின்றது.

- 2019-ஆம் ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு, "சிறந்த முறையில் சேவைகளை வழங்குதல், புத்தாக்க முறையில் மாற்றத்தை ஏற்படுத்துதல் மற்றும் பொறுப்புள்ள நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலம் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை அடைதல்" என்பதாகும்.

## சர்வதேச யோகா தினம் – ஜுன் 21

- தினசரி வாழ்வில் யோகாவின் நன்மைகள் குறித்து உளகளாவிய அளவில் விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 21 அன்று சர்வதேச யோகா தினமானது கொண்டாடப்படுகின்றது.
- இந்தியப் பிரதமர் ராஞ்சியில் நடைபெற்ற நிகழ்வில் மற்ற பங்கேற்பாளர்களுடன் யோகாப் பயிற்சியை மேற்கொண்டார்.
- 5-வது சர்வதேச யோகா தினத்தின் கருப்பொருளானது "காலநிலை நடவடிக்கைகள்" என்பதாகும்.
- 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் நாள் ஐ.நா. பொதுச் சபையானது ஜுன் 21ஆம் நாள் சர்வதேச அல்லது உலக யோகா தினமாக அனுசரிக்கப்படும் என அறிவித்தது.
- 2015 ஆம் ஆண்டிலிருந்து சர்வதேச யோகா தினமானது உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.

## போதைப் பொருள் மருந்து முறைகேடு மற்றும் சட்ட விரோதக் கடத்தலுக்கான சர்வதேச எதிர்ப்பு தினம் – ஜுன் 26

- இத்தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 26 அன்று அனுசரிக்கப்படுகின்றது.




- இத்தினத்தின் அனுசரிப்பானது ஐக்கிய நாடுகள் பொதுச் சபைத் தீர்மானத்தினால் 1987 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- இத்தினம் 1989 ஆம் ஆண்டு முதன்முறையாக அனுசரிக்கப்பட்டது.
- இத்தினம் போதைப் பொருள் மருந்து முறைகேடுகளற்ற சர்வதேசச் சமூகத்தை அமைக்கும் நோக்கத்தை அடைவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டு இத்தினத்தின் கருத்துரு, "நீதிக்கான ஆரோக்கியம் : ஆரோக்கியத்திற்கான நீதி" என்பதாகும்.

## சித்திரவதைக்கு உள்ளானவர்களுக்கு ஆதரவளிப்பதற்கான சர்வதேச தினம் – ஜுன் 26

- ஒவ்வொரு ஆண்டும் ஜுன் மாதம் 26 ஆம் தேதியன்று சித்திரவதைக்கு உள்ளானவர்களுக்கு ஆதரவளிப்பதற்கான சர்வதேச தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- சித்திரவதை மற்றும் பிற கொடுமைகள், மனிதாபிமானமற்ற அல்லது இழிவான முறையில் நடத்துதல் அல்லது தண்டனைக்கு எதிரான ஐ.நா. ஒப்பந்தமானது 1987 ஆம் ஆண்டு ஜுன் 26 அன்று நடைமுறைக்கு வந்தது.
- 1998 ஆம் ஆண்டு இது போன்ற நிகழ்வுகள் முதன்முறையாக அனுசரிக்கப்பட்டன.
- இத்தினமானது உலகெங்கிலும் சித்திரவதையினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அதிலிருந்து மீண்டு உயிர் வாழ்பவர்களுக்கு ஆதரவளிப்பதற்காகவும் அவர்களைக் கௌரவிப்பதற்காகவும் சித்திரவதைக் குற்றங்களுக்கு எதிராக குரல் கொடுப்பதற்காகவும் அனுசரிக்கப்படுகின்றது.


## ஐக்கிய நாடுகள் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தினம் – ஜுன் 27

- ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 27 அன்று ஐக்கிய நாடுகள் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME - Ministry of Micro, Small and Medium Enterprises) தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- உள்நாட்டு மற்றும் சர்வதேசப் பொருளாதாரங்களில் MSME-களின் பணிகளை அங்கீகரிப்பதற்காக இத்தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- சிறு வணிகத்திற்கான சர்வதேச ஆணையத்தினால் வெளியிடப்பட்ட தகவலின்படி, MSME மொத்த நிறுவனங்களில் 90 சதவிகிதத்திற்கும் மேலான நிறுவனங்களையும் மொத்த வேலைவாய்ப்பில் சராசரியாக 60-70 சதவிகித வேலைவாய்ப்பினையும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50 சதவிகிதத்தினையும் கொண்டுள்ளது.
- இத்தினம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதற்குப் பின்பு 2017 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்படுகின்றது.



## உலக நீர்நிலையியல் தினம் – ஜூன் 21


- 2006 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 21 அன்று உலக நீர்நிலையியல் தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இந்த முன்னெடுப்பானது சர்வதேச நீர்நிலையியல் அமைப்பினால் தொடங்கப்பட்டது.




- இது நீர்நிலையாளர்களின் பணி மற்றும் நீர்நிலைகளின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனுசரிக்கப்படுகின்றது.
- இத்தினம் பாதுகாப்பான பயணம், தொழில்நுட்ப நிலைகள் மற்றும் கடல்சார் சுற்றுச்சூழலின் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "கடல்சார் அறிவை இயக்கும் நீர்நிலைத் தகவல்" என்பதாகும்.

## தேசியப் புள்ளியியல் தினம் - ஜூன் 29


- ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 29 அன்று தேசியப் புள்ளியியல் தினம் அனுசரிக்கப்படுகின்றது.



- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்" என்பதாகும்.
- இத்தினம் பேராசிரியர் PC மகலநோபிஸின் பிறந்த தினத்தை அனுசரிக்கின்றது.
- இவர் இந்தியப் புள்ளியில் அமைப்பின் தலைமைக் கட்டமைப்பாளர் ஆவார். இவர் இந்தியாவின் புள்ளியியல் அறிவியலின் தந்தை என்றும் அழைக்கப்படுகின்றார்.
- இவர் 1931 ஆம் ஆண்டில் கொல்கத்தாவில் இந்தியப் புள்ளியியல் நிறுவனத்தை உருவாக்கினார்.
- இவர் திட்டக் குழுவின் உறுப்பினராகச் செயல்பட்டார்.
- இந்தியாவின் விரைவான தொழில்மயமாக்கத்தை நோக்கிப் பணியாற்றிய இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மகலநோபிஸ் மாதிரி செயல்படுத்தப்பட்டது.

## சர்வதேச வெப்ப மண்டலங்களின் தினம் - ஜூன் 29

- உலகம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 29 அன்று சர்வதேச வெப்ப மண்டலங்களின் தினம் (International Day of Tropics) அனுசரிக்கப் படுகின்றது.
- 2014 ஆம் ஆண்டு ஜூன் 29 அன்று நோபல் பரிசு பெற்ற ஆங் சான் சூ கீயினால் தொடங்கப்பட்ட "வெப்பமண்டலங்களின் நிலைகள் மீதான அறிக்கையின்" நினைவைக் குறிப்பதற்காக இத்தினம் பறைசாற்றப்பட்டது.
- இது ஐக்கிய நாடுகள் பொதுச் சபைத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு 2016 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.
- இது வெப்பமண்டலப் பகுதிகளினால் எதிர் கொள்ளப்படும் பருவநிலை குறித்த சவால்கள் மற்றும் உலகின் வெப்ப மண்டலப் பகுதிகளை பாதிக்கக்கூடிய பிரச்சினைகள் ஆகியவை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## சர்வதேச குறுங்கோள் தினம் - ஜூன் 30

- ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 30 அன்று சர்வதேச குறுங்கோள் தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- 1908 ஆம் ஆண்டு ஜூன் 30 அன்று நிகழும் சைபீரியாவைச் சேர்ந்த துங்குஸ்கா என்பவரது

நினைவு தினத்தன்று இத்தினம் நிகழ்கின்றது.

- இது சமீபத்தில் பூமியின் மீது மிகவும் தீங்கு விளைவிக்கக் கூடிய குறுங்கோள் தொடர்பான நிகழ்ச்சியைக் குறிக்கின்றது.
- இத்தினம் குறுங்கோள்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் எதிர்காலத்தில் ஒரு பேரழிவு நிகழ்விலிருந்துப் பூமியைப் பாதுகாக்க என்ன செய்ய வேண்டும் என்பதையும் எதிர்காலத் தலைமுறையினரை எவ்வாறு பாதுகாப்பது என்பதையும் நோக்கங்களைக் கொண்டுள்ளது.
- 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 3 அன்று குறுங்கோள் தினம் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

### சர்வதேசப் பாராளுமன்றங்கள் தினம் - ஜூன் 30

- வருடாந்திர சர்வதேசப் பாராளுமன்றங்கள் தினத்தை அனுசரிப்பதற்காக ஐக்கிய நாடுகளினால் ஜூன் 30 என்ற தினம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- தேசியத் திட்டங்கள் மற்றும் உத்திகளில் பாராளுமன்றங்களின் பங்களிப்பை அங்கீகரிப்பதற்காக 2018 ஆம் ஆண்டு மே மாதம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் இத்தினம் பறை சாற்றப்பட்டது.
- இந்த நாளில் 1889 ஆம் ஆண்டில் பாராளுமன்றங்களுக்கான உலக அமைப்பான பாராளுமன்றங்களுக்கிடையேயான ஒன்றியம் (Inter Parliamentary Union - IPU) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.
- இத்தினமானது பாராளுமன்றங்களையும் உலகம் முழுவதும் வாழும் மக்களின் தினசரி வாழ்வாதாரத்தை மேம்படுத்த பாராளுமன்ற அமைப்பால் மேற்கொள்ளப்படும் வழிகளையும் அனுசரிக்கின்றது.
- ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற பிரச்சினை அதிகம் ஏற்படும் நாடுகளில் மக்களுக்கான அரசின் செயல்பாடுகள் மற்றும் அமைதி ஆகியவற்றை இந்தப் பாராளுமன்றங்களால் கொண்டு வர முடியும்.

## இதரச் செய்திகள்

### பெருநிறுவன வரி விலக்கு (வரி விதிக்காத) குறியீடு


- வரி நீதி அமைப்பு (TJN - Tax Justice Network) வெளியிட்டுள்ள உலகெங்கிலும் உள்ள பெருநிறுவன வரித் தவிர்ப்பை ஏற்படுத்தும் நாடுகளின் பட்டியலில் பிரிட்டீஷ் வெர்ஜின் தீவு, பெர்முடா மற்றும் கேமேன் தீவுகள் உள்பட மூன்று ஆங்கிலேயப் பகுதிகள் முன்னிலையில் தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளன.
- TJN என்பது ஒரு தனிச் சுதந்திர சர்வதேச அமைப்பாகும்.

| Rank | Jurisdiction |
|---|---|
| 1 | British Virgin Islands |
| 2 | Bermuda |
| 3 | Cayman Islands |
| 4 | Netherlands |
| 5 | Switzerland |
| 6 | Luxembourg |
| 7 | Jersey |
| 8 | Singapore |
| 9 | Bahamas |
| 10 | Hong Kong |

- உலகின் பெருநிறுவன வரித் தவிர்ப்பு அபாயங்களில் 52 சதவிகித வரித் தவிர்ப்பு அபாயங்களுக்கு முன்னிலையில் உள்ள 10 நாடுகள் மட்டுமே காரணமாக விளங்குகின்றன.

## தேசிய ஸ்பெல்லிங் பீ (எழுத்துத் தேனி) போட்டி

- கடந்த 92 ஆண்டுகளில் முதன்முறையாக, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மொத்தமுள்ள 8 குழந்தைகளில் 6 குழந்தைகள் 92-வது ஸ்கிரிப்ஸ் தேசிய ஸ்பெல்லிங் பீ (எழுத்துத் தேனி) போட்டியில் வெற்றி பெற்றுள்ளனர்.




- இது அமெரிக்காவின் மேரி லேண்டின் தேசியத் துறைமுகத்தில் உள்ள கேலார்டு தேசிய விடுதியில் நடத்தப்பட்டது.
- தேசிய ஸ்பெல்லிங் பீ போட்டி என்பது உயர்சிறப்பு மிக்க சிறப்பியல்புச் சொற்களை நெருக்கடியான நிலைகளின் போது எழுதும் திறன் கொண்ட ஒரு தேர்வாகும்.
- பாலு நடராஜன் என்பவர் 1985 ஆம் ஆண்டில் இத்தேர்வில் வெற்றி பெற்ற முதலாவது இந்திய வம்சாவளிக் குழந்தையாக உருவெடுத்துள்ளார்.

## தெலுங்கானா உருவான நாள் – ஜுன் 02

- ஒவ்வொரு ஆண்டும் ஜுன் மாதம் 02 ஆம் நாள் தெலுங்கானா மாநிலம் உருவான நாள் கொண்டாடப்படுகின்றது.
- 2014 ஆம் ஆண்டு ஜுன் 02 ஆம் நாள் தெலுங்கானாவானது, 29 ஆவது மாநிலமாக அதிகாரப்பூர்வமாக உருவாக்கப்பட்டது.
- 2014 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் தெலுங்கானா மாநிலத்தை உருவாக்குவதற்கான ஆந்திரப் பிரதேச மறுசீரமைப்புச் சட்டமானது நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது.
- இது ஆந்திரப் பிரதேசத்தின் 10 வட மேற்கு மாவட்டங்களை உள்ளடக்கியது ஆகும்.




## கிரீஷ் கர்னாட்

- முதுபெரும் நடிகர், திரைப்பட இயக்குநர், வலதுசாரிக் கொள்கைகளின் விமர்சகர், கன்னட எழுத்தாளர் மற்றும் நாடக ஆசிரியரான கிரீஷ் கர்னாட் (1938-2019) காலமானார்.
- நாகமண்டலா, யயாதி மற்றும் துக்ளக் ஆகியவை இவரது சில புகழ்பெற்றப் படைப்புகளாகும்.
- இவர் 1974 ஆம் ஆண்டு முதல் 1975 ஆம் ஆண்டு வரை இந்தியத் திரைப்பட மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தின் இயக்குநராகப் பணியாற்றினார். இவர் 1988 ஆம் ஆண்டு முதல் 1993 ஆம் ஆண்டு வரை சங்கீத நாடக நிறுவனத்தின் தலைவராகப் பணியாற்றினார்.
- இவருக்கு பத்ம ஸ்ரீ (1974), பத்ம பூசன் (1992), இலக்கியத்தில் உயரிய விருதான ஞானபீடம் (1998) ஆகிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.



## மிருதங்கக் கலைஞர்

- பிரபல மிருதங்கக் கலைஞரான தஞ்சாவூர் ராமமூர்த்தி தன்னுடைய 90-வது வயதில் திருச்சியில் காலமானார்.
- இவர் நான்கு தலைமுறையைச் சேர்ந்த கர்நாடக கலைஞர்களுடன் இணைந்து பணியாற்றிய தனித்துவத்தைக் கொண்டிருக்கின்றார்.
- இவர் வயலின் கலைஞரான முரிங்கபூரி கோபாலகிருஷ்ணன் என்பவருடனும் புகழ்பெற்ற பாடகரான ML வசந்தகுமாரி ஆகியோருடனும் இணைந்து பணியாற்றியிருக்கின்றார்.



## பச்சியோன் திரைப்படத் திருவிழா

- 23வது பச்சியோன் சர்வதேச புகழ்பெற்ற திரைப்படத் திருவிழா (BiFAN – 2019) தென்கொரியாவில் நடைபெறவிருக்கின்றது.
- இத்திருவிழாவில் தமிழ்த் திரைப்படமான "சூப்பர் டீலக்ஸ்" உள்ளிட்ட 4 இந்தியத் திரைப்படங்கள் காட்சிப் படுத்தப்படவிருக்கின்றன.
- கல்லி பாய், அந்ததுன் மற்றும் மணிகர்னிகா : ஜான்சியின் இளவரசி ஆகியவை

இத்திருவிழாவின் போது காட்சிப் படுத்தப்படவிருக்கும் இதர இந்தியத் திரைப்படங்களாகும்.

## பழவிழா இரமேசன்

- புகழ்பெற்ற மலையாளக் கவிஞர் மற்றும் பாடலாசிரியரான பழவிழா இரமேசன் என்பவர் கேரளாவில் உள்ள திருவனந்தபுரத்தில் காலமானார்.
- இவர் நெடுங்காலமாக கேரள பாஷா நிறுவனத்தின் இயக்குநராகப் பணியாற்றினார்.
- இவர் மலையூடி ஜலகம், ஜன் என்டி கடுகாலேலிகு மற்றும் பழவிழா ரமேசன்டி கவிதைகள் ஆகிய கவிதைத் தொகுப்புகளை இயற்றி வெளியிட்டுள்ளார்.

- - - - - - - - - - - - - - -